ஓம்.

கணபதிதுணை.

விநாயகபுராண சங்கிரகம்.

முதலாவது

உபாசனகாண்டம்

திருநெல்வேலிஜில்லா கலெக்டராபீஸ், டெ

டிப்புடி அக்கவுண்டாண்டு

சுவாமிநாதபிள்ளையால்

இயற்றி

கல்லிடைநகர்

அ. சிதம்பரநாதகவிராஜரால்

பார்வையிட்டு

திருநெல்வேலி

இந்துதேசாபிமானி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கொல்லம் ௲௪௰௫ ௲௪௰௬ம் ௵க்கு

இங்கிலிஷ்

௲௮௱௬௰ ௲௮௱௬௰௯ம் ௵

1870

Copyright Registered.

ஓம

சிறப்புப்பாயிரங்கள்.

பாளையங்கோட்டைச் சைவசமயாபிவிர்த்தி சபையின் தாபகரும் சைவப் பிரசாரணருமாகிய அரன்வாயில் வேங்கடசுப்புப்பிள்ளை இயற்றியது.

மாவலவன் போன்மதித்து வண்டமிழ்முந் நீரளித்தா
ஞவலவன் மாசாமி நாதமால் — காவலற்கு
வெங்கிரக நோய்தீர் விநாயகபு ராணத்தின்
சங்கிரக மென்னுமமிர் தம்.

குறிப்புச்சந்தக் கவி.

குறிப்பு.

தானு தனதன தான தான தந்தன, தானன தந்த தத்த தந்த
தாந்தன (தனதானு)

சீரார் தருகயி லாச நீள்ப ரம்பரை,மாதவர் நித்த நற்ற வங்க டாஞ்செயு, மோரா வடுதுறை ஞான பானு வென்றிட, வேதமிழ் வித்தை முற்று ணர்ந்து நீங்கரு, தேசார் தருசிவ ஞான யோகி யின்பத, மேதொழு கச்சியப்ப னென்று மேம்படு, (முனிமேனுள்). [ஞு]

தேவா முநமென மூவி ராயி ரங்கவி,மேலும்வி ரிக்தி யற்று மைங்கை யாண்டகை, மாணு ரினியபு ராண நானி லந்தனி, லேயெளி திற்க ருத்து ணர்ந்து மாந்தர்கள், சேரா தரமொடு சீனி பாகு கண்டென, வோதவி னித்த சொற்க ளங்கு வாய்ந்திட, (நனிநாடி). [வ]

நீரார் பொருனைசு லாநெல் வேலி யின்குண,பாறனி லுற்று மிக்க சிந்து பூந்துறை, வாழ்வோ னெனமையுடை யாகு வாக னன்கரு, ஞகர னற்புதத்த னந்த மாஞ்செய, னேரே யடியவர் காண வேசெ யுங்கண, நாயக னத்து சித்தி யும்பல் பூம்பத, (வருளாலே). [வஞு]

நேர்பா வொருபது நூறு மேல்வ ருஞ்செயு, ளாகவி யற்றி மெய்த்த நண்பு சார்ந்திடு, சால்பா னுயர்கவி ராஜ கோசி தம்பர,நாதனை தைத்தி ருத்த வின்ப மேய்ந்திடு, நீரார்கணபதி மாபு ராண சங்க்ரக, நாமம தற்க ளித்து முந்தை நோன்புறு, (திறனாலே). [இ]

காரார் பொழில்பல வீசு மாம ணந்தரு, வாவிகள் கைத்த லத்தி னங்து நாந்தகன், வாழா லயமொடு சூல பாணி நம்பனி, கேதன மெய்த்த வத்தர் சங்க மீந்திடு, காநேர் பவர்வதி மாட கூட முந்திகழ், வாகினை யுற்று மிக்கு யர்ந்த தாம்பதி, (யெனவோது). [இஞு]

காழார் கடிமதி னீடு சிலை குர்தம, தாகக ருற்ற பிச்ச மன்கு ணும்பு
தி, நேர்கா தலனொளிர் ராமி நாத சுந்தர, மாமுனி லற்பு ளித்தி ருந்த பாங்
கொடு, காகோ தரபதி வேத ணுதி யொண்புல, வோர்கடு தித்தி டங்க ளிந்
து நேர்ந்தது, (பரிவோடே) [௫]

பாரார் புரிதல மீது தானெ னுந்தக, வேபெறு மித்தி றத்து வந்த
மாண்புள, நூலா யிரமறு பானொ டீரி ரண்டென, வானசம் வற்ச ரத்த தி
ங்க ளாந்தகர், நாவீ வுளையக லாதி யீசன் மண்டல, பூசையு ளுற்று மத்தி
னங்க ளோங்கிய, (சுபவேளை) [௫௫]

பாவா ணர்களவை காண வேய ரங்கினி, லேறிய தக்தி லத்ர னிந்து
வாஞ்சடை, யோனா திருமுன மாவி நோத சம்பவ, மாமிது சித்தி முத்தி
பயமுற வான்ஙற், பார்வாழ் வொடுதரு நாளு மோர்மி னன்குப, காரம திற்
றி னொத்த தொன்றி யாண்டுள, (வுலகீரே). [க]

திருநெல்வேலி இந்து கலாசாலை தமிழ்ப் பிரதமபோதகாசிரியர் தென்காசி ஆண்டியா பிள்ளையவர்கள் குமாரர் கனகசபாபதியா பிள்ளை இயற்றியது.

பார்மேவு பழமறையா கமத்தினதன் வழிபரந்த புராணந் தன்னிற், சீர்மேவு நூல்களினு மாராய்ந்து நிறையறிவிற் செழித்த வுள்ள, நார் மேவு கருணையினு லுருப்ப வெவ்வழியா நாட்டு மென்னுச், கார்மேவு கடம்பொழியெஞ் சித்தியிநா யகப்பெருமான் கழற்கால் கண்டு. (க)

கண்டதனைச் சாணுகக் கோடலவ னிலீலையுபா சனைக ளைக்கைக், கொண்டவற்றைப் பயின்றுமுறாக் குறைதலெனக் குறிக்கொண்டு குலவு * வாழ்த்து, விண்டவனைக் கயம்பொருள்வாய் பொருடலைவன் விலங்கலலை நாடூர் வேலை, யண்டவிளாங் கார்மணைஞ்சேர் வம்பொன்முடிச் சூட்டடவி நீருண் டாட்டு. (உ)

---

* வாழ்த்தும் வணக்கமும் உரைக்கும் பொருளுணர்த்தலு முன்னுளதாய், அறமுதலிய நாற்பொருட் பயத்ததாய், ஒப்பற்றதலைவனை யுடைத்தாய், மலை கடல் நாடு நகர் பருவம் முதலியவற்றின் வளங்கூறுதலும், மணமுடித்தல் முடிகவித்தல் பொழில்விளையாட்டு புனல்விளையாட்டு உண்டாட்டு சிறுவர்ப்பேறு புலவி கலவி என்றிவற்றைப் புகழ்தலும், மந்திரம் தூது மேறசெல்கை போர் வென்றி என்பவற்றைக் கூறுதலுமாகிய இவற்றாற் றொடரப்பட்டுச் சருக்கம் இலம்பகமுதலிய பகுதியினவாய்க் கேட்போர் மதித்து விரும்பு நெருங்கிய சுவையுளவாய்ப் புலவராற்புனையப்படுவன பெருங்காப்பியம்

தண்டியலங்காரம் பொதுவணியியல் அ. ஞ் சூத்திரம், வச்சணந்தி மாலை செய்யுளியல் ௪௰, ௪௰க, ௪௰உ, ஞ் செய்யுள் இவற்றாற்காண்க.

மகப்பேறா தெல்கலவி மறைதூது மேற்செலல்போர் வயஞ்சுருக்க, மிகப்பேறு பாச்சுவைமீ விரும்புபா வகத்துடன்யா வையும்வி ளக்கி,*யுகப் பேறு மண்டலத்தோர் புரிதவமே யீதென்று வுரைத்துப் போற்றச், சுகப் பேறு பெற்றுமெனப் பொன்னுலகோர் வாழ்த்தெடுப்பத் தொன்மை வாய்ந்து. (௩)

ஆய்ந்தவுப புராணத்துட் பார்க்கவத்தைத் துறைசைமுனி வாரின் ஞானத், தோய்ந்தகச்சி யப்பனவில் விநாயகமா புராணத்தைத் தொகையாப் பிட்டே, வாய்ந்தகலைக் கல்லடையூர்ச் சிதம்பரநா தப்பெயர்ப்பா வலன்சீர் செய்ய, வேய்ந்திடும்வி நாயகபு ராணசங்கி ரகமெனும்பே ரியற்றித்தந் தான். (௪)

‡ முச்சங்கத் தமிழ்நகரு * முருகவள்ளன் மாணவர்தம் முருகசர் வெற்பும்
பச்சங்கத் திகழ்பாதி வடிவர்பழம் பதிதாம்பிர பன்னி யாறு
மெச்சங்கம் பலையுறவாற் றிட § முனிவர்க் குதவரசி லிங்கந் தாபித்
துச்சங்கம் படுகடல்வாய்ச் சிவபூசை செயுந்தலமுந் தொக்க நாட்டில். (௫)

* சத்தமா தர்கள்பரனைப் பூசிப்பான் படிதடத்தோர் கருணைத் தாடை
வைத்தவான் கரைவாய்வெற் றறையொடுநீ ராடலுமால் வெள்ளி யேக
முத்தமூ ரலர்நாணின் முங்கியயற் பாய்ந்துகல்லாய் முளைத்த நீரா
னத்தநீ ருலகமெழ வரைமுக்கி யெனப்புகனன் னகர்வாழ்ந் துள்ளான் (௬)

கங்கைமா பினையுடையான் கமழ்குவளை நறுந்தொடையான் காள மேகச்
செங்கையினன் சண்முகபூ பதிகனிஷ்ட பிதாவாகச் சீவை குண்டத்
தங்கையினா மலகமென வுணர்வெவர்க்குந் தெளிவிக்கு மறிஞ ரேறாய்த்
தங்குபிச்சப் பெருமானற் றுதையா நாதமபூ நாத நக்கீரான். (௭)

ஆரமா தரின்மிகுமுற் றுணைவனு வுள்ளானல் லறிஞர் நேயன்
வாரமா யெவ்வுயிர்க்குந் தயைபுரிசெஞ் சினன்மேழி வண்ப ராகைத்
தீரமால் வேள்விநிகர் வேளாண்மைச் செந்தமிழ்ச்சீர் சிறப்ப வோங்கும்
பாரமா பெரியவெனப் புகழ்சாமி நாதனெனும் பாவல் லோனே. (௮)

---

‡ முச்சங்கத் தமிழ்நகர், முதல், இடை, கடை, என்று மூவகைப்புலவர் தொகுதி தழையப்பெற்ற மதுரமா நகரம.

* முருகவள்ளன் மாணவர்தம் முருகசர் வெற்பு, கந்தவேட்குரிய சந்தனாசலமும், அகத்தியற்குரிய பொதியாசலமும்.

§ முனிவர்க் குதவரசிலிங்கந்தாபித்ததலம், விசுவாமித்திரரியற்றும் வேள்விக்கு விக்கின நிவிர்த்திசெய்த ஸ்ரீராமன் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசைசெய்த தலமாகிய திருவிராமேச்சுரம்.

* சத்தமாதர்களாவார், அபிராமி, மகேச்வரி, கௌமாரி, நாரணி, வாராகி, இந்திராணி, காளியென்பவர்களாம்.

ஊற்றுமலை சமஸ்தான வித்வான் புளியங்குடி முத்துவீரக்கவிராஜர் இயற்றியது.

பூமருவு மிருமாதும் புகழ்மாதும் புகவிடமாத்
தாமருவி வளர்ந்தோங்குந் தமிழ்ப் பாண்டி நாட்டினுக்குண்
மீமருவு பொன்னகரும் வேட்குநலம் படைத்தசெல்வக்
காமருசீ வைகுண்ட மெனுங்கவின்சேர் மாநகரான். (க)

கச்சைக்கென் றரவணிந்த கடவுளடி யைப்பரவு
மிச்சைப்பூ பதிக்கிருகண் மணியாக வேபிறந்தோன்
பச்சைப்பூந் திருமேனிப் பரந்தாமன் பாலனைநே
ரச்சைப்பெற் றிடுநாளும் பூநாதன் றனக்கனுசன். [உ]

வேறு.

திருநெல்வே லியிற்கலையா சிரியனிலக் கவுண்டாண்டுந் தியோகச் செல்வ
மருவியவிற் பனசுமுகன் வாய்மையினி லரிச்சந்த்ரன் வள்ள லாகத்
தருகமலத் தடக்கரத்தான் றண்கங்கா குலதிலகன் சைவநீதி
யொருபொழுது மறவாத சிவநேசன் றவமேலோர்க் குதவி செய்வோன் [ங

நாமிறு தரவுசெய்வோ னவைதீர வெனநவின்றை வனைப்பு ரந்த
பூமிறு தனைமலைந்து புவியினுள வுயிர்க்கன்பு புரியு நீரான்
காமிறு தலமெனும்பூங் குழலிடைமு ரலர்விரும்பு கவின்சே ராகன்
சாமிநா தனென்மகிபன் றயாதரும சீலநிறை பொறைத மைத்தோன் [ச]

மாவடுவொன் றல்லாமன் மற்றையொரு வடுவுமிலா வளஞ்சேர் சோலை
யாவடுதண் டுறைக்குருவைப் பரவுகச்சி யப்பமுனி யன்பு கூர்ந்து
நாவடுநன் காந்தசொலா னவின்றவிக்கி னேசபுரா ணப்ப ரப்பாம்
பாவடுவொன் றுவிருமூ வாயிரச்சில் லெண்ணெவரும் பரிவி னோர [ரு]

சங்கிரக மாயுரைத்தல் பத்தழகி லொன்றெனவே தனதுண் ணாடி
மங்கலஞ்சே ராயிரச்சில் யாப்பினெல்வே லியிற்களகம் வழங்க நாட்டுந்
திங்களணி சிவநேசன் சிதம்பரநா தக்கவிச்சிங் கேறு நன்று
லங்கதனைப் பார்வையிடு வித்தமுதிற் சீனிகற்கண் டதுசேர்த் தென்ன [சு]

அதிகாசப் படுத்திநெல்லை நகர்க்குணபா லமுதவான் கங்கை யன்ன
முதிர்சுவைதந் திடுதாம்பிர பன்னிநடு முனைத்த சித்திக் கணேசன் முன்பு
மதிமகனே ரறிஞர்குழாஞ் செவிவாயாற் பொருளமுதை வாரி யுண்டு
துதிபுரிய வரங்கேற்றி னிருமைப் பெரும்பயனுந் துய்க்கத் தானே [எ]

திருநெல்வேலி மேலரதவீதி பால்வண்ணம் பிள்ளையவர்கள் குமாரர் சிவராம பிள்ளை இயற்றியது.

திருமகண் மணந்த மருமத்துப் பைந்துழாய்த்-தாமங் கிடந்த தனிப்பெருஞ் செல்வனு-முருகுகொப் புளிக்கு மளிமுரன் முட்டாட்-டாமரைத் தனிசுறை மாமறைக் கடவுளு - மண்ணினுட் புகுந்தும விண்மிசைப் பறந்து-யடிமுடி யறிதற் கருமைத் தாய-சராசரம் பூத்துத் தண்ணளி காய்த்துச்-சிவத்துவங் கனிந்த செழுங்கொடி படரும்-பவளக் குன்றந் துதித்துத் தவளச்-சுண்ணத் தளைந்து துதிக்கையா லெடுத்துத்- திருமேனி திமிர்ந்து புழுதியாட் டயர்ந்து-காமக் குரோத வுலோப மோக-மதமாற் சரிய வன்றளை களைந்து-வினையெனும் வித்துண் மேவிப் பொலிதரு-மறமுதற் கனிமூன் றழிதர வுதிர்த்துக்-கழைக் கூத்தாடு வோர்க் கடுப்பப் பொல்லா-மனக்கருங் குரங்கு மயங்கித் திரியும்-பஞ்ச விடயப் பரூஉச்சினை தடிந்து-சாலவுந் திரண்ட தனுதுவெண் கோட்டான-மூல மலமெனு மூல வேரொடு-பங்கலி னுள்ளவும் பற்றறப் பறித்து-வென்றி குமுறி விழுத்தகு மடியவ-ரன்பென் றடஞ்சுனை யின்பொடு குளித்துப்-பசுத்துவக் கவள மிடக்களித் துண்டு-மருண் மத மழிந்திட வருண்மதம் பொழிந்தவர்-சித்தந் திண்காழ்த் தறியிற் றுவக்குறீஇத்-தாயின் றறியாத் தகைமையொடு பகைத்து-வெயின்றவனை விழைந்துசூழ் கிடந்த-பொருநையந் துறையிற் பொருந்திரு துறையுட்-குறுக்குத் துறையிற் குமர னிருந்தாங்-கலர்கதிரப் புரவிக் கால்வயி னடுங்கிப்-பார்வயி னீங்கிய நள்ளிருட் பகைவனைச்-சேணுற நிவந்த செழும்பொழில் புக்குப்-பயோதரப் படக மொதுக்கிப் பயப்பயத்-துருவுவான் போன்ற சுடரவன் றனைமாங்-கனியொடு மலைத்தோர் கருமுக மந்தி - கால்விசைத் தெழும்படி கால்விசைத் தெழுதலு - முந்துபூஞ் சினையெலா முலைந்து மதுத்துளி-சிந்துபூந்துறை வாய் சிந்துபூந்துறை வாய் - வேண்டுவார் வேண்டிற் றனைத்தையும வேண்டியாங்-கீண்ட வளித்திசை பூண்டு களிக்குஞ் - சித்திப் பெயரிய தெய்வதக் களிற்றின- முத்திப் பயதத முடிவருஞ் சீர்த்தியை-யுருகி யன்பருளங்கொளப் பருகுவான் -பிருகு பேசிப் பிறங்கிய வடகட-னச்சின ரியாவரு நனுகரிதாகலின்-விச்சையிற் சான்ற புலவர்கண் மெச்சி - யுச்சிமேற் கொள்ளுங் கச்சியப் பன்பகர்- தென்கட லாய திருப்பாற் கடலிடைப்-பலகலைக் கடலிற் பஃறுறை போயதன் - மதியெனுங் கூரிய மந்தா நிறீஇக் - கடைந்தெழு மமிழ்தினைக் கனிப்பில்சீர் விநாயக-புராணசங் கிரகமாம் பொ

ற்குடைத் தளித்தன-னக்கரை யவன்சீர் சொற்கிளைபயிலுங்-கொக்கரை குள
மே கோயிலாக கொண்டான் — பாடுறு பழமறைப் பரசிவன் மைந்த-னொடரு
ஞ் சிந்தியே நடாபிடு நாவினன்-குவலயத் தரும்பெறற் குணப்பெருங் கு
ன்ற-நச்சினார்க் கினிய நலந்தரு சிறப்பிற்-பிச்சப் பெருமாள் பெருந்தவத்
துத்தமோ-னேமி நீத்த லிகாக்குஞ் சாமி நாதத் தனிப் பெருந்தகையே.

திருநெல்வேலி ஜில்லா கலெ ஆபீசு கிளர்க்கு டி. நெல்லையப்ப பிள்ளை
இயற்றியது.

சீர்கொண்ட கொன்றையஞ் செஞ்சடைத் தேவுமத் தேவினோர் பாலின்
வைகித், திருவருள் சுரந்துலக லான்மகோ டிகடந்த செல்வியு மச் செல்வி
பால், வாரகொண்ட விணைமுலையி னமுதுநுகர்சேயுமா மலயமமா தமிழ்முனி
வனு, மதிவழியின் வழுதியரு மாசுசெய மகிமைபெறு வளமைதிகழ் பாண்
டி நாட்டிற், பாரகொண்டவரியயனு மறிவரிய பரமபதி பதிகள்பதி னொன்க
வற்றுட், பணையென்ன மறைதவ மியற்றுதிரு நெல்லையம்பதியின் குணதி
வைகு, மேர்கொண்ட மலர்கள்சொரி சிந்துபூந் துறையிலுறை யெந்தையா
மேகதந்த, னியல்சரித மவனுமுனமோர கவிஞயா மணியாரை கேற்றுதிற
னைப்பசாவனே. [௧]

ஐம்பெருமபூதத்தி னுகின்ற விச்சேக மனித்தமென் றேபர சிவ,னரிய
பொற் பாதநா மரைதனது சென்னிமிசை யணிகின்ற பிருகுமுனிவன்,செ
ம்பொரு ளுணர்ந்துகண பதிதிருப புகழைத் திருந்தவே வடமொழிதனிற்,
செய்யபாக கவமெனச் செய்ததைத் தென்மொழி சிறப்பெய்த விரிசெய்யு
ளாற், கம்பமற வன்பரற் குறுகச்சி யப்பனுக் கழறுமுனிவன் றுறைசை
யோன், கனிவோ டுறைந்தவன் கதிதருவி நாயகக் கடவுளார் சரிதமெனவே
யுமபரும போற்றிட வுயர்ந்ததிவ் வுலகத்தி னுள்ளோர்க ளியாரு மெளிதி
னோதியுணர் பான்மையரி தாவிருப் பதுபற்றி யுவமனில் புராணமிதனே [௨]

அருந்தவ வகத்தியன் றருமிலக் கணமெலா மமைவுபெற வான்பொரு
ளெனு,மறமுதனு ன்கையு மளித்திட வுளத்தூறு யார்வமீர் பெருகவெவரு
ம்,வருந்துத லிலாமலே பதயாத் முப்பொருளும வாய்செவிய தாத்தேருவா
ன், வண்டனிப் பாகமோ கண்டுநற் றேனதோ மாங்கனி பலாக்கனியதோ,
திருந்தவா சிப்பவர்கள் கேட்பவர்கள் சொலபவர்க டெளிவுறச்சிற்றடியிற்,
சேர்ந்தபொருள் சிறிதா யினும்பெரும் பொருளதாச் செவ்வியிற் காட்டுமா
போற், பொருந்துபு விநாயகபு ராணசங் கிரகமாப் பொற்பயாத் தினிதளித்
தான், புலவரோ ருஞ்சாமி நாதத் தனிப்பெயர்ப் பிரவலன் பூபாலனே. [௩]

சிறப்புப்பாயிரங்கள்.

சாத்தூர்த்தாலூகா சிறுக்குளம் க. தாமோதரம் பிள்ளை இயற்றியது.

பூங்கமலப் பொகுட்டி னெழில் பொருந்துபுவாழ் பொருவின் மறைய பு
த்தே ளும்பூந், தேங்கமழ்தண் டுளவநறுந் தெரியலுயல் வருநடந் தொட்டே
வுந் தேடி, யாங்கிறைவன் முடியுமல ரடியுமறி தற்கரிதா தலினவ் வண்ணை,
லோங்குதிருக் கயிலாய பரம்பரைப் போ பெற்றுலகந் துறல்கண் டன
னோர். [௧]

கனியினரு டருதிருவா வடுதுறைவந் தெனமுறையே கச்சி யபப
முனிவினுயர் வடமொழியாம் பார்க்கவபு ராணமதை மொழிபெ யர்த்திட்
டினியதிருத் தென்மொழியில் விநாயகபு ராணமென விசைப்ப மூன்று
தனையிரட்டா யிரத்திருநூற் றிருபத்து மூன்றாகுந் தமிழ்ப்பா வாக. [௨]

சொற்றதனை நனிசுருக்கிச் சங்கிரக மாகவின்பச் சுவையுந் தூய்மை,பெ
ற்றொளிருஞ் சொற்சுவையும் பொருட் சுவையுங் கவிச்சுவையும் பெருகச்
சொற்றான், பொற்றருவார் வைகுண்டம் பூலோக கயிலையெனும் புரத்துவா
ழ்க்கை, யுற்றவள்ள னெல்வேலிக் கலையாபி கினிற்கவுண்டாண் டுத்தோ க
த்தோன். [௩]

முத்திபடிந் தவர்க்குதவுஞ் சிந்துபூர் துறையிலருண் முதிர்ந்து வாழுஞ்
சித்திவிநா யகப்பெருமான் செய்யமல ரடியிணையைத் தினம்பூ சித்தே
பத்திரசமானவன்பு பழுத்தொழுகு செழித்தமனம் படைத்த தூயோ
னித்தலமேற் சுத்தசைவ வேளாள குலதிலக னென்ன வாய்ந்தோன. [௪]

எண்ணரிய தனம்படைத்தோ னெனக்கினிய நண்பனென்கண் ணிணை
நிகர்ப்போன், புண்ணியகண் ணியனுமைய குஞ்சரமா லுதவுதிருப் புதல்வ
னிந்த, மண்ணுலகெ லாம்புகழ்சாத் தூர்வளர்சுப் பிரமணிய மகிபன் றன்னை
க், கண்ணியமா மைத்துனனென் றெவருமகிழ்ந் திடவிதயங் கனிந்துரை
ப்போன். [௫]

கருதரிய நூல்பலவும் †வெள்ளியுஞ்செம் பொன்னுமெனக் கற்று ணர்ந்தே
பருவாலி லாதமதி படைத்துயர்ந்த சாதுசங்கப் பழக்க முள்ளோன்
மருமனறுங் குவளையந்தார் மருமனக நிகர்கவிஞர் மருமனேங்கு
மிருநிலமெ லாமதிக்குஞ் சாமிநா தக்குரிசி லெனுமிக் கோனே. [௬]

---

† வெள்ளியுஞ்செம்பொன்னும் என்பது ஈண்டுசுக்கிரனும்பிரகஸ்பதியுமாம்.

முற்றுப் பெற்றன.

படலபந்தி.

பக்கம்	உபாசனாகாண்டம்	பாடல் எண்ணும்.
௨	பாயிரம்	௰௧
௫	திருநாட்டுப்படலம்,	௬௰௨
௰௪	திருநகரப்படலம்	௩௰௬
௰௯	சிந்துபூந்துறைப்படலம்.	௫௰
௨௰௬	வியாசருபாசனைப்படலம்.	௨௰
௨௰௯	சோமகாந்தனுபாசனைப்படலம்.	௬௰௫
௩௰௮	மூவருபாசனைப்படலம்	௰௮
௪௰௧	திருமணப்படலம்.	௭௰௩
௫௰௧	விண்டுவுபாசனைப்படலம்,	௰
௫௰௩	வீமனுபாசனைப்படலம்	௪௰௮
௬௰	உருக்குமாங்கதனுபாசனைப்படலம்.	௩௰௭
௬௰௫	கிருச்சமதனுபாசனைபடலம்.	௨௰௪
௬௰௯	விமலருபாசனைப்படலம்.	௩௰௨
௭௰௪	சதுர்த்திவிரதப்படலம்.	௩௰௫
௭௰௯	சங்கடசதுர்த்திவிரதப்படலம்	௱௯௰௧
௱௮	காசிபர்முதலியோருபாசனைப்படலம்.	௰௭

இலீலாகாண்டம்.

பக்கம்	படலம்	பாடல் எண்ணும்.
௧	வக்கிரதுண்டன் றிருவவதாரப்படலம்	௭
௨	சிந்தாமணிவிநாயகன் றிருவவதாரப்படலம்	௩௰௮
௮	கஜானனன்றிருவவதாரப்படலம்.	௩௰௫
௰௩	விக்கினராஜன்றிருவவதாரப்படலம்.	௨௰௮
௰௭	மயூரேசன்றிருவவதாரப்படலம்.	௬௰௬
௨௰௭	பிந்தியமயூரேசன்றிருவவதாரப்படலம். பாலசந்திரன்றிருவவதாரப்படலம். இரண்டு	௱௫௰௭
௫௰	தூமகேதுதிருவவதாரப்படலம். கணேசன்றிருவவதாரப்படலம். இரண்டு	௨௰௪
௫௰௪	கணபதிதிருவவதாரப்படலம்.	௩௰
௫௰௯	மகோற்கடன்றிருவவதாரப்படலம்.	௱௫
௭௰௪	துண்டிவிநாயகன்றிருவவதாரப்படலம்.	௨௰௯
௭௰௮	வல்லபைகணேசன்றிருவவதாரப்படலம்.	௪௰௬
௮௰௪	வசந்தோத்சவோபாசனைப்படலம்.	௬௰௪

முற்றிற்று.

இவற்றுள் தலம் தீர்த்தம்மூர்த்தி விசேடங்கள் அடங்கிய சிந்துபூந்துறைப்படலம், வழிபாட்டினியல்பு அடங்கிய வசந்தோத்சவோ பாசனைப்படலம், என்னும் இரண்டு மல்லாத மற்றைப்படலங்களுள் புராணவிரிவின் தொன்னூற்றொரு படலங்களையுந் தொக அடக்கியிருத்தல் புராணசங்கிரக மாதலின் என உய்த்துணர்க.

உ

ஓம்

மஹாகணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்,

விநாயகபுராண சங்கிரகம்.

காப்பு,

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவநற் பொருனை நதிவயிற் சிறந்த சிந்துபூந் துறைநிரைக் காஞ்சேர், குருமணிக் குயர் *கொக் கரைக்குள நகர்சீர் கொழிப்பநேர் நோக்கி வீற் றிருக்கு, மொருமருப் பிறைதாட் டுணையவன் புராணத் துறுபொருட் பாட்பெளி துணர்பாப், பொருடொகத் தொடுதாட் டுணையதா வெனக்குப் புணர்த்துநன் மொழிபொருட் புணர்ப்பே.

* கொக்கரை-சங்கு

பாயிரம்.

வாழ்த்து

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேதமும் வேள்வி தானும் விளங்குக சுரந்து மேகம்
பூதலம் வண்மை மலகப் பொழிகவா ளுடுமைங் கூழு
மாதவெய் துகநா ளுளு மறம்பொரு ளின்பம் பல்கு
மாதவஞ் சைவ மோங்க மன்னன்செங் கோன்மை வாழ்க. (க)

நூற்பயன்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திங்கண்முடிப் பரம்பரனுர் வழிபாட்டாற் றுஞ் சித்திவிநா யகர்சரிதச் சிறப்பை யனபு, பொங்கிமன மகிழ்ச்சியுடன் படிப்போர் கேட்போர் பூசிப் போர் நினைப்போரெண் போகஞ் செல்வந், தங்கிமனை மக்கள்சுற்ற மகலா தெய்தித் தனதனைநேர் பவராய்ப்பூ தலத்து மன்னி, யைங்கரனு ருலகினிற் சென் றவர்ம லர்த்தா ளகலாப்பே ரின்பமுநன் கடைந்து வாழ்வார். (௨)

கடவுள் வணக்கம்.

பரமசிவம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருமறு மார்ப ளுதி தேவரு மருந்தி மீக்கூ
றொருசிவ போகந் தன்னை யுபாசிப்பார்க் கருள வேண்டி
யருவொரு மேனி கொள்ளெம் மண்ணலார் செம்பொற் பாதத்
திருவியன் மாலை சாத்தி யிணையில்பே ரின்புற் றுய்வாம். (௩)

பராசத்தி.

சத்தியா நாமத் தாலே சராசர மனைத்தி னுக்கு
நித்திய போக நல்கி நிலவுதற் பரத்தைச் சார்வான்
சித்தியார் ஞான நல்குந் திருவருட் சத்தி தன்னைப்
பத்தியா னினைந்து மேலைப் பவவினைத் தொடக்கை வெல்வாம். (௪)

சித்திவிநாயகர்.

வேறு.

பையரா வரைக்கசைத்த பசுபதியா யெத்தொழிலும் பயப்பிப் பானுய், மெய்யரா மன்பருளங் கோயிலா வெஞ்ஞான்று மேவிப் பக்கந், தையலா *ரிருவருற வாழ்சித்தி விநாயகனுர் சதங்கை யார்ந்த, செய்யதாண் மலர்நினைந்து வருவினைக ளனைத்தனைத்துந் தெறுதல் செய்வாம். (௫)

*இருவர்-சித்தி-புத்தி-என்னுஞ்சத்திகள்.

குமாரக்கடவுள்.

அமரர்தமக் கனவரதந் துயரியற்றுஞ் சூர்முதலா மவுணரீட்டஞ், சம
ரிடைச்சென் றறமுடித்துச் சதமகனுக் கரசுநல்குஞ் சத்தி வேலோ, னிம
யவரைக் கிறைபுதல்வி தனம்பருகிக் †குடிலையத்த மிறைவற் கோதுங்,
குமரகுரு பரப்பெருமான் பொன்னடியெஞ் சென்னிமிசைக் கொண்டு வாழ்
வாம். (௬)

நாமகள்.

தேமாமோ தகமுகக்குஞ் சித்திவிநா யகர்சரிதந் திறனூர் நரரற், பாமா
லை தொடுப்பதற்கு வேண்டுமுப கரணமெனும் பழுதில் சொற்க, ளாமா
$நால் வகைமலரொன் றுவின்மலர் தரவரந்தந் தருளு மம்மை, நாமாலன்
னமமர்பொன் னளினமலர்ப் பதந்துதித்தெந் நாளும் வாழ்வாம். (௭)

திருநந்தி தேவர்.

திருக்கையிலை தன்னிலெங்கோன் மறைப்பொருளை யுணர்த்திடுங்காற்
றேர்கி லாள்போ, லிருக்கையிலை யையைவலை மகளாகச் சபித்தலறிந் திலே
கங் கைக்கொண், முருக்கையிலை யெய்குகற்குந் தனக்குமவ்வா றுரைப்ப
முந்நீர் மூழ்குற் ‡றீர்ப்பத், தருக்கையிலை யெனவிடுத்தா லையக்கடையுந்
றேரும்புநந்தி தாள்சிந் திப்பாம். (௮)

முதலிமூவர்.

*கம்பந்தந் தளப்பரிய பிறவியெனுங் கடலினிடைக் கட்டுண் டோங்கு
கொம்பந்தம் பிடியிலர்போ லிறந்துழன்று கொடுநரகிற் குறுகு மாக்கள்
வெம்பந்த மறுக்கும்வகை செந்தமிழி னல்வேதம் விரித்த ஞான
சம்பந்த நாவரைய சுந்தரரா மடிகளடி தலைமேற் கொள்வாம். (௯)

திருவாதவூரர்.

கருவாதை தீர்வடையத் திருவால வாயுடையான் கழற்கண் வைத்த
வொருவாத வார்வவழிப் பரிபாகம் வந்தடுப்ப வுவமை யில்லான்
குருவாகி யோர்வருளப் பெருவாழ்வு குருந்தடியிற் கொண்ட தொண்டின்
றிருவாத வூரிரு மருவார்செம் மலரடியெஞ் சென்னி சேர்ப்பாம். (௰)

சண்டேசுரருமற்றை நாயன்மாரும்.

வண்டேறு மலரளக வரையரையன் றிருமகடன் வாம பாகங்
கொண்டேமம் பெருகவர மளித்தபிரான் றிருவருளுட் கொண்டு தாதை

† குடிலையத்தம்-பிரணவமந்திரத்தின் அருத்தம்.
$ நால்வகைச்சொல்-இயற்சொல்-திரிசொல்-திசைச்சொல்-வடசொல்.
‡ ஈர்ப்ப-இறைவன் வலைஞவடிவுடன் வீசியிழுத்தவலைக்குட்பட்டு.
* கம்பந்தந்து-கழைக்கும்-கயிற்றுக்கும்.

விண்டேகத் தாளெறிந்து விண்டுவுமுன் காணாத வியன்றாள் கண்ட
சண்டேசர் பாதமொடு திருத்தொண்டர் பாதமுநந் தலைமேற் கொள்வாம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆசாரியர்.

திங்கள்வழிச் செழியனுக்குச் செங்கோன்முன்னீய்ந்த செயலாற்செங் கோன்மடமாத் திகழரிய நாமந், தங்கு *சிலா புரிவளர்சத்தியஞானி யாசான் சந்ததியாய்த் தனையடைந்தோர் தம்பவத்தை யெல்லாம், வெங்கனலி யவனி யிருள் வீட்டுதலை யேய்ப்ப வீட்டியருண் மெய்ஞ்ஞானவிளக்கமுளத் தேற்று, மெங்குரவன் கலியாண சுந்தரதே சிகன்று ளிணையமல ரிருத்தியிடர் சிதையவடர்த் திடுவாம். (௰உ)

முன்னூலாசிரியர்.

$இச்சியப்ப முடிக்கணிந்த விறையா சானு மெய்தியிரு வினையிறைப் பேய்ந் திடல்கண் டந்தா, ளுச்சியப்ப லான்மேலாச் சிரமத் துறவ் வுமா பதிதன் புகழையென்று மோவா தேந்த, மெச்சியப்பன் மொழிப்படியா வி னத்தால் யாத்திவ் விநாயகமான் மியம்பெருந விளக்கு முன்னூற், கச்சியப் ப முனிவாறு வடுநறைக்கோர் கதிரொளச்சொல் புகழினன்றுள் கனிந்து ட்கொள்வாம். [௰௩]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அவையடக்கம்.

ஈசல்புள் ளரசை நேரா வெழுநதனை நருமே ரம்பன்
மாசகல் புராண மல்க வருத்தமுறு யான்றெறு குத்துப்
பேசயாப் புறுத்த லேனும் பெரியவர் கொள்வர் யார்க்குந்
தேசரு ளொருகோட் டீசன் றிருப்புகழ் கொளறேர் வுற்றே. (௰௪)

நூல்வரலாறு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இந்துசேகரன்று னளினமென் றவிசற் கிசைப்பமுன் னவனிடம் வியாசன்,
புந்தியார் தரக்கேட் டியர்பிரு குவுக்குப் புகன்றபின் சோமகாந் தப்பே,
ருந்துவேந் தனுக்கன் னவனுரைத் திடலாற் பார்க்கவ மெனப்பெய ருற்றுந்
தந்திமா முகன்சீ ரமைதலா னுமங் கணபதி புராணமாச் சார்ந்தும். (௰௫)

* சிலாபுரி-கல்லூர் என்னும் பெயருடைய ஓர் நகரம்.
$ இச்சியப்பமுடிக்கணிந்த-இறைவனை மணஞ்செய்ய இச்சித்தகங்கையைச்சூடிய.

வடமொழிப் படியா திருசகத் திரமா வருவோ ந் தத் *துப புராணந்
துடனுறை தருமிச் சரிதமெண் டகுசீ ரோங்குறு தொண்டை நன்னாட்டிற்
படிபுகழ் சென்னைப் பதிப்பிர சன்ன விநாயகர் திருவருட் பாங்கா
லடைவொடு திருவா வடுதுறை யெனுமா தீனம்வா ழடிகள்பற் பலருள்.

இலக்கணக் கச்சி யப்பநன் னுமை மினைந்தமா முனிதமி ழியலார்
றுலக்குடா சனையேய் யிவ்வீலையே யென்னத் தொகுமிரு காண்டமாப் படல
விலக்குதொண் ணூற்றேன் றுவிரு மூன்று யிரத்திரு நூற்றிரு பதின்மூ
ன்லைத்திரு விருத்தத் தமைத்தன னும்ம் விநாயக புராணமா நிறுவி. (௰௭)

அனையதொல் புராண விரிவினைப் பரிவி னுய்பவ ரிருக்கவே யையர்தம்,
மனநிலைக் கெளிதாச் சுருக்கயாப் பினதா வருக்க வெண்மதியின் முன்னுத
லும், புனைபுகழ்ப் பாண்டி நாட்டினெல் வேலிப் பொன்னகர்ப் பாங்கமர்
பொருனை, யெனுநதிச் சிந்து பூந்துறைச் சித்தி விநாயக ரினிதருள் செய
லால். (௰௮)

சொற்றிடத் துணிந்தேன் விநாயக புராண சங்கிர கப்பெயர் தோற்
றிச், சிற்றறி வினனிந் நூலையீண் டதனுற் றென்னவ னுடுநெல் வேலி,
நற்றிரு நகருஞ் சிந்துபூந் துறைசேர் தாம்பிர நதிவளஞ் சிறிது, கற்றவர்
முனங்கற் றனசொலி மிக்க கொளன்முறை யெனக்கழ றுவனால். (௰௯)

பாயிரமுற்றுப்பெற்றது.

திருநாட்டுப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகமீன் றவளை யீன்றெம் மொருமுதற் கிருமணத்தி
னிலகவீய்ந் தணிமு டிச்சூட் டேய்ந்தா சேய்ந்தாள் வித்து
நிலவுமம் முடிபோற் சூடு நெடுமதி மரபில் வந்த
வலகில்சீர் மன்ன ராட்சிக் கமைந்தது பாண்டி நாடு. (௧)

வண்டமிழ் நாட்டு ளொண்டா மரையுறை யயனு மாலு
மண்டரு மறியொ ணுதா னழலுரு வுடையா னெல்லாங்
கண்டளித் தழிப்பான் றேவர்க் காத்திடக் கடலி னஞ்ச
முண்டவன் பண்டை நாடா வுறைவது பாண்டி நாடு. (௨)

* உபபுராணத்துடனுறைதல். பதினெண்வகைஉபபுராணங்களுள் பதினெட்டா
ம் எண்ணத்ததாக இருத்தல்.

நத்துசந் திகளில் *வாணி நாற்பதோ டிருநான் காய
சுத்தவக் கரங்களான்றோர் தொகைகளாத் தொக்க சங்கத்
துத்தமப் புலவராயெம் முமாபதி தமிழோர் நீரால்
வித்தகக் கலாபீ டப்பேர் மேயது பாண்டி நாடு. (௩)

சதுமறைப் பொருளைத் தேர்வான் றுபதர் விரும்பச் சென்னி
விதுமறைத் தாசா னென்ன விமலன்மெய்க் கலைவி ரித்துப்
பதிபசு பாச மாமுப் பகுதியின் பொருள் விளக்கிக்
கதியரு ளாடல் செய்யக் கஞல்வது பாண்டி நாடு. (௪)

கலிப்பா.

நீலவாய் கடல்பரந்து நிலந்தெறுமோர் கரிபமதி
லேலவாய் குழலுமைகோ னிருங்கரநங் கணவரவான்
ஞாலவாய் மதுரை பின்மன் னகர்வரைப்போர் தரச்செய்திரு
வாலவா யெனுந்தலமு மமைந்திருப்ப திந்நாடு. (௫)

காப்பனூ ரரவணைகொள் கண்ணனெனக் கமலனெனப்
பூப்பனூ ழியினிலா னெனவனைத்தும் பொன்றுவிப்ப
னுப்பனூற் றமிழ்மறை நால் வருக்கருள்வா னயர்ந்ததிரு
வாப்பனூ ரெனுந்தலமு மகத்துடைய திந்நாடு. (௬)

அரங்குன்ற னுளமலரோன் றமர்ந் தறியாப் புன்சமையத்
துரங்குன்ற *வுலமலரா வுவந்துட்கொண் டெறிந்திடுபுத்
தரங்குன்ற கவினருள்வான் றருகுகன்றந் திமையக்கொடிருப்
பரங்குன்ற மெனுந்தலமும் பாங்கருள திந்நாடு. (௭)

பாடகத்தின் றொடர்புதலைப் படவினியன் மறைகோப்பச்
சூடகச்செங் காத்துமையா டிணைத்தனத்தி னமுதுண்டா
ராடகப்பங் கயமலர்க்கை யால்விடுமே டளித்ததிரு
வேடகப்பண் பியைதலமு மினிதுடைய திந்நாடு. (௮)

அடுங்கும்ப மத்தகமா வுரிபோர்த்த வராப்பணியா
னெடுங்குங்கற் பாந்தத்தி லோருருவாய் நிறைதிறன்காட்
டிடுங்குன்றி தொத்தெனல்போ லிலங்குபிரான் மலையதிருக்
கொடுங்குன்ற நற்றலமுங் கொண்டிருப்ப திந்நாடு. [௯]

* வாணிநாற்பதோடிருநான்காய சுத்தவக்கரங்களான்றோர்தொகை- ஐம்பத்தோர் அக்கரவடிவினளாகிய சரசுவதியின் கூறான நாற்பத்தெட்டெழுத்து நாற்பத்தெட்டுப்புலவராகவடிவுற்றுச் சங்கப்பலகையினிருந்தவர்கள்.

* [உலம்] சாக்கிய நாயனர் அந்தரங்கபத்தியினெறிந்தகல்.

பொருப்புத்தூக் கியவரக்கன் புகழ்ந்தேத்த வாமளித்தா
ணிருப்புத்தூண் புயவேட னெச்சிலுண்டு மருந்துறக்கண்
செருப்புத்தாள் பட *விலக்குச் செயன்மகிழ்ந்துங் கதிசேர்த்தான்
றிருப்புத்தூ ரெனுந்தலமுஞ் சிறந்திருப்ப திந்நாடு (௰)

கனவாய்நீங் கில்வாழ்வைக் கழித்திறைவன் கழலடைவா
மெனவாயி னீரகற்றி யமுதுண்ணு மெகினம்போன்
முனவாயெய் தியவினைநீத் தருளடைந்தோர் முன்னுதிருப்
புனவாயி லெனுந்தலமும் பொருந்தியுள திந்நாடு. [௰௧]

தருவிரா மேனிமிர்கா விலங்கைமன்னைத் தாசரதி
செருவிரா மேசிதைத்த தீதகலச் சிவலிங்க
மிருவிரா மேசுரனென் றிசைத்திறைஞ்சி வரம்பெற்றா
திருவிரா மேசுரமுஞ் சேர்ந்திருப்ப திந்நாடு. (௰௨)

ஆடானை யிவர்பரியா வமைத்தான்றன் முனிவருக்கு
$மாடானை மழுவெனக்கொள் ளைம்முகத்தான் வெள்ளிமன்றி
லாடானை வரைவெவிரண் டறவோருக் கலதுதிரு
வாடானை யெனுந்தலமு மமர்ந்திருப்ப திந்நாடு. (௰௩)

ஏனப்போர்க் கோடணிந்தார் சுந்தரர்தம் மெழிற்பதிசெல்
வானப்பேர் முடிக்காளை யாய்த்தோன்றி வரச்சொலலாற்
றானப்பேர் காளையார் கோவிலெனச் சாற்றுதிருக்
கானப்பே ரெனுந்தலமுங் கவினவுடைத் திந்நாடு. [௰௪]

நாவணங்கு மொழியினள்பொன் னனையாள்பால் வாதமுற்ற
மாவணங்கண் டுகெனகத் தால்வடிவை வகுத்திடச்செய்
தேவணங்கொ டுறைதலமாந் தென்மதுரைக் கடுத்ததிருப்
பூவணங்கொள் பெயர்த்தலமும் பொற்பவுள திந்நாடு. [௰௫]

விழியலகற் றுறுசுடர்சேர் விமலன்விதி யிகழ்ந்துளுற்றார்
பழியலகைப் பிறப்பினராய்ப் பார்வைக விறந்துபிறப்
புழி ‡யலகற் றிழிதிணையா யுறவிகழா ருளுற்றுதிருச்
சுழியலெனப் படுபதியுந் தொக்கிருப்ப திந்நாடு. [௰௬]

* [இலக்குச்செயல்] திண்ணனார் முன்னொருகண்ணைப்பறித்துத்திருக்காளத்தி யீசனாரது திருவிழியில் அப்பியபின் மற்றொருகண்ணையும் அவ்வாறுபறித்து அப்பக் குறித்தகாலைத்தன் செருப்புக்காலால் அவர்திருவிழியில் அடையாளமாகவைத்தது.

$ ஆடானைமழுவெனக்கொள்-மழுவைப்பயிலும் படையாகக்கையிற்கொண்ட.

‡ அலகற்றிழிதிணையாயுற-புல்முதலிய அளவில்லாத அஃறிணைவருக்கங்களாய்ப் பிறக்க.

பொற்றால வியமோவப் பொதுவில்விண்ணோர் றொழவிமெனவி
பெற்றாலந் தனக்கிருந்தார் பெட்பினுண்டா ராமுனிகை
யொற்றாலங் கமைந்துயர்பூ சனைமகுடத் தோங்குதிருக்
குற்றால மெனுந்தலமுங் குலவவுள திந்நாடு. [௰௭]

சொல்வேறு காப்பொருள்போற் றொருகுமுயிர்க்கு ளுயிரானோன்
செல்வேகத் தொடுபொழிந்தோ டவுஞ்செந்நெ னனைந்தோடா
†நெல்வேவல் பொருவவரம் பிழைத்தோம்புமெந்தைதிரு
நெல்வேலி யெனுந்தலமு நிலையுறுவ திந்நாடு. [௰௮]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இவைகொலோ வின்னு மிந்நாட் டெய்துவை பவங்க ளுண்டா
னவதிருங் கயிலை யோடு நவதிருப் பதியுந் தங்குஞ்
சிவமமர் தருபூ லோக கயிலையுந் திருமால் வைகும
புவனிவை குண்ட மென்னும் புரியுமோர் வயிற்பொ ருந்தும். [௰௯]

ஆநலா லெந்நாட் டிற்கு மதிபகந் துவம்பொ ருந்து
மீதலான் மாதர் கேள்வர்க் கினியராய் மைந்த ரின்றோர்க்
கோதுநீ ணெறிய ராய்ச்சூ ழொக்கலன் பினராய்ச் சைவ
நீதியா சாரம் பத்தி நிகழறந் தவந்தோ டோங்கும். [௨௰]

கலிநிலைத்துறை.

குறிஞ்சித்திணை.

இந்த நாட்டி னுக்கெழின்மணி முடியதாய்ப் பொருனை
யுந்தி வைத்தகைக் குறுமுனிக் கோங்குமா லயமாய்ச
சுந்த ரத் *திரு மகண்மகன் றேர்தொகு மிடமாய்ச்
சந்த முத்தமிழ் மணத்தொடோங் கியதுநண் பொதியம். [௨௧]

சித்தி யெட்டையும் புரிந்துமே வுலகினுந் திரிவோர்
†முத்தி ருக்கையு முருக்கிமோ னத்தினின் முதிர்வோர்
சத்தி யத்தனை நினைந்துதத் துவச்சிரந் தனைத்தோர்
மெய்த்த வத்தவர் மேவிவீற் றிருப்பதவ் விலங்கல். [௨௨]

காவெ லாங்கனி மதுக்கலந் துந்தியாய்க் கதுவப்
பூவெ லாஞ்சுரும் பிசைசெயுஞ் சிங்கையாம் புரத்தி

† எல்வேவல்பொருவ-வெயிலிற்காய்ந்துசுடும்நெல்லொப்ப.
* திருமகண்மகன்றேர்-இலக்குமியின்மகனாகியமன்மதனதுதென்றற்றேர்.
† முத்திருக்கு—காமம்-வெகுளி-மயக்கம்-என்னுங்குற்றம்.

வாவி நாயகி யாமுலோ காம்பிகை யுடனே
பாவ நாசமூர்த் தியுஞ்சுரர் பரவவீற் றிருப்பார். [௨௩]

ஆதி யீசற்காந் தொடைமறைத் தோரருச் சகன்றன்
றூதி யோதிக்கிய்ந் திறைக்குநல் கினன்சிகை தகக்கண்
டேத மாத்தண்டஞ் செயச் $சடைத் திலிங்கமென் னலுந்தோர்
போதவ் வாறுற்ற பிரான்சிவ சயிலமோர் புடைத்தாம். [௨௪]

மங்க ளச்சிவ மதுகங்கை சண்பகா டவியோர்
பொங்கு மாகட றிகழ்வட வருவிமா புனிதந்
தங்கு சித்திர நதியெனுந் தீர்த்தம்பொன் றூரம்
பொங்க யக்கொடு முடித்திரி கூடமும் பொருந்தும். [௨௫]

வரும லக்கரி யுரித்தமுக் கணர்மகன் வானோர்
பொரும லைத்தவிர்த் தருள்செயப புகழ்மிகு சூரைச்
செரும லைத்தவ னினத்தொடு செறுத்தவன் மகிழுந்
திரும லைத்தளி மகிமையுஞ் சிறந்ததங் கொருசார். [௨௬]

மாறின் மந்திரோச் சுரநகர் வாழுமோ மீசர்
வீறு கங்கையை வெளிமண ரியறறியன் னவற்றோர்
கூறு வேணியிற் சேர்த்தொரு கூறுமையாத் திமைப்போ
ராற தாகென வதுவரு வயிரவ மலையும். [௨௭]

கருமை யேந்திய கண்ணியாஞ் சீதையைக் காணா
வரும்வல் வானரத் தலைவன்வா ளரக்கன்வா ழிலங்கை
யருகு கண்டுதா வுதற்கொரா தாரமா யுறைந்த
பெரும யேந்திரப் பிறங்கலு மோர்புடை பிறங்கும். [௨௮]

வடவ டுக்கல்கார் முகம்வெள்ளி யடுக்கன்மந் திரங்கொண்
டிடவி னென்பய னிறைக்குயர் வேறுமீர்ம் பொதிய
நடமி யற்றிளைப் பொழிசிறு காலைநற் றமிழின்
புடனி சைத்தலை நல்கலி னெப்பொருப் புயர்ந்த. [௨௯]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

எண்டமிழ் முனிவன் வாழிய பொதிகையைக் கயிலை யென்ன
வண்டரும் வணங்குகின்ற றொனகனை யமுதா வாட்டி

$ சடைத்திலிங்கமென்னலுந் தேர்போது-மாலையை இலிங்கத்துக்கணியாநுதன் தாசிக்குச்சூட்டியதால் அதிலுரோமங்கண்டாசங்கித்ததலைவன்சோதனைக்குச சடையையுடைய இலிங்கமாக இருந்து அருச்சகனை இரக்ஷித்தல்.

வண்டிசை செயல்வாழ்த் தாவிழ் மலரருச் சித்த லாவான்
கொண்டலூர் சினைகை கூப்பா வணங்கலிற் கொழுங்கா வார்ந்த. (௯௰)

மங்குலோ வாதி வர்ந்து மலர்ப்பொழிற் றருமி டைந்துங்
கங்குல்போ னிழனல் கந்த காரத்தா னிலாத்தோய் வின்மை
யங்குள தென்பார் சில்லோ ரஃதன்றிந் தெயின மாதர்
தங்கண்மா முகநா ணிப்போ தால்கரத் தலினுன் மெய்யே. (௯௧)

தூங்குகை யுடைக்க ரேனுச் சுலவுத ரேகை செல்ல
†வோங்கலின் கடவுட் குற்ற தேவியோ ரிருவர் தம்மு
ளாங் $குல முடையாள் பாங்கர் நடைகற்க *விறைவி யாவாள்
பாங்கர்மென் சாயல் கற்கப் பழக்கந்தே டிடுதல் போலும். (௯௨)

முல்லைத்திணை.

மன்னுயர் தாரங் காயா மலரொம தைய னன்னை
தன்னையொத் தலர்த லானுந் தண்ணென்மா லதிப்பூ ‡தார
மென்னவோங் கிடுத லானு §மிமையவர் செறித லானும்
பன்னருங் கயிலை யிங்குப் படர்ந்தென விளங்கு முல்லை. (௯௩)

முத்தொளிர் செம்பொன் னீல மணிமுத லிடைக்கு யீன்று
வைத்தபூ வென்ன மௌவல் கொன்றைவண் டடர்பூ மல்கக்
கொத்தலர் குருந்தி னீழ லாயர்வேய்ங் குழல்க ளூத
வுத்தமத் தீஞ்சு வைப்பா லுதவுமா னினங்க ளேங்கும். (௯௪)

அலைகடன் மதித்தாங் §கண்ட ரிவையர் தயிர்மத் தூன்றி
மலைபுலி முழக்கி னெங்கு மதித்திடு மோதைக் கஞ்சிக்
கலையின மிரிந்து செல்லக் காமர்மா னினங்க ளன்ன
சிலைபுரை நுதலார் கட்கு மானியே தியங்கிச் செல்லும். (௯௫)

சேண்டொட வோங்கு தண்$கோத் திரவப்போ ரினிற்கொண் மூவேய்ந்
தீண்டல்கண் டமைப்ப தாகை யெனக்கொள்செவ் வேட னக்கு
வேண்டுமோ துலக்கோ மேனி மிளிர்வடி வாமென் றெண்ணி
யாண்டலை யினங்கள் கூவ லுதித்தல்போ லாகு மன்றே. (௯௬)

---

† ஓங்கலின் கடவுள்- குமரவேள்.
$ குலமுடையாள்- தெய்வயானை.
* இறைவியாவாள்- வள்ளியம்மை.
தாரம்- வெள்ளி.
இமையவர்-தேவரும் மனிதரும்.
அண்டர்- தேவரும் இடையரும்.
கோத்திரவப்போர்-வரகின்போர்.

(மருதத்திணை) கலிநிலைத்துறை.

நிரைக டந்திடும் புறவடுத் துளநெடு மருதத்
தரைக டந்திடு நதிபல வன்னவை தம்மு
ளுரைக டந்திடு பெருமைசால் பொருனைமிக் குயர்ந்த
வரைக டந்திடு தேவர்க டமின்மகே சனைப்போல். (௧௭)

இருநி லத்தவ ருய்வுற மீய்ந்திடு பொருனை
பொருவி னற்றமிழ் முனிவரா னேடுபொற் கரக
மருவி மிக்கதென் மலைமிசை வீற்றிருந் தருளு
டிருவு ளத்திடை யினையன தேர்ந்தனள் போலும். (௧௮)

அம்மை யப்பர்பால் வாங்கிவே ளாளருக் களித்த
செம்மை நெல்லினால் வளரறச் சிறப்பினுஞ் சிறந்து
மும்மை வையமு முயவமு தினைமுதிர் மருதம்
வெம்மை தீர்தர நிறைக்குது மெனவிழை வெய்தி. (௧௯)

ஆறு மாமுக னருள்பெறு மகத்தியன் கையின்
மாறு தாம்பிர பன்னியென் றொருபெய ருற்று
மாறி லாதகால் வழிச்சென்று மருதத்தி லுள்ள
வீறி லாமலர்த் தடங்குளம் யாவினு நிறைந்தாள். (௨௰)

மடைவ ழிக்கொடு வயல்புக மேழிவண் பதாகை
யுடையர் மிக்கறத் துடனடு வுடையரோன் றாழவுப்
படையி னிற்றன்ம விடையுட னடுவனூர் பகடுங்
கடைஞர் காட்டலிற் பூட்டிவன் னிலக்குணங் கவர்ந்தார். (௨௧)

சேறு செய்பவர் சேறுறு செய்விதை வீசி
நாறு செய்பவர் நடுபவர் நடுநடு முளைத்தாங்
கூறு செய்களை களைபவ ரோதையாங் கொன்றி
வீறு செய்மழை முழக்கினு முழங்குமான் மிக்கு. (௨௨)

கன்ன னுமவொற் றுமையினாற் †கரும்பினீர் காண்பா
னுன்னி நோக்கல்போ லும்பர்மீ னுலகெல்லை யோங்குஞ்
சென்ன னுமவொற் றுமையினாற் *சாலிசீர் தெரிவான்
மன்னி நோக்கல்போல் வானமீ னுலகெல்லை வளரும். (௨௩)

பூத லங்கொணல் வருணம்வந் தொழுக்கினிற் பொருந்தித்
தீதர் தந்தொடர் பற்றுநல் லோர்சிநே கங்கொண்

---

† கரும்பினீர்- புனர்பூசநட்சத்திரத்தினியல்பு.
* சாலிசீர்- அருந்ததியின் சிறப்பு.

‡ஓதி நன்குறத் திரிகர ணத்தொழி லுளுற்றி
யாதி தன்பதம் புகுந்தருட் குரியரா வார்போல். (௪௪)

$பலசெய்க் கூழினெல் லாய்ப்பசே ரெனக்களை பற்று
திலகு ரப்புனல் கொடுவளர்ந் திரும்பொதி யுட்கொண்
டலகி னற்கதிர் கான்றமு தேய்ந்தடித் தலைசாய்ந்
தலைவற் றேம்பினோர் தொழிலினிற் புகுந்தூத வுற்ற. (௪௫)

மன்ன லைப்புனற் றடத்தசை யம்புய மலர்மே
லன்னம் வைகனீர்ப் பெண்கையிற் செண்டுவைத் தாட
லென்ன லாமய லாம்பன்மென் மலரில்வண் டிவர்ந்து
தென்னி சைத்தல்வாய் திறந்தவள் பாடுதல் சிவணும். (௪௬)

மாடு சூழ்பணை தொறும்வலம் புரிக்குல முரல
வூடு நீடுவே ளுறுசிலை யெனவுளை வேழ
மீடி னித்திலஞ் சொரியும்பல் சுரம்பட விருக்கோர்ந்
தாடு நாமறை யவர்க்கரும் பொருளளிப் பவர்போல். (௪௭)

எருமை வள்ளையின் மேய்ந்துநா கிளங்கன்றை யுள்ளிப்
பருமடித்தடத் தொழுகிய பானதி யொழுக்கு
முருகு மொய்த்தமுக் கனிநறு முதுநதி யொழுக்கும்
பெருகி யோடிப்பா றேன்கடற் கெதிர்சொல்பெற் றியவாம். (௪௮)

தென்னை பைங்கமு காம்பிரம் பலவுமீச் சென்று
கன்னல் காட்டச்செல் கதிரவன் வையமீர்த் தோடு
முன்னி கட்குமே னிழல்செய வுன்னிய தென்றூற்
பன்ன வேண்டிய வளமெவன் பாவைவைப் புனைப்பாம். (௪௯)

நெய்தற்றிணை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கருணைசேர் முகமோ ராறுங் கமலநேர் கரமீ ராறு
மருவுகாங் கயன்றெய் வானை வள்ளியாந் தேவி மாரோ
டிருமையு மருள வாழ்மூ விருபடை வீட்டுண் மேலா
மொருதிருச் செந்தின் மூதூ ருடையதாம் வேலை வைப்பு. (௫௰)

ஐயமேற் றலைக்கைக் கொண்டோ ரங்கையி னனம்பெய் வார்போன்
மொய்கழி நளினப் பூவின் முதிர்ந்ததா துகுப்ப கைதை

‡ ஓதி- ஞானம்.
$ பலசெய்க்கூழ்- பற்பலவயற்பயிர்கள்.

யுய்நெறி யறிஞர் நையி னுநகம்வார்க் காரக் துப்புச்
செய்யபொன் னளிப்பார் போற்றேன் செறிமல ருகுப்ப புன்னை. (௫௧)

துன்னுசெம் பவளக் காடு நுழைச்சியர் சேரி தோறுந்
தென்னுறப் படர்த லன்னார் செவ்விதழ் நிறமு மின்முன்
மன்னுவெண் டரள மன்னார் தளவமா மலர்மென் மூரற்
றன்னெழி னிறமுங் கொள்ளச் சார்ந்திடல் போலு மாதோ. (௫௨)

உளவருப் பளக்கு மார்வ மகன்பெரும் பலதீ வின்கண்
வினைபொருள் வரவேற் றுப்பின் விடுகலத் தொனிபு லான்மீன்
களவுசெய் பறவை யோட்டுங் கம்பலை வலைகள் வீசி
வளமைமீன் படுக்கு மோசை வாரியோ சையைய விக்கும். (௫௩)

திணைமயக்கம்.

கறிக்கொடி கடிக்கை மேவுங் காட்சிகண் ணுநலை முன்னாள்
மறைக்கிறை தனைநேர் மாயோன் மங்கையாய்த் தழுவன் மானுங்
குறக்குல மடவார் தந்த மென்றுகுன் றவர்ம யங்க
நிறககடி முல்லை சந்தி னிமிர்ந்தலர் சொரிவ மாதோ. (௫௪)

வண்டிமிர் பொழில்சூழ் தண்ணூர் மருதவைப் பணங்க னார்தம்
பண்டரு மமுத வின்சொற் பயிலுமஞ் சுகங்கள் செங்கால்
வெண்டிரு மலர்வா ழன்னம் விறல்கெழு கிராத மாதர்க்
கண்டவர் நடைய வாவிக் கசடறப் பயின்று லாவும். (௫௫)

கடல்படு துவர சோகின் மேலுறல் கடற்பி றந்த
விடநுக ரிறையே மேலோ னெனவவன் மேனித் தேசும்
§பிடகநூ றருதே வென்னும் பெயரினன் கீழோ னென்னத்
தொடர்பினன் னவனி ருக்குந் துருமமுங் காட்டல் போன்ற. (௫௬)

வியன்சினை வேங்கைத் தாரு மேனிமிர்ந் தலர்ந்தொ சிந்து
கயம்படு கடலிற் பூத்துாய் நிற்றல்கற் பாந்த நீங்கி
நயம்பட வுலகுண் டாக்கு நாட்கடல் வண்ணன் பாற்சென்
றயன்படைப் பியற்றுன் றேர வடிவணங் குதனி கர்க்கும். (௫௭)

பகடுகைப் பகட்டின் கன்றோ டாய்ச்சியர் மருளப் பாங்கர்
திகழ்முதி ரையின்பைங் கூழ்மேய் செயலறிந் தானி ராசி
யிகலுட னகல்வான் வேந்த னிறைவனு நிலத்தின் வாய்ந்து
ககனமட் டுயர்செஞ் சாலிக் கதிர்கறித் தகலு மன்றே. (௫௮)

---

§ பிடகநூ றருதேவு- பிடகமென்னும் பௌத்த சாஸ்திரத்தையுரைத்த அருகக்கடவுள்.

உப்பொறி வாளை முல்லைச் சிறுவர்கட் குதவி வேலை
வைப்புவாழ் சிறுவர் மாறாச் சிவலும்வா ரணமுங் கொள்வார்
செப்புநேர் பெறுந்த னத்தாய்ச் சியர்கொள்ளு மெள்ளு மீய்ந்து
துப்புநிக் திலமு நெய்தற் றோகையர் கையாற் கொள்வார். (ருக)

கடலெறி வளையின் றண்டைக் கடைசியர் பணைமென் முத்துக்
கிடையிடை கோர்த்துக் கண்டத் திடுவரா விழையா வுஞ்சிக்
கொடியிடை தளரு மாதர் கொழுநரைக் கலத்தல் போலு
மடர்சினைப் புன்னை கந்தை யணைந்துமேற் படரு மாதோ. (சுய)

அலைகடற் காகம் பண்ணை யடைந்தன்பர் வரவு நோக்குஞ்
சிலைநுத லவர்க்கு நல்ல நிமித்தஞ்செப் பலிற்க ரைந்து
முலைவளர் குயிலி னத்தின் முட்டைகள் பலபொ ரித்துப்
பலவின்முட் கனிகி ழித்துப் பருஞ்சுளை கவர்ந்து மீளும். (சுக)

சந்தனப் பொதிகை தன்னிற் றனித்திளை யயின்று பாடி
வந்தன நடையார் பண்ணார் வண்டமிழ்க் கிளவி கற்றுப்
பந்தன கொங்கைப் பண்ணைப் பாவையர் பூவைக் கோதிக்
கந்தன்வாழ் செந்தி லூகங் கலந்துகண் படுக்குங் கிள்ளை. (சுஉ)

திருநாட்டுப்படலமுற்றுப்பெற்றது-
ஆகப்படலம் உ-க்குத் திருவிருத்தம். [அயக]

திருநகரப்படலம்.

கலித்திலைத்துறை.

ஆன நானில வளங்கொளிந் நாட்டிடை யமல
னான நாயக னமலையை மணந்தன வரத
தான நாயக னுயுயிர் தழைத்திடப் புரந்த
தான நாகரும் புகழ்வது தனிநெல்லை நகரம். (க)

நிலம கட்கொரு நிலவுமிழ் மதிமுக மெனவு
மலர்ம கட்கொரு மணிகுயிற் றுதன மெனவுங்
கலைம கட்கொரு பலகலைக் களஞ்சிய மெனவு
மிலகு மின்னதை நெல்லையம் பலமென விசைப்பர். (உ)

மன்னு நான்மறை வேணுவாய் நோற்றிறை வரத்தின்
றன்ன லாவிதை வேணுமா வனமெனச் சொல்வர்
பின்னுந் தன்மதே விடபமாய்ப் பிரளயத் திறவா
தென்ன வோர்ந்தமர் தலிற்றன்ம க்ஷேத்திர மென்பர். (ங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கதியருள் கம்பை நதிவயிற் காந்தி மதியுமை கனிந்துநோற் றவினிப், பதியைமேவ தமுர்த்தென் காஞ்சியென் றிசைக்கும் பனதிருக் காம்வரு பொருனை, நதியுயர் வேணுப் பிரான்றிரு முன்ன ருந்தர நடந்தவி முத்தம், வதிதரு கங்கை போறலி னிதன்பேர் தெக்கண காசியா வழங்கும். (௫)

இன்னமும் வேறு பெயர்களுள் ளனவா லிப்படிச் சிந்துபூந் துறைப்பேர் முன்னதா நாலெட் டாம்பெருந் தீர்த்த முள்ளன மூர்த்திமுற் காலந் தன்னிலெ ் பரப்பின் வேலிகோ லியதாற் சாலிவா டீசர னெனப்பேர் பன்னிய மூல லிலிங்கமு மோங்கு பழமறை யுருக்கொள்வேய் வனத்தில்.

நடந்தவோ ராயன் குடங்கொள்பா னிதம்வேய் முனைதட்டிக் கவிழ்ந்தலா னவியத், திடந்தவோர் நாணெத் தோரொழப் பயமுள ளெழமுழுதுங்கண்ட ராமத், தடம்புயவழுதிக் குரைத்தலும் போந்தாச் சரியமுற் றிறைஞ்சவேய் வனனுய்ப், படர்ந்தவன் வேண்ட வளர்தலால் வேண்ட வளர்ந்திடு பானுமென் றிரண்டாம். (௬)

நவிலுமிவ் விரண்டு மூர்த்தியா நெல்லை நாயகன் சுவேதநன் னுமை, நுவன்முனி வனுக்காக் கூற்றினைக் காய்ந்துந் தமக்குநோன் றவமும்பன்னியர்க்குந், தவலருங் கற்பு மன்றியோர் தேவின் றெனப்பயி ருருகா வனத்துக், கவர்மன முனிவ ரகந்தைக ளொழித்துங் கருணையின் வீற்றிருந்தருள்வான். (௭)

பின்னுமாற் றுட ளளவில வேதம் பெரும்பணை யாயறக் கடவுளுன்னரும் விடையா யுறைதலங் கங்கை யொப்பவார் சிந்துபூந் துறையை முன்னதாந் தீர்த்தம் வகுத்திடு மூர்த்தி மொய்த்தவிந் நகரினுக் கிணையாப் பன்னவிப் படிவிண் ணவர்பதி யுரகர் பதியினு முளதுகொல் பகரீர். (௮)

நன்னர்நான் மறைவே யுருவெடுத் ததனு ளுமும்பல் விருக்கமா குவமீங், கென்னவா கமமும் புராணமுங் கலையு மெண்ணியே சாலிவா டிப்பேர், பன்னுமா நகர்க்குப் புறநகர் தோறும் பாதவ மாயுறன் மானப், பொன்னுலகோங்கைந் தருவினுஞ் சிறந்து பொழிலெலாம் வளத்தவாப்பொருந்தும்.

பண்ணையாட் டயரும் பானலங் கயற்கட் பாவையர் குழல்பயோ தரமென், றெண்ணியாங் கடுத்த மயிலின மனையா ரிணையிலஞ் சாயல்கண்டுடைவுற், றுண்ணையாத் தொழும்பு செய்தல்போ னடிப்ப வுறுமினைப் பகற்றிடத் தெளிக்குந், தண்ணறு நீரி னறுமது வுகுக்குந் தண்டளிர் செறிந்குதண் டலையே. (௯)

கருவிவான் முகிலைப் புழைக்கையா லெட்டுங் களிற்றினந் துதிக்கை யின் முகந்து, பருகநீர் குறைவுற் றன்னதப் பகடு படுகடாம் பொழியுமா றிழிந்து, பெருகுநீர் மையினுன் முன்னிலும் பெருகிப் பெயர்பெருங் கரை யையுங் கடப்ப, முருகுகொப் புளிக்கும் பங்கய மலர்கண் மொய்த்திட வெ ங்கணமவா றிலஞ்சி. (௰௧)

மறப்பெருங் குணத்து விருத்திரா சுரனால் வானவ ரிறைபடு துயர, மறக்கெடு மாறு கடலையுண் டயின்ற வகத்திய னிங்குள னினுமத், திறத் துறு வரம்பாம் பெறன்முறை யென்று திருமலி நெல்லையிற் புறஞ்சூழ்ந், தெறைப்பொழு தேனு மிடம்வல மகலா தெழுகட லகழியா விசையும். (௰௨)

இந்நகர்ப் புறஞ்சூ ழெயிலுமை யொருசா ரியைசுதை யாமவள் பதி யோ, தன்னையோர் சிலையாக் கொண்டுள னல்வர்க் கருமறை சாற்றமுன் றனிந்தா, னன்னவ னூர்காலு றினவட் காத்து மன்றெனி லவனருட் கி ளைந்து, மஞ்ஞுது மெனப்பொன் மலைபுடை வளைந்து வைகுநல் போல் வளை தருமால். (௰௩)

இசைமறை நான்கும் வேனுவா யிறைபாங் கிருந்தவன் யாமுமீங் கி ருப்பின், வசையறச் சிருட்டி முறைநெறிந் தியற்றல் வாய்தரு மென்றுநா ன் மறையோன், றிசைமுகத் துடன்வை குதலினுற் றிசைசேர் சிகிரிகள் வாயிலே புதவே, யசைதரு மணியே யனையன்வா யிதழ்நா வனையதாக் கொ ண்டுறல் போலும். (௰௪)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அடர்கொடி தாங்கி விண்மே லமர்க்கெழு வானை யாங்கே
தடைசெய்தி யெனவிண் வேந்தன் றன்னதூர் தியைப் பணித்து
விடவது போர்தொன ஞர்கண் மேவல்பார்த் துலாவல் போலு
முடிகெழு மாட கூட முகட்டிற்கொண் மூவு லாவல. (௰௫)

கொன்னில விரவி செல்லத் தடைசெய்கோ புரத்து மின்னார்
பொன்னர மியத்துங் கூத்துப் பொலியரங் கத்துங் காந்தக்
கன்னில வுறக்கு யிற்று மாடகூ டத்துங் காட்டும்
பன்னிறக் கொடிக ளாடல் பயோதரங் களைச் சுமந்தே. (௰௬)

கடல்படு சங்காற் சாந்தாற் கவினுறத் தீட்டிவெண்மை
வடிவுடைத் தாய மாட மாலைகண் மழவ ருத

* ஒருசாரியை சுதையாதல்- தனையடுத்த இமமலைமகள் தனக்கு மகண் முறைய ளாதல்.

விடையிவர் தூன நாதர் விழாகலை காணபா ணிறகு
மடியவர் தொகுதி யேய்த்தாங் கணிதர விளங்கு மன்றே. (௰௭)

ஆடவர் முடியுந் தோளு மகலமு மாடல் கறகு
மாடமுங் கரும்ப ரம்பை மலர்த்தொடை நாளி கேர
நீடிய கமுகு தீப நிறையும்வீ தியுமின் னார்கள்
பாடக மணியும் பாத பங்கய மலர்கள சூடும். (௰௮)

மழவரு வியல்பி னீடு மணமரு வில்ல மெங்கு
முழவரு வியல்பி னீடு முதிர்வரு வரங்க மெங்கு
முழவரு வியல்பி னீடு முரமருப பழனமெங்கும்
விழவரு வியல்பி னீடும் வெளியரு வீதி யெங்கும். (௰௯)

திருமறை பொதுநூ லாமெய்ச் சிவாகமஞ் சிறப்பு நூலாம்
பொருடெரி தரினென் றுற்கீழ்ப் பொருந்துநால் வருக்கு ணர்த்திக்
குருவடி வான பெம்மான் கோதில்சீ *ரநாதி சைவ
வருணமாநா மத்தார் கோயி லணிநகர் நடுவ ணோங்கும். (௨௰)

புரகான் றனியுள் வேத புராணகோ டணையுஞ் சைவ
நூலவரீ ரிருவ ரோதுங் குளிர்தமிழ் மறையி சைப்பும்
பரதமோர் பவரி சட்டும் பஞ்சவாத் தியமு ழக்கு
மரவெனு மொலியு மோவா தமரர்கேட் டினமுந் துஞ்சார். (௨௧)

திதியிருண் மலந்து மிக்குஞ் சிவாகமத் துறையி னின்று
கிதிகதி யருளுங் கண்டி நீறும்வேய்ந் திலைறக்குங் காந்தி
மதிவடி வணிக்கும் பூசை வழாதியற் றுதி சைவர்
முதலிய ரொடுபல் சைவ முனிவர்வா சமும நேகம். (௨௨)

அருமறை முறைவி டாதங் காற்றுசெவ் வேள்விச செந்தீ
தருபுகை பனியின் வானிற் சார்ந்துபங் கயத்தை வாட்டும்
பெருமையு மவிப்பா கங்கள் பெறவும்பர் நிலததுத் தேவர்
வருமொரு தகவு மோங்கு §மாநிலத் தேவர் வீதி. (௨௩)

போர்படைப் பயில்வோர் சாலை புழைக்கைமா வைகுந் தானம்
வார்திரை கடல்க ளன்ன வாம்பரி பிணிக்கும் பந்தி

---

* அநாதிசைவ வருணை நாமத்தார்- எழுவிதசைவருள் சிவபிரான் அநாதிசைவ ரென்று சிவாகமத்தில் விதித்திருக்கிறபடி திருப்பெயருடையவர்.

§ மாநிலத்தேவர்வீதி- தேவர்கட்கு அவிப்பாக மூட்டும் வேள்விக்குரிய அந்தண தெரு.

கூர்த்ரு படைசெ றிந்த கூடமாத் தாண மோங்கும்
பார்முறை யரசு செய்யும் பண்புடை வேந்தர் வீதி (உச)

நெடுமலை மருத முல்லை நெய்தல்சேர் பொருள னைத்துந்
தடவரை யனைய மாடத் தலங்கண்மாட் டோங்கிச் சூலப்
படையுடைப் பெருமான் றோழன் பதியிவண் போந்த தென்ன
வடர்தர லோவா தென்று மணிதிகழ் வணிகர் வீதி. (உரு)

பொருந்துநான் மறையோர் மன்னர் பொற்புறு கவிப்பர் மற்றோர்க்
கருந்துவ வுழவி னல்க வமையுப காரணஞ் சுற்றம்
விருந்துதெய் வதங்கோ தென்னம் புலத்தவர் § வேள்வி மெய்ம்மை
திருந்துசை வாபி மானந் திகழும்வே ளாளா வீதி. (உசு)

வேதியர் தமின்மா சைவர் வேந்தரொட் டியரின் னோரி
லோதறு சைவர் பின்னோர் தமிலவாந் தாசை வத்தோர்
போதறு லோமர் தம்மிற் பிரவர சைவர் பூவிற்
றீதிலே னையரி லாமந் தியசைவர் தீக்கை யுற்றோர். (உஎ)

சொன்னநாற் குலநான் காலுந் தோற்றமுற் றுயர்வு தாழ்வு
மன்னுபல் குலத்தோர் தங்கண் மரபின்வெவ் வேறு வைகி
யன்னவர் மரபுக் கேற்ற வருந்தொழில் வழாது செய்யுந்
தன்மையின் வாழ்வ ரன்னோர் தம்மறு கனந்தஞ் சாற்றின். (உஅ)

வைகறை யெழுந்து தூய்தின் மனத்திறை யடிநி னைந்து
செய்கட னனைத்து முற்றிச் சிவபிரான் பூசை யாற்றி
யுய்வகை யருளு நெல்லை யுமாபதி யால யத்தை
யெய்திமுப் போது மேத்தி யினிதுநாள் கழிப்பார் பல்லோர். (உகூ)

அரவநாண் வரைமத் தாக்கொண் டளக்கரை மதித்த வேலை
சுரர்தொழக் கறுத்த கண்டன் றொழும்புளம் வாக்கு மெய்யாற்
புரியடி யவர்க்குப் பூசை புரிந்தமு தருத்தி யன்னார்
கருதிய வளித்துங் காலங் கழிப்பவ ரளவிலாதார். (௩௰)

அரவணை யுறங்கு மாய னயனிவர்க் கறியொ ணாதம்
பரமனற் சரிதங் கேட்டுப் பகற்பொழு தினித கற்றிக்
குரவலர் கோதை யாரங் கூடிப்பின் கூடி யின்பந்
தாறுகர்ந் திரவ கற்றுந் தன்மையர் வரைவி லாதார். (௩௧)

பொன்னரா மியத்து நல்லார் புணர்முலை மருப்புத் தங்க
கன்னிகர் புயத்துப் பாயக் கர்மப்போ ராடி யேய்ந்த

§ வேள்வி- ஈகை.

மின்னிடை யிரதி கேள்வன் வெரிநிட வென்றி கொண்டு
சின்னலம் பொருந்த வாஞ்ஞர் கழித்திருப் பவருஞ் சில்லோர். (கூஉ)

தேடலந் தருமந் தானந் தெறுதல்வெஞ் சினங்கு ரோதம்
பாடலந் தமிலான் காதை பழித்தல்புன சமையத் தீமை
யோட †லம் மைபயின்கை நீரா றொடுங்கல்யோ குழப்போ ருள்ளம்
வாடலங் கனையா ருக்க மருட்டல்வே சியர்கூ ரக்கம். (கூஙு)

வெறுப்பன யோகு ழப்போ ரைம்புல வேடர் வாதை
செறுப்பன வுழவின் மாந்தர் செழும்பயிர்க் களைக்கு ழாங்கண்
மறுப்பன மெய்ம்மை நூற்கு மாறுகொண் மயக்கப் புன்னூல்
கறுப்பன சூல்கொண் மேகங் காப்பன வழுவா வாய்மை. (கூச)

பாலுளோர் பிறலோ கத்தோர் பகருமிந் நகாச்சீர் நோக்கிச்
சாலவுந் தமது வைப்பைத் தாந்தனி யிகழ்தல செய்வார்
மாலுறு சமைய நூலின் வழிபுகுந் துழன்றோர் சைவ
நூலின்மாண் புணர்ந்த பின்முன் னூலினை யிகழ்த லேய்ப்ப. (கூரு)

என்னினிப் புகலற் பால திச்சையா விமைய மீன்ற
மின்னொடும் புதல்வர் சூழ விமலனூர் விழாப்பே ரிட்டுப்
பன்னிரு மதியும் வீதிப் பவனிவந் தருள்வா ரொன்னி
னிந்நகர் வளமி னைத்தென் றனந்தனு மியமபற் பாற்றே. (கூசா)

திருநகரப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் கூ-க்குத்திருவிருத்தம். [ராயஎ]

சிந்துபூந்துறைப் படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருமலர்ப் பொழில்பாங் காரிம் மாநகர் திருநெல் வேலி
நிருமல னுறைகோ யிற்கு நேர்குண பானே ரில்லாப்
பொருனையந் துறையுட் காசிப் புரவலன் குட்டந் தீர்த்த
பெருமையி னப்பேர் தானே பெற்றதண் டுறைக்குத் தென்பால். (க)

இச்சகம் புரக்கு மன்னர்க் கிராசதா னியுமெண் கண்ணன்
மூச்சகம் புரக்குங் கண்ண னிவர்க்கொரு முதல்வ னான

† அம்மையின் கை நீராறு- உமாதேவியின் திருக்கரத்திலுதித்த பொருனை நதி.

விச்சுவ நாதர் தாமே விசாலக்க ணம்மை யோடு
நச்சிவாழ் பதியு மாகுங் கொக்கரை நகர்க்கு மேல்பால். (உ)

பன்னுதூர்க் கேச தீர்த்தப் பதிக்கொரு வடபா லாக
வின்னநால் வரைப்பி னோங்கு மெழிற்றிருப் பதியொன் றுண்டத்
தொன்னகர் நறுங்காப் பைம்பூஞ் சுனைதண்ணென் பழனம்*மோங்கப்
பொன்னமர்ந் தொளிருஞ் சிந்து பூந்துறை யென்ப*மாதோ. (௩)

சுந்தர யாக சாலை தொக்கற மோம்பு சாலை
சிந்தனி னிதியச் சாலை சென்னலோ தனத்தின் சாலை
பந்தவல் வினைக ணீத்த படிவர்தம் பன்னூ சாலை
யைந்தரு நலங்கொள் சோலை யலகிலா தாங்கி லங்கும். (௪)

கந்தவே டன்பால் வேடக் காந்தைவந் தணைவா னுள்ளத்
தூந்தவா வினைமு டித்த வொருத்தன்மா முகத்தோ டும்பர்
வந்திரு மதக டாம்போல் வரங்கடாம் பொழியு நீராற்
சிந்துபூந் துறையி ரண்டு தீரமும் பொழியுஞ் செல்வம். (௫)

§மறையவ னொருவன் றந்தை யென்புமென் பூவா வாய்ந்த
துறையஃ தினமு மங்கட் டொக்குடல் விட்டா ரங்க
நிறைமண ந்தருமென் பூவி னீள்சிலை யாதல் சான்று
வறையுமென் றிடின தற்கொப் பாயதெத் தலமா மற்றால். [௬]

ஆங்குறு வெடுத்தோர் வாழ்ந்தோ ராருயிர் விடுக்கப் பெற்றோர்
வாங்குநான் மருப்பி யானை மகபதி திருநா டாதி
யோங்கிரும் பதவி முற்று முற்றுவாழ்ந் ததன வாவு
நீங்கவிந் துலவும் வேணி நிருமல னுலகு சேர்வார். [௭]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இன்னமா தலத்தோ தருஞ்சிவ தீர்த்த மேலவே யியைந்துள திதன்பான்
மன்னுமாண் பொருணை கம்பையா றிரண்டு மருவமுக் கூடலென் றொருபேர்
பன்னுவா ரமரர் படிவர்பன் னதிகள் பன்மலர் தூவமுன் னாளும்
பின்னரா ரியையு மிவண்படிந் திடலாற் சிந்துபூந் துறைப்பெயர் பெறுமால்

§. களந்தை நகரினின்றும் ஒருபிராமணன் காசிக்கங்கையிற்போடக்கொண்டுபோன அங்கம் அதுசமந்தமற்றொருவனால் சிந்துபூந்துறையில் வைத்து அவிழ்த்தபோது தாமரை மலராகவும் கங்கையில் அங்கமாயுமிருந்ததைப்பார்த்து அதிசயித்து மறையவனுக்குரைத்துத்திரும்பவும் சிந்துபூந்துறைக்கு வந்தவிழ்த்துப்பார்க்கும்போது தாமரை மலரா யிருக்கக்கண்டதலம்.

காசியே நெல்லை கங்கையே பொருனை கவின்மணி கன்னிகை தானே
பேசுறு சிந்து பூந்துறை யென்ப பின்னுமுண் டிரவியை மதியை
மூசாரத் தீண்டு காலமா திகனி விதனிலெங் நதியுமொய் த்தாடு
மாசிலாப் பொருனைத் தீர்த்தங்க ளனைத்து மாடிய பயனிலை தருளும். (கூ)

பொருவிலிச் சிந்து பூந்துறை மூழ்கு மொருவன்றன *பூனையின் குருவை
மருவுற மூழ்கு வித்தனன் மூன்று வைகலலை திறத்தலுங் கணங்க
ளருமையின் விமானத் தேற்றியே சிவலோ கத்தமர் வித்தன முன்னாட்
டிருகுசஞ் சிதமுஞ் சிதைதரு மைந்தக் காஞ்செபித் தாடினித் தீர்த்தம். (௰)

சிந்துபூந் துறைப்பேர்த் தீர்த்தமீ திவண்வாழ் திவ்விய மூர்த்தியி னிய ல்லை, முந்தவாய்ந் திடினும் முகிப்பிரான் றனே முன்னம்யா மாடவி னி ப்பேர், வந்ததித் தீர்த்தந் தனக்கிதிற் படிவோர் வணங்குவோர்க் கியாதும் விக் கினங்க, டந்திடா வணங்கைம் முகப்பிரா னுருத்தாங் குதறகு மென வுற்றுன் போலும். [௰க]

ஈதுடன் றீர்த்த மாடுவோர் வினையைக் கவளமாக் கொண்டிருங் கரு ணைப், போதிரு மதமா வெள்ளமாப் பொழிவான் புரிந்தெழுந் தருளினன் போலுந், தீதகல் பூசை யெவர்பரி சித்துச் செயினும்பன் னிவேதனஞ் செ யினு, மாதர வுடனகொண் டெண்ணியாங் கெய்த வருளுதற் கமர்ந்தனன் போலும். (௰உ)

பனைதரு பொருனைப் பாவைநீ ரமுதாய்ப் படர்தலிற் பருகுமாண் பி னர்மெய், நனைதினை தெறவா ரமுதுணுந் தேவர் நாணமேற் கதிபெற மு யன்றுற், றுனைநிய மாதிக் கூறுறு தணங்கு மதிவிதித் தொழுகலோம் புத ற்கா, வனைமுனி கடல்வேள் வைகநாப் பணிற்கைம் மாமுகன் வைகினன் போலும். [௰௩]

எந்தத்தே வரையா யினும்வழி படுதற் கியைபவர் தமிழ்வட மொழி யிற், சந்தப்பா வினங்கொண் டரும்பொரு ளமையத் தந்துகள் பலசமைத் திடுவோர், முந்தெத்தே வரும்போந் திணையடி வழுத்து முறச்செவி தழை யொரு முதலைச், சிந்தித்தேத் திடுதன் முறையதன் பொருட்டாச் சிறந்து வீற் றிருந்தனன் போலும். (௰௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அருளொரு வடிவா யிங்ங னமர்ந்தன்ப ருளத்தும் வாழும்
பரமன்வல் லபைகோ னைங்கைப் பண்ணவன் பதம்ப ராவி
வருணன்செய் தவத்தா லன்னோன் மகிழச்சங் கமஞ்செய் மாதாம்
பொருனையம் பொதியின் மேய புராதன வகைமை சாற்றின். (௰௫)

---

* இறந்தபூனை கையின்மான்மழுவொடு விமானமேறியது.

வரைமகட ன்னை யீசன் மணஞ்செய விமையத் தேய்காற்
றரைவட பாலிற் றாழத் தக்கண முயர்தல் கண்டு
கரையில்விண் ணவரோ யாதி கணமெலாம் வெருவ வெம்மான்
றிரைகடல் குடித்துத் தேவேந் திரற்புரந் தானைக்கூவி. (௰௬)

இவ்வகைப் புறத்து நந்தம் மெழின்மணங் காண்பா னியாருந்
தவ்வலின் றெய்த றன்றுற் றாரதல முயர்ந்துந் தாழ்ந்துங்
கவ்வையுற் றனவா கின்ற வாதலா னமைநேர் கற்றோய்
செவ்விதிற் செயவொன் றுண்டு தெரிகுறுதுந் தென்றி வெற்பின். (௰௭)

இன்னினி நீசென் றெய்தி னேற்றந்தாழ் வின்றி மன்னுஞ்
சென்னெறி படர்க வென்று செப்புமுன் முனிவன் றாழ்ந்தே
பன்னகா பரண யானென் பசருமா றுனது மன்ற
றன்னையா தரித்தேற் கிதோ தகுதிநீ யருளல் வேண்டும். [௰௮]

எனக்குட முனிவ நின்றன் வேட்கைநன் கிசைந்தேம் வேணு
வனத்ததாந் திருநெல் வேலி மாநக ரத்துவந்தே
யுனக்குநா முமையி னோடு முவப்பினிம் மணக்கோ லத்தை
யனைத்துவா னவருங் காண வருளுதும் போதி யென்றான். (௰௯)

அருள்பெறு முனிவன் பின்னு மையனே மகிமை தங்குந்
திருநெல்லை நகரில் வாழுஞ் செல்வரும் பாண்டி நாடு
மிருண்மல வலியி னீங்கி யின்பவா ரிதியின் மூழ்க
வொருபெரு நதியின் றெற்கிங் கருள்கென வுமாமகேசன். [௨௰]

பொருனையை நினைய வந்து பொன்னடி போற்றி நாயேன்
வரவுளங் குறித்த தென்னோ வெனவான் மறுவி லாத
வொருகுறு முனிபின் னீதென் னோங்கல்சென் றந்நாட் டுள்ளோர்
திருவினோங் கிடக்கொ டுத்தி சிறந்தநின் னமுதை யென்றான். [௨௧]

பொருனைகேட் டெந்தாய் வெள்ளிப் பொருப்பம ரானைப்பா டாணைப்
பருவரை யடையு மாறு பணித்தனை பிழையொன் றில்லா
னரியமா தவத்தன் கும்ப னாயினு மாண்பா லோடே
யிருநிலந் தன்னிற் பெண்பா லேகுத றரும மாமோ. (௨௨)

திருவுளம் பற்றற் கேற்பச் சிறியனே னியைத றானே
பெருமையென் றடியில் வீழ்ந்தாள் பின்னுக னியம்புங் கும்ப
னுருவரு வில்லா நம்மை யொப்பவ னுவன்றன் பன்னி
பொருவினம் முமையை யொப்பாள் போதலாற் போத லாறே. (௨௩)

நீசெனு மாற்றிற் பாவ நாசமா தியநா நித்தம்
வாசஞ்செய் தலம நேக மாயவன் பதியே ரம்ப
னூசில்செவ் வேற்கை மைந்த னாலயம் பலகண் டப்பாற்
காசறு கயிலை நோக்க கழறுநம் பதியுங் காண்பாய். [உச]

மாசின னேனு நின்பால் வந்துழுழ் கினரோ னம்மைப்
பூசனை புரியுங் கையும் புகழ்பல துதிக்கு நாவுங்
காசினந் துதிகள் கேட்குங் காதுநோக் கிடுநற் கண்ணு
நேசமார் நெஞ்சுஞ் சூழு நீள்சர ணமுமுள் ளோராய். (உரு)

படைகுடி பைங்கூழ் நல்ல பண்புடை யமைச்சர் நண்ப
ரடையர ணுடைய ராகி யவனியிற் போக மெட்டு
முடையாராய்க் கொடைய ராய்ப்பா ரொருகுடை நிழலிற் காத்துக்
கடையினுஞ் சித்தி சேர்வர் களிப்பினோ டெனவம் மாது. [உசா]

எங்கடம் மீசன் பொற்று ளிணைமலர் மிசைவீழ்ந் தேத்திப்
பொங்குமா னந்தங் கொண்டு நிற்றலும் பொருனை மாதை
யங்கண னினிது நோக்கி யம்பிகை யங்கை வந்த
நங்கைநின் னுளத்தெந் நாளு நாமிருக் கின்றோ மென்று. (உஎ)

ஆசிகள் பலவுங் கூறி யகத்திய முனியை நோக்கித்
தேசுறு மிந்த மாது தெண்புனல் வடிவத தெய்துங்
காசறு நினது செங்கைக் கமண்டலத் தேற்றி யென்ன
வீசன துரையின் வண்ண மேற்றவன் பொற்றாளேத்தி. (உஅ)

தென்றிசை தன்னை நோக்கிச் செல்வுழிக் காசி காஞ்சி
மன்றுடைத் தில்லை மூதூர் மதுரைகுற் றால நெல்லை
யென்றிவை யாதி யாய தலந்தெரி சித்துத் தென்றிக்
குன்றரு குறையும் பாவ நாசத்தைக் குறுகி யங்கண். (உகூ)

அதிர்விடைக் கொடியான் றன்னை யருச்சித்துப் பணிந்து சிங்கைப்
பதியுறை சிவனே பாவ நாசனே பணிவோர்க் குய்வு
மதிதரு முதலே யிங்ஙன் னவிலிடப் பணித்தி யென்னப்
பொதிகையுற் றிசைமேற் கொண்டான் புனிதனைச் சமமாக் கண்டான். (௩0)

இத்திறத் தாங்க மர்ந்த விருந்தவ முனிவன் செங்கை
வைத்திடு கரகந் தன்னுள் வதிதரு பொருனை மாதை
யுத்தம மணமி யற்ற வுளங்கொண்டு வருணன் செந்தூர்
வித்தகக் குமர மூர்த்தி யிணைமலர்ப் பதம்ப ராவி. [௩க]

தவத்தரிற் றேற்றி மெய்மைத் தவத்தருக் கிடரோ யாற்று
மவத்தவில் வலவா தாவி யாவிகொண் முனிவ ரேறுஞ்
சிவத்தமிழ் முனியை நெஞ்சிற் சிந்திப்பப் போந்தன் றேனெஞ்
சுவப்பநின் கருத்த றிந்தா மொலிபுனற் கிறைவ வீண்டு. (௩௨)

பொருனையை மணத்தற் கெங்கோன் புயமிரா றுடையா னல்குந்
திருவருள் பெறுவா யைங்கைச் செம்மறன் சரித மூற்று
முரமுற வுணர்ந்தி றைஞ்ச லுறினெனி தினிற்கை கூடுஞ்
சரதமென் றுரைக்கத் தேருஞ் சால்பினிற் றலைமை யுற்றான். [௩௩]

சிந்தூர முகப்பி ரான்சீர் தெரிந்துளோர்த் தெரிந்து ளோரு
முந்தலை கடவி யத்தோன் யாவர்க்கும் வீயா மோகந்
தந்திடன் மறந்தி டான்போர் நறையெலா முய்ய மாரி
யுந்துவான் $மீதே மாரி யுந்துவா னியற்றி னானால். [௩௪]

காதலான் மதவேட் கஞ்சிக் கருத்தழி கின்றே னென்கொ
லேதமி லகத்தி யன்கை யிருங்கமண் டலமா னேனே
லோதரும் பொருனை மாதை யுவந்தென திடம்வை கப்பெற்
றுதா வுடன்சு கித்தெஞ் ஞான்றும்வாழ்ந் திடுவ னன்றே. (௩௫)

நித்தமும் பொருனை மானை நினைந்தவட் கூட வுன்னி
மத்தெறி தயிர்போற் சித்த மயங்குவேன் பொதிய மென்னு
மத்திரி யாயி னேனே லவளையென் றலைமேற் கொள்ளுஞ்
சத்தியை யுடைய னாவேன் றவமதற் கிழைத்தி லேனால். (௩௬)

பாருமெண் டிசையு மன்ன பைந்தொடி யன்றி மற்றைக்
காருநன் பொருனை மிக்காங் ககனமும் பொருனை யெந்த
வூருநன் பொருனை மாதா வுற்றுள மலையும் வண்ணை
மாரன்மால் செய்தான் மேனாண் *மறுக்கமால் செய்த தோர்ந்தே. (௩௭)

பெருவட வான லத்தின் பெருமையுங் கெடுக்கு நீரி
னரசனென் றோரா னோயா னனங்கனென் னங்க மேவான்
மருவுறப் பொருதான் முன்னாள் வாதனைப் பொருதா னன்னா
னெரிவிழி யொன்றால் வென்றா னஃதிலே னெதனால் வெல்வேன். (௩௮)

கயந்தலை மனைப்பூ வம்பு காமன்கை மறந்தெய் தாலும்
வயங்குதி யம்பாக் காயு மென்பதை மனத்தி னாய்ந்து

$ மீதேமாரி- மீது, அம்பு மாரியை.

* மறுக்கமால் செய்ததோர்ந்தே- இராமாவதாரத்தில் சேது அணைகட்டும்போது நினைத்தகாலத்தில் வாராதவருணனன்பேரில் அத்திரந்தொடுத்தது.

பயந்தவன் பயமுற் றானேற் காமத்தீத் தெறமெய்ப் பட்டார்
செயந்தனைப் பெறுவ ரேயோ தேம்பிநெட் டுயிர்ப்ப தின்றி.　　　　(நகூ)

காய்தொழில் வெய்யோற் கன்றிக் கலைநிறை மதியே நிற்கு
மேயதென் னைய கோவோர் வெய்யவர் சேர்க்கை யாலே
தூயருந் தீய ராவ ரென்பபோற் சுடர்ப்பா லோர்ந
ளாயவா சனையோ வென்னை யழன்றுநீ வாட்டு கின்றாய்.　　　　(சய)

இருமனப் பெண்டிர் பூப்பி னிறைவனு மொருவன் காத்து
மருவவும் பிறற்குற் றாளாய் வருத்தமுன் னவற்குய்த் தாற்போற்
கருநிறக் கடலே வேட்குக் கடிமுர சாய்மன் னென்னுய்
வெருவுற முழங்கிக் காய்வாய் வியப்பிதெம் தலைநா யென்னே.　　　　(சக)

இருளிராப் பெயரின் வேறா யிருங்களிற் றடஞ்சே றுங்கட்
குரமிகு *பாகற் கோற லுறுதொழி லற்றால் வெய்யோன்
குரைகடற் படவீழ்ந் திட்டாய் குளிர்நிரை நதிமான் றந்த
விரகமுர் வேனைத் துன்ப வேலைவீழ்த் திடுவ தென்னே.　　　　(சஉ)

தென்றலை விரும்பி யீசன் றென்றலை நணுகி யாடு
மென்றனை யயர்வு தீர்தற் கெனினெனைக் கயர்வு செய்த
னன்றல வெனினுந் தேர்ந்தே னரிபாங் குறுநர்க் கன்றிக்
குன்றன வணங்கு செய்யுங் குணநின தெனமென் காலே.　　　　(சந)

வேறு.

காயம் படுத லுற்றவநிற் காய விழித்தான் றனையோர்காற்
காயம் பதனு லடர்ந்தாயேற் கடல்சூ ழுலகம் புகழ்ந்திடுமென்
பாயம் பாரீ முரசாக்கப் பார்த்திங் கிருப்பேன் பாலெதிர்ந்த
பாயம் பணலோர் விறலாமோ பாரார் நகையா ராராரோ.　　　　(சச)

வேறு.

பொருனைமா துருவ மென்றும் புந்திவைத் தயர்வா னோர்காற்
றிருவனு ளருகுற் றாளாத் தெரிதலுங் களிப்பிற் சேர்வா
னிருகர மாவிச் சேர்ப்ப வியைதரு §மூற்றங் காணு
னுருவெளி யெனத்தேர்ந் தின்ன லுவரியுண் மூழ்க லுற்றான்.　　　　(சரு)

ஏணில்வேள் கணையா லிவ்வா றிடையறு நினையு மன்னான்
சேணுயர் பொதிய மோனி திருமொழி நினைந்து தன்கண்

---

* பாகன்

§ மூற்றம்—பற்றுக்கோடு

காணமுன் னிற்பான் போலக் கழறுவான் பொருளை யென்பாற்
பூணுத னினது சித்தம் பொருந்துமே லீதே செவ்வி. (௪௬)

இல்லையே லாவி வாழே னெழிலிரீ ரருந்த லொல்லா
கம்பலின்வீழ் நதிர தங்கள் கணவனை யிழந்து வாடும்
பல்லுயிர்க் குணவு தங்கா பாரிலார் கலியின் முமித்
தொல்லைமா தவஞ் செய்திற் றெனும்பழி சுமையாக் கொள்வாய். (௪௭)

இப்பழி மொழிநின் மேல்வந் தெய்திடா தெளியே னெண்ணந்
தப்பிடா தரிதி னேற்ற தவப்பெரு மையினு லென்று
மெப்புவ னமுந்தொ ழுப்பெற் றெழிறிகழ் பொதிகை வைகு
மொப்பிலோ யருள்க வென்ன வுள்ளத்துட் சிந்திப் புற்றான். (௪௮)

அன்னவன் சிந்தித் துள்ள மயர்தலோர்ந் தைங்கை வள்ள
றன்னுபா சனையி லீலை யனைத்துமோர்ந் தேத்துஞ் சால்பு
துன்னுவித் தினிதா நாளிற் றென்முனி பொருனை மாதை
மன்னுநீ ரிறைம ணந்து மகிழ்வுற வருளுஞ் செய்தான். (௪௯)

மைப்புயற் குணவ ருத்தி மாநிலக் குணவ ருத்து
மப்பிறை யினிதோர்ந் தேத்து மைந்துகைப் பிள்ளை சீர்த்தி
யொப்பினை மிசவ னத்தி னுறுவர்க்குச் சூத மேலோன்
செப்பிய வாறு நாயேன் றெரிவள வுரைக்கப் புக்கேன். (௫0)

சிந்துபூந்துறைப்படலம் முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் ௪-க்குத்திருவித்தம் (௱௬0௭)

வியாசருபாசனைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்திகழ் யுகங்க ளொன்கிற் செறிதுவா பரங்க டோறும்
பார்திகழ் மறைக ளாதி பகுத்துநன் முறைப்ப டுத்தக்
கார்திகழ் மேனித் தேவே வடிவமை வியாசர் காட்சிப்
பேர்திகழ் தாக்க ணேசற் பணிதிறம் பேச லுற்றாம். (௧)

மெய்த்தவப் பராச ரன்சேய் வேதத்தை நான்கு பாகம்
வைத்தபின் புராணந் தன்னை வகைமைசெய் திடப்பு குந்தான்
பைத்தலை யரவக் கச்சார் பனைக்கைமா முகவன் றன்னைக்
கைத்தலங் குவியான் வாழ்த்தான் கருத்தினுங் கணியா னாகி. (௨)

ஆகையாற் றுடங்குஞ் செய்கைக் கறிவுகை கூடா தேங்கி
மூகையா யினனே வன்றேன் மூடமெய் தியதோ பித்த
மோகையான் மதியைக் கைக்கொண் டோடிற்றே வென்ன மிக்குச்
சோகவா ரிதியி லாழ்ந்தான் றுணையுங்கா ரணமுங் காணான். (௩)

ஆக்கலைத் தொழிலாக் கொண்ட வண்ணறன் னுலக நண்ணிக்
காக்கவின் றனையென் றன்னேன் கனைகழ றொழுது வீழ்ந்த
மாக்கடி முளரிப் புத்தேண் மாதவன் வரவேற் றங்கண்
மேக்குய ரிருக்கை நல்கி †வேசறு முகத்தை நோக்கி. (௪)

கலிவிருத்தம்.

இத்தனை துயருறற் கேதி யாதெனா
வத்தனார் திருப்புக ழனைத்து மாதியிற்
சித்தியி னருளிய சீர்ப்புரா ணத்தை
யுத்தம வணியலா வுரைக்கப் புக்கனன். (௫)

என்னுள மயங்கிநா வெழாத தாகியே
யுன்னலு மோதலு மொழிந்த காரணந்
$தன்னமு மறிகிலாந் தமிய னின்றனை
முன்னிவந் தனனென முறுவல் பூத்தயன். (௬)

அலருறை யயன்முதன் மூவர்க் காயினு
மிலகொரு மருப்பனை யிறைஞ்சி டாதுநீ
ருலசிடைச் சிறுதொழி லுஞற்றப் புக்கினு
நிலைபரந் தன்னமு நிலவி டாதரோ. (எ)

பொக்கமின் மனத்தராய்ப் போற்று வோர்க்கெலாம்
விக்கினங் கெடுத்தருண் மேவச் செய்பவன்
பொக்கமுண் மனத்தராய்ப் போற்றி டார்க்கெலாம்
விக்கினங் கொடுத்திருண் மேவச் செய்பவன். (அ)

மூத்தவன் யாவரு முன்னர் முன்னரே
யேத்திடத் தக்கவ னிவனை மெய்ம்மனங்
கோத்தவாக் காதியாக் குளிரு மன்பினோர்
மாத்திரை யாயினும் வழிபட் டாயிலை. (௯)

---

† வேசறு முகம்=துக்கநிறைந்த முகம்

$ தஞ்னம்-அற்பம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

†முன்னமோர் தரிக்கும் வேத முழுப்பொருள் பகுத்த காலை
யன்னவே ரம்பன் றன்னை யன்பினேத் திலையின் றேனு
நன்னரோ முதலி ருத்த னவிறுதி யாக வெண்ணி
யின்னனின் வயிற்பொ ருத்தா திருந்தன னுணர்வின் மேலோய். (௰)

எண்ணிய யாவும் யார்க்கு மினிதினின் முடிக வென்றே
பண்ணியன் மறைகட் கெல்லாம் பகர்கண பதியாய் நாளு
நண்ணிய பிரண வத்தை நாதன்முன் னமைத்தா னற்றுப்
புண்ணிய மனுமுன் னீதைப் பொருத்தினர் நால்வல் லோரே. (௰௧)

அசம்புற நிறைவா யென்று மாதியா யநாதி யாய்மா
முடிக்கொளெங் கரத்தெம் மானை முதல்வழி படாதுன் னூக்கத்
தாம்பல வூக்கி னாலு முடித்திட முடியா தென்றுஞ்
சுகந்தரா தகங்கொண் மைந்தா தூயவன் னவனை யேத்தி. (௰௨)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஏதமிக் குனதுள் ளுறைமயக் கொழித்தாங் கினிதருள் பெறுகென வுணர்ந்தந், நாதனுக் கியற்று பூசையின் முறையை நவில்கென விசந்தனன் வியாதன், போதனுட் களித்துத் தீக்கையன் னவற்குப் புரிந்திருண் மலமறுத் துளத்தார், சோதியை விளக்கே காக்கா மனுவைத் துணைச்செவி யிறைப் பகர்ந்தான். (௰௩)

பகர்ந்தவம் மனுவை வியாதனுட் கொண்டு பருவமீ ராறள விருந்தோர், சுகந்தமா வனத்துக் கணித்தனு மைங்கைத் தோன்றலோர் கோடியா தவரின், மிகுந்தசே சுருக்கொண் டும்பன்மா முகத்து மேவிமுன் னின்றனை னோக்கித், தகுந்தவ னடுங்க வஞ்சனீ வேட்ட தருவலென் றெந்தைசாற் றுதலும். (௰௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

விரைவினி லெழுந்தான் சூழ்ந்தான் வியன்கரங் குவித்தான் சென்னி
தரைகழ றொழுதான் வாக்குக் குழறநெஞ் சுருகக் கண்ணீர்
திரைபுர ளாற்றின் வாரத் திகழுந்தக் கரண மொன்றாய்க்
கரையிலா னந்தத் தேத்திக் கனிந்தன னினைய சொல்வான். (௰௫)

---

† முன்னமோர்ந்தரிக்கும் வேதம் = முதலிற் பிரணவமந்திரமாகிய ஓங்காரத்தைப் பொருந்திய வேதம்

ஆலமே யமுதா வுண்ட வண்ணலும் பூசை யாற்று
மூலகா ரணனே வேத முதல்வனே முக்கட் டேவ
சாலநா ளடியேன் செய்த தவத்தினுக் கிரங்கி யிந்நாட்
கோலநின் பாத சேவை கொடுத்தனை தூய ஞானேன். (மகூ)

எந்தைநின் பாதப் போதென் னிதயபீ டத்தி ருத்தி
முந்தநான் மொழிய மூன்னு மூவறு தொகைப்பு ராணம்
புந்தியில் விளங்கு மாறு போதநன் குதவி யன்பு
தந்துபே ரின்ப மெய்தூந் தகைமையு மருளல் வேண்டும். (மஎ)

கருணைவா ரிதியே யீதென் கருத்தென விரப்ப வவ்வா
றொருமருப் புடைய வள்ள லுதவிப்பின் னருமீ தோதும்
பெருமைசே) வெஞ்சீர் பேசிடா திருந்த தான்முன்
னருமையாம் புராணஞ் சொல்லு மறிவைநீ யுற்று யல்லே. (மஅ)

பின்புநம் மான்மி யத்தைப் பிரமனு லுரைக்கக் கேட்டுத்
துன்பகன் றிடநீ நோற்றாய் தூயநம் மருள்பெற் றேங்கு
மன்பனு தலினீ யொன்பான் புராணத்தோ டெபு ராண
மென்பதும் புகல வல்லோ னதியென் றிசைத்துச் சென்றான். (மகூ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகமெலா நனிவியப்ப வரமே வுற்று னுயர்தவன்யா வையும்புகலு மொண்மை பெற்று, னலமலியவ் வனத்திடையா லயமி யற்றி நால்வா யைங் கரத்தவனை ஞானக் குன்றை, மலமிலியைப் பிரதிட்டை செய்து வேத வரன்முறையிற் பூசனையும் வழாதி யற்றிப், புலவருமற் றெவருமி கப் போற்று கின்ற புராணங்க ளனைத்தனைத்தும் புகன்று னன்றே. (உம)

வியாசருபாசனைப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் ரு-க்குத் திருவிருத்தம். (ளஅஎ)

சோமகாந்தனுபாசனைப்படலம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அத்திமா முகனைப் பூசை யாற்றிநற் றவவி யாத
னுத்தம வரம்பெற் றுய்ந்த துரைத்தன முளத்தெந் நாளுஞ்
சித்தியைங் கானை யுன்னித் தீதறு சோம காந்தன்
முத்தியை யடைந்த காதை முறைமையி னறைதல் செய்வாம். [க]

மூவுல கத்தின் மேலா முத்திக்கு வித்த தான
பூவுல கிந்து மேன்மை பொருந்துபல் பொருள்சேர்ந் தென்றாழ்

காவுலாந் தடமுஞ் செந்நெல் கன்னலீ ளரம்பை துன்று
மாவயல் களுஞ்சூழ் சௌராட் டிரமெனு நாட்டின் மாதோ. (௨)

விண்டொடு மெயில்சூழ் தேவ நகரொன்றுண் டதற்கு வேந்தன்
றிண்டிறன் மேருத் தோளான் றிருந்தலர்க் கரியே றன்னான்
கொண்டலைப் பழித்த கையான் குலவுமன் பதையின் பப்பே
றுண்டகங் களிக்க நேமி யுருட்டிமண் புரக்கு நாளில். (௩)

முந்திய பிறப்பிற் செய்த தீவினை முழுது மொன்றாய்
வந்தது போல வன்னோன் வனப்பொளி றுடம்பிற் குட்ட
வெந்துயர் வினைநோ யெய்த வேண்டுபல் சிகிற்சை செய்து
மந்நவன் றொய்தீர் வில்லா னமைச்சர்க்கூ உயினைய சொல்வான். [௪]

உலகெலா நெறியிற் காத்தே னென்னலர்ப் பொருது வென்றே
னலகிலா மகங்கள் செய்தே னமரர்கட் கவிக ளீந்தேன்
பலபதச் சாலை கோலிப் பல்லுயிர் வருத்தந் தீர்த்தே
னிலைபெறு தவனந் தீர்ப்பா னீர்நிலை முதல தொட்டேன். [௫]

அறம்பல வினைய வாற்று லாற்றியா துலர்க்குத் தாயாய்
மறங்கெடுத் தெவர்க்கு மெய்தும் வன்றுயர் புறங்கண் டேனைப்
புறந்தரச் செய்தென் மெய்யைப் புண்பட வருத்தி வாட்டி
நிறங்கெடுத் திடுநோய் வெல்ல நெறியொன்றுங் காணே னந்தோ. [௬]

இவ்வுடல் கொண்டு வையத் திருந்தலின் மாய்த லன்றே
லவ்விதி யில்லை யாரி னங்கைவா ளாலீர்ந் தேனுந்
தெவ்வெனத் தெறுநோய்க் கூடாஞ் செடியுட லீப்பே னென்னி
னெவ்வுறுப் பாவ மெய்து மாதலி னொழித்தொன் றோர்ந்தேன். [௭]

பன்னமார் வனத்திற் சேற றகவெனப் பண்பின் மிக்கி
ரொன்னின்மே தகுசால் புள்ள விளவர சேம கண்டன்
றன்னையிவ் வுலக பாரந் தாங்குமன் னாகச் செய்வே
னன்னவன் பாலென் போலன் பாற்றிவேந் தியல்செய் கென்னா. (௮)

சொற்றலும் விரணத் துன்பாற் சோர்ந்தன னணையின் மேல்வீழ்
வுற்றன னேனை யோரு முற்றன ருறுகண் சீவ
னற்றவ ரானார் நால்வல் லமைச்சர்க டேறிச் சோக
முற்றவு மொழித்தார் வேண்டு முயற்சிசெய் தெழுந்தான் மன்னன். [௯]

அன்னவ னடியி னால்வல் லமைச்சர்தாழ்ந் தறைவா னைய
வுன்னையா ரணியுத் துய்ப்பித் துன்மனைக் கடையாம் வாழே

நின்னரு மகனை மன்னு நிகழச்செய் நிழல்போல் யாமு
மன்னுவ நீயே கற்கு மதிக்குங்கான் சரத மென்றார். (௰)

பொருவினன் மனையி தாய்ந்து போந்திரு தலைப்புட் போல
வருநலன் றீதொன் றுக மதித்துவாழ் நம்பி லென்னுள்
ளுருகவென் றனைநீ யிங்கிட் டிரியவ னத்தி னேகத்
திருவுளங் கொளினுன் றுஞ்ச றிண்ணைநிற் பிரியே னென்றாள். (௰க)

இனையவை நிகழத் தந்தை யிடர்பொறு திருங்கா னேக
நினைதலு மமைச்சர் தாமு நீங்குறு துறைச்செல் சீரு
மனைசுதன் மையும்பின் செல்லு மமைதியுந் தன்னைப் பூவின்
மனமகிழ்ந் தாசா வைக்க மதித்தன்மைத் திடபு ணர்ப்பும். (௰உ)

தவவுணர்ந் தேதம கண்டன் சாற்றுவா னிரவி சோம
னவிர்தரா வானம் வேந்த னமைச்சனில் லாத நாடு
நுவல்பதி மகனில் பூவை தோன்றழு லவியில் வேள்விக்
குவமையாத் தந்தை தாயா முங்களை வனத்துய்ப் பித்தே. (௰௩)

இச்சகம் புரக்க வெண்ண மிசைந்திலே னீன்றோர் தம்மை
யச்சமுள் ளன்பி னோடு பூசனை யாற்றிப் போற்றி
நச்சுட விறந்த பின்ன ரீமகன் கடனி யற்றி
யுச்சமாம் பிதிரு லோகத் துவப்புற வாழச் செய்வல். (௰௪)

புத்திரன் கடமை யீதே யல்லது புவியி லாசை
வைத்துமான் மூழ்க னன்றோ வாழ்வொரு நிலையோ நீர்சென்
னித்தமாம் வழியை யானு நினைந்துடன் செல்வே னென்று
னுரைத்ததன் மகனைப் பார்த்தவ் வரசனீ துரைக்கு மன்னோ. (௰௫)

வேறு.

பிள்ளைப் பருவத் துளையலைநீ பேதைக் குணத்திற் பேசினையென்
றள்ளப் படாத பனுவலுணா தானே யுணர்ந்து தகுதியுட
னுள்ளக் கனிவா லீன்றோரை யோம்பித் தன்மம் பலவியற்றி
விள்ளற் கரிய பலிபிண்ட மிடுநன் மகனுய்வியனுலகம். [௰௬]

மெச்சு பவனே யாயிடினும் விரும்பு தந்தை தாயருளா
யச்ச மொடுமுள் ளன்பினொடுந் தவறு தணிபோ லாதரித்தே
யுச்சி மேற்கொண் டொழுகுதரு னுயர்வாந் தன்ம மாதலினு
னெச்சி லையிற் நகரிருந்து நுனித்த கேள்வி யமைச்சரொடும். (௰எ)

அகிலம் புரப்பா யெனப்போதித் தாட்சி வகையும் விரித்துணர்த்தி
மகிப னுக்கத் தொல்கணித வல்லோர்க் கூவி வளையறைநாள்
புகலக் கேட்டத் தினத்தருமைப் புதல்வன் றனக்கு மணிகுயிற்றித்
திகழுந் தனது முடிவேய்ந்தான் செறிகா னமரும் படியேய்ந்தான். [௰௮]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அரிகரி யுழுவை யாதிபல் விலங்கா ராரணி யந்தனை யணுகி, யுரிமையி னுடன்செல் சுபலனே ஞான கம்பிய னேயென வுரைக்கும், விரிமதி யமைச்ச ரிடுகனி யாதி விளங்கிழைச் சுதன்மையோ டயின்றுங், கரிசறு தவர்வாழ் சாலைபூம் பொழில்கள் கண்டுநாட் சிலகழிந் திடப்பின். (௰௯)

முந்தநல் வினை யந் தடுப்பவைம் புலனு முனிந்துளோன் பிருகுமா முனிபால், வந்தவ னடிதன் முடியுறச் சாத்தி வருவகை வகுப்பவவ் வறவோன், சிந்தையி னுலவாய் முகனடி பதித்தத் தீப்பிணி யழியுணாந் தரசே வெந்தழல் போனிற் றெறுதொழு நோய்பின் வீயுமஞ் சலையது கேண்மோ. (௨௰)

ஒதுமும் மையிற்கா மந்தநா மத்தோ டுறுதன வணிகனு நீநின், பேதைநீ ரகன்று தருணநீர் மையனுய்ப் பிறங்குநாட் குடும்பினி யென்னு,மே தகு மடந்தை தனைமனஞ் செய்து விரும்புபன் னிருமகப் பேறுற், றேதமின் மெமர்கா னுந்தையு முனையீ னன்னையு முயர்கதி யடைந்தார். (௨௧)

பின்புனைக் காவல் செய்குந ரிலராய்ப் பேதுறு வேசையர் முயக்கி,லன்புவைத் துன்கைப் பொருள்கல னிலனில் லனைத்தையு மிழந்துபின் னிரந்தும், வன்பகை வினைபொய் யசத்தியங் குறளை வழங்கிப்பன் னகைநவ மணிகள், பொன்பல கவர்ந்து மளித்தனை யிவையோ பொருவில்கற் பினையு மழித்தாய். [௨௨]

நீபெறு மக்கள் பசியினல் வருந்தி நிலையிழந் தனரவ ரோடு, தாபமில்லாக் குடும்பினி மாதுந் தாய்மனை சேர்ந்தன ரேத்த, சோபனுய் மயக்க மதுநுகர்ந் தடங்காத் துணிவொடு விளைவுறு மெல்லாப், பாபமும் புரிந்தாய் வேந்தனீ தறிந்து பதியினின் றுனையகற் றினனல். (௨௩)

வனமதிற் புகுந்து கள்வரோ டிணங்கி வழிவரல் செல்லல்செய் வோரைச்,சினமாய்த் தவர்பொன் கவர்வையிவ் வாறு சென்றபன் னுளவற் றொருநாட்

புனித §விப் பிரனங் கொருவனு றுறநீ போந்துபற் றலுமவன் வெருவி,
யினிமொழி நனிசொற் றிரந்தனன் கேளா தியமனி னவனுயிர் குடித்தாய்.

அக்கணம் பிரம கத்திநிற் பிடித்தாங் கழலெனச் சுடவிட ரனைத்தும், புக்கன கிழமும் பொருந்திய தாற்றுய் பொருப்பன நிதிகளோ டியானுன், பக்கமேய் குவலென் ருேரிராந் தூதுன் பாரிபால் விடுத்தனை யவளு, மொக்கலு மோர்ந்து வேந்திஃ தறியி னெறுக்குமென் றெண்ணியிசைந் திலரால்.()

அன்றிரா வேயத் தூதுமீண் டவள்கோ ளறைதல்கேட் டினியறம் புரிதனன்றென வுணர்ந்த யுனதியல் பறியா நான்மறை வேதிய னொருவ, னுன்றனை டைப்ப வேண்டவெ வளித்தே யினுமுறு வனைக்கொணர் கென்ருய், சென்றவன் சிலமா தவர்க்கொணர்ந்தலுநின் செயன்முழு தறிந்தவ னவர்தாம். (உ௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சிரித்திது மொழிவார் நீயோ தெரிந்திலோந் தீயோ யையோ
கருத்தினுண் ணினைநி னைந்தோர் கண்டவர் கேட்டோர் சொன்னேர்
வருக்கமு மூழி தோறும் வன்னர குழப்ப ரேநீ
விருப்புடன் கோடி செம்பொன் கொடுக்கினும வேண்ட லில்லேம். (உ௭)

தருமநீ விழையி னின்ன தனிவனந் துள்ள நேர்சார்
நிருமல கணேசன் கோயி னிகிலமுந் தருபயூண் டாதி
பெருகிமொய்த் துளக ளோந்து பிறங்கிடச் செய்கெவ் றும்பால்
வருபவ மறநீ ராடி மறையோதித் தூய்து சென்றாய் (உ௮)

மனைவியுஞ் சுற்றத் தாரு மலைந்துகை விட்ட வாறும்
புனிதரங் கிகழ்ந்த வாறும் புன்கணே யலைக்கு மாறுந்
தனியுணர்ந் துயர்க ணேசன் றளியினற் பணியே யன்றி
யெனையுறு துயர்நீங் காவென் றெண்ணியெய் தினையக் கோயில். (உ௯)

எண்ணலர்ப் பொருப டைக்கை யிறைவவங் கெனையாட் கொள்ளு
மண்ணலம் முருவங் கண்டா யாடினுப் தாழ்ந்தாய் சூழ்ந்தாய்

---

§விப்பிரன்-கனவர்த்தனென்னு மோரந்தணன்.

*இனி மொழிநனி சொற்றிரந்தனன். என்பது அவ்வந்தணன் முன்னொரு கன்னிகையைக் கலியாணஞ்செய்து அவள் புத்திரப்பேறில்லாமல் இறந்துபோனதையும், பிதுர் கருமங்கட்குப் பிள்ளைவேண்டுமென்பதற்காக இரண்டாவது ஒரு கன்னிகையைக் கலியாணஞ்செய்திருப்பதில் அவளும் பிள்ளைப்பெருத பருவத்தினளென்றும் அதற்காகத் தன்கையிலுள்ள பொருள்களை வாங்கிக்கொண்டு உயிர்ப்பிச்சை தரவேண்டுமென்றுந் தாழ்மையாகக்கேட்டுக்கொண்டான்.

பண்ணிறை யறைக வென்னப் பாடினுய் தட்ட மிட்டாய்
கண்ணறல் பொழிந்தாய் நின்றுய் கன்மனங் கரைத்தா யிப்பால். (௩௰)

பழுதறு தளிக்கு வேண்டும் பணிமுடித் தற்ச வாதி
வழுவில்பூ சனைசெய் வித்து வைகிடு நாளில் வாழ்நா
ளொழியவந் தியமன் றூத ருனைப்பிடித் தீர்த்துத் தாக்கி
யிழிவுபல் வேறி யுற்றி யிரும்பகட் டிறைமுன் னுய்த்தார். (௩௧)

அன்னவ னினது நன்மை தீமையா வையுமா ராய்ந்து
முன்னவன் பணியி னுனின் முற்பவத் தநேகந் தேய்ந்த
வென்னிஜுந் சேட மண்மே லிறன்மர பவற்றிற் றீதோ
நன்மையோ முதனீ துய்க்க நயந்திட லுரைத்தி யென்றுன். (௩௨)

முதனல மென்று யற்றுன் முடிகெழு வேந்தாய்ப் பின்னர்த்
துறைதொழு நோய றுய்வை கினையிது தொலைய வேண்டின
மதகய முகற்போற் றென்றுன் மற்றவன் மொழியிற் றேற்றம்
பதிநரா தையங் கொண்டான் பார்த்திப னனைய தீங்கால். (௩௩)

வஞ்சி விருத்தம்.

உட்கு காவலன், வெட்க மூர்மெயின்,
முட்கள் போலுமவாயப், புட்க டோன்றியே. (௩௪)

ஆயி ரத்தன, வாயிற் கொத்தின,
சாயி ரத்தம்வாள், பாய்புண் ணொத்தனும். (௩௫)

வீக்க ளாற்றிடர், நீகெகா ணுன்முனி,
வாக்கின் மாலினு, லூக்கு மீதெனு. (௩௬)

தஞ்ச நின்பதம், வஞ்ச னுஞ்சிடக்,
கெஞ்சு கின்றன, னஞ்ச லென்றருள். (௩௭)

அன்னை தாதையா, யென்னை நோக்குவார்
மன்னு வான்புவி, தன்னி னும்மிலேன். (௩௮)

மல்லன் மோனியே, நல்ல பார்வைநல்,
கில்லை யாயினன், செல்லு மாறுனேன். (௩௯)

பழுதி றாயனே, யிழுதை யேனினி,
யழியொ ணுவகை, மொழிய வேண்டுமால். (௪௰)

என்ற ரற்றியே, துன்று கொற்றவ,
னன்று றத்துதி, நின்று சொற்றனன். (௪௧)

முதல்வன் வெந்துய, ரிதயங் கொண்டுநோந்,
துதகங் கண்டாச், சுதன்மை கெஞ்சுமால். (சஉ)

ஞாலத் தூத்தம, சீலத் துற்றவ,
தாவிப் பிசைசநீ, பாவிப் பாயெனு. (சங)

உந்தி மென்றுகின், முந்தி யேந்தினள்,
சிந்தை வெந்துயா, நைந்த ழுங்கினள். [சச]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

துன்னிடர் தொலைத்தா ளென்னத் தொழுதிரந் தனர மைச்ச
ருன்னுமா வாய்மை தேறு துறுகனே யுறுவாற் காத்தா
ளென்னவே யனையருங் கூற விருந்தவ னிரங்கிப் பின்னு
மன்னவற் பார்த்துன் னும்மை வழங்கினந் தெளிய கில்லாய். (சரு)

அனையநா னனிதுன் புற்று யஃநற விரும்பின் வேந்தே
யுனதயிர்ப் பொழிந்தி யென்றங் கெழுப்பின னொருங் காச
மினையதிற் புடக னொல்லா மிரியத்தன் காக நீனை
முனிவா னிறைமெய் விச முறுபவ முருக்கொண் டென்ன. (சசு)

குழிவிழிப் பூத மொன்று குறுகிமன் னவனை நோக்கி
யழிவுமுன் னெனக்கி ழைத்தா யன்னதிண் டிறல்காட் டின்றென்
றிழிவுடைத் தடா மேலோ னிறைமுன்விப் பிரனைக் கொன்ற
பழியிஃ தெனத்தேர்ந் தன்ன பசாசைமுன் னதட்டிப் பின்னர். (சஎ)

வெருவலை கதிநிற் கிவல் பூதமே விளங்கிச் சூதத்
தருவினீ *நினையிற் சார்தி யெனலுமவ் வாறு சாரப்
பெருமரத் தோடு பேயு மெரிபடப் பினரப் பூத
மொருபெருந் தேவ னுயவ் வுயர்தவற் பணிந்து கூறும். (சஅ)

இன்னவேந் தெனைமுன் கொல்ல விவற்பிடித் துழந்தே னிந்நா
ணின்னது சேவை யாலிந் நீணலம பெற்றே னென்று
மன்னபோ திறைவ னேக்கா லாய்குறு மானத் தேறித்
துன்னினன் கதியி னிப்பாற் பிருகுமா முனிவன் சொல்வான். (சகூ)

வெந்திறற் சாயை வேந்தே வெந்தது கண்டா யைங்கைச்
சுந்தரன் சரிதங் கேட்கிற் றுன்புசெய் தொழுநோய் தீருஞ்
சந்தவீ டெய்து மின்ன தகைமைசேர் மருந்த லாதென்
புந்தியில் வேறு காணேன் புனல்படிந் திவண்வா வென்றான். (ருய)

---

*உம்மை- முற்பிறப்பின் விர்த்தாந்தம்.

திருபனீ ராடி மேனி நீறணிந் தக்க மாலை
திருவுறப் புனைந்த ணைந்தான் சீர்தரு தவத்தி னூன்ற
பிருகுமா முனிசங் கற்பம் பேசினுன் பேச லோடு
முருவிடைத் தொழுநோய் கொண்டா னுடனவை தொழியக் கண்டான் (௫௧)

காணரும் வியப்புக் கண்ட காவலன் முனிவன் பாத
காண்மலர் தொழுது வாழ்த்த நன்மனை யமைச்ச ரேனோர்
பூணணி விம்ம வின்பப் புணரியுண் மூழ்கி மேலோய்
மாணிப முகவன் சீர்த்தி வகுக்கவென் றடிதாழ்ந் தாரால். (௫௨)

மாதவ னேக தந்தன் மலர்ப்பதங் கருத்தி னுன்னி
யோதினன் புராண மன்ன துவப்பொடு கேட்டு மன்ன
னாதரம் பெருகப் பாரா யணஞ்செய்தா னோராண் டைங்கை
நாதனல் லருள்பா லித்து நவிலிருங் கணங்கண் மொய்ப்ப. (௫௩)

ஒளிவளர் விமான மொன்றங் குய்ப்பமா தவனை யேத்தி
யளிவளா ருளாந்து மன்னன் மனைமதி யமைச்ச ரோடுங்
களிகொள விமானஞ் சேர்ந்தா னன்னது ககனஞ் செல்கால்
வளமலி தன்னூர் கண்ட சுதன்மைமன் னவனை நோக்கி. (௫௪)

வரவெதிர் நோக்கி வாழும் மைந்தற்கா னாத கன்றுற்
பொருவறு துன்பந் தாழும் பொய்பல மெய்யே காட்சி
பெருமையி னவற்கு நலகிப் பின்னொர்நாங் கதியிற் சேற
லருமைநா யகனே தக்க தாமென வறைந்தாண் மாதோ. (௫௫)

அன்னது கணங்கள் கேளா வரசநின் மைந்தற் கிந்நா
ணன்மைசெய் கருத்துண் டேலிந் நலமலி விமானந் தன்னை
யுன்னகர்க் கணித்தா வுய்த்து மென்றவ்வா றுய்ப்பத் தன்பான்
மன்னுமந் திரனை மன்னன் மகிழ்ந்துதன் மகன்பா லுய்த்தான். (௫௬)

அன்னவர் கடிதி னேகி நிகழ்ந்தமை யனைத்து மன்னர்
மன்னவன் மகற்கி சைப்ப மகிழ்ந்தெழுந் திறம்பூ தெய்தித்
தொன்னக ருள்ளா ரெல்லாஞ் சூழ்தர விரைந்து சென்று
தன்னிரு குரவர்க் கண்டான் றழ்ந்துதா தையைப்பார்த் தெந்தாய். (௫௭)

தனித்துனைப் பிரிந்து வாழே னினியென்றுன் றலத்தார் தாமு
மினித்தனை வாழ்வி லாசை யிலையெமக் குய்தல் வேட்டே
மனத்துய ரொழிப்பா னல்வாய் மாமுக னுலகிற் சேர்ப்பாய்
கனதநினைப் பழிக்கும் வண்கைக் காவல வென்று தாழ்ந்தார். [௫௮]

தன்னரு மகனு §நாக ரீகருஞ் சாற்றல் கேட்டு
மன்னவர் மன்னன் மாழ்கி மாமுக னுலகிற் சேர்த்த
லென்னது தரமோ நீவி ரியற்றிய தவப்பே றுண்டே
லன்னவ னுலகந் தத்தி லடைந்தருள் பெறுவீ ரென்றான். [௫௯]

இன்னவை கணங்கள் கேளா விரங்கிமன் னவநின் றோன்றன்
முன்னர்முன் னவனை யேத்தி முற்றிய பயனா லன்னான்
றன்னுல கத்தி னுயகருந் தகவின னாகி நீவிர்
துன்னுமிவ் விமானந் தேறச் சுதந்தர னானான் றேற்றம். (௬௰)

தனிநகர் மாக்க ளெந்தை சரிதங்கேட் புறினுங் குய்க்கும்
புனிதரா குவர வர்க்குப் புகலவு மைய மீதன்
றெனினுமன் னதுப யக்கு மியல்பிற்றோர் வாய்மை யுண்டே
துனைவினோ துதுமென் றியார்க்குந் துயரற வியம்பு மன்றே. [௬௧]

புவியுற் றுத் தீர்த்த மேன்மை பொருந்திய கங்கா நீரந்
†தவிமுத்தத் தைங்கை வள்ள லமருமா வரண மேழிற்
சவிமுற்று மெண்ணேழ் மூர்த்தங் கொண்டநா மங்க டம்மைச்
செவிமுற்ற நயந்து கேட்கிற் சேர்வரைங் கரன்வைப் பென்னா. [௬௨]

நாகரீகர்-நகரவாசிகள்.

†அவிமுத்தத்தைங்கைவள்ளல மருமாவரணமேழிற்- சவிமுற்று மெண்ணேழ்மூர்த்தங் கொண்ட நாமங்கள், காசிக்ஷேத்திரத்தின் கண்ணுள்ள எழுவகை ஆவரணங்களில்.

முதலாமாவரணத்தின் மூர்த்தங்கள்.
துண்டிவிநாயகர்.
துர்க்கைவிநாயகர்.
அர்க்கவிநாயகர்.
பிரசன்னவிநாயகர்.
வீமவிநாயகர்.
சந்திரவிநாயகர்.
ஆறு.

இரண்டாமாவரணத்தின் மூர்த்தங்கள்.
சித்தரூபவிநாயகர்.
இலம்போதரவிநாயகர்.
கூடதந்தவிநாயகர்.
சலாடகவிநாயகர்.
குலப்பிரிடவிநாயகர்.
சதுர்த்திவிநாயகர்.
பஞ்சமிவிநாயகர்.
முண்டவிநாயகர்.
சமுசிகவிநாயகர்.
விடங்கவிநாயகர்.
நிசவிநாயகர்.
இராஜபுத்திரவிநாயகர்.
பிரணவவிநாயகர்.
உபதாபவிநாயகர்.
பதினான்கு.

மூன்றாமாவரணத்தின் மூர்த்தங்கள்.
வக்கிரதுண்டவிநாயகர்.
ஏகந்தவிநாயகர்.
திரிமுகவிநாயகர்.
பஞ்சமுகவிநாகர்.
ஹேரம்பவிநாயகர்.
விக்கினராஜவிநாயகர்.
வரதவிநாயகர்.
மோதகப்பிரியவிநாயகர்.
எட்டு.

நான்காமாவரணத்தின் மூர்த்தங்கள்.
எகோபயப்பிரதவிநாயகர்.
சிங்கமுகவிாயகர்.
கூர்நிதாக்ஷவிநாயகர்.
க்ஷிப்பிரப்பிரசாதவிநாயகர்.
சிந்தாமணிவிநாயகர்.
தந்தவக்கிரவிநாயகர்.
அபிசண்டிவிநாயகர்.
ஊர்த்துவாண்டமுண்டவிநாயகர்.
எட்டு.

ஐந்தாமாவரணத்தின் மூர்த்தங்கள்.
மணிகர்ன்னவிநாயகர்.

அருட்டரு மெண்ணேழ் மூர்த்த நாமமு மறைந்த கேட்டப்
பெருநகர் மாக்க டாமு மமரரிற் பிறங்கி மான
மருவிகல் லமைச்சர் வேந்தின் மனைசுத ரொடுமொங் கெய்திப்
பொருவில்சா மீப மென்னும் பதவியிற் பொலிந்து வாழ்ந்தார். (௬௩)

காவலன் றனியே ரம்பன் கருணையா லெழிற் சாரூப
மேவியா தவன்றே சுற்று விளங்கினு னினைய வாற்றா
லாவலி னிப்பு ராண மருச்சித்தோர் படித்தோர் கேட்டோர்
யாவரும் பொருள்க ணன்கு மடைகுவ ரொளிதின் மாதோ. (௬௪)

காசியின் மூர்த்தங் கொண்ட கணேசனுர் நாமங் கேட்டோர்
பாசவல் வினையி னீங்கிப் பாகதி யடைந்தா ரொன்னி
லாசைபோ டாங்குச் சென்றே ரவன்னுளி ருருவங் கண்டோர்
பூசனை புரிந்தொ ரெய்தும் பொருவில்பே றுரைக்கற் பாற்றே, (௬௫)

சோமகாந்தனுபாசனைப்படலம் முற்றுப்பெற்றது,

ஆகப்படலம் ௬-க்கு திருவிருத்தம். [௨௱௫௰௨]

மூவருபாசனைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிருகுமா முனியைச் சார்ந்த பெற்றியாற் சோம காந்த
னொருமருப் பினன்சா ரூப முற்றிடு திறனீ தன்னுன்
றிருவடி வழிபா டாற்றித் திசைமுக னாதி மூவர்
பொருவின்முத் தொழில்கைக் கொண்ட புதுமையைப் புகல லுற்றும். (௧)

ஆசாசிருட்டிவிநாயகர்.
கஜகர்ன்னவிநாயகர்.
கண்டாவிநாயகர்.
சுமங்கள்விநாயகர்.
மந்திரவிநாயகர்.
ஆறு
ஆறுமாவரணத்தின்
மூர்த்தங்கள்.
மோதகவிநாயகர்.
சுமுகவிநாயகர்.

துன்முகவிநாயகர்.
கணபவிநாயகர்.
அபரவிநாயகர்.
ஆக்கினைவிநாயகர்.
துவாரவிநாயகர்.
அவிமுத்தவிநாயகர்
எட்டு.
ஏழாமாவரணத்தின்
மூர்த்தங்கள்.
ஆமோதவிநாயகர்.

பாகீரதவிநாயகர்.
அரிச்சந்திரவிநாயகர்.
கபர்த்திவிநாயகர்.
பெந்துவிநாயகர்.
சனகவிநாயகர்.
ஆறு.
ஆகமூர்த்த நாமங்கள்
ஐம்பத்தாறும்.

முன்னொரு பிரளயத்து மூவர்க்கு முதலா மேலோன்
மன்னுயி ரனைத்துந் தன்பால் வந்திளைப் பாறும் வண்ணந்
பன்னுசங் கரித்த லாக வொடுக்கிப்பின் படைப்பா னெண்ணித்
துன்னறி வுருவாய் நாமம் வக்கிர துண்ட னாகி. (௨)

முக்குணத் தயன்மா லீசன் மூவரை முறப டைத்தான்
றொக்கவர் தமையிவ் வாறு தோற்றல்செய் முதலைக் காண
வொக்கநற் றேவ வாண்டா யிரமுறு நோன்பி யற்ற
மிக்கவர்க் கெதிர்தோன் றற்றான் வக்கிர துண்ட மேலோன். (௩)

கலிநிலைத்துறை

புகலு மத்தனி முதல்வனைக் காண்டலும் புகழ்ந்தே
யகில மியாவையும் படைத்தளித தழித்திடு மமல
சகல தத்துவ மாயினுந் தத்துவா தீத
பகவ புங்கவ கணேசநின் பதமபணி குதுமே. (௪)

ஆதி மத்தியீ றல்லவ வகளங்க வரிய
மாத வத்தருட் கோயிலா வதியும்வா னவமெய்ப்
போக வானந்த வடிவுகொள் பூரண வலவை
பாதி யானவ கணேசநின் பதம்பணி குதுமே. (௫)

§நவமெ னப்படும் வடிவிறந் தவவிடர் நணுகா
தெவர்நி னைப்பினு நினைத்தவாங் கருள்பவ விசறவ
புவன மெத்தனை யத்தனை யும்புரப் பவவெம்
பவம றுப்பவ கணேசநின் பதம்பணி குதுமே. (௬)

வாத வக்கிர துண்டமுக் குணங்களில் வானை
யுரமு றுத்திரா சதத்தினு லோங்குசாத் திகத்தா
லானை மிக்கதா மதத்தினு லரிதனை யளித்த
பாம செக்கர்மா மேனிய வெனப்பழிச சினரால். (௭)

இன்ன வாறுதோத் திரிப்பவக் கிரதுண்ட விறைவன்
பன்னு மூவிர்கா ணீவிரிங் ஙனமெமைப் பாவிச்
சொன்ன மேன்றுதிக் குவந்தன மித்திறந் துதிப்போ
ருன்னும் யாவையு முதவுது முனைமினும் வேட்கை. [௮]

---

§நவமெனப்படும் வடிவாவன- பிரமன்; விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவம்.

தருது மென்னவம் மூவருந் தாழ்ந்துமீ ளவுநின்
றுருகு ளத்தராய் நின்பதத் துழுவலன் புந்தப்
பெருகு பத்திமை தந்தெமைக் காத்தலே பெரியோ
யருமை யாகநீ யெங்களுக் கருளுநல் வரமாம். [௯]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

என்னலுங் கணேசன் வேத னிராசதத் தாக்க மாய
னொன்றுசத் துவந்த ளிக்க விறைதமத் தொடுக்க வென்று
பின்னுமந் தொழிற்கு வேண்டும் *பேருணர் வாற்ற லெல்லா
நன்னரி னருளிச் செய்தா னான்முக னிறைஞ்சி யெந்தாய். (௰)

படைப்பிய றெளிய வெற்குப் பகரென விசுவ ரூப
மிடற்பட வெடுத்துத் தூங்கும் வியன்றுதிக் கையின்வ ழித்தா
யுடற்குளுய்த் திருவர் தாமு முடன்புகத் தனத கட்டிற்
றொடக்குறு மண்ட பிண்ட சராசர மனைத்துந் தோற்றி. [௰௧]

காணுமா றருளிச் செய்து கமலனை யத்து வாரத்
தேனுற விடுத்து மற்றை யிருவரை யிரண்டு காதின்
மானுறு துவாரந் தன்னால் வரவிடுத் தனன்பின் வேதாப்
பூணுமோர் தருக்கா லன்னோற் போற்றிடான் சிருட்டி செய்தான். (௰௨)

அன்னதோ டத்தோர் சென்னி யானன மிரண்டு கண்மூன்
றின்னன விருபம் பல்வே றுயிலை வுறுது தோன்றிப்
பின்னவன் றனைக்க றுத்துப் பெருங்கையாற் றூக்கித் தள்ளி
யுன்னருந் றன்பத் தாழ வுஞற்றிய ததுபொ ருளாய். (௰௩)

மிக்கவை குருபத் தெய்தல் விக்கினே சுரன்றாள் போற்றித்
தக்கசிட் டியைத்தொ டங்காத் தன்மையா லெனவா ராய்ந்தே
யக்கணம் புனறோய்ந் தாற்றுங் கடன்முடித் தண்ணல் பொற்றாள்
பொக்கறு மனத்துட் கொண்டு பொருந்தினான் யோகத் தாங்கே. [௰௪]

விதிபுரி செயற்கெம் மானும் வியந்தவன் முன்பு தோன்றிப்
பதுமவா தனத்தோய் நம்மை மறந்துநீ படைப்பிற் புக்கா

---

*பேருணர்வாற்றலெல்லா நன்னரினருளிச்செய்தா னென்பது- வேதாகமபுராண கலைகளைக்கொண்டு யாவையுஞ்சிருட்டிசெய்யத் தக்கசத்தியைப்பிரமனுக்கும், யோகத்தினால் வேஷாடியவடிவங்களைக்கொண்டியாவையும் இரக்ஷிக்கத்தக்கசத்தியை விண்டுவுக்கும், ஏகாக்ஷரசடாக்ஷர மந்திரங்களைக்கொண்டு எங்குந்தானாகவிருந்து யாவையுஞ் சங்காரஞ்செய்யத்தக்க சத்தியை உருத்திரனுக்குங் கொடுத்தருளினார்.

யதனினிவ் விடர்க ணின்னே யடைந்தன வினிச்சி ருட்டி
முதன்மையெய் துதற்கு பாய மொழிகுதுங் கூர்ந்து கேட்டி. (ருஎ)

நம்மருட் சத்தி மாருண் ஞானமே கிரியை யென்றுஞ்
செம்மைசேர் சத்தி மாரைச் சிந்தைநயிற் கொண்டு நாளு
மம்மொய் தாது சிட்டி வகைதொடங் கிடுதி யென்று
விம்மென மறைந்தா னெல்லா வுயிர்தொறு நிறைந்தா னென்றும். (ருசு)

சித்தியைங் கரத்தோன் வாய்மை சிரங்கொடு சத்தி மாரைப்
பத்தியிற் றியானஞ் செய்து பரவலு மிரங்கிச் சித்தி
புத்தியென் றுரைக்கு நாமம் பொருந்தியே யெனைத்து மாக்குஞ்
சத்திக ளிருவர் தாமுந் தோன்றினர் தாதா முன்னர். (ருஎ)

மலரவன் வணங்கிச் சித்தி புத்தியென் னுமம் வாய்ந்தே
பலர்துதி தாய்மீர் நான்செய் படைப்புநன் குறவு நீரொன்
னிலகுறு புதல்வி மாரா வெய்தவு மருண்மி னென்ன
நலனுற விசைந்தார் வேத னன்குசிட் டிந்தல் செய்தான். (ருஅ)

மூவருபாசனைப்படலமுற்றுப்பெற்றது.
ஆகப்படலம் எ-க்குத் திருவிருத்தம். [உஈ௪ய]

திருமணப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மூவரைப் படைத்தன் றோர்க்கு முத்தொழில் வழங்கல் செய்த
தேவற நவின்றுஞ் சித்தி புத்தியென் பவரு வந்து
பூவினன் சுதைக ளாகப் பொற்பின்வாழ் தரவன் னுரை
மாவத னத்தோன் வேட்ட வண்மைநன் கறைதல் செய்வாம். (க)

மன்னுல கனைத்து நன்கு வருக்குமா றருளிச் செய்து
தன்னரு மகளி ராகிச் சார்சித்தி புத்தி யென்று
மன்னைய ரிருவர் தம்மை யைங்கர நால்வாய் முக்கண்
முன்னவன் றனக்கு மன்றன் முடிப்பவுண் மதித்தான் வேதன். [உ]

*மாடக மகதி கல்யாழ் வல்லநா ரதனைத் தோர்ந்தே
பீடுயர் பொழில்சூழ் வெள்ளிப் பிறங்கலை யடுத்தே நம்பன்

* மாடகம்-வீணை முறுக்காணி.

றுடலைக் கொண்டி சைத்தேன் றுரையிற் பொழிந்தன் ஞன்ற
ஞடலைப் புகழ்ந்து பாடி யருள்பெறீஇ நுவல லுற்றுன். (ங)

வாசமென் கமலப் புத்தேண் மானதத் திருநல் லார்மா
தேசொடு தோன்ற லுற்றுர் தேவநிற் கவர்க டம்மைக்
காசகல் வதுவை யாற்றுங் காதன்மிக் குள்ளா னன்றே
ஞசையி னதிபொற் பாரா டவர்தமை யமைப்பி னென்றும். (ச)

நின்னது வடிவை யெண்ணு நிகரின்மா தனைய மைப்பின்
மன்னெழி லனைய மாதர் வடிவையெண் ணுறுமென் றுலீங்
கன்னவ ரழகை யெ:ன்ணு லறைகுத றமோ வென்றப்
பொன்னனுர்ப் பரவு மாதர் புரத்திலக் கணமுஞ் சொற்றுன். [ரு]

கலிவிருத்தம்.

எந்தை கேட்டங் கிசைந்தருள் செய்திடச், சிந்தை யோகை சிறந்து சதுர்முகன், புந்தி தோன்றிய பூவையர் தம்முனர், வந்து நாரதன் சாற்று வன் மங்கைமீர். [சா]

கொன்றை வேணிக் குழகன் விநாயகன், மன்றல் செய்ய மதித்தன னுங்களை, யென்ற போதவ் விலங்கிழை யார்களு, மன்ற வார்வ மனத்தமைத் தாரரோ. [எ]

பங்க யன்னுமை பங்கற் கிஃ திசைத், தங்க ணுவரு ளென்ன வருளலுஞ், செங்கை யைந்துடை யான்றிருத் தாள்பணிந், தெங்கணுத வியம்புவ தொன்றுண்டால். [அ]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நின்னது செயன்மற் றியாதாய் நிகழ்கின்ற ததுவே யன்றி
யிங்கில மதனில் வேறு செயலுண்டோ வென்பா னிநல்
கன்னியர் தமைநீ வேட்டல் வேண்டுமென் றென்னி லின்பந்
துன்னுறு தியாண்டு மென்று னிசைந்தனன் சுமுக வள்ளல். [கூ]

திசைமுகன் மகிழ்ந்து முன்னோன் றிருமணத் திறந்தீட் டோலை
மிசையுல கத்தோ ரிம்பர் வேந்தரா தியருக் குய்த்து
விசுவகன் மனைப்பார்த் தேயிவ் வேட்பினுக் கிசைய யாரு
நசைகொண்மண் டபங்க ளாதி சமையென நயந்தி றைஞ்சி. [ய]

நகரமொன் றினித மைத்தந் நகரத்தின் புறஞ்சூழ் சொச்சி
தகுதியி னெழுப்பி நான்கு கோபுரஞ் சமைத்துள் ளாக

வகலிய மதிலுண் மேடை யாதிசெய் தாடத் தெண்ணீர்
மிகுகுளம் பொழிலும் யானும் விதம்விந் மாகக் கண்டே. [௰௧]

அணிநகர் நடுவண் மன்ற லாற்றலுக் கியைந்த பற்பன்
மணியினு மேரு நாணு மாற்றுயர் பொன்னி னானும்
திணிபெறு பளிங்கி னானுந் திகழ்மதி காந்தத் தானும்
பணிமிக மாட்சி தங்கு மண்டபம் பதித்தல் செய்து. [௰௨]

மண்டப நடுவே யொன்பான் மணியினு லிழைத்த சோதி
மிண்டரி யணையொன் றிட்டான் மங்கல வேள்விச் சாலை
குண்டமு மமைத்தா னட்ட மங்கலஞ் சுண்ணக் கோலங்
கண்டன னெங்குஞ் சென்று கண்டவர் நனிவி யப்ப. [௰௩]

ஏரொலா மயன்வ குப்ப தெனினுமிம் மயன்வ குத்த
சீரொலா நோக்கி நோக்கித் தேவர்கோ மான்போ னான்மெய்
யாரவா யிரங்கண் ணேயா தெண்கண னானே னென்றுற்
பூரணமாக யாவர் புகல்வரந் நகர்மாண் பிப்பால். [௰௪]

மன்றல்சான் முடங்க லைக்கை வாங்கியோர் * கால்வே கத்தை
வென்றவோர் மனவே கத்தான் மேதினி வான்றிக் கெங்குஞ்
சென்றுசென் றுய்ப்ப வன்ன திருமுகம் பெற்றோ ரொல்லா
மின்றுநன் றெய்திற் றென்னா வினிதுள மகிழ்ந்தெ ழுந்தார். [௰௫]

சலநிதி கடைநா ளிற்போந் தெனத்தவ ராவார் பூவார்
புலவர்மற் றேனோர் தத்தம் புதல்வரா தியரோ டெம்மா
னிலகெழின் மணவி ழாக்கண் டேத்தவந் தார்வந் தாரெண்
ணலகில வனையர்க் கெல்லா §மமலையு முடையும் பூணும். [௰௬]

இணையறு பதுமஞ் சங்க மெனுமிரு நிதியுஞ் சிந்தா
மணியுமைந் தருவுங் காம தேனுவும் வளங்க ளுள்ள
பணிவுட னளிக்கத் துய்த்தும் பாங்குற வுடுத்து மெய்யி
லணிவன வணிந்து மின்ப வாழியிற் றிளைப்பா ராக. [௰௭]

பொன்னகர்க் கிறைவன் வேறு பொன்னக ரடைந்தே மென்னு
மன்னுபே ருவகை பூத்தான் வானக ரத்தா ரெல்லாம்
பன்னுமிவ் வியப்பி னோங்கு பதிமுனங் கண்ட தின்று
லென்னமிக் கோகை யுற்று ரெண்ணுறுந் தோறு மாதோ. [௰௮]

---

* கால்வேகம்-வாயுவேகம்.

§ அமலை சோறு

திணிவரை நிகர்தோண் மைந்தர் செப்பிள முலையார் சில்லோ
ரணிமணை விதான நோக்கி யலர்விழி யிமையா ராகு
மணிவட முலையார் சில்லோர் வாகைசேர் கணவ ரோடும்
பணிசெய்கர் துகங்கொண் டாடிப் பலருளங் களிப்பச் செய்தார். (௧௯)

மொய்யளி முரலுஞ் செந்தா மரைமுக முறுவற் சில்லோர்
பையர வல்கு லார்தம் பாங்கிய ரோடுங் கூடி
மைவிழி கீழ்மே னோக்க மணிபணி தனங்கு லுங்கக
கைவளை கலக லென்ன வாடினார் களங்கம் மானே. [௨௰]

பெருமதக் களிற்றின் வெற்றி போரணி முகந்து வாவும்
பரிகளின் செயம்வன் சேவல் பகர்கவு தாரி காடை
பொருதகர் கிவற்றின் போராற் புகழ்தரு வீரங் காணு
வரசர்க டருக்கி னோடு மகமிகு களிப்பி னுற்றார். [௨௧]

முனிவரர் சுருதி யாற்றன் மொழியறம் பொருள்க ளின்பந்
துனிதவிர் முத்தி வாதந் தொடுத்தினி தியம்பா நின்று
ரனகனார் சிறப்பிற் சொன்ன வாகமப் பொருள்க ளாய்ந்த
சனகாதி யர்பா யோக தத்துவந் திறம்பே சுற்றார். [௨௨]

கலிவிருத்தம்.

மங்க லந்திரன் காணவந் தோர்செய
லிங்கி தாகவெம் மீசன் றிருக்குறிப்
பைங்கை வள்ள லறிந்துசங் கற்பத்தாற்
பொங்கு தெய்வப் புனல்படிந் திட்டனன். [௨௩]

§பிங்க லக்கலை பெட்பிற் றரித்தனன்
கொங்கு மிக்குக் குளிர்தரு செச்சையை
யங்க மெங்கு மணிதிரு மார்பினும்
பொங்க ரொத்த புயத்தினு மப்பினன். (௨௪)

திங்கள் போழ்சடை சேர்துமென் றேனைய
பொங்கு கோள்கள் புரிதவத் தன்னவு
மெங்க ளாதன் மிலைந்த தெனச்சிரந்
தங்கொன் பான்மணித் தண்முடிச் சூட்டினன். [௨௫]

ஒன்று மண்டத் திருடிணொடு மொன்றினிற்
பொன்றல் செய்துதற் கண்புறம் போதர

§பிங்கலக்கலை- பீதாம்பரம்.

னின்றி டத்தடை செய்தலி னெற்றியின்
மின்ற யங்குபொற் பட்ட மிலங்கினன். [உசு]

மாத ரோங்கு மணிமுடி மேவிய
சீதன் றேசின் வடிவந் தெரித்தல்போற்
பூதி பூசிப் பொலிந்தொளிர் வாணுதன்
மீது பொட்டு விளங்கப் பொறித்தனன். [உஎ]

தோகை மாரிய றேய்$வட மீனும்ப
தாகை மீனுந் தனதருட் கட்கடைக்
காகை வேண்டி யமைந்திடல் போலிரு
வாகு சேர்செவி வாய்த்தனன் குண்டலம். [உஅ]

துங்க நல்வரைத் தோளி னவமணி
யங்க தத்தோ டலங்கு கடகமென்
செங்கை நாணொ சிறடி நூபுரந்
தங்க வாழி விரலினுஞ் சாத்தினன். [உகூ]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வடிவுறப் புனைந்த மணவணி நோக்கி மறைமுத லுமையொடும் விடையூர்ந், தடல்கொளோர் மருப்பின் யானைமா முகனை யணிகொ*ளீ ராயிரமருப்பின், மிடல்செறி யானை மிசையிவர் வித்து வேளைமா மஞ்ஞையூர் வித்துப், புடையெலா மனந்த ராதியோர் மறைமந் திரங்களை யாதிகள் பொதுள. (௩0)

பூதர்க டொகுதி செயப்பிர தாபம் புகழ்ந்துமுன் கட்டியம் புகல, மாதவர் வேத மனுக்களாற் றுதிப்ப வட்டவெண் மதிக்குடை நிழற்ற, மேதகு கவரி யிருபுற மிரட்ட வெண்டுகிற் பதாகைவான் றூர்ப்ப, வேதமில் பஞ்ச வாத்தியங் கறங்க வெழுந்துவிண் ணெறிப்படர்ந் தனரால். (௩௧)

$ வடமீனும் பதாகை மீனுந்தனதருட்கட்கடைக்காகைவேண்டி, என்றது அருந்ததி- மீனக்கொடி- யென்னும் இருமீன்களையும் இருமகரகுண்டலங்களாக்குதல் இறைவன் பக்குவான் மாக்களுக்குக்கடாக்ஷித்தல் மீன்போல் நோக்குதலும் ஒன்றுதலால் அதைவிரும்புதல்போன்று என்றும் அவைக்கடைக்கண்ணோக்கம் பெற இச்சித்தல் போன்று- என்றும்- கொண்டதாம்.

* ஈராயிரமருப்பின் மிடல்செறியானை-ஐயிராவணமென்னும் பெயருள்ள பெரியானை.

இன்னண மெண்டோ ளிறையவ னுமையோ டிபமுகத் தைங்கரத் தெந்தை, பன்னுமற் றெவரும் புறப்பெருங் கடல்போற் பாங்குறப் போதாலறிந்து, பொன்னூரத் தவனும் பிரமனு மற்றப் புல்வரும் போந்தெதிர் வணங்கித், தன்னிகர் நகரி னணிகிளர் வீதி தகவுடன் வலமுறச் செய்து. ()

மணவணி புனைசெய் மண்டபத் துய்த்தார் வாணிசெங் திரும்புனல் வார்ப்பப், பணிவொடு கமலன் கணபதி பாத பங்கயம் விளக்கனு மிதழிப், பிணையல்வே யிறைவெற் பிறைவியோ டெழில்கொள் பீடமார் தாக்கண பதியு, மணிமணிப் பீடத் த ார்ந்திடப் பிறரு மயலமைத் திடுதவி சிருந்தார்.

அறுசீர் ழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மணவினைக் கடுத்த வோரை வர்ல்குறித் தனுதி யான
கணபதி யுடன்பல் கிதங் களின்மகிழ்ந் தமர்ந்தார் யாருந்
திணிமணி வடமார் கொங்கைச் சித்திபுத் தியர்க ணன்கு
புணர்திரு மணக்கோ லங்கொள் புதுமைசற் றினிச்சொல் கிற்பாம்

மங்கைமார் சிலரன் னானை மணிதிகழ் பீடத் தேற்றி
யங்காஞ் சிவப்பத் தான மளித்தபின் றயில நீவிக்
கங்கைநீ ராடிப் பொன்னங் கலையணைக் கசைத்தெ ழிற்பூங்
கொங்கைநன் னிறங்காட் டாமை கோட்டல்போற் களபம் வேய்ந்தார்.

இருளையிர்ந் திந்து றெற்று லெனவகுப் பெடுத்தவ் விந்துக்
கரிகளா மீ ராவு மொன்றியாங் கடுத்த தேய்ப்பப்
புரிசடை யொடுபொன் னூகப் பூணிட்டார் நுதற்பூண் வானிந்
திரதனு வினைக்கார் மாட்டுச் செறித்தெனக் குழற்பாற் சேர்த்தார். (ருசு]

முன்னவ னங்கை யேந்து முரட்கொடி மயிலுஞ் சென்னி
துன்னவேய் மதியுங் காந்தன் றொல்லிலச் சினைய வற்றைப்
பன்னியர் தலைமீக் கொள்ளல் பாங்கென வமைப்பார் போன்று
மின்னிளம் பிறைம யூர மெனுமணி முடிவேய்ந் தாரால். [ருஎ]

தலைவன்மெய்ந் நிறந்தெ ரிக்குஞ் சால்பிற்செந் திலக மிட்டா
ரலர்விழி கறுப்பூர் வெண்மைத் தாதன்மா லமர்பா லாழி
நிலையெனு வதனங் கொங்கை நிழன்மதி வரையென் றோர்காற்
புலனில்விண் ணவர்ம திப்பான் புகாதெழி னியின்மை யிட்டார். (ருஅ)

தப்பினித் திலமூக் குத்தி தையலார் கொழுநன் கீர்த்திக்
கொப்பெனத் தேற்று வார்போ லுயர்திரு நாசிவேய்ந்தார்
அப்புமுக் கனங்க ளன்ன தோகையர்க் காடற் றொன்மை
செப்பலின் மணிசெ யன்னக் கொப்புமேற் காதிற் சேர்த்தார். (ருகூ)

ஒருகோடி §யொகரந் தன்னை யுச்சியிற் பொருத்தல் போன்மற்
றொருகோடி மகரந் தன்னை யொசிந்தொளிர் காதி னூடு
செருவிட றகவென் பார்போற் றிகழும்பொன் மணியி னூற்றிப்
பெருகொளிக் குழையெ னும்பூண் பரிதிவாள் பிறழப் பெய்தார். (௪௰)

வலம்புரி யென்னத் தூய்தின் வளர்கண்டத் திமையோர் நாத
னலந்தரப் புனைபல் பூணி னுதனுந் திருநாண் வைக
வலங்கா தனநீள் பீட மமைத்தென மணியொன் பானுந்
துலங்குமுட் கட்டுக் கோவை சூழ்தரப் பூட்டி னால். (௪௧)

பீடுயர் தனங்கட் கிட்ட †பெரும்பரம் வெளிக்காட் டார்போன்
மாடைசேர் கச்சின் மீது மாணிக்கம் வயிர நீலஞ்
சேடுறு பவள மாதி நவமணி சிறந்த கோவை
யாடகத் தாந்தார் பூந்தா ரணிந்துமே லலங்க ரித்தார். (௪௨)

பெய்தனர் விரல்கட் கேற்ப மணிசெய்து பிறங்கு மாழி
கைவளை கடக மிட்டார் கவினெறி கலாப மாதி
$ஐவகை யணியு மார்ப்ப வசைத்தன ரொன்று மைய
மெய்துநுண் ணிடையில் வண்டு கொடியினுந் திமிர்தல் போல. (௪௩)

ஏதமில் வேதம் பன்னு முடியு மெய்தாப் பாத
மேதக வின்று கண்டா மெனப்பற்றி வியத்த லேபோற்
*றாதநூ புரஞ்ச தங்கை பாடகந் தண்டை யார்ப்பப்
பாதசா லம்பூட் டிச்செம் பஞ்சுமூட் டினர்நன் கெய்த. (௪௪)

எத்திக்கும் பணிசெய் தேத்து மேரம்பன் பணிகட் கேற்பச்
சித்திக்கே யதிதி யோடு திருமக ளிந்தி ராணி
புத்திக்கே யிரதி சாவி புகழன சூயை யாருஞ்
சத்திக்கூர் விழியார் தாமிவ் வணஞ்செய்தை யலராம் பின்னர். (௪௫)

திருவளர் சிவிகை யேற்றி நகர்வலஞ் செய்வித் தார்பின்
வரைசெய்நல் லோரை யோர்ந்து மாங்குழை கூர்ச்ச மாதி
பொருள்கொடு சனக யோகர் வதுவைமண் டபத்துப் புக்காங்
கொருதவி சிருப்ப மாத ரொண்ணகர் வலம்போந் தாங்கே. [௪௬]

---

§ ஒகரம்- மயில்.
† பெரும்பரம், பெரியகவசக்கட்டு.
$ விரிசிகை, கலாபம், பருமம், மேகலை, காஞ்சி, என்னும் ஐவகையணிகளாம்.
* தாதநூபுரம்- பொன்னாகிய உலோகத்தாற்செய்த சிலம்பு.

வதுவைமண் டபத்தி னுப்பண் மணியரி யணையில் வைகும்
விதுவணி நெடுங்கோ டேர விநாயகப் பெருமான் பாங்கர்க்
குதுகுலித் திருந்தார் மன்றற் குரவனு கமத்தி னுற்றாற்
புதுமணத் தினர்க்குச் செந்தேன் பொருவிறீங் கனியா லீய்ந்து. (சஎ)

பிரமனை நோக்க வன்னோன் பிரணவ வடிவான் கையிற்
பொருவில்சீர்த் தனது சித்தி புத்தியா நங்கை மார்தங்
கரதல மலர வைத்து வாய்மனுப் பகரக் கையாற்
சிரகநீர் மாரி பெய்யத் திருமண மகனங் கேற்றான். (சஅ)

சிவநெறிச் சனகன் வேள்விக் குண்டத்திற் செந்தீப் பெய்து
குவவிடன வெவ்வே றுச்செய் சமித்தினைக் கொளவ ருச்சித்
தவியினை வார்ப்ப மாந்தி வலஞ்சுழித் தகடு வீங்கித்
தவனதே வொளியி னார்த்துந் தருக்கொடு நிமிர்ந்து நிற்ப. (சகூ)

அரம்பையர் நடன மாட விஞ்சைய ரமுத கீத
நரம்பிசை மீட்டிப் பாட நற்றவ †ரரவென் றார்ப்பப்
புரந்தர னாதி வானோர் புளகமெய் போர்ப்ப மற்றோர்
கரஞ்சிரங் குவித்தா னந்தக் கடலிடைப் படிந்து மன்ன. (ருய)

அந்தண ராசி செய்ய வமரர்பூ மாரி பெய்யச்
சந்தநான் மறைமு ழங்கச் சாற்றியத் திரட ழுங்க
‡வந்தியர் நீட மானார் மங்கலம் பாட வானார்
துந்துபி யதுங்க றங்கத் தொனிசெய்சங் கம்பி றங்க. (ருக)

சங்கையில் கேள்வி சான்ற சனகமா முனிவ னென்போன்
மங்கலச் சடங்கு வேத வரன்முறை தவறு தாற்ற
நங்கையர் திருக்க ளத்தி னலங்கொண்மங் கலநாண் சாத்திச்
செங்கையைப் பற்றி னானெந் தேவனுங் கணேச வள்ளல். (ருஉ

அணுவதா யண்ட மாவா னண்டமா யணுவ தாவா
னிணையிலி யாவுந் தானா யிருப்பவ னுலகம் யாவும்
புணர்வுறு போக மூழ்கிப் பொறபின்வாழ்ந் துய்யு மாறு
மணவினை முடித்தா னென்ன வழங்குவர் மதிநூல் வல்லோர். [ருங]

---

†அரவென்றார்ப்ப- ஹரஹர என்று தோத்திரிப்ப.
‡வந்தியர்- மங்கலப்பாடகர்.

பின்னரங் கிளைச்சூழ் வந்து பீடமீ தினிது வைகிப்
பன்னிய ரோடும் வேள்வி பாங்கினின் முற்றக் கையாற்
பொன்னனார் பாத சாலம் புலம்பிடப் பாத மம்மி
தன்னிலே தூக்கி வைத்துச் சாலியை யெதிரே காட்டி. (௫௪)

தந்தைதாய் செம்பொற் பாதந் தேவிய ரோடுந் தாழ்ந்து
இந்தையி னார்வத் தன்னார் திருமுக மலர்ந்து வாழ்த்தப்
பந்தவே ரறுக்கு மையனைப் பகவனும் பங்கில் வாழுஞ்
சுந்தர மாதர் தாமு மணவறை துன்னி னாரால். (௫௫)

கண்ணுத றிருக்கண் ணோக்காற் கன்னல்மா வனந்த னாதி
விண்ணவர்க ளணிமபால் றாசு மெல்லிலை முதல நல்க
வெண்ணிறுக் கரிய கற்ப காதிகண் மற்றோர்க் கெல்லாந்
தண்ணடை காய்முன் னான தருபரி சளித்த மாதோ. (௫௬)

சிறுமதி சடையிற் சூடுஞ் சிவபிரான் மதலை மன்றல்
பெறுவிழாக் காண வந்தோர் பெருங்கலை யுறுதி பெற்ற
முறையொரு வியப்போ யாரு முன்னிய வனைத்து மெய்த
இறுவரோற் சுமுகர் வீதி யுலாவுறு வியபஞ் சொல்வாம். (௫௭)

அன்னையர் சித்தி புத்தி யணிமணிச் சிவிகை மீது
டன்னெழிற் சுமுக மூர்த்தி யிராயிர மருங்கிற் சூழப்
பன்னயி ராவ ணத்தும் பவனிவந் தனாவின் றுன்னார்
மன்னறை பொழிமந் தார மலர்களிற் றிகழொண் ணில்லார். (௫௮)

மேலொலி யுருமே றென்ன விதங்கொள்பல் லியங்க ளார்த்த
சாலவிண் ணகடு முற்றுந் தண்மதிக் கவிகை போர்த்த
வாலவட் டங்க டிக்கார்ந் தசைந்தன கொடிவான் றூர்த்த
பாலலை நரலை யென்னப் பாங்கெலாங் கவரி சீர்த்த. (௫௯)

வஞ்சிதேய் மருங்கு னல்லார் மங்கல மொழியெ டுத்தார்
விஞ்சைய ரமுத கீதம் வீணையிற் செவிம டுத்தார்
பஞ்சடி யரம்பை மாதர் பாடலா டல்கொ டுத்தார்
ஞ்சநீர் நந்தி யாதி வேத்திரத் தணிப டுத்தார். (௬௰)

பாஞ்சசன் னியத்தோ னாதி யாவரும் பரிவின் மொய்ப்பக்
காஞ்சன மணிப்பூ ணீள்கைக் கடவுள்மா முகத்தெம் பெம்மா
ஞாஞ்சில்சூழ் நகரின் வீதி நடுவர மடந்தை மார்நீ
ராஞ்சனங் கொண்டு முந்துற் றுவலிற் சுழற்றி னாரால். (௬௧)

வாசமென் மலர்க ணெல்லின் மலர்பொரி யொலிவ யர்குங்
காசுவண் கன்னற் றுண்டங் கதலிமா வாதி யாய
மாசில்செங் கனிகண் முன்னோன் முந்துற மடநல் லார்கள்
வீசினர் தாழ்ந்தார் மோக வெள்ளவா ரிதியி னாழ்ந்தார். (௬௨)

ஏவிழி சிலைபு ரூஉ மெனவெலற் கெணிக்க ணேச
தேவயிற் செல்லீ ரென்னுன் றேசெழிற் படையெ திர்ப்பி
†ஞெவுநன் றுறு மன்ன வுழைத்துக்கால் பிடிப்பா ரொப்பச்
சேவடிச் சிலம்பொ லிப்பச் சென்றனர் மறுகிற் சில்லோர். [௬௩]

தாதவிழ் குழலோர் மாது தந்திமா முகன்பா லுள்ளத்
தூதுபோ யிருப்ப தென்று சொல்லமற் றொருத்தி சீறி
யீதொழி யுய்தி வேண்டி னென்னுள முனந்தூ தாச்சென்
றோதிய தென்றா ளற்றா லுற்றன விவர்க்குட் பூசல். [௬௪]

செம்மைசேர் சித்தி புத்தி திருமுக நோக்குங் கொங்கை
யும்மையி ஃவர்செய் நோன்பா லுவாமுகன் காஞ்சேர் வுற்ற
விம்மியென் முகத்தைப் பார்க்கி னென்பயன் விளையு மென்ற
*னம்மமே நோற்றி லேற்கென் றழுங்கினா ளொருத்தி யம்ம. [௬௫]

சீதமென் குழலோர் மாது தேவர்மா னவர்மற் றுள்ளோர்
போதால் வேறு வேறாப் புந்தியிற் காணு ளான்ற
மாதவர் போலக் கண்ட வடிவெலா மதிசேர் வேணி
நாதனுங் கணேச வள்ள னல்லுரு வாகக் கண்டாள். (௬௬)

ஆவன்முற் றுறவே ரம்ப னுகந்தீண் டார்க ரத்து
மேவிடே மெனல்போற் சில்லோர் கைவளை கழுவி வீழ்ந்த
பாவனை யின்பங் கொள்வா ரிடைப்படிற் பயன்யா தென்று
பூவயிற் செல்லல் போலச் சோர்ந்தன பொலந்தூ சம்ம. (௬௭)

சந்திர காந்த மேடை தன்னினின் றைங்கை நாதன்
சுந்தரப் பவனி நோக்குந் தோகைய ரவன்கட் கண்ணுஞ்
சிந்தையுஞ் செலுத்தி வேறா செயலொடு மொழிதல் செய்யா
தந்துமட் பாவை யோடு முருவம்வே றற்று நின்றார். (௬௮)

பருவமங் கையரு ளோயன் பவனியை நோக்கிச் சென்னி
யிருகரங் கூப்பி னேரு மிலகுமெய் தாணி மீது [௬௯]

---

† ஓவும்-ஒழியும்.
* அம்மம்-கொங்கை

மருவ விழ்ந் திறைஞ்சி னோரும் வினைகலை காம ருங்கு
மொருவுத லற்று ரேனே ரொருவுத னூற்று ரம்ம. (சுசு)

இன்னண மைய னுற்ற §வெழுபரு வத்தி னோர்க்கு
மன்னிய மற்றை யோர்க்கும் வள்ளல்வண் கருணை பூத்து
நன்னர்மிக் கமைந்த வீதி வலம்வந்து நால்வா யூர்தி
தன்னினின் றிழிந்து செம்பொற் றனித்தவி சிருந்தா னாக. [எ0]

மாதவ னாதி தேவர் மாதவ மோன யோகர்
பூதல ரேனோர் தாமும் பொருந்துநல் விருந்த யின்று
பாதவந் தனைசெய் தேதம் பதிபுகுந் தனரார் வங்கூர்
வேதனு மிறைஞ்சி வேண்டும் வரம்பெற்றான் விமலன் றன்பால். [எக]

மூவிரு முகத்து வள்ள லாதியர் முன்னுங் கெய்தும்
யாவருங் கணேச னுரு மவரிரு பாங்கர் வைகுந்
தேவிக டாமுஞ் சூழச் சிவபிரா னுமையி னோடு
மாவளா கைலா யத்து வந்தனன் மறைக ளார்ப்ப. [எஉ]

அம்மலை மிசைதம் பெம்மா னருளின்வீற் றிருப்ப வைங்கைச்
செம்மலுந் திரும ணஞ்செய் சித்திபுத் தியரா மாதர்
தம்மொடும் பெருவ ளஞ்சேர் தன்னுல கதனைச் சார்ந்து
கொம்மைவெம் முலையார் போகங் குளித்தினி திருந்தான் மன்னோ. [எந]

திருமணப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் அ-க்குத்திருவிருத்தம். (நாசஎந)

விண்டுவுபாசனைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னவ னைமையா ளும்பன் முகன்சித்தி புத்தி யாமெம்
மன்னைய ரிருவர் தம்மை யருங்கடி மணஞ்செய் தாண்ட
தன்னல மிதுவாம் விண்டு நவில்சடக் காத்தை யோதிப்
பன்னலங் கணேசன் பாங்கர்ப் பெற்றமை பகர லுற்றும். (க)

---

§ எழுபருவத்தினோர்- எழாட்டைப்பேதையர், பதினோராட்டைப் பெதும்பைய ர், பதின்மூவாட்டை மங்கையர், பத்தொன்பதாட்டை மடந்தையர், இருபத்தைந்தாட் டை அரிவையர், முப்பத்திரண்டாட்டைத்தெரிவையர், நாற்பதாட்டைப்பேரிளம் பெண்கள் இவர்களாம்.

புயல்வணை னொருகா லத்துப் பாற்கடற் பொருந்தி யங்கண்
டுயில்பொழு தவனொண் காதிற் றோன்றினா ரிருவர் தாங்கு
வயமுடை யவுண வீரர் மதுகயி டவர்க ளென்னும்
பெயரினர் கொடிய ரார்க்கும் பீடைசெய் தனரா லற்றால். (௨)

அரியவர்த் தெறம லைந்தாங் கடவிழுந் தோடி நன்கு
புரியசா னடிதாழ்ந் ததெல்லாம் புகன்றன னதுகேட் டெம்மான்
விரிகமழ் கொன்றை வேணி விநாயகற் போற்று வாற்றாற்
பரிபவ மடைந்தா யென்னுற் பாவிநல் லருளெய் தென்று. (௩)

நவிலுமா றெழுத்தா னாய நன்மனு வுபதே சித்தோ
துவிதமு மருள வையன் றுணையடி மீண்டு மாறாழ்ந்
தவனியிற் சித்தி யாவு மளித்திடுஞ் சித்தி யென்னுந்
தவவில் கேத் திரத்தை நண்ணித் தண்மலர்ந் தடநீ ராடா. (௪)

பூசினோர்க் கினிய நல்கும் புனித வெண் ணீறு பூசி
வாசநீர் புரோக்க ணித்து சுத்தனை சுத்தி செய்தே
யாசிலம் புலித்தோன் மேவி யான்றிசை நேரி ருந்து
பேசு†தா னாதி யைந்து சுத்தியும் பிறங்க வாற்றி. (௫)

வாங்கெழி லொருகோ டானை வார்நரு மிருகா தானைத்
தேங்கருள் விழிமூன் றானைச் செவ்விய நால்வா யானை
யோங்குகை யைந்தா னானை யுயர்முடி யாறு ளானைப்
பூங்கடுக் கையைவேய் வானைப் புரியொடு வழிபா டாற்றி. (௬)

உரனெனுந் தோட்டி கொண்டங் கோரைந்து பொறிக ளென்னுந்
திரனுறு கயங்க ளெங்குஞ் செலவிடா தடக்கிக் காத்து
வரனருள் சடக்க ரத்தை வருடநா றோதி வைகப்
பரனெனைத் தடுந்தா ளெங்கைப் பண்ணவன் கருணை பூத்து. [௭]

செங்கண்மான் முன்பு தோன்றித் தெரிசனந் தந்தா னாகப்
பங்கய மலர்த்தாண் மாயன் பணிந்துபல் வரமுங் கைக்கொண்
டைங்கரன் றனக்கோர் கோயி லமைத்தவ னுருவங் கண்டு
துங்கநா லாக மத்திற் சொல்விதி முறைபூ சித்து. (௮)

---

* கேத்திரம்- க்ஷேத்திரம்.

† தானாதியைந்து சுத்தி- தானசுத்தி, இலிங்கசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, பூதசுத்தி என்பன.

அடர்துய ரகலச் சித்தி தந்ததா லனைய செம்மற்
கிடரொழித் தருளுஞ் சித்தி விநாயக னெனப்பே ரிட்டுக்
கடவுணற் கருணை யாலே மதுகயி டவனைக் காய்ந்து
படிவிவா னுள்ளோர்க் கெல்லாம் பொருவிலின் பளித்தா னன்றே. (௯)

வேறு

இன்னநெடு மால்பரசு ராமனு மவதார மெடுத்த வேலை
யன்னையினும் பெருங்கருணை யளித்தருளே ரம்பன்மல ரடிக ளேத்தி
மன்னவர்தங் குலமனைத்து மாய்த்தவனி யந்தணர்க்கு வழங்கிப் பின்னும்
$தென்னுலகி னித்தியனு யிருந்துபனற் கரியதவஞ் செய்கின் றானால். [௰]

விண்டுவுபாசனைப்படலமுற்றுப்பெற்றது

ஆகப்படலம ௬-க்குத்திருவிருத்தம (௩௱௫௰௩)

வீமனுபாசனைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருமக ளுறையு மார்பன் றேவதே வாமே ரம்பன்
மருமலர்ப் பாத மேத்தி மதுகயி டவனைக் காய்ந்த
பெருமையின் வதுவாம் வீம னெனப்பெயர் பிறங்கு மன்ன
னொருவனை மருப்பி னானை யுபாசித்த தோது வாமால். (௧)

வாங்குதெண் டிரைக்கை வேலை வாய்ப்படு பவள மன்ன
பாங்கமை செவ்வா யஞ்சத் தொகுதிகண் படுக்குங் கஞ்ச
நீங்கலின் மடுவுந் தேன்றோர் ஞிமிறுக ளிமிர வான்றோய்ந்
தோங்குதண் பொழிலுஞ் சூழும் விதற்பமென் றொருநா டுண்டே. [௨]

அன்னதே யத்து வேள்வி யாற்றுமந் தணர்க ளாதி
மன்னுநாற் குலங்க ளேனை மரபுளார் வளமுஞ் சென்னல்
கன்னல்பூங் கதலி தேமாக் கஞலிய வளமும் பொங்கித்
தன்னைநேர் நகர்க வுண்டின் னியமெனச் சாற்ற வுண்டால். [௩]

§கற்பக மலைப்பா னல்கு கரத்தினன் வீம னென்பான்
கற்பக மலைப்பார் தோளான் கடிகொளந் நகர்வேந் தாய்நூல்
கற்பக மலைப்பான் வேட்பான் சாருகா சினியெ னும்பேர்க்
கற்பக மலைப்பாங் காவார் காந்தையோ டரசு செய்நாள். [௪]

$ தென்னுலகு-சேரனாடு என்னப்படுகின்ற மலையமா நாடாம்.

§ கற்பகதருவுமலைக்கும்படிகொடுக்குங்கையினன், மலையும் பிணக்கும்படி யுத்தஞ்செய்தலால் நிறைந்ததோளான், அகங்காரத்தைக்கெடுக்கும் பொருட்டு நூல்கற்றலை விரும்புவான், கற்புடைமையென்னும் மனச்செல்வத்தைப்பக்கஞ்சுற்ற நிறைத்தமனைவி யோடரசு செய்நாள்.

தருமநற் றான மாதி சாலநன் கிழைத்து மெச்ச
மருவலில் வறுமை யானீள் வனஞ்சென்று $கோசி கப்பே
ரிருடியை யடைந்தில் லோடு மிறைஞ்சித்தன் குறையி யப்பப்
பெருமுனி வானுங் கேட்டுப் புத்திரப் பேறுண் டென்று. (ரு)

பின்னரு நவில்வான் வேந்தே பெரிதுநின் முன்னோ ரெல்லாந்
தன்னிக ரில்லா முக்கட் டந்திமா முகப்பி ரானை
நன்னரின் வழிபா டாற்றி நன்குற்றார் நீகை விட்டா
யன்னதான் மகவி லாது யினையஃ துரைப்பக் கேட்டி. [சா]

சீர்மலி கருநா டப்பேர்த் தேயத்துப் பானு வென்னு
மேர்மலி நகரா ளேந்தன் வல்லவ னெம்பா னின்றன்
பார்மலி யேழாம் பேரன் பகர்மனை கமலை யென்னுங்
கூர்மலி வேற்க ணோளோர் குழவியைப் பயந்தா ளன்றே. (எ)

மறுவிலாள் பயந்த சேய்கான் மலர்விழி செவிவாக் கின்றிக்
கறைசொரிந் தசும்பார் புண்கள் கலந்தரு வருக்கு மெய்யுங்
குறளதா யிருத்த லாற்கை கொடுபெற்று ணஞ்சுண் டாள்போற்
றறைமிசை புரண்டு ருண்டா டணிவிறன் பினின்ம ருண்டாள். [அ]

அதுதெரிந் தீன்றோ ணங்க ணடைந்தகங் குலைந்து தேறி
விதியினை வேறல் செய்வார் வியன்றலத் தெவருண் டிந்தத்
திதிவிதி யுண்டேன் மாறுந் தெளிமதி யின்னே யென்னச்
சுதனைநீ ராட்டி ளுத் தோகையுந் தெளிந்தோ ராறே. [சு]

சாதக மாதி கன்மந் தாதைபின் னியற்ற மைந்தற்
கோதினன் றக்க னென்று வொருபெயர் நயப்பா டேய்ந
மாதரார் தருமந் தான மருந்துமந் திரமற் றியாவுந்
தீதறப் பன்னீ ராண்டு செய்தொரு பயனுங் காணான். (ய)

மனையவ டனைச்சே யோடு மனையைவிட் டகலச் செய்தா
னினையவம் மாது மீச னிணையடி தஞ்ச மென்றுத்
தனையனோ டகன்றுள் வெங்கான் றன்னிலங் குறையுஞ் சோரர்
புனைகலன் பிறவுங் கிட்டிப் பொள்ளெனக் கவர்ந்த கன்றார். (யக)

பணிமுழு திழந்தா ணீங்காப் பசியொடு தாக மென்னும்
பிணிநனி வருத்தி வாட்டப் பெறுமகற் கொண்டோர் சீறூ

$ கோசிகப்பேரிருடி- விசுவாமித்திர முனிவர்.

ரணுகியங் கொருசார் பின்னை யம்புலி யறுகு கொன்றை
மணியுமிழ் பணிமி லேச்சு மகேசனார் கோயில் சார்ந்தாள். [௰௨]

சிறுவனை யாங்கு வைத்துச் சிலபக லன்ன சீறார்
குறுகியுண் பலிகை யேற்றுக் கொடுவெந்தூட் டிடுவா ளோர்நாட்
பெறுமக னொடுப விக்குப் பெயர்தரு மாற்றி னேன்பின்
மறுவின்முக் கலனார் மேனி மருத்துவி சனுமைந் தற்கு. [௰௩]

விண்டவாய் கேட்ட காது விழித்தகண் ணடந்த கால்கள்
சண்டனை யுதைத்த சண்டன் றுளிணைக் கன்பு பூண்ட
தொண்டர்மான் மியமென் சொல்கேன் சுருப்புநாண் மதனே வேளோ
கொண்டன்மே னியனோ வென்னக் குழகனாய் நின்று னங்கே. [௰௪]

இருகணுங் குளிர நோக்கி யெடுத்தணைத் துச்சி மோந்தா
டிருநிகர் கமலை யன்ன *சினகரம் பூசிப் போனவ்
லருளினன் னவர்க்கு நால்வா யைங்கரன் மனுவு ணன்கு
தருமெழுத் தெட்டா றுய தகுமனு வுபதே சித்தான். [௰௫]

விதிமுறை கணித்தா ரன்னார் விநாயகப் பெருமான் முன்னர்
மதிமுக மாது தன்முன் வந்திவட் கருளிச் சேய்முன்
றுதையுமோர் தாண்மே லோர்தா ளேக்கிவைத் திடுகோ லத்தோ
டெதிர்தல்கண் டிறைஞ்சத் தக்க னேற்றெந்தை மகிழ்ந்து சாற்றும். [௰௬]

முக்கல முனிகாற் றுன்மெய் மோதிடக் $குரூபந் தீர்ந்தாய்
மிக்கவற் சாரிற் போக மேவுநிற் கெனம மைந்தான்
றக்கனித் தவன்பாற் சென்று தாழ்ந்தெலாம் புகலக் கேட்டுப்
பொக்கமில் கணேசற் கண்ட புனிதவீட் டின்புற் றுயால். [௰௭]

எனவவன் முதுகு தைவந் தீறிலான் மனுவி னுள்ளே
நனியருள் பொழியு மேகாக் கரமனு நவின்று தக்க
வினியிமை யவர்கோ மான்போ லிருந்தர சாள்வை யென்றப்
புனிதமா தலன வின்று னென்றுகோ சிகன்பு கன்றான். [௰௮]

இக்கதை கேட்டு வந்த விலங்கயில் வீமன் றுழா
முக்கல னுடற்கா றேய முதலவன் றேன்ற வன்ன
தக்கன்முற் றவப்பே றென்னே சாற்றுக தவத்தோ யென்ன
மிக்கருள் விளைக்குங் காதி மகனவை விளம்ப லுற்றான். [௰௯]

---

* சினகரம்-கோயில்.

$ குரூபம்-அருவருக்கத்தக்குந்த வடிவம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செல்வமோ ரெட்டு மோங்கவெண் டிருவாழ் சிந்துதே யத்துமா ணமைந்த
பல்விய நகர மொன்றுள ததனிற் பகர்வினும் பயன்பெறப் பயிலு
மல்லல்வா ணிகஞ்செய் குலத்தினிற் பிறந்த மாதனன் பெயர்கலி யாண
னில்லவ ளிந்து மதியவள் வயிற்றோ ரிளவல்வல் லாளனென் றுதித்து. ()

மகாரொடு விளையாட் டயர்பரு வத்தோர் வைகலோர் காவகத் தெய்திப்
பகாதுறு மும்மை நல்வினை வசத்தோர் பைஞ்சிலை தனையெடுத் தும்பன்
முகாவெனக் காவென் றினிநபி டேகஞ் செழின்மலர் மோகமாச் சாத்தி
யுகாவுளத் திறைஞ்சி மீண்டபின் ஞான்று முன்புபோ லுவந்தியற் றினனால்.

இன்னணஞ் சிலநா ளியற்றுபு வருவா னிளைஞர்தங் குழுவொடு மொருநா
ளன்னகான் புகுந்தெம் மிறையவன் பூசை யாற்றினன் மீண்டில னிரவு
மன்னிபு மற்றோர் குரவரீ தறிந்நவ் வணிகனுக் குரைத்துநின் மகற்குத்
துன்னிடர் புரிதி யிலையெனி லெமையக் கியம்பிநிற் றூரத்துது மென்றார். ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கலியாண னதுகேட்டுப் பொறிகலங்கி வனம்புகுந்து காத லன்செய்
நலியாத பூசனையை நாட்டமுற்று நாட்டமில்லா நமனைப் போன்றம்
மலிவாச மலர்ப்பந்த ரழித்தமல மாமுகனை மண்மீ தெற்றி [தி (உ௯)
மெலியாதோர் தடிகொடு$நெய்த் தோர்வடியத் தன்மகன்றன் மெய்யின்மோ

சிந்தைநனி யல்லலுற வவற்பிடித்தோர் மரந்தியாத்துத் திரும்பும் வேலை
மைந்தனெனைக் கட்டவிழ்த்து விடுதியென மிகவிரப்ப வன்கட் சீலத்
தந்தைமத கரிமுகத்தோன் பணிபுரிந்தா யவனேநின் றளாவு நீக்கிப்
பந்தனைசெய் கட்டவிழ்த்து நல்லுணவுந் தெளிபுனலும் பகிர்ந்து காக்கும்.

எனமொழிந்து பின்னுமவ னில்லமெய்தா தொழியினுயி ருய்ந்தா யெய்தின்
மனவுறுதி யாகநினை யுயிர்மாண்டா யெனவுமுறை வழங்கிப் போந்தா
னனையவிழுங் கொன்றையணி நாயகனே நினைமுழுது நம்பு நாயேன் [றல்.
றுனியுறின்விக் கினந்துரக்கு நாதனெனச் சொலறகுமோ வென்று தோன்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈதுரைப்பா னெவனொருவ னெந்தைக் கா†மந் திரத்தையழித் தன
னோவவ் விறைமூர்த் தத்தை, மோதலுற வெறிந்தனனோ வவற்கு நிந்தை
நுவன்றனனோ வெஞ்சினத்தி னெனது நொய்ய, பூதியநெய்த் தோரொழு
கத் தடியி னாலே புடைத்தனனோ யாத்தனனோ வவனை யொல்லாப், பா
தகனவனையன்றி யுலகின் வேறு படுபாவி யுள்ளனோகப் பகரொ ணாதால் .()

$ நெய்த்தோர்- இரத்தம்.

† மந்திரம்- கோயில்.

ஆகையினு லிவையியற்றுங் கொடிய பாவி யாகமது குறளாகி யதிற் சேந்நீர்சீ, வேகமொடு பெருகிட மெய்ம் முழுதும் புண்ணாய் விழிகுருடாய்ச் செவி†வெதிராய் விள்வாய்பேசா, மூகையதா யுறுகவழி யடியார்க் கெல்லா முன்னுமுனல் லருள்பொழியு முநலை நாயே, ஞேகையொடு பணிபுரிமெய்யடிமை யேவி னுண்மையெனச் சபித்திறையை யுளத்துட் கொண்டான்.

அழிபடுமெய்ந் நாரகனு லசைக்கப் பட்டா லழியாத வுளத்தினுக்கே னவல மந்தோ, வழிபடுமெய்ந் நாரதனுன் மம்மர்நோயை மாற்றியவர் மனத்திருந்து கருணை மாரி, பொழிபடுமா முகவாவென் றூர்வ மூரிப் புரியைமனத் திசைத்துயிரைப் போக்கு மன்று, பழிபடுநீ மையினகன்ற சிறுவன் மாயைப் பாசத்து மகன்றுண்மைப் பரிவு பூண்டான். (௨௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வல்லையெம் பெருமா னங்கோர் மறையவ னுருவங் கொண்டு
செல்லலார் பிணிப்பிற் றுழக்குஞ் சிறுவன்முன் றோன்ற யாத்த
வல்லலும் பிறவித் துன்பு மறுபடக் களித்து மைந்த
னல்லநங் கணேச னின்று னெனநயந் தேந்த வெந்தை. [௨௯]

மைந்தநீ கலியா ணற்கு வகுத்திடு சாப முற்று
முந்துறு நினது வேட்கை மொழிகவிம் மலைநீ யென்னச்
சிந்தையி லன்பு மீக்கூர் சிறுவனு நின்றூட் கன்பு
தந்தெனக் கிவணீ யென்றுந் தங்கநல் லருள்செய் யென்றான். [௩௰]

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அருமையிற்பூசனைபுரிவல் லாள னிவ்வா றறையமறை யோனருள்கூர்ந் தன்ப னேநீ, கருதியவா றெம்பானீங் காவன் புன்பாற் கதுவிடுநின் பேர்நம்பேர் முதலில் வைத்துப், பெருகவழைத் திடநாமிங் கமர்வேம் பின்னர்ப் பிறங்குசின காமியற்றி யெவரும் பூசை, புரிதரவல் லாளகண பதியென் றுமம் பொருந்துமெமக் கெனமூர்த்தம் பொலிந்தாங் குற்றான். (௩௧)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆந்தண னுருவாப் போந்தவன் மூர்த்தி யாயபின் னவர்க்குவல் லாளன்
சிந்தையன் பொழுகப் பணிபுரிந் தனனச் சிறுனிடு சாபமா னவைதான்
றந்தைமெய் யடைந்திற் புகவின நிகழ்வு சார்ந்தவ ராலுணர்ந் தீன்றாள்
வந்துட னழைத்தாண் மறுத்தலுங் குரவர் வாயுரை மறுத்திட லழகோ. (

† வெதிர்- செவிடு.

அருஞ்சுத வெனவுன் கொழுநனுற் றிடுதீங் கிம்மைமாத் திரங்கொல ம் மையினும், வருந்துடார்ந் தவனே யப்பொழு தவனுன் மகனென வுதித் திரண் டாறுப், பொருந்துறு வயதி லவனுட னினையும் போக்குவ னம்மை நின் கணவன், பெருந்துய ருற்று முக்கல முனியாற் றணிவிர்செல் கெ னப்பெயர்ந் தனளால். (௩௩)

தாயகன் றிடவல் லாளனுஞ் சிறுவன் றந்திமா முகத்திறை யவனை, நேயமுட் பெருகப் பூசனை பண்ணு ணியதியிற் புரிந்திறை நோக்கா, லாயி டைக் கணங்க ளொளிர்விமா னத்தோ டடுத்தழைத் திடவதி னேறி, நாய னு ருலகிற் புகுந்தவ னம்பொ னகைமலர்த் தாள்கலந் தனனால். [௩௪]

நந்தனன் சபித்தாங் கியம்பிய வணமே நாய்கன்வா ளுண்முழு வது மோர், புந்திநைந திறந்து வருபிறப் பதனிற் புனையிழை மனையனை யாக, வந்தவள் வயிற்றோர் மகவென வுதித்து மாண்புறு தக்கனென் றுஞன், மு ந்தைநல் வினையி னுனை சாய்ச்செங் கே னடாத் தியமுறை மொழிவாம். []

முக்கல னெனுமா முனிவரன் மொழிந்த முதன்மையா மனுவினை யே ற்றத், தக்கவற் பணிந்து வியன்கவுண் டின்னி யெனுமொரு தனிநகர்ப் பா ங்கர், விக்கினங் கெடுத்தாள் பவன்சின கரத்து மேவியீ ராறெனும் வருடம், பொக்கறக் கணித்தா னிருந்தன னுகப் புகர்முகத் திறைவனின் னருளால்.

மருவளர் பொழில்சூழ் விதற்பதே யத்து மன்னவன் சந்திர சே ன, னுரிமைசெய் மகவின் றுயுயி ரிழந்தா னுவன்மனை சுலபையென் பவ டான், றுரிசெனுங் கடலிற் படிந்துபின் றேறித் தோன்றறன் கருமகன் கி யற்றித், திருமலி யரசு செயற்கெவற் கொணர்து மென்றுதெள் ளியரொடு தேர்வாள். [௩௭]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அன்னபொழு தருந்தவத்து முக்கலனு முனிவனணைந் தணிகூர்ங் கோ ட்டுக், கன்னமதப் பொருகளிற்றை யலங்கரித்து மணிமாலை கரத்தீந் தின்ன, பொன்னகரும் வெளிப்புறமும் போதவிடுத் ததுசுவலிற் கொடுபோந் தானை, மன்னுலகாள ரசனெனக் கொள்கவிது வேதுணிபு மதியின் மிக்கோய். []

எனமொழியச் சுலபைமன மகிழ்வொடுசே வகத்தினி‡லத் தேழுங் கந் தோய், வனமலிந்த †ககனமெனு மதகரியை யலங்கரித்து மணிசெய் மாலை, தனையதன்கை யளித்தின்ன நகராயினி தாளவொரு தகுதி யான, வினை யிவண் கொணர்தியென வினியவுரை தொடுத்துவிடுத் திட்டா ளன்றே. []

§ நிலத்தேழுங்கந்தோய்தல்- நாலுகால், வால்பு துதிக்கை, கோசம், என்னும் இ வ் வெழுங்கங்களு நிலத்தில், தோய்ந்திடல்.

† ககனம்- பட்டத்து யானையின் பேர்.

திணியார்கற் புடைமாதர் விதியால்வேட் டிடபதிதோ டிணைப்ப தல்லா, தணியார்மற் றொருகானை யென்செயினுங் கொள்ளாரவ் வாறே வாய்மை, தணியாமும் மதகரிகா கரிகளைவிட் டேழ்வழிக்கான் சார்ந்து தன்கை, மணியாரந் தக்கனுக்கே சேர்த்தடைந்தார்த் தனர்நறும்பூ மழைவா னோர். (சம)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அக்கண மதிநூ லமைச்சு மற்றெவரு மடிபணிந் தனர்மணி யானத், திக்கெனு மொழிநற் றூய்தனை யிருவி யெங்களே ரம்பனைப் பாவித், தக்கனம் புரசைக் களிறுகைத் தளவி றனைசூழ் தரமினூர் நடிப்பச், சொக்கெறி தகைசா னகர்வலம் போந்து துலங்கரி யணையிருந் தாண்டான். [சக]

பொங்குள மகிழ்விற் றக்கனு நிருபன் புவிபுரந் திடுபொழு தொருநா, ளோங்காரப் பெருமான் வீரசே னப்பே ரரசன்றன் கனவில்வந் திறைவ, மங்கையிற் சிறந்த நின்மக னென்பாற் றக்கனை மணந்திடப் பெறுவ, ளங்கனி மனத்தோ டிருதி யெனலு மவ்வணந் சுதையைநல் கினனால். [சஉ]

என்னையா ளுடைய கணேசனின் னருளா லிசைமிகு தக்கமன் னவற்கு, நன்னர்செய் பிரகற் பானுவென் றுதித்தா னற்றவத் தாலவ னிளவல், பன்னருங் கட்க தானவற் குதித்த பாலகன் சுபாலனு மவன்சேய், துன்னலர்ச் செறுத்தா ளெதாகா னவற்குத் தோன்றினான் வபுத்திரத் தன்னே ()

அத்தகு வபுத்தி ரத்தனு மிறைவற் கணிமிகச் சிறந்தநந் தனனுஞ், சித்திர சேனன் பிறந்தன னவற்குத் திறமலி வீமநீ யுதித்தாய், பத்தியிற் சிறந்த நினதுமுன் னுன பார்த்திவ ருவரும் பரிவி, னித்தநின் மலனுங் கணபதி பூசை நியதியி னடவிநன் கடைந்தார். [சச]

ஆதலிற் பணிவோர்க் கருள்புரி தடக்கை யைந்துடை யண்ணறன் பூசை, கோதறப் புரிதி முற்றுறு நினது கருத்தெனக் கூறியம் முனிவன், வேதமீ ரிரண்டு மளப்பரி தான விமலனே காக்கர மனுவை, யோதின னரசன் செவிக்கமீ தெண்ணு முறைமையு முணர்த்தியே யிப்பால், [சரு]

கோசிக முனிவன் விடைகொடு வீமக் குரிசிறன் னகரடைந் தகன்ற, காசினி வியப்பத் தக்கனுன் முன்னர்க் கண்டிடு கோயில்சென் றோர்போட், டசனை நினைந்தே காக்கர மனுவை யெண்ணியத் தேவனின் னருளான், மாசில்பொன் வடிவத் தொருமகப் பயந்தான் மன்னவ ரனைவரும் வழுத்த. ()

உருக்குபொன் னிறத்த வடிவொடு முதித்த வுயர்தவப் புதல்வனை வீம, னுருக்குமாங் கதனென் றழைத்தனன் மகனு மொளிவளர் பிறையென

வளர்ந்தான், றிருக்கிலம் மகற்கோர் சிறந்தவோ ரையினிற் றிருவளர் தன் றிரு முடியை, மருக்கமழ் மாலை மணியொடு சூட்டி வழங்கினன் புவியர சாட்சி. [சுஎ]

தன்னர சுரிமை நந்தனற் களித்த தாரபதி பாகதி விழைவின், முன்ன வன் மலர்த்தா ணினைந்தவன் மனுவை முறைப்படி செபித்தினி திருந்தான், பொன்னிற வுருக்கு மாங்கதன் றனது பிதாவினும் புழைக்கைமா முகவ, னன்னையை யனையான் பதத்தன்பு செலுத்தி யகலிட மகிழ்வுறப் புரந்தான்.

வீமனுபாசனைப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (யி) க்குத்திருவிருத்தம். [சாக].

உருக்குமாங்கதனுபாசனைப்படலம்,

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

விண்ணவர் மதிக்கும் விற்றழும் புழுகை வீமமன் விநாயகர் பூசை, ப ண்ணினன் மகப்பே றடைந்ததின் னதுவாம் பகருமக் கொற்றவன் மைந்தன் புண்ணிய வொழுக்க நெறியின னுருக்கு மாங்கதன் புகர்முகத் திறைபா, லுண்ணிறை பேரன் புடையவன் கதிபெற் றுய்ந்தவா றினியெடுத் துரை ப்பாம். [க]

இன்னண முருக்கு மாங்கத விறைவ னிறைமைநன் கியற்றுநா ளொரு நாட், பன்னுபன் மிருக மாரணி யத்துப் பயிரழிக் கின்றவா றறிந்து, துன் னுதா னையினோ டங்கடுத் தெதிர்த்த $சூகர மாதிபல் விலங்கின், மன்னுயிர் செகுப்பான் கவிமுனி வனத்து வந்தன னீர்விடாய் தணிப்பான். (உ)

அனையமா முனிநீ ராடமுன் னேக வவன்மனை முகுந்தைமற் றுங்கே, தனிமையா யிருந்தாள் பா§லமு திரந்தான் றன்னெறி னேக்கிமிக் காவன், மனநினை நிகர்க்கும் வனப்புடை யவரிம் மண்ணினும் விண்ணினுங்காணே, னெனவருந் தனங்கன் கணையிற விறைவ னெனக்கலந் தின்பளித் திடுதி.

என்றுகை வளைக ணழுவநுண் ணிடைசே ரெழில்கலை சரியமெய் ப சப்ப, நின்றன ளவள்பால் விரகநோய் வளரு நிலைமைகண் டிறைவன்மா *னி னியே, மன்றவன் பனையோ ரிறைப்பொழு தேனு மருவியின் புறுதனல் ல றமா, மன்றிய மறைய னுயர்குல மகளை யணைந்திடன் முறையல வின்னும்.

$ சூகரமாதிபல்விலங்கு- பன்றிமுதலிய பற்பல மிருகங்கள்.

§ அமுது- நீர்.

* மானினி- பெண்.

கரிமுகக் கடவுண் மலரடிப் பூசை கருதியா னெரிமுனர் வேட்ட, வரி வையை யலதோ ரரிவையை விரும்பே னென்னவா டவனா கல்லாரோ, புரி தன்முன் னுகங்க ளிரண்டினும் விதியாப் போதனே தவினினை வலிந்தேன், பரிவினெற் புணர்தி மறுக்கின்வெஞ் சாபம் பகர்வலென் றவற்றழு வி னளால். [௫]

கற்பழி மடவார் கருதவா வினுக்குக் கரையில வேயெனும் பெரியோர், சொற்பிற ழாமை யறிந்தன னெனமன் றோகையை வீழ்த்தவன் னவளும், பொற்புயர் வேந்தே குட்டநோ யுனக்குப் பொருந்துக வெனவது பொருந் த, வெற்புறழ் புயத்தான் வெட்கிநீண் டைங்கை விமலனை நினைந்திது வி ளம்பும். [௬]

அடியனின் பணிசற் றுயினும் பிழைத்தே னலனறி யாதியற் றிடினு ங், கடியவி ழிதழி முடிமிசை மிலையுங கணேசனே பிறன்மனை விழை தல், கொடிதென மறைக ணொடிதுரைத் திடலுட் கொண்டனை நீவிது தோள் பற்றும், பிடியன மாது முயக்கநீக் குநலாற் பெரும்பிணி யடைந லோ பேறே. (௭)

என்றொரு §வடத்தி னருகுற்றான் வேட்டைக் குடன்வந்தா ரிறைவ னைக் காணு, தொன்றனு ரொடுதம் பதிபுக மன்ன னுறுபிணி கணுக றரு ம, மன்றென வென்றா ழெண்ணினன் போன்மே லளக்கராழ்ந் திடவிருட் டொகுதி, துன்றிய வைங்கைக் கடவுள்செம் பாதத் துணைமலர்க் கன்பிலா ருளம்போல். (அ)

சாலவெம் பசியுந் தாகமும் வருந்தத் தளர்ந்திராப் பொழுதொழித் தர சன், காலையி னித்தக் கடன்முழு தாற்றிக் கவிந்தவா னிழலிருந் தனனவ், வேலையின் வேலை முளைத்தெழு கதிர்போல் விசும்பிடை நாரதன் றோன்ற, வோலமா தவவெம் பிணிதவிர் மருந்தே யோலநிற் கோலமென் றிரந்தான்.

மண்டல மதிக்கு மன்னவற் கருள்வான் மாசிலா முனிவர னடுத்துப், புண்டவழ் பெருநோய் வரவறிந் தொன்னார்ப் பொருபுயத் திறைவநின் னுட் டிற், கொண்டல்கண் படுக்கு மதுமலர்ச் சோலை குலவுமோர் கதம்பமா நக ரிற், கண்டன னின்றோ ரதிசய மதனைக்கழறுதுங் கருத்துறக் கேட்டி. (ம)

அன்னதொன் னகரத் தொருதனி வயிற்சிந் தாமணி விநாயக நாமம், பன்னுமோர் மூர்த்தி யுளரவர் திருமுன் கணேசகுண் டப்பெயர் பகருந், தன்னிகர் தருமோர் தீர்த்தமுண் டதன்பாற் சான்றொரு ருத்திரன் விருத்த,

§ வடம் - ஆலமரம்.

னின்னல்செய் §தொழுநோய்ப் புரத்தினன் றீர்த்த யாததினைக் கேகுவான் போந்து (கக)

படிந்தெழில் விகடர் திருவுருவடைந்தப் பண்ணவ னுலகடைந் தனனத், தடம்படிந் தேரம் பணிவழி படினின் றனக்குறு பிணியொடு வினையுங், கடந்திடு மிதனை யலதொரு மருந்து காண்கிலே னெனவுரைத் தாங்கே, நெடுங்கைமா முகனை வழிபட முதலி னிறுவினேன் பெறுவா நிகழ்த்தும்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஐந்தெனும் புலனை வென்றோ ராற்றலை யளக்க வேண்டி
னிந்திரன் றானே சாலுங் கரியென விம்ப ரும்பர்
முந்தைநாண் முதல வாக மொழிகுவ ரன்றோ வன்ன
விந்திர னகலி கைப்பா லிழிசெயல் புரிந்த வெல்லை. [டுந]

அன்னவ கொழுந னான கவுதம னறைசா பத்தாற்
பொன்னகர்க் கிறைமெய்ம் முற்றும் பொருந்தலுற் றனபல் யோனி
பன்னொரு யோனி யெல்லாப் படையும் விளைதத லுண்மை
மின்னிடை யாரோ ரல்குல் வெளிப்படா துடையாற் போர்த்தும். [டுச]

ஆடவர் தமைநேர் காணி னஞ்சுவ ரொளிப்ப ரென்றூற்
பீடுயர் விண்ணோர் வேந்தன் பிறங்குடன் முழுதும் யோனிக்
காடதா வுரினென் செய்வான் கலங்கிப்பொன் மலையின் பாங்கோர்
தாடுதை கமல வாவி சார்ந்தொளித் திருந்தா னிப்பால். [டுரு]

அனைத்தையு மமரர் கேட்டங் கறைகுவர் தத்த முள்ளே
தினைத்துணை யேனுந் தோரா தொருமகன் பிறனில் சேரி
னெனைத்துணை வலியுள் ளோனு யிருப்பினும் பயனென் னுரு
நினைத்தலுக் கரிய துன்ப நெடிதுவந் துறுமே யென்னு. [டுசு]

ஆன்றவ ரறையும் வாய்மைக் கமரர்கோ னடையுந் துன்பே
சான்றெனக் குழுமித் தங்க டனிப்பெருங் குரவற் சார்ந்து
வான்றனை நீத்து நோற்கு மாதவக் கவுத மன்பா
லேன்றுமன் னவன்றன் புன்மை யிசைத்தன ரிரக்கந் தோன்ற. (கஎ)

விண்ணவர் தாழ்மை யோடும் விளம்பல்கேட் டுரவோன் செப்பும்
புண்ணிய விரோதன் றூர்த்தன் பொய்யன்வெஞ் சினத்த னெற்றித்
கண்ணனைக் காட்டா சானை யிகழ்பவன் கள்வன் மீது
னுன்னுவோன் கொலைஞன் காமி யுலோபன்கள் ளருந்து வோனே. (கஅ)

§ தொழுநோய்ப்புரத்தினன்- குட்டவியாதிபற்றிய சரீரத்தான்.

இன்னபா தகக்கு மூங்கட் கிரங்கறீ தென்ன வேதம்
பன்னலிற் புருகூ தற்கியாம் பரிவுற லொல்லா தேனுந்
துன்னுமோர் பதகற் கான்றோர் தொகையிரந் திடினன் செய்த
வுன்னனன் றெனலா லன்றுற் குதவுவன் புலவீ றொன்று. (௧௯)

தேவர்தங் குரவற் கூவி யவனிருஞ் செவிப்பு லத்தே
தாவிலா றெழுத்தை யோதிச் செபிமுறை சாற்றி வானோர்
காவலற் குபதே சிப்பின் யோனிக ளனைத்துங் கண்ணு
மேவுமுன் னையினு மெல்லா மேன்மையும் விளங்க வாழ்வன். (௨௰)

என்றிமை யவனைப் போக்கி யிருந்தவ னிருந்தான் விண்ணோர்
பொன்றிகழ் மலைப்பாங் கோங்கு ‡புட்கர வாவி நண்ணிக்
குன்றிற கரிந்தான் றன்னைக் கூவலுங் குளத்தை நீத்து
நன்றருள் குரவன் முன்னு கண்டல னண்ணி னுறல். (௨௧)

நண்ணினு னுடலி யாவு நணுகுபெண் குறிகள் காணூஉ
விண்ணினு ரருவ ருத்தார் வேள்விமன் செவியி லாசா
னண்ணலார் மனுவை யோத வல்குலத் தனையு நோக்குங்
கண்ணவா யினகண் டியாருங் களித்தன ரமரர் கோமான். (௨௨)

தேவர்பல் லோரைப் போக்கிச் சிலர்தனைச் சூழ்ந்து போதப்
பூவலர் பொதும்பர் சூழ்பொற் பொகுட்டுறை வாவி நீங்கிக்
காவளம் பெருகி யோங்குங் கதம்பமா வனத்துட் புக்கு
மாவெழில் வாய்ந்த பொய்கை வண்கரை மருங்கு நண்ணி. [௨௩]

பளிக்கினே ரால யத்தைப் பதனுற நிருமித் தார்ந்த
வொளிக்கொளி யாகின் றானை யொருவனை யிருதா ளானைக்
களிக்கய மதமுன் றானைக் கணிப்பினு லறியொ ணானை
யளிக்கரு ணைங்கை யானை யவண்பிர திட்டை செய்து. [௨௪]

வாசமஞ் சனமுன் னுன வான்பொருள் பலவுங் கொண்டு
பூசனை யாற்றி வஞ்சப் புலத்துளம் புகாத டக்கி
யாசறு சடக்க ரத்தை யாண்டொரா யிரஞ்செ பித்தா
னாசலி லுழல்ப வத்தை யொழித்தருள் சுமுகர் தோன்ற. [௨௫]

கண்டட னமரர் கோமான் கடிதெழுந் தச்ச மன்பு
மண்டிட வணங்கி வாய்மெய் மனமொன்ற னூற்றுப் பத்தெண்

‡ புட்கரவாவி-தாமரைத்தடாகம்.

தொண்டர்கண் களுநீர் வாரக் *குடந்தமிட் டசைந்து பாடத்
தொண்டரு ருழுவலன்பிற் றுவக்குறும் பிரானி ரங்கி. (௨௬)

பொன்னகர்க் கிறைவ வேட்ட புகலுதி யெனலும் விண்ணுண்
மன்னவ னுயிர்க்கெ லாமுன் மலரடி சரண மென்னப்
புன்றுயா மறைக ளென்ன பதம்பணிந் தேத்தி னேனுச்
கின்னினிக் குறைபொன் றில்லை யெனினுமெந் தேவ தேவே. (௨௭)

இணையடிக் குழுவ லன்பென் றென்றும்பா லித்தல் வேண்டு
மூணார்க்காற் கரிதா யிங்க ணுளிருன தாருவைச் சிந்தா
மணிவிநா யகனென் றியாண்டும் யாவருவழுத்தல் வேண்டுங்
குணனருள் பதவி நான்கு மவர்க்குநீ கொடுத்தல் வேண்டும். (௨௮)

இன்னதே யெளியேன் வேண்டத் தக்கதென் றிரந்து நிற்ப
வன்னவா றருளி னுமென் றவ்வுருக் கரந்தா னெம்மான்
மின்னுபூந் தடம்ப டிந்து மீட்டுநம் பிரானுரைப் போற்றி
மன்னுவா னுலக நண்ணி வாழ்ந்தன னமரர் கோமான். (௨௯)

விரைசெய்தார் மார்ப வன்ன விமலனை வழிபா டாற்றிப்
புரைசெய்நோய் போக்கிப் பின்னும் பொருவறு வரமுங் கொள்கென்
றுரைசெய்மா தவன கன்று ளூங்குற்ற தமர்க ளோடுங்
கரைசெயா மகிழ்வின் மன்னன் கதம்பமா நகரஞ் சென்றான். (௩௰)

ஆங்கமர்ந் தருள்செய் சிந்தா மணிவிநா யகனை யேந்தித்
தீங்கறு தீர்த்தந் தோயத் தெறுதொழு நோய்போய் முன்போ
லோங்குதே சினனு ளுன்பின் னும்பன்மா முகப்பி ரானைப்
பாங்கொடு பூசை யாற்றிப் பல்பொருண் மறையோர்க் கீய்ந்தான். (௩௧)

மன்னவ னின்ன வண்ண மகிழ்வுட னிருக்கு மேல்வை
மின்னெறி விமானத் தோடங் கருங்கண நாதர் மேவி
முன்னவ னுவப்பப் பூசை முடித்தனை யதனுன் மன்னு
வின்னபொன் மானத் தேறென் றியம்பமன் பணிந்தி யம்பும். (௩௨)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதிநடு வந்தமிலான் மறைக ளாலு மளந்தறிய வொண்ணுதா னகிலாண் டத்துச், சோதியுரு வாய்நிறைவா னனுக்க டம்பிற் றாயவனு வாயுறைவான் றன்பின் பில்லா, னேதுமிலான் யாவுமுளான் காட்சிக் கெய்து மெழிலுருவு மருவமுளா னிரண்டு நீத்த, போதனிறை யானந்த னுலக மெய்தப் புன்மையே னென்னதவம் புரிந்துற்றேன். (௩௩)

* குடந்தமிடல்- நாலுவிரன்முடக்கிப்பெருவிரனிறுத்தி நெஞ்சினிடைவைத்து நின்றுடுமோர் கூத்து.

உம்மையினு னுனுற்றுபெருந் தவத்தி னுனு மோதருமித் தடமபடிந் த வுதுதி யானு, மிம்மைநும்மைக் கண்டுதொழ வெளிது பெற்றே னெனை ப்பெறுதற் கெத்தனையோ கோடி காலஞ், செம்மையறம் புரிந்துபெற்று வ ளர்த்த தாதை செழுமுலைப்பான் மடிமிசைவைத் தருத்து மன்னை, தம்மை யொளித் தொளிருமணி விமானந் தன்னிற் சார்ந்திடுத றகவாமோ தமியே னென்றான். (௩௪)

நலன்புரியுங் கணநாத ரிவ்வா றோது நரபதியை நோக்கியன்பி னவில லுற்றார், நலப்பொருவு திணிதோளா யுனையின் றோனை யுண்மையொடு தி யானித்தவ் வுதகந் தாடிற், புலன்புகுதாப் புலமுடைய ராயன் னேரும் பொழிமதவா ரணமுகவன் புனித தெய்வந், தலன்புகுவா ருடனெனவாங் கவனு மன்னோர் தமைநினைந்து தடங்குடைந்தான் றகவி னன்றே. (௩௫)

அவ்வரையன் றனைநேடி யடைந்த வீர ரனைவருமத் தடமூழ்கி யமல ராகத், தெவ்வடுவேற் படையரையன் விமான மீது சேனையொடு மொருங் கேறிச் சேனை யாவித், தவ்வளிமா மதில்சூழ்தன் னகரஞ் சார்ந்து தன்பல னைத் தந்தைதாய் தமர்க ளாதி, யொவ்வொருவர் களும்பெறவே பகுத்தா னவ்வா றுறவினர்கட் கியந்தனரவ் வீரர் தாமும். (௩௬)

திங்கண்முக நங்கைசித்தி புத்தி கேள்வன் றிருவருளா லொளிபரவு மணிவி மானங், †கங்கிலவா யங்குவர வீம ருதி கடிநகர்வா ழனைவோருங் கடிதி னேறிப், பொங்கொளிசேர் பிங்கலநேர் நிறந்த னுன புகழுருக்கு மாங்கதநூ பால னோடுந், துங்கமறை துதித்திளைப்ப வோங்கு மைங்கைச் சுமுகருல கடைந்தின்பந் துன்னி வாழ்ந்தார். [௩௭]

உருக்குமாங்கதனுபாசனைப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் ௰௧-க்குத்திருவிருத்தம் (௪௱௩௮)

கிருச்சமதனுபாசனைப்படலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மன்னர்மன் னுருக்கு மாங்கதன் சிந்தா மணியெனு மைங்கரக் கடவுள், பொன்னடி வணங்கி யிருமுது குரவ ராதியர் புரத்துளா ரெவருந், தன்னொ டு போத முன்னவ னுலகஞ் சார்ந்ததின் னதுகிருச் சமத, னென்னையுந் தடு த்தாள் விநாயகர் மலர்த்தா ளேத்திய திறமினி நவில்வாம். (௧)

† கங்கிலவாய்- அளவிறந்ததாய்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்றுருக்கு மாங்கதற்குச் சாப மீந்த முகுந்தையவ னெழிலுருவை முன்னி முன்னி, யுன்னரிய துயர்க்காமக் கடலின் மூழ்கி யுளமெலிந்தா ளஃதறிந்த வும்பர் நாட்டு, மன்றுருக்கு மாங்கதன்போல் வடிவு கொண்டம் மாதினொடு கலந்தினைந்து வான்மீண் டானா, லனையளு முளந்தழைந் தாள் கருவுங் கொண்டா ளீரிரண்டு திங்களிலோர் மகவை யீன்றாள். [௨]

உருச்சமஞ்சொல் லரியவளா முகுந்தை மைந்த னுயர்மதன்போல் விளங்குமுனி வரனுந் தாதை, கிருச்சமத னெனமகற்கோர் நாம மிட்டான் கிளர்மதிபோ லவன்வளர்ந்து நூல்கள் கற்று, மருட்சியொழித் தருள்செய்க ணானந்த வாவென் மாமனுவைத் தாதைமகிழ்ந் தோத வெண்ணித், தெருட்சியுறீஇச் சாபானுக் கிரகஞ் செய்யுந் திறலுடைய னுலகிற் சிறப்புற் றானால். (௩)

இன்னவனாங் கிருச்சமதன் வாழ்நா ளோர்நா ளெழிலிதவ ழெயிலோங்கு மகத நாட்டு, மன்னவனாஞ் சூரனென்போன் பிதிர்கட் கூட்ட வசிட்டாதி முனிவர்தமை வருவித் தானாக, குன்னரிய தவக்கிருச்ச மதற்கு மற்றை யுறுவர்க்குங் *கலைமலைவு வலிதி னானக, வன்னவரு ளத்திரியா மிருடி †வேறற் காற்றிலனாய்க் கவிமகளை யழன்று நோக்கி. [௪]

அந்தணன்கா தலனலைநீ யரசன் றன்ற லாதலினிச் சவைக்கருக னன்றே தென்றான், சந்தமுறு வெண்பொடிபூத் தொளிர்மெய் தாங்குந் தவக்கிருச்ச மதன்படிவர் தமைநேர் நோக்கி, யிந்தவவை யிடத்தெனைநீ ரவம தித்தீ ரிதுதீர றுமைமாய்ப்ப னெனக்க னன்கி, சிந்தவுருத் தாங்க கன்று கடிதுதன்றுச் சிரமமடைந் தனைபாற்றன சென்மங் கேளா. (௫)

அரசனுக்குந் தான்பிறந்த வரலா றெல்லா மறிந்தனையைச் சினந்துவனத் திலந்தை யாதி, §விரகிலியே யெனக்கொடிய சாப மிட்டான் வெகுண்டவளு முன்றனக்கோர் மகன்வெய் யோனாய், வருமெனவே வலித்திலந்தை யானா ளென்பு வளர்கிருச்ச மதன்றானார் மண்ணாண் மன்னன், றருபுதல்வ னாயினனென் றுடங்கொ ணாத சஞ்சலவம் பரம்படிந்து தளரு மேலவை. (௬)

---

* கலைமலைவு—கல்விப்போர்

† வேறற்காற்றிலனாய்—வெல்லவலியில்லாதவனாய்

§ விரகு—புத்தி

சிந்துரமா முகப்பெருமா னருளாற் றேவேந் திரற்குதித்தா யெனக்
காய வாணி யொன்று, வந்ததுகேட் டவ்வறவோன் மனத்தி னுரு மம்மர்சி
றி தொழித்தலனை வருவித் திட்ட, வசுதவனத் தினைநீத்து வழாது வேள்
வி யாற்றுமருந் தவரீட்ட மடர்ந்த செந்தே, னுந்துபொழி லோங்கயலோர்
வனம்புக் காங்கே யுனுற்றுதவ னைவருநல் வரவேற றய்பப. (எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அக்கிருச்ச மதனரிய தவம்புரிவா னணியாரவ வனததி னோர்பாற்
புக்குவலக் காற்பெரிய விரலைநிலத தூன்றியைந்து புலன்க ளாறுந்
திக்கெவையுஞ் செலுமுளத்தை நிலைநிறுவி மூலமென நிகழா தாரச்
சக்கரநான் கிறந்மூன்று கோண்வடி வாந தனிப்பீட தன்னின் மன்னே()

தேசுறுமோங் காரகண் பதிதன்னை யெழுந்தருளச் செய்தன் பென்னுங்
காசகன்மஞ் சனமாட்டிப் பத்திபெனுங் குளிராரக் களபம வேய்ந்து
பாசமறுத் தமுதமுறக் கனுரு, வாவென்னப் பல்சான் றோரும்,
பேசுமனுத தியானமதே மலராகத் திருவடியிற பிறங்கச் சாததி. (கூ)

$அன்னமய முதற்கோச மைந்தையுநி வேதனஞ்செய் தகங்கா ரத்தைத்
துன்னறிய தூபமுமா வபிமானந் தீபமுமாத துலங்கக் கோட்டி
மன்னு†பனை முதலைந்து சத்தியைய வத்திசுற்றி வாக்கு மெய்யு
முன்னுளமு மொன்றுறமு வைந்தெழுமா யிரவருட முபாசித் தானல்[௰]

வேறு.

ஞானமே கிரியை யென்ன நவிறரு சித்தி புத்தி
மானனு ரிருவர் பக்க மருவமா வதளங் கொண்டு
பானிற வயமா வூர்ந்து பாறகாத் தொகையோர் கோடி
யானதோ ருருவுற் றுற்போ லறிவனமுன் னெமமா னின்றன். (கய)

கவிமகன் கண்க ளாரக் கண்டுதாழ்ந் தெழுந்து சூழ்ந்து
குவிகாஞ் சிரமீ தேற நின்றுபல் புகழ்கொண் டாடத்
தவவலி யுடையோய் வேட்ட சாற்றுதி தருது மென்னுப்
பவவினை தவிர்த்தா ளீச னருளனும படிவர் கோமான் [௰௨]

$ அன்னமயமுதற் கோசமைந்து என்பது- அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என ஐந்துகோசங்களாம்.

† பனைமுதலைந்து சத்தி என்பது - அநுக்கிரகிக்கும்பராசக்தி, திரோபவிக்கும் ஆதிசக்தி, சங்கரிக்கும இச்சாசத்தி, இரக்ஷிக்கும் ஞானசத்தி, சிருஷ்டிக்கும் கிரியாசத்தி எனப்பஞ்சசத்திகளாம்.

உரையுணர் விறந்து நின்ற வொருபொரு ளாய நின்றன்
விரைமலர்த் தாள்கண் டேற்கு வேண்டுமோர் பொருள்வே றுண்டே
திரைபுனற் கங்கை வேணிச் செம்மலே வேண்டற் பாற்றன்
மரைபுரை பாதத் தன்பே யெனமிக வழுத்த லுற்றான்   (௰௩)

கலிப்பா.

கூற்றுவனைப் போன்று கொடுமை பலபுரியுந்
தேற்றமிலா வைவர் சிறுநெறியிற் சேராதம்
மாற்றலரை வென்று வரோதயனே நின்றாட்குப்
போற்றும் புரிவருள்வான் புண்ணியனே நீயிரங்காய்   [௰௪]

ஈரானை போர்செய் யிடையின் மசகமெனக்
கூரார் புலவேடர் கொள்போரி னையாமற்
பாராதி யண்டப் பரப்பாவாய் நின்றாட்குச்
சீரார் பரிவருள்வான் செல்வனே நீயிரங்காய்   (௰௫)

மத்தினுறு வெண்டயிர்போன் மாழ்கி மனங்கலங்க
நித்தியமு மென்னை நெருக்கும் புலவேடர்
தத்தகனின் மீள்வான் றயாபரனே நின்றாட்குப்
பத்திமிக வருள்வான் பண்ணவனே நீயிரங்காய்   [௰௬]

பையா ரகலல்குற் பைந்தொடியார் பாழ்முயக்கிற்
பொய்யாற் ‡குறளையினாற் பொன்றேட மூட்டுவிக்கு
மையார் புலவேடர் வஞ்சனைதீர்ந் துன்னடிக்குச்
செய்யார்வ நன்கருள்வான் சிற்பரனே நீயிரங்காய்.   [௰௭]

ஐயலரை வாளி யனங்கன் விடுத்தடர்காற்
றையலரை நீரே தமியேற்குத் தஞ்சமென்பேன்
பொய்யலரை யாளும் புனிதா நினதடிக்கு
கையலறு மன்பருள்வா னுதனே நீயிரங்காய்.   (௰௮)

தூண்டி லுறுதசைமீன் றுய்த்திறத்தல் கண்டுமனங்
காண்டகைய மாதர் †கவிரிதழ்வாய்த் தேனுகர்வை
வேண்டல் பொருளா மெலிவெய்தும் புன்மதிவிட்
டாண்டகையிற் போற்ற வடியேற் கருளாயே.   [௰௯]

---

‡ குறளை—கோட்சொல்லல்
† கவிர்—முண் முருக்கு

விட்டி லொளியால் விளிதறனை யோர்ந்துமனம்
பொட்டுமையு மிட்டுப் புனைந்துமால் செய்மகளிர்
கட்டழகை நோக்கிக் கவர்நெறிசெல் கட்புனல்விட்
டிட்டநின் றாட்செய்த வெளியேற் கருளாயே. [௨௰]

தும்பி பரிசத்தாற் றொலைவதனை யோர்ந்துமனம்
‡வம்பிறுகுங் கொங்கை மடவார்தோ டோய்ந்துதுன்ப
வம்பரத்தின் மூழ்கி யலமரா துன்றனை
நம்பு மறிவோங்க நாயேற் கருளாயே. (௨௧)

ஓசையான் மாய்த லுறு§மசுணங் கண்டுமனம்
பாசமார் வார்போற் பகர்நல்லா ரின்மொழியி
னேசமோர் காதி னெறிச்செல்லா துன்றிருத்தாட்
காசையா மாறிங் கயர்வேற் கருளாயே. [௨௨]

வாசனையாற் பூமருவி வண்டிறத்தல் கண்டுமனங்
காசிழைபூண் கொங்கைக் கனிமொழியார் சாந்தலங்கன்
மூசு மணநுகர்வை மூக்குவத்தல் கொள்ளாதுன்
றேசுறுதாள் வாழ்த்தச் சிறியேற் கருளாயே. (௨௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

என்னுப்பன் முறைபழிச்சுங் கிருச்சமதன் வேட்டவர மீய்ந்தே யோர்சேய், முன்னுநிற் குதிப்பனிசை பெருகவென வுருக்காந்தான் முதல்வனன்றோன், பின்னுமோர் கோயிலக்கா னத்தமைத்து வரதகண பதியென் பேரும், பன்னுநன் மூர்த்தியெழுந் தருள்வித்துப் பூசித்தான் பரிவு கூர்ந்தான். (௨௪)

கிருச்சமதனுபாசனைப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் [௰௨-க்கு] த்திருவிருத்தம். (சாசு௰௨)

விமலரூபாசனைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒருகிருச்ச மதமுனிவ னரியதவ நெடுநாளா யுஞற்றி வீடாப், பெருமையுறப் பெற்றமையிங் குரைத்தனைய பெரியதவன் றவத்துப் பெற்ற, திரிபுரன்வின் னவர்க்குறுகண் செயக்கொடியோன் றனையமரிற் செகுப்பான் வாசம், விரியிதழி விநாயகனை விமலரூபா சித்தசெயல் விளம்பு வோமால். (௧)

‡ வம்பு- முலைக்கச்சு
§ அசுணம்—கேகய்ப்புள்

இருணிறையா ணவத்தழுந்து *மியமானன் பரிபாகத் தெய்து மேல்வை, கருணைமதம் பொழிவேழ முகன்வரத்தா லந்தணருங் கடவு ளோரு, முருகுளத்தோ டடிவணங்கிப் பணிபுரிய வலிமகத்துக் குபாத்தி யாகிப், பெருமைமகத் துவமோங்க வாழ்ந்தனனக் கிருச்சமதப் பெரியோன் மன்னே. [உ]

இன்னவணங் கிருச்சமத முனிவரன்வாழ் வுறுநாளி லொருநா ளெம்மான், பொன்னடிதன் னுளத்திருத்திப் பன்னரிய யோகநெடும் போது ஞற்றிப், பின்னர்மிகக் கொடுநோக்கால் விழித்தனனந் நோக்கினின்றும் பிரளயத்துத், துன்னிடியும் வென்னிடவார்த் தோளிர்மேனி யோடொருசேய் தோன்றி னனால். [௩]

சுடர்நிலவு மழுங்கவரு தோன்றலைக் கண்டுமனந் துளங்கிப் பின்னந், திடவுடற்சேய் தனதுமக னெனவறிந்து பலியெனப்பேர் செப்பித் தானே,, தடமருசெம் மனுவையவன் செவிப்புகட்ட வன்னவனு மணியார் சோலை, தடமலியவ் வனத்திருந்து நந்திமுகத் தெந்தையிரு சரண முன்னு. (௪)

வேறு.

முந்திநோற் றிடலு மைங்கை மூர்த்திதண் ணளிபு ரிந்தே
யைந்திரு நூறு கோடி யாதவ ரொளிபோன் மெய்யுஞ்
சந்தமோ தகங்க ளிச்சி தாமரை மலர்சூ லஞ்சேர்
சுந்தரக் கரங்க ணான்குங் கொண்டவண் டோன்றி னின்றான். [௫]

இலகுபே ரொளிக்குக் கூசா திபமுகற் றொழுதெந் தாய்நின்
னிலையுண ராதேன் குற்ற நீக்கியா ளென்றான் முன்னோன்
மலையனின் னேன்பு வந்தேம் வழங்குதும் விழைந்த வென்னப்
பலிதொழு துலக மூன்றும் பரிப்பவும் வேட்ட யாவும் [௬]

வேறு.

முன்னு வுறவும் புருகூதன் முதலோர் தொழவு முன்னடிக்கன்
பென்நா ளினுமிக் கோங்கவுமூ மெய்தி யிறப்பின் வீடுறவு
நன்னு யகநல் கெனவிரப்ப நல்கிக் கரும்பொன் வெண்பொன்செம்
பொன்னு லியன்முப் புரமுநினைப் பொருந்த வளிப்பேம் புரக்குதியால். ()

பந்த வெயிலம் மூன்றினுக்கும் பகரு நாமந் திரிபுரமே
யெந்த விடத்துச் செலவெணினு மெண்ணு முன்ன ரோகல்செயுங்
கந்த விதழித் தொடைப்பெருமான் கடவோர் பாணத் தழிவெய்து
மந்த வமையந் தனினீவீ டடைந்தின் புறுவை யெனமறைந்தான். [அ]

* இயமானன்—ஆன்மா

இலகு மொருவெண் மருப்புடைய விறைவ னருளா லிவைபெற்றோன்
புலர்தன் முதன்முக் காலமுமேழ் புரவித் தேரோ னொடுபோர்செய்
யலகி லசுரர் தமைப்படையா லாக்கி நிலமுற் றடிப்படுத்தி
மலைவில் லவர்க்குத் தம்மரசு வழங்கிப் புரந்தா னெம்பரினும். (கூ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கொன்னவில் வடிவேல் குலவுசெங் கரத்துக் குரிசிலாம் பலியெனும் பெயரான், முன்னரும் வலிசேர் திந்திரன் பிரமன் முகுந்தன்வாழ் புரங்களு நிகரின், றென்னுமுப் புரங்கள் பெறலின்முப் புரனென் றியாவரு மியம்பவாழ்ந் தனனு, லன்னவன் மறந்துக் கரிமுத லமர ரஞ்சிமே ருவினொளித் திருந்து. [௰]

உன்னின சோகக் கரமனு வினைப்பல் லுருவினு லத்திற முணர்ந்தே, யென்னையாண் டிடுமே ரம்பன்முன் றோன்றி யினையலிர் நுமதுவாழ் வினுக்குத், துன்ன... புரிமுப் புரனையென் றிடற்காஞ் சூழ்ச்சிசெய் குதுமது காறு, மன்னிறை களந்தெம் மிறையைவாழ்க் துதுமென் றறைந்தொரு மறைய வனுகி. [௰க]

ஒருதிரி புரன்ற னவைசெல வவன்றாழ்ந் துயர்தவி சுதவிநீ யார்நின், வரவென வெனனு மறையவ னென்பேர் கலாதரன் வேட்டன வழங்க, திரிபுர நின்மாண் பென்றனர் கயிலைச் செம்மலார் பூசனை புரியும், பொருவில்சீர் சிந்தா மணிவிநா யகரைப் பெறும்பொருட் டுன்வயிற் போந்தேன். [ ]

என்றன னீதோ வரிதளித் திடுவ னெனச்சில தூதரை நோக்கி, மன்றநீர் கயிலை மலையடைந் திறைதாள் வழுத்தல்செய் தவருபா சிக்கு, நன்றருள் சிந்தா மணிவிநா யகரை நல்கவேண் டிடுமினல் காரேல், வென்றுமை யெங்கோன் கவருமென் றுரைத்து மீளுமென் றறைந்தனன்விடுத்தான் ( )

திரிபுரன் விடுத்த தூதர்தஞ் செயல்பின் செப்புவ லொளிந்துறை விபுதர், புரிசெய றெரிக்கிற் புவியொரு தேராப் பொழிகதிர் மதிகளி ருருளாப், பரிகளுன் மறையாப் பாகன்வே தாவாப் படைகணை யரிசிலை வரையா, வரிதினே னையவு மமைத்தெழிற் கயிலை யணிச்சின காக்கடை யமர்ந்தே [ ]

இறைஞ்சலு நோக்கி யெந்தைநுங் குறையென் னெனத்திரி புரன்செய லியாவு, மறைந்தன ருமது துயரற வவனை யடுதுமென் றுலயத்தடைகான், மறஞ்செறி மனத்துத் திரிபுரன் றூதர் வந்துதாழ்ந் தன்னவன் வகுத்த, திறஞ்சொல வமர்க்கே வருகென வருளிச் செய்துபுன் னகையுட னிப்பால். [௰௫]

புலர்தன்முதன் முக்காலமென்பது—காலை, உச்சி, மாலை, யெனமுக்காலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வான்றிரி புரத்தை யிந்நாள் வன்னிவாய் மடுக்கு மாறிங்
கான்றவோர் சூழ்ச்சி தன்னை யமைத்தருள் செயவென் முன்ன
மேன்றநின் றிருவி னேய்க வென்றொரு மருப்புத் தேவை
யூன்றிகழ் சூற்கைத் தேவை யுறவின்றித் தியானஞ் செய்ய. [௧௬]

வேண்டுவோர் முகத்தி னின்றும் வேழமா முகத்தோன் றேசார்
காண்டகு முகமோ ரைந்துங் கரங்களீ ரைந்து மெய்யிற்
பூண்டிகழ் தாளத் தாநும் பொற்பவந் துறக்கண் டீச
ஞண்டகாய் நீயார் பேரியா தறைகவென் றிடவே ரம்பன். [௧௭]

கறையணி மிடற்றீ றென்னைக் கருதிநீர் புரியார் வத்தும்
மறைதிகழ் முகத்து திக்தேன் வான்பெயர் கணேச னென்ன
வறைவ றொன் வேண்டு மென்ன வயலன்முப் புரனை வெல்லுந்
திறலுற நினது நாமந் திகழ்மறுப் பீசத தோடும். [௧௮]

எண்ணுமா றருள்க வென்று வியம்பலு மெழிற்க ணேச
னுண்ணிறை யன்பிற் றன்பேர்க் குரியமந் திரமும் பீச
வண்ணமு முறைப்பக் கேட்ட மறைமுதன் மண்ணும் விண்ணு
நண்ணுயல் கணங்கட் கிச னுதலி னினக்கு நாமம். [௧௯]

நனைசெய்தார் கணேச னென்ன நாதவென் றேத மக்கு
மனுவுரைத் தவற்குச் செய்கைம் மாறின்ன வழங்கு கின்ற
ஞனகநால் வேத மங்க மாகம புராண மாதி
புனிதநூ லோதின் யாரு முதனினைப் போற்றி வாழ்க. [௨௰]

உலககா ரியங்கண் முற்ற வுவணகே தனன்முன் னுன
புலவர்மா னிடர்க ணின்னை விதியின்முற் பூசை செய்க
தலையின்யா ரொனிறு நின்னைத் தாழ்ந்திடா தியற்று கன்மம்
பலவித விக்கி னத்திற் பாறலெய் திடுக வென்றான். (௨௧)

அன்னபோ தரிமுன் னுன வமரரு மிறைஞ்ச வேற்றெம்
முன்னவன் மறைந்தா னுக முப்புரன் றாதர் தங்கண்
மன்னவன் கழற்கா ளுழ்ந்து மலைமகள் கொழுநற் கெந்தா
யுன்னுரை யனைத்துஞ் சொற்று முவர்த்தவ னெப்பா னுசி. [௨௨]

காயரி கதறக் காயுஞ் சிம்புள்போற் கனன்றான் மீண்டே
மாயின மெனனுங் கண்க ளழலெழ விழித்தன் னேனம்
பாயமுப் புரமுங் காப்பா ராதிபல் படைஞ ரிங்ங
னேய்கவென் றழைத்தன் னுர்வந் திடுதல்கண் டமர்க்கெ ழுந்தான். [௨௩]

விறல்கொண்முப் புரனிவ் வாறு வெஞ்சமர்க் குறல்கேட் டீசன்
மறமலி வேற்கை வள்ளன் மாமுகன் றருமி லக்கன்
றிறமலி வீர னாதி சேனைநாற் புறமுஞ் சூழ
நிறமலி யிரதத் தெங்க ணிமலையோ டிவர்தல் செய்தான். [௨௪]

கடலென வியங்க ளார்ப்பக் கவரிவெண் டிரையிற் றுள்ளப்
படர்கொடி யகல்வா னார்ப்பப் பனிமதிக் குடைநி ழற்ற
விடையவன் சுரர மைத்த வியனெடுந் தேரூர்ந் தேய்தல்
கொடியமுப் புரமன் கண்டு கொதித்தம ராட லுற்றான். [௨௫]

மற்றைய வவுண வீரர் தனித்தனி வந்து சூழாச்
செற்றசே யாதி வீரர் தமமொடு செருந டாத்து
முற்றட விழுந்து வாளுண் முடிந்துவா னடுற் றாரால்
வெற்றிவெண் சங்க மார்த்தார் விமலர்தந் தானைவீரர். [௨௬]

எந்தைமுப் புரமன் றானை யாவையு முருக்க வன்னான்
சிந்தைநைந் திருகண் சேந்து திரிபுரங் களோநி னைப்ப
வந்தது பொருதற் கேற்ப மாயைகள் பலபு ரிந்தா
னந்தமா யையினால் விண்மண் ணடையவு மருசிற் றம்ம, [௨௭]

வந்தக னியற்று மெண்ணின் மாயையா வையும்வெந் நியிற்
பஞ்செனத் தொலைத்துப போது பணித்தான் பரமன் வானோ
ரஞ்சியண் டங்க ளெல்லா மனைக்கணந் தழிப்போய் நாயே
முஞ்சிடு மாறோர்ந் திம்முப் புரனையின் றொழித்தி யென்றார். [௨௮]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

துடியிடை யுமையு மவ்வணம் புரிவான் றொழுவா ரடியவர் துயரைக்
கடிகண பதிசன் மனுவையுச் சரித்துக் கனலுமிழ் முத்தலைச் சூலப்
படைவிட வதனைப் பார்த்திலர் பார்ந்தார் பார்த்திவ னோடுமுப் புரம்வெந்
திடுதலை வானந் தொந்துதுந் துமியு மிசைத்தன கணங்களார்த் தனவே. [ ]

வானவர் மலர்தூ வினர்விடு சூலம் வருமுனந் திரிபுர னென்னுந்
தானவ னமலன் மலரடி மருவித் தனிப்பர முத்தியிற் கலந்தான்
ஆனது முளரி யயன்முத லமரர் துயர்செய்முப் புரனைமாய்த் தமைக்காத்
தேனவி ழிதழி யாற்கொரு நாமந் திரிபுராந் தகனென விசைத்தார். [௩௰]

என்னையாண் டருளுஞ் சிவபரஞ் சுடரோ னிருங்கயி லாயமெற் படைந்து
தன்னடி வணங்குஞ் சநார்த்தன னாதி தானவர் பகைவரெல் லோர்க்கு
மன்னிய வரங்கள் கருளின னவரு மதியொரு மூன்றுளா னவிந்த
கன்னிமா மதியின் பூரணை தன்னிற் கவின்றரு விழாநடத் தினரால். [௯௧]

பொன்னுறை மார்ப னாதியர் முன்போற் பொற்பமர் தம்பதி புக்கார்
முன்னவ ரியற்று விழாவுறு தினத்தை மொழிகுவர் பாகுளி யெனவே
யன்னபா குளியி லவரவர் தகுதி யளவரன் பூசனை புரிவோர்
பன்னரு மிடர்தீரந் தரும்பெற்ற பயனும் பல்கிட வாழ்குவர் சதம். (௯௨)

விமலருபாசனைப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் [௰௯] க்குத்திருவிருத்தம். [௪௱௯௰௪]

சதுர்த்திவிரதப்படலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தமனியம் வெள்ளி யிரும்பினு முனமு தழங்கொயில் பொடிசெய விக
டர், விமலருக் குதவு சரிதமீ தன்ன விமலர்முன் றனைமணம் புரிவா,
ளுமையவ ளுவப்பின விநாயக சதுர்த்தி யுரைப்பினுங் கதியருள் விரத, மி
மமலை யனையன் றெரித்திட வறிந்தாங் கியற்றிய வகையினி மொழிவாம். [ ]

செக்கரஞ் சடையி லிளம்பிறை மிலைச்சுஞ் சிவபிரா னிடத்தமர் பவா
னி, தக்கன்மா மகளா யுதித்தவிற் பவஞ்சேர் தனுவொரீஇப் புனிதையா
மாறு, மிக்குய ரிமவான் புதல்வியென் பெயரின் மேவிய பொழுதுகங் கை
யையங், நக்கனுர் மணஞ்செய் முனந்தனை மணப்ப நாடிநூ டிருவுவ மதனில்.

தந்தைபா லதனை நவின்றொரு விரதஞ் சாற்றுக வெனவவை யனைய
ன், முந்துமா மயிலூர் முருகனுக் கிறைவன் மொழிந்தனன் ஞான்பது த
னது, புந்திதோன் றுதலு முவகைமிக் கோங்கிப் பொருவிறன் மகட்கது
புகல்வா, னந்துசீர் வெய்யோன் சிங்கம்வந் தெய்து நலமதிப் பூருவ பக்கம்.

நன்றுறு சதுர்த்தி யேகதந் தருக்கு நயந்தநா ளாயிருந் தனினு, லன்
றுவை கறையி னுற்றுறு கடன்க ளனைத்தையும் விதிவழி முடித்துப், பி
ன்றனி முதல்வற் காமபி டேகப் பெரும்பொருண் முதலிய வமைத்து, ம
ன்றவன் பொற்பூ சனைசெயின் மனத்து விழைவெலாம் வல்லைவந் துறு
மால்.

என்றன விரத நோற்றிடு முறையு மெழில்வளர் *மூர்த்தமொன் றாதி
நன்றரு ளோரா யிரம்வரை யமைத்தங் நாதனை வணங்கினும் பயனு
மன்றுனை செயமா தன்னநோன் பியற்ற வவாவுளேன் பொருளெலாந் தந்தா
யொன்றுற வருளி யென்னலு மிமவா னுமையைக் கூய்ப்பணித் தனனால்.

ஆட்டுதற் கமைந்த கங்கைநீ ராதி யடங்கலுங் கொணர்ந்தனர் சில்லோர்
சூட்டுதற் கமைந்த நொடைமல ராதி தொடுத்தன ராய்ந்தனர் சில்லோ
ரூட்டுதற் கமைந்த திருவமு தாதி யுகவிடச் சமைத்தனர் சில்லோர்
காட்டுதற் கமைந்த தூபதீ பாதி கவினுறத் திருத்தினர் சில்லோர். [சு]

மணிகளா லுலோக வகைகளாற் பூசை மண்டப மமைத்தனர் சில்லோ
ரணியுற வதனு ளொளிர்பணி நறும்பூ வலங்கல்க ளூற்றினர் சில்லோர்
திணியதாட் கமுகு விரிதலை யரம்பை தீஞ்சுவைக் கரும்புக ளிறுவிப்
பணைதரு தெங்கின் கனிகுலை பிறபல் பழங்குலை கோத்தனர் சில்லோர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இன்னவா றுமைய ரெல்லா மிருமபணி யியற்ற யார்க்கு
மன்னவான் கங்கை யாதி யருட்டிரு நீறு பூசிக்
†கன்னமா தியவா றங்கங் கவினுறல் ஓருத்தி ராக்க
மின்னியார்ந் திடவ ணிந்த மண்டப மேயி னாளால். [அ]

---

*மூர்த்தமொன்றாதி நன்றருளோராயிரம்வரை யமைத்தங்நாதனை வணங்கினும் பயன்—ஒருமூர்த்தம் அமைத்துப்பூசிப்போர் தனதானிய புத்திரபந்துவர்க்கங்களையும், இரண்டு மூர்த்தம் அமைத்துப் பூசிப்போர் அளவற்றகாரியசித்தியையு, மூன்றுமூர்த்தம் அமைத்துப்பூசிப்போர் மலைபோல நவரத்நங்களையும், நான்கு மூர்த்தம் அமைத்துப்பூசிப்போர் தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்களையும், ஐந்துமூர்த்தம் அமைத்துப்பூசிப்போர் ஏகச்சக்கராதிபதியாந் தன்மையையு, ஆறு மூர்த்தம் அமைத்துப் பூசிப்போர் சிருட்டியாதிமுத்தொழிலகட்குந் தலைமையையும், எழு, எட்டு, ஒன்பது, என்னும்மூர்த்தங்கள் அமைத்துப்பூசிப்போர் சருவஞ்ஞத்துவத்தையும், பத்துமூர்த்தம்அமைத்துப் பூசிப்போர் திரிகால ஞானத்தையும், பதினொரு மூர்த்தம் அமைத்துப்பூசிப்போர் ஏகாதசருத்திரர்கட்கும் அதிகாரத்தன்மையையும், பன்னிரண்டு மூர்த்தமுதல் நூற்றெட்டு மூர்த்தம் வரை அமைத்துப்பூசிப்போர் முற்கூறியவற்றிற்கு மேற்பட்ட பயன்களையும், ஆயிரம் மூர்த்தம் அமைத்துப்பூசிப்போர் மிகவுமேற்பட்ட பெரும்பயன்களையும் அடைவர்.

அன்றியும் ஏழு மூர்த்தம் அமைத்து மூன்று நாள் பூசிப்பினும், ஒன்பதுநாள்பூசிப்பினும், ஐந்துவருடம்வரை பூசிப்பினும், அந்தியகாலம்வரை பூசிப்பினும், ஒன்றற்கொன்று ஏற்றமானபயனையடைந்துவந்து கடைசியாய் விநாயகமூர்த்தியினது சாயுச்சிய பதவியையடைவர்.

இவற்றின் விவரம் விநாயகபுராணவிரிவிற்காண்க.

†கன்னமாதியாறங்கமாவன—காது, மார்பு, கை, தலை, தோள், கழுத்து, என்னும் இவை.

சிற்பநன் குணர்ந்த தேவ கம்மியன் செம்பொன் றன்னால்
விற்பொலிந் திடவ மைத்த விநாயக மூர்த்த மொன்றும்
பொற்பமண் ணாற்செய் மூர்த்த மொன்றுநூற் புலவோ ரொல்லா
மற்புதம் பொருந்தும் வண்ண மளித்தன னமலை யங்கை. [௯]

ஐந்துசுத் திகளு மாற்றி யங்கமை வேதி தன்னி
னந்தமி லரிசி தன்னை நலமுறப் பரப்பி மீது
சுந்தரத் துகில்வி ரித்துத் துன்னிழை சுற்றித் தேசு
சிந்துபொற் குடமு றுத்திச் சீதநீ ரதனுட் பெய்தாள். (௰)

தழைநறுந் †தளிரோ ரைந்துந் தயங்கொளி மணியோ ரைந்தும்
வழுவில்பொற் கும்பத் துள்ளே மருவுறச் சாத்தி யாரும்
விழையுமேந் திரத்தை வைந்து விளிவில்செம பொன்னிற் செய்த
வழகமை விம்பந் தன்னை யிருத்தினா ளார்வ மோங்க. [௰௧]

பீடுயர் பொற்பீ டத்திற் பிருதுவி மூர்த்தந் தன்னை
நீடவைத் தருகார் கங்கை யாதிநீர் நிறைபொற் கும்பத்
தேடவிழ் மலர்சந் தாதி யிட்டுமஞ் சனஞ்ச மைத்தாண்
மாடுபென் யணிகு யிற்றும் வட்டகை களினீர் வார்த்தே. (௰௨)

பகர்குசை நுனிநெல் லாவின் பாலெள்வெண் கடுகு பூசந்
திகழ்விறண் டெலம்பெய் தெணணர்க் கியங்கண்மந் திரந்தாக் கிப்பின்
புகர்முகத் திறைபூ சைக்காப் பூக்கடுய்த் தூப தீபந்
திகழுவித் தருக்கி யந்தா டிருமுகஞ் சென்னிக் கீய்ந்தாள். [௰௩]

மணமலி தயில முன்னும வர்க்கமஞ் சனத்தோ டாட்டி
யணிசெய்பொன் னுடை சாத்தி யுரோசனை ?பளித மாரந்
§தணியமான் மதஞ்சேர்த் தப்பித் தருமணிக் கலன்பொன் னாற்செய்
பணிநறு மலர்ப்பன் மாலை பாங்குற வெடுத்த ணிந்து (௰௪)

திருவடி முதலா *மங்க பூசனை சிறப்பி னாற்றிப்
பரிமளப் ?பச்சை யாதி பத்திரத் தருச்சித் தோவா

---

† தளிரைந்து—அத்தி, ஆல், அரசு, மா, நாவல், இத்தருககளின் தளிர்கள்.

* மணியைந்து—பச்சை, பவளம், வயிரம், பதுமராகம், மாணிககம் இவை.

? பளிதம்—கருப்பூரம்.

§ தணியவென்பது—தண்ணியவென்றதின் தொகுத்தல்விகாரம்.

* அங்கபூசனை—பாதம், முழந்தாள், தொடை, நிதம்பம், நாபி, வயிறு, இதையம் கண்டம், கழுத்தடி, தோள், உள்ளங்கை, நாசி, கண், காது, தந்தம், சிரம், இவ் அவயவங்களில் தனித்தனி பூசித்தல்.

? பச்சையாதி பத்திரங்கள்— மாசிப்பத்திரம், கரசராங்கனி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, துளசி, நாயுருவி, சிறுவழுதி, வன்னி, மந்தாரை, மரு, அலரி கோங்கு, வெள்ளெருக்கு, மருது, விஷ்ணுக்கிராந்தி, மாதுளை, சாதிமல்லி, கண்டல், தாழை, என்னும் இருபத்தொருவகையிலைகள்.

மருவுறு தூப தீபா சமனமர்க் கியம்வ ழங்கி
யொருமருப் புடையார்க் கின்ன வுண்டிக ளூட்டப் புக்காள். (௰௫)

இருதலூண் சுத்த வல்சி கிளர்ததி யமலை கீர
மருவுணுக் கடுகின் மூரன் மாணில வங்கப் பொம்மல்
கருநிற வெள்ளி னுண்டி கரும்படு கட்டிச் சொன்றி
யிரியலோ தனமுன் னான மிசைகள்சேந் தொளிரப் பூப்பு [௰௬]

மாசறு மிளகு காய மல்லிசீ ரகமு ழுந்து
தேசுறு மஞ்ச ளாதி செழும்பொருள் செறித்த மைத்த
பூசணி யாண பேழைப் புழுதிர் கனிகாய் தண்டு
பாசிலை கிழங்கி வற்று லட்டபா குகளா நேகம். [௰எ]

கருணைபல் வறைய லூறு காய்கனி துவைஞ வட்டுந்
திரடதி நெய்பா னீர்மோர் தேன்கருப் பிரதங் கட்டி
மருவற விளநீர் வெந்நீர் மாவெலு மிச்சை யாதி
தருமுதிர் சுவைப்ப முதந்தின் சாறுவா சனையார் தண்ணீர் (௰அ)

அலகறு வடைமென் றோசை யடைபொரி யுண்டை கஞ்ச
நொலையமா சக *அபூப **நுவணைதேன் குழலமு றுசகுப
பலவகை யாய சுண்டல் பயற்றொடு தெங்கங் காயு
முலைவில்சர்க் கரையுஞ் சேர்ந்த வுண்டைமோ தகம நேகம். (௰௯)

கட்டிசே ரரிசி நிம்பா கமைந்தபல் பருப்புக் கட்டி
பிட்டவல் கிருதத் தோடு பிணைந்தவுக காரி தித்திப்
புட்டதும் பரம்பை நாவ லுயர்தெங்கு வெள்ளி லாதி
மட்டறு கனிய நேகம் வாய்ந்தவெள் ளரிக்கா யற்றே. [உ௰]

இன்னபல் லுண்டி வர்க்க மியற்றுபல் கலங்க டம்மி
னன்னரிற் பெய்து நைவேத் தியமனு நவின்று செய்வித்
துன்னியங் கரத்தாற் சுத்த சலமெடுத் துதவி யாச
மன்னிய மாதி மூன்று மனக்களிப் பொடுவ ழங்கி. [உக]

வாசமெல் லிலைகா யாதி மணப்பொரு ளவையு நல்கித்
தேசொளி ரடுக்குத் தட்ட மாதிதீ பங்க ளோர்கோட்
டீசனுக் கெதிர்சு ழற்றி யெழிலாடி குடையே தோகை
மாசறு விசிறி யால வட்டம்வெண் கவரி காட்டி. [உஉ]

---

* அபூபம்—அப்பவருக்கம்.

** நுவணை—தினைமா.

மந்திர மாங்க ளுனுந் துவாவெனத் தியானஞ் செய்து
மந்திர புட்பஞ் சாத்தி வளமருள் சிய சாத
மந்திர மதினி னீராஞ் சனஞ்சுற்றி மனுவுக் கெல்லா
மந்திர மூர்த்தி யானை வலங்கொடு மலர்தருதாள் போற்றி. (உங.)

ஆறுற மேழுங் கொண்ட வறுகினை யிருபத் தொன்றாக்
கூறுமந் திரத்தி ரண்டாக் கூட்டித்தாண் மிசையர்ச் சித்து
வீறுறு பூசை யாற்றும் பலத்தையவ் விமலற்கீய்ந்தே
யூறினல் லுளத்தோ டோங்கு தியானமு முஞற்றி னாள்ல். (உச)

பழுத்தநே யத்த வர்க்குப் பதமல ரருளே ரம்பன்
விழுத்தகு மந்தி ரத்துள் விழுமிதா மூல மொன்று
றெழுத்தகத் தளித தும்ப வெண்ணினு ளுணவு றக்க
மொழித்தொரு மதியி னெல்லை யுற்றினுள் பூசை முன்போல். (உரு)

தருட்பணை மாதி யாவுந் தகவுற நடவிப் பொன்பூ
விருப்பொடு பலதா னங்கள் வேதியர்க் குவப்ப நல்கிச்
சுருப்பினந் துதையுங் கொன்றைத் தொடையனை யொளிரு மொற்றை
மருபனை யனுதி யானை மனத்துளே யொடுக்கிப் பின்னர். (உசு)

பெருகொளி பொன்னிற் செய்த பெட்பமர் மூர்த்தி தன்னைப்
பொருளொடு கொடுத்தா டங்கள் புரோகிதன் றனக்குப் பாச
மருளற மண்ணிற் செய்த மூர்த்தியை வரிசை யோடுந்
தெருளுற நீர்வாய்ச் சேர்த்தாள் சிவபா ஞேர்பாற் *கார்ந்தாள். [உஎ]

விருந்துற வினர்தம் மோடு மறுசுவை மிதவை யுண்டாங்
கிருந்தனள் பினரோ ரம்ப னின்னருள் பெறலா னம்பன்
முருந்துரு வுடைய ளான கங்கைக்கு முன்னர் நீலத்
திருந்துரு வுமையா டன்னைத் திருமணஞ் செய்தா னென்பர். [உஅ]

இன்னநல் விரதஞ் சந்தி ராங்கத னென்போன் கத்த
மன்னள ஞேற்று முத்தி மருவினர் மாற ஞேற்று
முன்னர ஞேக்கின் வெந்த மூரியா ருருப்பின் பெற்றுன்
பின்னரு மாற்கே சேயாய்ப் பிரத்திம னெனும்பேர் கொண்டு. [உகூ]

தன்னிக ரில்லா நம்பன் சடைமிசை வதிகின் றேம்பா
மென்னவுட் டருக்கி ஞேர்காற் சேடனேய்ந் திடனு மன்னுன்

* ளார்த்தாள்—கருநிறத்தினளாயிருந்த உமாதேவியாம்.

சென்னியா யிரம்பி ளப்பிற் சிதைவுறச் செய்தா னெம்மா
னன்னகா லையிற்ச துர்த்தி நோன்பவ னன்பி னோற்றான். [கூ0]

உரகமன் புரியு நோன்பிற் குவந்துவா முகத்தே வன்பா
திரமினின் சிரப்பி ளப்புச் சிரமொரா யிரங்க ளாக
வுரமொடு செருக்குஞ் சென்னி யொன்றைந்து சென்னி யாக
வொருதலை யாக நம்மையுவப்பச்செய் நோன்பா லென்றான் [கூக]

ஆதலாற் சேடன் சென்னி யாயிரங் கொண்டு பூமி
மீதுறத் தாங்க லுற்றான் விமலனைம் முகவே ணிக்கண்
மாதலை யைந்தோ டுற்றான் வளர்கண பதிய கட்டிற்
போதுட. தனமா யேக தலையொடு பொலிகின் றானல். (கூஉ.)

வானவர் தமக்கு மாறு பம்மர்நோ யிழைத்து வந்த
தானவ னை தாரு கனைத்தெறத் தனிவேற் கையா
றுனனன் மதம்பெய் யா ா யானனன் மலர்த்தா ளுன்னி
யூனமில் சடக்க ரத்தை யோதினான் சின்னாண் மன்னோ. [கூகூ]

முன்னவன் பின்ன வன்றன் முன்புறீஇ வரங்க ணல்கித்
தன்னரும் பரிய தான தனிமட லளித்தான் பின்னோ
னன்னவ னுருவங் கண்டாங் கனியறு கிலக்கங் கைக்கொண்
டுன்னரும் பூசை யாற்றி யுவப்பமோ தகங்க ளூட்டி. (கூச)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அன்னவற் கிலக்க விநாயக னெனப்பே ரறைந்தொரு மயூரமீ திவர்ந்து, துன்னருங் கொடிய தாருக னுயிரைத் தொலைத்திரும் புவனமத் தனையு, நன்னலம் பெருகக் க.த்தனன் சாமி நாதனிவ் விரதமேன் மையினை, யின்னமும் பகரின் விரியுமெண் ணிலர்நோற் றிருமையும் பெருமையுற் றனரால். (கூரு)

சதுர்த்தி விரதப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (0ச) க்குத்திருவிருத்தம். [ருஉ0கூ]

சங்கடசதுர்த்திப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

துதித்தல்செய் திடலில் லார்க்குத் துன்பினை விளைத்துந் தம்மைத்
துதித்தல்செய் குநருக் கின்பஞ் சுரந்துங்காப் பவன்ற னக்காஞ்
சதுர்த்தியின் விரத மேன்மை சாற்றினுஞ் சங்க டப்பேர்ச்
சதுர்த்தியின் விரத மன்னோ னளிணை பணிந்து சொல்வாம். [க]

தெண்டிரை நீர்சூழ் வைப்பிற் சிறந்தமத் தியதே யத்துக்
கொண்டல்கண் வளர வார்ந்த கொழுஞ்சுவை நறவ மாந்தி
*வண்டலெல் லினுமு ரன்று வண்டலுக் கியைந்து வான்றோய்
தண்டலை மலிநீண் மூதூர் சகத்திர புரியென் றொன்றால். [உ]

அன்னதொன் னகர்க்குச் சூர சேனன்வேற் றரையர்க் கெல்லா
மன்னன்மன் மதனை வென்ற வனப்பினான் வணங்கார் தம்மைத்
கொன்னவில் வேற்கு ணாவாக் கொடுப்பவன் பணிவார் தம்மை
யின்னலொன் றின்றிக் காப்போ னிசைதிசை முழுதுஞ் சேர்ப்போன். ()

இருநில னாளோர்நா ளிருள்வலி யிரத மான
வொருபெரு விமான மன்ன வூரிடை யிறங்கக் காணூஉப்
பொருவிலம் மானப் பாங்கர்ப் போந்தத னுப்பண் டேவேந்
திரன்வதிந் திடுத னோக்கிப் பற்பல முகமன் செப்பி. (ச)

போந்ததென் னெனவ லாரி புருசுண்டிப் பெயர்மே லோனை
வேந்தகாண் டற்கு வந்தேன் மீண்டங்குச் செல்வே னிவ்வூர்
நீந்தெல்லை தொழுநோ யுற்று நிகழ்பவத் தினனோர் நாய்க
னெய்ந்தகண் படலாற் செல்லா திழிந்ததிங் கெனது மானம், (ரு)

இழிந்தவிம் மான மைங்கை யிறைவன்சங் கடச துர்த்தி
வழங்குபூ சனைசெய் திவ்வூர் வதியுமற் றொருவ னன்மே
லெழுந்திடு மெனலு நன்றென் றியற்புரு சுண்டி யரச
செழுந்தவன் புரிநோன் பியாது தெரித்தரு ளெனத் தெரிப்பான். (சு)

தண்டக மெனவி யாருஞ் சாற்றுமோர் வனமுண் டாங்கே
விண்டழல் சிதற நோக்கும் வேடன்விப் பிரத நாமங்
கொண்டவ §னாற லைத்துண் கோளனோர் மடுப்பாங் கோர்நாட்
கண்டனன் புலன்க ளைந்துங் கடிந்தமுக் கலமே லோனை. (எ)

அன்னவ னுடறு ணிப்ப வடிபடை வாளை யோங்க
முன்னவ னுருவு தாங்கம் முனிவனோக் கிடலுங் கைசேர்
மின்னவிர் வாண்மண் வீழ வேவறி யாமை நீங்கி
நன்னிலை வெய்த மேலோ னறுங்கம லத்தாள் வீழா, (அ)

---

* வண்டலெல்லினு முரன்றுவண்டலுக கியைந்து என்பது—இரவும் பகலும் வண்டுகள் கீதஞ்செய்து மகளிர் விளையாடற்கேற்றதாகி.

§ ஆறலைத்துண்கோளன்—வழிப்பறிசெய்துண்ணுங் கொள்கையுடையோன்.

சங்கடசதுர்த்திப்படலம்.

எனைத்தவ புரத்தி யென்ன விருந்தவன் வேட னுள்ள
நினைப்பையோர்ந் தத்த டத்து நீர்படிந் திடச்செய் துன்னி
னனைத்துநல் கிடுங்க ணேசா யநமவென் மந்தி ரத்தை [௨௮]
மனத்துய ரொழிப்பா னோதி மருங்கொரு தண்டை யூன்றி.

இன்னது தளிர்க்குங் காறு மிரும்புனல் வார்த்தே ரம்பன்
றன்னடி நினைந்தியா னோதுந் தனிமனுத் தியானிப் பாயென்
றுன்னருந் தவன்சென் றனவ் வுபதேசப் படியே வேடன் (௨௯)
மன்னிய பத்தி யோடும் வருடமா யிரமி ழைத்தான்.

தண்டிலை யாதி மொய்த்தோர் தருவுரு வாக வீது
கண்டுமுக் கலன் வியந்து கரகநீர் தெளித்து மெய்ம்மைத்
தொண்டுசெய் யன்பன் மெய்யிற் றாவலும் புருவ நாப்பண்
§சுண்டமொன் றெழுந்த தற்றாற் புருசுண்டி யெனச்சொல் வாரால்,

பற்றறுத் தருளே ரம்ப பரமன்போன் முகத்துச் சுண்டம்
பெற்றபக் குவனை நோக்கிப் பிறங்குட றைவந் தையன்
முற்றுநன் கருளு மேகாக் கரத்தையு மொழிந்தித் தாருக்
கற்பமா குகநீ யோவோர் கற்பம்வா ழுகவென் றன்னான். [௰

வேறு

தன்னிடஞ்சென் றனனைய தருவொருகற் பத்தினெல்லாந் தாவற் றுசி
மன[illegible]னியது புருசுண்டி யோரொ[illegible]த்தை யாயிரமாம் வருட மோத
வன்[illegible]வற்கும் பன்முகத்தெம் மண்ணலெதிர் தோன்றிநல னருளி னன்பின்
பன்ன[illegible]ருஞ்சங் கடசதுர்த்தி நோன்பினையப் புருசுண்டிப படிவ னுற்றி. ()

மீட[illegible]டரிய நரகுழக்குந் தன்னினத்தா ரனைவரையும் விபுதர் வாழ்பொ
ன், நாட்டி[illegible]டைச்சார்ந் திடவிடுத்தா னுதலினு லவ்விரத நலனிற் றென்னக்
காட்டுதற்கோ[illegible]ர் †காட்டிலதவ் விரதமினை மொன்றுளது கதைத்தும் வேந்த
கேட்டியெனத்[illegible] துயிந்தியைக் கிழப்படுத்தும் வானவர்கோன் கிளக்க லுற்
றான். (௰௧)

வேறு,

அலைபுனற் காவி[illegible]க்கோ ராகர மான சைய
மலையின்மாட் டெ[illegible]திலு மிக்க வளமுமார் நகரின் மன்னு
மிலைமலி வைவேற் [illegible]சங்கைக் கிருதவீ ரியனு மேந்த
னலமலி சுகந்தை யெ[illegible]ன்னு நன்மனை யொடும்வாழ் நாளில், (௰௫)

---

§ சுண்டம்—யானை[illegible]த்துதிக்கை.
† காட்டு-உதாரண[illegible]

தெண்டிரை
கொண்டல்கப்பே றெய்தா மிடிமையான் மனைவி யோடும்
*வண்டலெ திலகாய் கந்த மாந்தியும் வளிறு காந்துஞ்
தண்டலை ம தறவோ றென்னச் செய்தவத் தயர்தல் யாழ்வன்
டன்சே ரன்றன் றுறைக்கு மொழிய வன்னேன். [யசு]

அன்னதெ
மன்னன்ம ப யப்பூ மலர்மிசை யமரொண் கண்ண
கொன்ன றுகி யன்று னடிமலர் வணங்கி யெந்தா
யின்னடு லிசையென் னெச்ச மீண்டிட வாழென் னெச்ச
) லெச்ச மில்லா நவையுறற் கேது வென்னே. (யஎ)

இருநி
வொரு வொண் கமலத் தண்ண லியம்புறு பவத்து நின்சேய்
பொன்றந் குலத்தோ னுமஞ் சாமனு வறுமை யாலோ
திரன்றை யிரவிற் கான்சென் றுறிரு பனவர்க் காதிப்
ரன்னகை முதற்க வர்ந்தவ் விரவிலே போந்தா னில்லம். [யஅ]

தவந் திறப்பான் றன்மகனைக் கணைச கணேச கணேசவெனப்
தறி யழைத்தான் பகன்முழுதும் பதநீர் நுகராப் பரிவாலம்
மூதலை மாண்டு கிடத்தலிற்சொல் வழங்கா வகைகண் டொருவகையாற்
‡புதவந் திறந்தா னகம்புகுந்தான் புதலவற் பார்த்து நனியினைந்தான். [யசு]

மைந்த னிறந்த பரிவானும் மடங்காப் பசித்திக் கரிவானும்
பந்த மறுக்கு மறைகூறும் பனவற் படுத்த பவவீறும்
வந்து வளைந்த சுழிப்பானு மலர்க்கண் டுயிலா விழிப்பானுஞ்
சிந்தை யுழந்தான் வைகறையிற் சீவனிழந்தா னுடல்கிடப்ப. (உய)

வேறு

பொருதுசங் கடங்க ளெல்லாம் போக்குசங் கடச துர்த்தி
தருபெரு தினமன் றுகச் சமைதலிற் கணேச னென்னு
மொருமகன் பசிநோய் தீர்த்தற் குணவுநீர் விடாய்தீர்த் த ற்கு
வருணமுங் கிடையா துள்ளம் வருந்தியங் கிறந்த தாலோ. (உக)

பொன்னெறி விமான மொன்று பொருந்தவன் னதன் மீ தேறி
மன்னுசீ ரைங்கை வள்ளன் மானுல குற்று வாழ்ந் தான்
றன்மகன் றனைக்க ணேச வெனமுக்காற் சாற்று சாமம
னுன்னரும் புதல்வ னுக வுதித்தா சாள்கின் றுனல் (உஉ)

---

* பதநீர்—அன்னமுந்தண்ணீரும்.

‡ புதவம்—கதவுவிட்டுப்புகும்வழி.

துங்கவிப் பிரனைக் கொன்ற தொல்பவ வெச்சத் தாலே
யங்கவி லெச்ச மில்லா வறுமையுக் கனுற் கீர்த்தி
தங்கொரு புதல்வன் வேண்டிற் சங்கட சதுர்த்தி நோன்பே
யங்களிற் றுன னற்கின் பாயதஃ தாற்றல் வேண்டும். [உங]

எதிரிலிவ் விரத நோற்கத் தொடங்குநா ளிசைத்து மாசி
மதிமதிக் கலைதேய் பக்க மங்கல வார நான்காந்
திதிமதி யுதிக்கு மேலவை சிறந்ததென் றறைகிற் பாரால்
விதிமுறை யதனிற் பூசை விளைத்திட றகுதி மேலும். (உச)

செழுநிற மதிக்கும் பூசை செய்துமாண் மறைய வர்க்கு
விழையறு சுவையோ டுண்டி மேதக வூட்டிக் கங்குன்
முழுவது முறக்க மின்றி முன்னவன் சரித முற்றும்
பழுதறக் கேட்டு ளத்துட் பதித்திடல் பண்ப தாகும். [உரு]

என்னலும் பிதிர் . . . ந் தெந்தாய் மங்கல வாரத் தெய்து
முன்னருஞ் சதுர் . . . டெற்று வுகந்ததோர் கோட்ட சற்குப்
பன்னுதி தெளிவ . . லற்கென் றிடமறை பயின்றி யாவு
மன்னுறப் படைக்கும் வாச மலரின்வா சத்தோன் கூறும். [உகா]

மெய்த்தவப் பரத்து வாசன் வீரியத் துதித்த செவ்வாய்
சுத்தநற் கலைக ளோடு சுமுகர்தம் மனுவும் பெற்ற
வத்தனு ரிடத்துப் பெற்றே ரணிவனத் திருந்து பன்னுட்
பத்தியி னேற்று நால்வாய்ப் பகவனுர் கருணை நோக்கால். [உஎ]

அந்தரத் தமரர் தம்மோ டமிழ்தினி துண்ணு நண்புந்
தந்தரக் கோள்க ளோடு தயங்கொரு கோளா வைகும்
பந்தமுந் தன்வா ரத்துப் படர்தரு சதுர்த்தி நோற்றோர்
நந்தலில் போக மெல்லா நண்ணுதற் கருளும் பெற்றான். (உஅ)

ஆதலாற் பூம வாரத் தடுத்திடு சதுர்த்தி மேலென்
றோதுநான் முகனைத் தென்பா லுறைபிதுர் மதிதோன் றேல்வை
யேதுநா யகனுர் பூசைக் கியைந்ததின் றடியேன் றேறப்
போதவோ துதியென் றேத்தப் பொருந்துதண் ணளியா லோதும். [உகூ]

நாரத முனிவ னோர்நாட் கயிலையம் பொருப்பு நண்ணிக்
காரணி மிடற்றி னுற்குத் தீஞ்சுவைக் கனியொன் றீய்ந்து
வாரமுள் ளூறத் தாழ்ந்து மதுமழை பொழிந்தா லென்ன
வாரிசை மழைபொ ழிந்தா னமலனு ரகம கிழ்ந்தே. [ஙய]

முனிவரற் கருள்வ மூங்கி முதிர்சுவைக் கனியை நந்நந்
தனையரு ளெவற்க ளிப்பாஞ் சாற்றெனப் பார்த்தா னென்னை
யினியன வினையோற் கிக வியல்பென விசைத்தேன் முன்னோ
னனியென்ன முனிந்தா னஞ்சி நயந்திரந் தனனவ் வேல்லை. [௩௧]

திங்களங் கவய தித்துச் சிரித்தனன் சிவனூர் மைந்த
னங்கலே மதியே நக்கா யான்றவ ரவையி னற்றுன்
மங்குக நின்றே சுன்னைப் பார்த்தவர் மனத்து மம்மர்
பொங்குக வெனவவ்ண் சாபம் புகறலு மதிதே சின்றாய். (௩௨)

அரந்தையுற் றிலஞ்சென் றுனல் லமுதுண விழந்த தேவர்
புரந்தா ஞெடுமே ரம்பன் பொன்னடி யிறைஞ்சி பெந்தாய்
பாந்தவம் புவிக்கு ஞூவாம் பயிர்வளர்த் திடவு மெங்கட்
குரந்தரு மமுத நாளு முதவவு நிலவை வைத்தாய். [௩௩]

அந்நில வின்மை யாலே யனைத்தும்வெந் துயரி லாழ்ந்த
புன்னெறிக் கடையர் செய்யும் பொறைபொறுத் தாள லென்று
நன்னெறித் தலைவர்க் கன்றோ கடன்மதி நகைசெய் குற்ற
முன்னவ சகித்தாள் கென்னப் பன்முறை முறையிட் டாரால். [௩௪]

சின்மய னதற்கி ரங்கிச் செப்பும்வா னவர்கா ணீவிர்
நன்மையி னீங்கு வந்து நயந்தெமை யிரந்து வேண்டுந்
தன்மையின் மதியி லாத தண்மதி யடைந்த சாபப்
புன்மையங் கவனை நீங்கிப் போகுமா றுரைத்து மின்றே. (௩௫)

இரவிதான் சிங்க வீட்டி னெய்துதிங் களின்முற் பக்கம்
வருசதுர்த் தியினில் யாரும் வான்மதி தனைநோக் கற்க
பரவுமத் தினம றந்து பார்க்கினும் பவங்கட் கெல்லா
மருகரா குவர்மற் றேத வாழிவீழ்ந் தெழுந்தி ராரால். [௩௬]

அத்தின மொழிய முன்போ லனைவருங் காண்க வானிற்
புத்தமு துதவல் லோனை யென்றனன் புலவ ருய்ந்தா
மித்தின மென்று வந்தா ரிந்திரன் மதிபா லெய்தி
வித்தக னருள்செய் யாவும் விளம்பித்தன் பதிசென் றுனல். [௩௭]

இந்திரன் போந்து சொற்ற வெதிரில்கூற் றனைத்துங் கேளாச்
சந்திரன் மகிழ்வுட டங்கித் தன்பதி தனைவிட் டேகிச்
செந்திரு வளரொண் கங்கைத் தென்றடஞ் சித்தி யாவும்
வந்துறுஞ் சகல சித்தித் தலத்துவற் சாமு வேழா. [௩௮]

ஓரொழுத் தன்பி னெண்ணி யும்பன்மா முகத்தெம் மீச்
ஞாரு ளாற்சேய் வாரச சதுர்த்தியி லுணர்தீர்த் தற்கு
நேருவோர் தான்றோன் றேல்லை நியதியிற் றனைப் பூசிக்கச்
சீருறு கலையோன் றெம்மான் செஞ்சடைக் கணியப் பெற்றான். [௩௯]

ஆதலான் மதிதோன் றேல்லை யதிகமிவ் விரத நோற்போர்
கோதறு பசிய தூர்வை கொண்டருச் சிக்க வெம்மான்
பாதபங் கயத்தி லென்று பங்கயன் பகரத் தூர்வை
யேதினான் மிக்கா யிற்றென் றிரும்பிதுர் கேட்பச சாற்றும். (௪௰)

கலிநிலைத்துறை

துன்னு தண்பொழில் சூழ்ந்திடு மவந்தியென் னகரந்
தன்னின் மன்னர்தம் வழிவரு தராபதி சுலப
னன்ன வன்மனை கற்பினி லருந்ததி யனையாள்
பொன்ன னுள்வனப் பினிற்பெயர் புகல்சுபத் திரையே. [௪௧]

அனைய ளோடுகன் மனையறம் புரிந்துல கனைத்துங்
கனநி கர்ததகை யாடைகை காக்குநாண் மதுசூ
தனனென னுமபெயர் மறையவன் மாவுரி தரித்தவ்
வினன்மனைக்கொரு நாட்பலி வேண்டியெய் தினனால். [௪௨]

ஐய மீப்தலி லகமகி ழரசன்முற் பவநது
வெய்ய தீவினை விளைவுவந் தடுத்தலி னகைப்பச்
செய்ய வேதியன் சினந்துசே வாகெனச் சாப
மெய்த வோதின னிஃதறிந் திறைமனை யடுத்து. (௪௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேதியன் றனைவெ குண்டோர் வேசரி யாகென் றுளக்
கோதையைப் புலைச்சி யாகென் றுனுயர் குலத்தோன் யார்க்குந்
தீதளித் திடுந்தற் சேர்ந்தார்த் தெறுசின மெனற்குச் சான்று
மாதுமுன் னுன வம்மு வரும்பிற வுருவேற் றங்கண். [௪௪]

சீர்தரு செங்கோ லுங்குஞ் செம்மலோ ருழவற் கேறு
யேர்நுகந் தாங்கப் பெற்று னிவன்மனை புலைச்சி யாயவ்
வூர்மறு கலைந்து பிச்சை யேற்றுயிர் வளர்க்க லுற்று
ளோர்கா மாயூர்த் §தூசற் குடைப்பொதி பரித்தான் பார்ப்பான். (௪௫)

---

§ தூசன்- வண்ணான்.

எண்ணுமூ வருமிவ் வண்ண மிருக்குநா ளொருநாண் மாரி
மண்ணிடைப் பொழியச் சேத்தன் வன்றளை தெறித்த றன்றூற்
றுண்ணென வுழுவற் றப்பி மாடமர் சுழுகர் கோயி
லண்ணியாங் கொதுங்கி நின்ற நவிலுமக் கோயின் ஞாங்கர். [சகூ]

வெரிநுறு மூடை தள்ள மய்தலி னின்ற புன்வே
சரியும்வங் கொதுங்க லை சார்ந்தது புலைச்சி தன்கை
யரிகொரேர் வைப்புல் ங் கணைந்தனண் மாலைப் போதும்
வாலினக் காமுஞ் சேவு ாய்ப்பெயப் புல்லை யன்னாள். (சஎ)

காத்தின்வாய்த் தண்டத் லை காத்தின்வாய்த் தண்டஞ் செய்ய
வுரத்ததன் குரலைக் †கோகங் கொல்லையிற் காட்டிக் காலால்
வருத்திய தானை யஃது வலிமைசே ரிருகொட் டாலுங்
$குரத்தினுங் கரத்தைக் குற்றக் கொடுங்கலாம் விளைந்த வன்றே. (சஅ)

அற்றைமாண் சதுர்த்தி யாக வமைதலின் மாலைப் பூசை
முற்றுவித் தாங்கி ருந்த முனிவரர் புடைக்க மூன்று
முற்றவல் லிருளோ டாங்கே யுறுகணுற் புறத்தே காமே
சுற்றின தளியைக் காற்றிற் றார்வையைங் கரன்மெய் சேர்ந்த. (சகூ)

இழுக்குவந் தடுத்த தென்று விருடிக டெண்ணீ ராடி
முழுக்கவா லயத்தைச் சுத்தி முடித்துநீர்க் கலயந் தாபித்
தழுக்கில்பல் பொருள்கள் கைக்கொண் டாகமம் விதித்த வாறே
பழுத்தமெய் யன்பிற் பூசை பண்ணியங் கிருந்தா ரிபபால். [ருய]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

முனிவர ரடித்த லாதியா குலத்தான் முதல்வனந் தளிவளா யகலா, ‡தனவிரு மானு மினைந்திறந் தனகீழ் மகளுமவ் வாறவண் மாய்ந்தா, வினை யவை வலம்போந் தருச்சனை யறுகா வியற்றின பிறவுமிங் கிழைத்த, வென விறை யுனமூன் றையுமொரு மானத் தேற்றின போந்திருங் கணங்கள். ()

அந்தண ரதுபார்த் ததிசயித் திஃதெவ் வாறெனக் கணங்களோர் முகு தந்திமா முகனுக் கிட்டதா லெனலுந் தளிரறு கலகில வாய்ந்து

† கோகு– கழுதை.

$ குரம– குளம்பு.

* கலாம்– சண்டை.

‡ அனவிருமானும்– அந்த இடபமும் கழுதையுமாகிய இரண்டெருதங்களும்.

புந்தியோ டருச்சித் தார்பெறு பலனைப் புகலுமி னெனக்கண நாதர், முந்
தொரு கவுண்டின் னியமுனி மனைக்கு மொழிந்ததுண் டாலென மொழி
வார். [௫௨]

அன்னநன் முனிவ னேவல்செய மனைவி யாசிரை யொருபகல் கணவ
ன், றன்னடி தொழுது பரிமள மிகுந்த சாதிமந் தாரமுன் ஞன, பன்மல
ரிருக்கப் பசியபுல் லறுகாற் பகவனுக் கருச்சனை புரித, லென்னது தெரிய
வியம்புக தலைவ வெனனனு மகிழ்ந்தவ னியம்பும். (௫௩)

முன்னொரு பொழுது நடுவன்வீ ரியத்து முளைத்தன லாசுர னெனப்
பேர், மன்னொரு கொடியோன் வன்னிபொங் குருவோன் மண்ணுல கத்து
யி ரொழித்துத், துன்னின னமர ருலகறிந் தவரச் சுதனடி புகநமன் மக
னை, யென்னையுந் தடுத்தா ளிபமுக னலதியா ரிருப்பவ ரொன்றுமா றுதித்
தான். [௫௪]

றுதிக்குமான் முதல வமரர்முன் னெமையாள் சுமுகரோர் பிரமசா ரி
யிற்போந், ததிர்ககுமா கடனஞ் பின்றதே நிகர்த்தவ் வசுரனை வாய்மடுத்
தனரால், வெதுப்புதீப் பெயரோ னுயிர்க்குயி ராயெவ் விடையினும் விளங்
கியெவ் வுயிர்க்கு, மிதத்தையே யருளே ரம்பனு ரகட்டி லியைந்திட வனை
த்துயி ரகட்டும். [௫௫]

பொங்கெரி யழற்றப் புக்கதாற் பொறுதெம் பூரண னகட்டழ லவிப்
பான், றிங்கடன் னமுத நீரிறை குளிருந் தெளிபுனல் பாங்கினுட் டிடவு,
மங்கையிற் சித்தி புத்திக ளமல னுருத் தழுவவு மரிதண், பங்கயங்கொ
டுவந் தொற்றவும் பரன்பாம் பணியவும் பணிந்தில வுருமம். [௫௬]

அவரவர் தகவின் படிபல விவ்வா றுற்றிபு மழலுத னொக்கித், தவ
முனி வோரொண் பத்தெணு யிரவர் தனித்தனி யிருபத்தோ ரறுகைக்,
கவல்வொழித் தருள்வான றிருவுரு முழுதுங் கவினுறச் சாததவக் கணமே
பவனுடல் குளிர்ந்த தனைத்துயி ரனலும் பனிமல ரெனக்குளிர்ந் ததுவே.

சாலநம் முருவி னழற் றுவெவ் வழலைத் தணித்திடப் பலவுப சாந்த,
மேலவர் தத்தந் தகுதியி னிழைத்தும் விளிந்திடா திருபபமா தவந்தீர்,
கோலநல் லறுகு நீயிர்சாத் திடவக் கொடியவெப் பொழிந்ததா தலினன்,
மாலதி முதற்பன் மலரொடு பின்னும் வளங்கெழு பலபொரு ளானும். []

பலவுப சாரத் தெவரொமைப் பூசை பண்ணினு மறுகிடா திருப்பி, ன
லனுறு பூசை யெனக்கொளேம் வேட்ட வேட்டவா நல்கவு முன்னேஞ்,
சிலவுப சார மிழைத்தனு மின்றிச் செறியித ழறுகுது யெமையெவ், வுல
கவ ரெனினும் பூசனை புரியி னுவந்தவர்க் கிருமையு மளிப்பேம். [௫௯]

அப்பசும் புல்லா மறுகலை விலைகொண் டருச்சனை புரிதனன் றிலதே ல், வெப்பொழி மூவேழ னின்னுந் தூவல் வேண்டுமெற் றினைத்துமொல் லா தே, லொப்பிலோ ரறுகா யினும்பரி வாற்கொண் டுவப்புறச் சாத்துக வெ ன்று, திப்பிய வரங்க ளருளினன் மறைந்தான் றிருவருட் குரியருண் ணி றைந்தான். (சுல)

சுந்தர விளமைப் பிரமசா ரியின்முற் றோன்றிய தன்மையி னுனும், வெந்தழற் பெயரோற் கொன்றதின் விளைந்த வெப்பனைத் துயிர்கட்கு மொழித்தே, யிந்து வ நிகர்த்துச் சீதள மலிவை யீய்ந்தவத் திறத்தினும் பால, சந்திர னெனப் பேர் தந்திமா முகத்துத் தம்பிரான் றனக்குவந் ததுவே. [சுக]

ஆதலி னன்று தொட்டறு கெனும்புல் லைங்கரற்கு வந்ததா யிற்றென் றோதினன் கேட்டத் தவன்மனை யிரும்பூ துற்றிருந் தனளிது நிற்கக், கோத்று தவத்தீ ரின்னுமோர் காதை கூறுது நுங்களுக் கெனவும், மாதவர் மகிழச் சிவகண நாதர் வகுத்தினி துரைக்கலுற் றனரால். (சுஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மதுவழிந் தொழுகப் பூத்த மலர்த்தடஞ் சோலை சூழ்ந்த
மிதிலைமா நகரான் வேந்தர் வேந்தனுஞ் சனக னென்போன்
றிதமுறு சிவனே யெல்லாத் தேவுக்கு மேலாந் தேவென்
பதுசிறி தேனுந் தேறான் பயின்றுதான் பிரம மென்னு (சுஙு)

மனத்தகங் காரங் கொண்டு வதிதல்யாழ் முனியே ரம்பன்
றனிப்பதம் பணிந்து ளைப்பத் தாதிப லூட்கோண் டாய்ப்பா
னினைத்தெந்தை யவன்பாற் குட்ட நிகழொரு மறையோன போற்சென்
றெனைத்தெறு பசிதீ ரைய வெனவவன் றன்சேய்க் கோதி. [சுச]

அருத்துக மறையோர்க் கன்ன மெனவவன் பதம்வி ளக்கிக்
கருத்தினுள் ளழைத்துப் போன கத்திர ளரம்பைப் பன்னாந்
திருத்திமேற் படைப்பித் தைய திருக்கைதொட் டருள்க வென்றே
பொருத்துரை மொழிந்து கைக்கொள் புதுவிசி றியின்வீ சுற்றான். [சுரு]

அண்ணனீர் வளைத்துத் தொட்டா னறுசுவை யுண்டி முற்றுங்
கண்ணினு வின்மை கண்டார் கருத்தனைச் சூழ்ந்தார் பின்னர்ப்
பண்ணிய பண்ட மெல்லாம் படைத்தனர் மடைய ரொல்லை
நண்ணிய வெலையு முண்டான் படைப்பவர் நீண வன்றே. [சுசு]

மிடையவட் டனவ னைத்தும் விளம்பின மிவர்க்கே யின்னு
மடையவும் வேண்டி னட்டிங் கிடுதுமென் றனையன் சேய்க்கு
மடையாங் கியம்பல் கேட்டு மறையவ னடாத வுண்டேற்
படையுமி னெனமன் மைந்தன் பண்டசா லைகளை யெல்லாம். (௬௭)

ஒருங்குடன் றிறந்து காட்ட வொண்பொருண் முழுது மொல்லை
யருந்தியும் பசியா றானந் நாசறிந் தகனுட் டுள்ள
விரும்பொருண் முழுது மீண்ட விடுகென விட்டார் வெற்பின்
வரும்பொரு ளனைத்தும் வல்லை வாரியந் தணன்வாய் பெய்தான். (௬௮)

கண்டவர் தொழுநோ யாளன் கடும்பசி தணியா தாயின்
மிண்டெடைமை விழுங்கு மென்று வெருண்டுட னிரியல் போனார்
வண்டமிழ் மாறன் செல்வ மகடிருக் கலியா னத்தி
லுண்டவன் பூத [illegible]ர வென் றேங்கலா சங்கை கொள்ளா. (௬௯)

இனியவன் பசிக்கென் செய்வா மெனவினைந் தந்த ணாள
குனிகடன் ஞாலத் துள்ள பொருண்முற் றுங் கொணரு வித்த
நினைதுத ரத்துக் காற்று மையினது நிரப்பு வாரை
நனிவினைத் தடுத்து ளைத்த னன்றென நவிலு மையன். (௭௰)

இருநிலப் பொருள்க ளெல்லா மீய்ந்துமே னென்றும் வேண்டி
றருபவ ரிடைச்சார் கென்றுஞ் சாற்றனின் வாய்மை சீர்ந்தி
யருள்கொடை பிறவுங் காட்டற் †கான்றசான் றுமே மன்ன
பிரமமு மென்னை யல்லால் வேறிலை யெனப்பே சுற்று. (௭௧)

நொடிக்குமுன் னண்ட மெல்லா நூறிப்பின் பண்டு போலப்
படைத்திட வல்ல நாளை பராபர மாவா யேலென்
னடுத்தபுன் பசியும் போக்கா தளிப்பவ ருழிப்போ கென்ன
விடுப்பையோ துயர்தோய் நீயோ விளம்பரும் பிரம மாவாய. (௭௨)

எனவர சனுந்துன் புற்று னிருமறை யாள னன்ன
மனனிலம் விடுத்தே ரமயன் மலரடிக் கன்பின் மிக்கான்
றினமு§நல் குரவி னார்க்குந் திரிசிர செனும்பே ரோனோர்
பனவனிற் புகலு மன்று னெதிர்கொடு பணிந்தி றைஞ்சி. (௭௩)

---

† ஆன்றசான்று—தக்கசாட்சி.

§ நல்குரவு—தரித்திரம்.

உரவநீ போந்த தென்னென் றுரைப்பவெம் பசியொ ழிப்பா
னாசனுஞ் சனகன் பால்வந் தடையமுற் றளித்தா னல்லன்
பரவுமப் பசிதீர்ப் பான்வந் தனனெனப் பனவன் பன்னி
‡குரவவி ழோதி யாளாம் விரோசனை கூறு கின்றாள். [எச]

நிறைதடப் புனற்கு டித்து நீங்கிடாத் தாக மில்லை
செறிசிறு காக முண் டிடுதலிற் றீர்த லுண்டோ
மறையவ னொருநல் காறும் வாழ்ந்தனம் யாச கத்தின்
றிறையவற் கியற்று பூசை யறுகலா திலைவே றொன்றும். [எரு]

எனத்தம தியல்பு சாற்ற விறைவனுண் மகிழ்ந்து சோட்ட
மனத்தொடு பனைபோற் செல்வர் வழங்கினும் பய...ங் றில்லார்
தினைத்துணை யேனு மன்பிற் றந்திடிற் சீர்மிக் கோங்கு
நனைத்திகழ் குழலோ யேற்றோர் தமக்குநற் கீர்த்தி நண்ணும். [எசு]

பேறிதன் மேலு முண்டே யென்றவட் கியம்பிப் பெம்மான்
வீறறு கேற்றுத் துய்ப்ப வெறியவம் மனையிற் செல்வங்
கூறரி தெனச்செ றிந்த குலவுமந் நகரு நாடு
மேறிய பொருள்க ளூறு மடங்குமுன் னினுமே லாக. [எஎ]

அதிகயாந் தூர்வை கொண்டா ராஞ்சிறு தூர்வை யுண்டார்
விறுவணி முடிய ராகி விளங்கிய வடிவங் கண்டார்
கதியெமக் களித்தி யென்னக் களித்தறு கீந்த மாதும்
பதியுமெப் பசுவும் பேணும் பதிபதம் பணிந்தி ரந்தார். [எஅ]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அன்னவேண் டுதலை யருடுமென் றெந்தை யவ்வுரு வுடனவ ணிருப்ப,
விந்நிலை யனைத்துஞ் சனகனோர்ந் தனைய திரிசிர சில்லிடை யேகிச், செந்நி
றந் திகழைங் கரமறை யவனார் திருவடி யிறைஞ்சிநின் றெளியே, னின்னி
லை தெரியா திழைபிழை யனைத்தும் பொறுத்தரு ளிமலவென் றிரந்தான்.

பற்றுமுற் றொழித்தார் பற்றவோர் கொழுங்கொம் பாகவுற் றமதொரு
கொம்பன், கொற்றமெய்ச் சனகன் பக்குவ நோக்கிக் கோதிலா வாகம விதி
யின், மற்றவன் றனக்குத் தீக்கைமுன் புரிந்து மறைப்பருள் வாக்கினுற் ற
யிரி, னுற்றசெய் யதுபோற் பதிபசு பாச வியல்பினைக் கருணையி னுரைக்கும்

‡குரவு—நறுமணம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பதியொன்றே பசுவ நேகம் பாசமா ணவமே கன்மந்
திதிபெறு மாயை யென்னச் செப்புமோர் மூன்ற தாகு
முருபதி மலச்சார் பொன்று மூவகை யான்மா வுக்கு
மதிபதி யென்ப வன்ன வரும்பொருள் யாமே யாகும். (அக)

குறிகுணங் கடந்தா னந்தக் கோலமார் நிலைநின் றெல்லா
மறிகுண நமக்கே யுள்ள தறிவித்தா லறிய நுறுகுஞ்
சிறுமதி யுடைய தான்மாச் செம்பினுட் களிம்பு போல
வறிவிச்சை தொழிறு யிர்க்கு மறைத்தலா ணவத்தின் செய்தி. [அ௨.]

பசுமன மொழிகா யத்தாற் பற் ல பிறவி தோறு
கசையுட னியற்றல் கன்ம மனையது நன்று தீதென்
றிசையிரு வினையிற் றுமின் னதன்பய னின்பு துன்பாந்
தசை*யுட லாதி நான்கு மாயைய னியல்பே சாற்றின். (அங)

சுத்தமே யசுத்த மென்ன விருவகை மாயைத் தோற்றஞ்
சுத்தமே சடம ரூபஞ் சொல்வடி வாகி மேலுஞ்
சுத்தமாந் தனுவா திக்குந் துகளில்கா ரணம தாகிச்
சுத்தமாய்ச் சித்த மேன்யா ரேய்ந்திடா திருப்ப தாமே. (அச)

உருவதாய்ச் சடம தாகி யாவியின் கருமங் கட்குப்
பிரளய முறுங்கா லத்துப் பெறுமுறை விடம தாகி
மருவுறு சுத்தா சுத்த மசுத்தம்வர் திடற்கு முன்னர்க்
கருவியாய் மயக்கஞ் செய்யுங் கருதரு மசுத்த மாயை. (அரு)

பந்தவா ணவமா மாயை பகர்வினை யெனுமிம் மூன்று
மந்த மிலான்மா வுக்கே யல்லதெட் டிணைய தேனு
நந்தமக் கிலையி வற்று ணர்ந்திரு வருளை யன்றி
வந்துறு கன்ம மாயை மலத்தின்மூழ் கான்மா வுக்கே. (அசு)

பதியெனு மெமக்கும் பொல்லாப் பாசமென் பதற்கு மூடே
வதிபசு சார்போ தப்பேர் மன்னலா னம்மை யன்றேற்

---

* மூவகையான்மாக்கள்-என்பது—ஆணவம், என்னும் ஒருமலத்தையுடைய விஞ்ஞானகலரும், ஆணவம், கன்மம், என்னும் இருமலங்களையுடைய பிரளயாகலரும், ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலங்களையுமுடைய சகலருமாம்.

* உடலாதி என்பது—தனு, கரணம், புவனம், போகம், என இந்நான்குமாம்.

றுளைதமலந் தன்னைப் பற்றுந் தனித்திரா தொக்க கண்கள்
கதிருமிழ் சுடரை யன்றேறற் கங்குலைப் பற்று மாபோல். [௮௭]

பாசமும் பசுவு நாமும் பகர்தரி னநாதி நித்தம்
பேசின்யா விறுதி யைந்து வியாபக மாய்ப்பி றங்கு
மாசுறு வினையி ரண்டும் வரும்பல பவங்கட் கெல்லா
மூச்சுறு வித்தாய் மன்னு மதனியன் மொழியுங் காலை. [௮௮]

சிதைவிலா காமி யஞ்ராஞ் சிதம்பிரா ரத்த மாமூ
விதமதா யுநவு றுக்கோ ரியற்றல்கட் டுண்டு மேவ
றுதைவினைப் பயன்க டெய்த்த லாவதாஞ் சஞ்சி தந்நீர்த்
திதமுறுங் காறு யான்மாப் பிறப்பிறப் பிடைய றுதால் [௮௯]

§அண்டசஞ் சராயு சஞ்சு வேதச முற்பி சப்பேர்
கொண்டநால் வகைத்தாம் யோனி குறுகிவெவ் வேறு யண்ட
ரொண்டரு நார்வி லங்கு பறவையூர் வனவி றைக்குந்
தெண்டிரை நீரின் வாழ்வ செறிந்ததா வரமே யென்றும். [௯௰]

ஏழ்வகைப் பிறப்பி னுள்ளு †மெண்பத்து நான்கி லக்கத்
தாழ்படு தனுவிற் சீவன் பரிணமித் துறுதன் பின்ப

§ அண்டசம்—முட்டையிற் றோன்றுவனவாகிய பறவைகளும், ஊர்வனவும், நீர் வாழ்வனவுமாம்.

சராயுசம்—கருப்பையிற் றோன்றுவனவாகிய தேவர்களும், மனிதர்களும், நாற்கால்விலங்களுமாம்.

சுவேதசம்—வேர்வையிற் றோன்றுவனவாகிய கிருமி, கீடம், பேன்முதலியசில ஊர்வனவும், விட்டில், முதலிய சிலபறவைகளுமாம்.

உற்பிசம்—வித்து, வேர், கொம்பு, கொடி, கிழங்கு, முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவனவாகிய தாவரங்கள். எனஉயிர்த் தோற்றங்கள் நால் வகைத்தாம்.

† எண்பத்துநான்கிலக்கந்தாழ்படுதனுவாவன—.

[௧] தேவர்யோனிபேதம் (௧௧00000) பதினொரு இலக்ஷம்.
[௨] மனிதர் ௸ (௯00000) ஒன்பதுஇலக்ஷம்.
[௩] நாற்கால்விலங்கு௸ (௧000000) பத்து இலக்ஷம்.
[௪]. பறவை ௸ (௧000000) பத்து இலக்ஷம்.
[௫] ஊர்வன ௸ (௧௫00000) பதினைந்து இலக்ஷம்.
[௬] நீர்வாழ்வன௸ (௧000000) பத்து இலக்ஷம்.
[௭] தாவரம் ௸ (௧௯00000) பத்தொன்பது இலக்ஷம்.

வாழ்வினை நுகரு மீதின் மானிடத் துதித்தல் கையா
லாழ்கட னீந்தல் போலா மன்னதி லறமே செய்யின். [௬௧]

தூலமெய் யொழிந்த போது சூக்கும தேகத் தும்பர்
போலுந்தே சுருவ மடைந்து பொன்னுல கெய்தி முன்னர்ச்
சாலுநல் வினைகளி டாகத் தனிநல மனுப வித்து
மேலேஞ்சு கன்மத் தாலே மீண்டுமோ னிடம தாமே [௬௨)

செய்வினை யெல்லாந் தீங்காச் செய்துநாட் கழித்த சீவன்
பொய்யுடல் விடுந்த போதே புரியட்ட ரூயத் தோடும்
வெய்யமெய் யதனை யுற்று நிரயத்து வீழ்ந்து வீழ்ந்தாங்
கையகோ துன்பந் தாழு மன்னவை யில்லை யாயின். (௬௩]

வேறொரு தூல மேவும் வெய்யவன் னரகில் வீழ்ந்த
வீறிலான் மாக்கள் கன்ம சேடத்தா லிருநி லத்துக
கூறுபுற் புதலா யோங்கு கோடுறு மரமாய் நீரி
லூறுறு துலவு செந்தா யூர்வன வாய்ப்புள் ளாகி. [௬௪]

மிருகமாய்ப் பின்முன் செய்த நல்வினை விசேடத் தாலே
யருமையா முத்தி யெய்தற் கருகமா மனுட யாககை
மருவுமின் னதிலி ரண்டு வினையினும் வருப யன்கள்
பொருவறு சமமென் றொரும பக்குவம் பொருந்த வாய்ப்பின். (௬௫)

‡சத்திநி பாத மெய்தத் தத்துவ ஞானந் தோன்று
மத்தகு ஞான நல்கு மருட்குரு நோக்காற் சீவன்
முத்தனு நிராசை மன்னி முதல்வனை யிடைவி டாதே
யெத்திறத் தானு மொன்றி யின்புரு வாகி நிற்பன். [௬௬]

---

* புரியட்டரூபம் என்பது—சத்த ஸ்பரிச ரூப ரச கந்தம் என்னுங்காரணதன்மாத்திரையைந்தும், மனம் புத்தி அகங்காரம், என்னும அந்தக்கரண மூன்றுமாகிய எட்டினுலும் ஆக்கப்பட்டு, ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய், அவ்வான்மாக்கள்போகம் அனுபவிப்பதற்குக கருவியாய், ஆயுள் முடிவின் மூன்னுடம்புவிட்டு மற்றொருடம்பு எடுத்தற்கு ஏதுவாய் இருக்கும் அருவுடம்பு, இஃது தான் சூக்கும சரீரமென்றும் பெயர் பெறும்.

‡ சத்திநிபாதமாவது—ஆன்மாவினது ஞானத்தைத்தடுக்கும் ஆணவமல சத்திநழுவும் அவசரத்திலேமுற்பிற் பாடறச்சிவத்தினது சிற்சத்திபதிந்து அவ்வான்மாவினது நித்திய ஞானக்கிரியையை விளக்குவதாம்.

ஆதலாற் பசுவைப் பாச வலையினின் றகற்ற வல்ல
வேதமில் பிரம மியாமே யிணையுநீ யென்று மாகாய்
நீதகு பிரம மாகு மினைப்பெர்டு மறப்பு மைந்தா
வாதையு முன்பாள் மாறி மாறிவந் திடுத லென்னே. [கூஎ]

பெத்தத்தே யுழனி யன்ன பெத்தர்க்கு முதல்வ னுவை
முத்திச் 5 முதல்வ னேனுயா முத்தர்க டொழுவன் னூர்தஞ்
சித்தத்தே தயிரு ணெய்போற் சேர்ந்தொளிர்ந் திருப்பே மேனைப்
பெத்தர்க்கோ பாலு ணெய்போற் பிறங்கிடா திருப்பே மன்னு. [கூஅ]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இனியெம தருளா லிங்கியா மிசைத்த வெற்றையு முணர்ந்துவே றற்றுத், தனிமையா யபாவ மாகியே துவித பாவனை தன்னைநீ விடுத்து, மும்மலத் திருத்தும் விழைவென வந்த முதலிடை யிலாதநம் மிடத்தே, யுனுமன னிறுவிச் சுகமுற வாழ்கென் றுநமறைந் தருளின னசலன். [கூகூ]

பொருடரு மிறைவ னருண்ப தைமை யெனவே பொழிந்தவை யனைத்தையுஞ் சனகன், றெருளுறக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து சிவானந்த போகமா நிட்டை, மருவிமெய்ஞ் ஞானி யெனவக லிடத்தோர் மதித்திடத் தெண்டிரைக் கடல்சூ, ழிருநிலம் புரந்து வாழ்ந்தனன் சீவ முத்தனு யினிதிருந் தன்றே. [ரு]

ஓராறு களித்த நன்மையின் வறுமை யொழிந்தரும் பேறெலாம் பெறவு, மோர்கொளவ் வகத்தே யதிசய மளவற் றெய்தவு மெய்ந்திடிற் பசிய, தூர்வையெண் ணிலவா வருச்சனை புரிவோர் தோய்நலத் தளவையிவ் வளவென், றுருரை செய்ய வல்லமோன் றறைந்த வருங்கண நாதர்கள் பின்னும்.

‡ ஓராறு களைக் கோன்றலை புகுந்த கதையுமங் குரைத்துவின் னடைந்தா, றொருறு மறுகாற் புலைச்சியுங் காமு மிட்டமுங் கதியினைய் வுற்ற நாருறு முனிவ ரறுகுகொண் டைங்கை நாதனைப் பூசனை புரிந்து, சீருறு பதவி யடைந்தன ரறுகின் சீர்மையீ தெனவய னவின்றான். (ளஉ)

---

‡ ஓராறு களைக்கோன்றலைபுகுந்தகதையாவது, மேற்கூறிய கவுண்டின்னியமுனிவர் அறுகின்மகிமையாவரும் அறியும்பொருட்டு தம்மனைவி ஆசிரையிடத்துத் தாமருச்சித்த அறுகுகளில் ஒன்றைக்கொடுத்து அவ்வறுகினெடைக்குப் பொன்வாங்கிவரும்படி தேவேந்திரத்தினிடத்துக்கனுப்ப இவன் ஷ்டி முனிவர் மனைவியை அளகைக்கோனிடத்தைக் கனுப்பியபோது அவ்வோரறுகினெடைக்கு, குபேரனுடைய பொக்கிஷ முழுதுங் காணுமற்போனதிமித்தம், அவனும் அப்பால் தேவேந்திரனும் திரிமூர்த்திகளும் அவரவர்கள் பரிசனங்களோடு தலையெறியும், அறுகிட்டதட்டு உயராமைகண்டு சகலரும் வியந்து கவுண்டின்னியமுனிவரிடத்துக்குவந்து, அவரைப்புகழ்ந்துவெவ்வேறு வாங்கொடுத்திருந்தும் பதவியை யடைந்ததும், சிவபிரானது கட்டளைப்படி காமதேனு கற்பகவிருக்ஷ முதலியவைகள் வந்து அம்முனி புக்களிக்கு சேவை செய்திருந்ததுமாம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரவு பசுந்துர் வையின்மேன்மை விளம்பக் கேட்ட பிதிர்தேவன்
குரவ னிருதாண் மலர்பணிந்து கூறுமகிழ்ந்தான் றேனு நண்ண
வரிய தாயிற் பலன்பூசை யாற்று மாறிங் கடியேற்குத்
தெரிய நவில்க வெனலுமயன் சிந்தை களிகூர்ந் தியம்புவான். [௬௩]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பலவகை யான §வோடதி களுஞ் †சொற் பதங்கர் தராமைபோல் வன்னி, நிலவுமந் தார மைங்கரன் பூசைக் குறைபொருள் களினிக ரற்ற, விலைகொள்வன் னியைமுன் னியம்புதும் விதற்ப தேத்திறு தேயமென் றுரைக்கு, மூலைவில்சீர்ப் பதியில் வேடர்தம் மரபி லுதித்துளான் வேமனென் றொருவன். (௬௪)

தீமையே யலது நன்மைசற் றெனினுஞ் செய்தறி யாதவன் வழியிற், போமவர்க்குறுகண் பலபுரிந் தவர்தம் பொருள்கவர்ந் துண்பவ னொருநாட், மலி யிதழித் தார்முடி யிறைவன் றிருவிழாப் போற்றவங் கெதிர்ந்த, மாமறை யவர்க்கொன் றவர்பொருள் வவ்வி வருபொழு தாங்கொரு நிருதன். ( )

வெருக்கொடு புலியின் முடுக்கவப் புளிஞன் வெருக்கொடாங் கமர்சமித் தருவிற், பொருக்கென விவர்ந்தா னிவர்ந்திடு விசையிற் புகலுமத் தருச்சினை நின்றோர், மருக்கமழ் முறியம் மாமுதல் வதிகை மாமுகன் றிருவடி விழுந்த, தாக்கனு மிவா வொருதனி யமல னணிமுடி மிசையின்வீழ்ந் ததுவே. [௬௬]

இருவருட் ருதாங் கிருநிலத் திடைவீழ்ந் திறந்தன ரிறைவனின் னருளா, லொருபெரு விமான முறவதி னிவர்ந்தே ருலவுவா முகனுலகடைந்தா, ரருள்பெற் றுமவர்பூ ருவவினை யுரைத்து மணிமலி விதர்ப்பநா டளிப்பான், வருபெயர் சாம்ப னென்னுள்ளா னவன்றன் மந்திரி துன்மதி யென்பான். [௬௭]

அன்னமந் திரிபா லாசியன் முற்று மடைத்தா சாய்வரு சாம்ப, னன்னெறி யொழுகா தூன்மது நிகர்த்து விரியர் தங்களுக் கானாய், மன்னிணொருநா ளமைச்சொடும் வனத்து வேட்டம்போய் மீண்டிடும் வழியி, னின்னறீர்த் தருளே சம்பனே வசிட்ட னிருத்திமுன் னேத்தொரு கோயில். [ ]

§ ஓடதி—மருந்து.
† சொற்பதம்—நெல்லன்னம்.

கலிப்பா.

உயர்சிகரி யொடுங்காணு துறவங்கே சாம்பனெய்திச்
செயிரில்சின காமவாழ்நஞ் செம்மனுக்கட் பதியர்சிலர்
மயறவிர்வான் பொங்கலிட மஞ்சனமாட் டிடச்சிலர்தாம்
வியனுறுதேன் கனிமுதலா மிகப்படைத்துச் சிலர்துதிப்ப. [௯௯]

சிலர்நடிபபச் சிலர்சேவை செய்திடக்ககண் டனையனுந்தன்
கலைபயிலா வமைச்சொடொரு விளையாட்டாக் கனிகாய்தேன்
றலைபெருகாட் டிடைநெருங்கித் தானையைக் கொடுவரச்செய்
தலகில்விளை யாட்டயரு மைங்கரனுர் முன்படைத்தே. [௱]

நானுமுனக் கடிமையென நவின்றுவலஞ் செய்துபின்ன
ருனமிறன் னகரடைந்தாங் கொள்ளிழையார் மயலின்முற்றி
வானெனவு மண்ணெனவு மலையெனவுங் கடலெனவு
மீனமிகு பாவமுன்போ லீட்டிவாழ்ந் தனன்முடிவில். [௱௧]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துன்றிய நடுவன் றூதர் சூழ்ந்தமைச் சோடும் வேந்தை
வன்றிறற் பாசந் திர்த்து வருத்தியங் கவன்முன வுய்த்தார்
கன்றுதந் தியைய ரனைக் கானரி புள்ளோ றென்னத்
தென்றிசைக் கிறைவ னேகசிச் சித்திர குத்தற் கூவி. [௱௨]

இவரியல் புரைப்பா யென்ன விருவரு மிறக்குங் காறு
நவையுறு தீமை யன்றி நன்மைசற் றுஞ்செய் யாதா
ரவவிளை யாட்டி னோர்நா ளைங்கரப் பெருமான் முன்போய்ப்
பவவுனக் கடிமை யென்னப் பகர்ந்ததுண் டென்றுன் கேட்டு. (௱௩)

புண்ணியப் பயனை முன்னர்ப் பொருந்துமா றிவர்க்கின் றற்று
னண்ணுபா வப்ப யன்று னாகம்யா வினுமுய்த் தெய்தப்
பண்ணுமி னெனவவன் றூதர் படுத்திய பாடு கேட்டோ
ருண்ணினைந் திடினுங் கம்ப முறுவரோ லோதற் காமே. [௱௪]

வெய்யகா லேழு கோடி நரகினும் வீழ்த்தி வீழ்த்தி
யையகோ வவையொவ் வொன்றுக் காயிர மதற்கு மேலா
மெய்த்துமாண் டிடும்பை செய்தா ரிவ்வண மாழ்ந்து ளைந்து
முய்வகை யில்லார் பாவத் துற்றிடு மெச்சத் தாலே. [௱௫]

நன்னரில் காகங் கூகை நாகந்தே ணகுல மேன
முன்னிகர்த் தபரய் பூனை யொட்டக மதமால் யானை

யென்னவெண் டிசைநீர் சூழ்ந்த விடமகன் புவியி டத்துப்
பன்னரும் வகையி யற்றும் பவத்துளா யினரா லின்னும். (௱௰௬)

இழிந்தபல் யோனி தோறு மிவ்வணந் தோன்றித் தோன்றி
யழிந்துயர் திணையாண் பாவி லவதரித் தற்ப மேனும
வழிந்தொழு கன்பி லாத வல்லரக் கனுமா யிர
மொழிந்தவே டுவனு*மாய்ப்பின் றுயர்சமி மரத்தி வர்ந்தார். [௱௰எ]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அன்னபா தகப்பே றிவ்வணந் துய்த்தே யகன்றபின் புண்ணியப் பேறு, முன்னமோர் கணேசற் கோர்விளை யாட்டா முடித்தபூ சைப்பயன்றுய்ப்ப, வன்னிவான் றளிர்வீழ்க் தபுத்திபூர் வத்தான் மாய்ந்ததோ ருபர்ந்தபூசனையா, மென்னவத் தருமூ லத்தின்வாழ் கணேச னின்னருள் செயக்கதி சேர்ந்தார். (௱௰அ)

இனையவைங் கரனை வன்னிநீ ழடியி லிருத்திமால் சடக்கரஞ் செபித்துத், துனிபுரி யிரணி யாசுரற் படுத்துந் தூயவை குந்தமன் றடைந்தான், பினருமவ் விறையைப் பணிந்திர ணியன்றன் பின்னவற் படுத்தவன் றனையன், றனையுமாங் கொழிந்து வாமன னுய்ப்பின் சாய்த்தனன் மாவலி தனையும். [௱௰௯]

இன்னகா ரணத்தாங் கெழுந்தருள் புரியு மிணையிலா விநாயகர் தம்மை, வன்னிமா விண்டு விநாயக னெனவும் வாமன விநாயக னெனவும், பன்னுவா ரொன்னப் பண்பொடு பகர்ந்து பங்கயப பொருட்டுறை பவன், மின்னுபா சடைசார் சமியொடு மலர்மந் தாரத்தின் மேன்மையும் விளம்பும். (௱உ௰)

பண்டொரு தினத்துக் கயிலையங் கிரியிற் பார்பபதி சிவபரஞ் சுடரோன், முண்டக மலர்த்தாள் பணிந்துகுஞ் சரமா முகன்சமி யுவந்தென் கனிவாய், விண்டினி தருள்கென் றிரபபவெம் மீசன் விள்ளுமகின் றுதவினுய் புவியில், வண்டினு முரல்பூம் பொழில்வளை கன்னை மென்றொரு மாநக ருண்டே. [௱உ௧]

அன்னதொன் னகர்க்குக் காவலன் பிரிய விரதனு மவன்மனை கீர்த்தி, பொன்னிகர் பிரபை யெனுமிரு வரிற்பின் னவளெனும் பிரபைபாற் பொருந்தி, மன்னன்மா †விபவ மளித்திட வவளோர் மகனையும் பயந்துவப் படைந்தாண், முன்னவள் கொழுநன் பணிதவ ருளோர் நாண்முத லவனிடத் துறவும், (௱உ௨)

---

†விபவம்—செல்வம்

இளையவள் வெருண்டிங் கேனடுத் தனையென் றெழுந்துதைத் திடவி றைபார்த்து, மனியிலன் போல்†வா ளாதிருந் தனன்மூத் தாளுயி ரகற்றி டக் கருதி, புளைவொடு வெளியே வருபொழு தாங்கோர் கணிதனும் றவ ண்முக வாட்ட, வினைவறிந் தோம் பனையருச் சிக்கின் வேந்தனின் வயப்ப டு மின்னே. (௱உ௩)

என்றலீ தியற்று முறைமையு மியம்பி யேகினன் பின்னரக் கீர்த்தி, யொன்றிடர் களைந்து நறுமலர் தூர்வை யாதிகொர்க் குறுதிர வியத்தாற், றென்றரி யயன்வா னவர்முத லானோர் தூயநற் பூசனை முடித்து, நன்றடை *தேவ தருநிழ லொன்று நாயகன் பூசனை புரிந்தாள். [௱உ௪]

நித்தலும் பரிவி னிவ்வணம் பூசை நிகழ்த்திவந் திடுதலு மோர்கா, ளுத்தம வறுகு கிட்டுத லின்றி யுளந்திகைத் ததிருறு வன்னிப், பத்திர ம் பறித்துக் கொணர்ந்தனர் பணிசெய் பாவைமா ரறுகிடு நியம, மித்தின மொழிந்த தேயென வுள்ளத் தினைவுகொண் டன்னபொற் றொடியும் (௱உ௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வன்னியந் தளிர்கைக் கொண்டு வரதர்செம் மலர்த்தாண் மீப்பெய்
துன்னரும் பூசா நேச முளுற்றியுந் தினம ருந்து
மன்னமன் றொழித்தா ளத்‡தோ மகன்றிட வருளை ரம்ப
முன்னவ னவள்க ளுவின் முதிர்சமிச் சடில ராகி. (௱உ௬)

வாணனி விரிம தாணி மார்பணி மானீ தந்த
சீணில மருவும் வன்னி நிலவுமென் சடையின் மன்னிப்
பூணுதல் காணி னுள்ளப் புன்கணீங் கிடுதி யின்னே
கெணினக் கினைய நீசெய் கெழுமுபூ சனைக்கு வந்தாம். [௱உ௭]

தருகுது மென்ன லோடுந் தனியிளம் பிடிவ ணங்கி
யருகுறு தூணி னுணி யடுத்தெதி ராடா தங்க
ளுருகுளத் தோடு நிற்ப வுற்றிடு குறிப்பு நோக்கி
முருகவிழ் கடுக்கை வேணி முதல்வனல் லருள்வ ழங்கும். [௱உ௮]

பொற்றொடி யின்று தொட்டுப் பூதலம் பொறுத்தாள் கின்ற
கற்றிணி புயம னின்மேற் காதன்மீக் கூர்வான் வாஞ்சை

†வாளா திருந்தான்—மௌனமாயிருந்தான்.
*தேவதரு—மந்தாரமரம்.
‡தோம்—குற்றம்.

யுற்றிடு பிரபை யாம்பின் னவடெ ருறுவா னின்பால்
வெற்றிநல் கொருசெய் தோன்றும் விளம்புமோ ராண்டு சென்முன். [ ]

ஏருறு மகற்குக் கிப்பி ரப்பிர சாத னென்னப்
பேரிடு பிராய நான்கிற் பிழைசெய்மாற் றவள ருத்து
மாருநஞ் சடிசி லுண்டாங் கலக்கணுற் றழுந்து மீதுந்
நீருமெய்த் தவக்கி ருச்ச மதமுனி சேவை யாலே. [ளகூ0]

எனவர மளவின் றீய்ந்தே யிம்மென மறைந்தா ரன்பர்
மனமலர் மிசையின் வைக வைகறை துயிலி னீங்கிக்
குனிநுதல் கனவிற் கண்ட குணனெலா மகத்துட் கொண்டு
புனிதவைங் கரனைப் பூசை புரிந்தினி திருந்தா ளிப்பால். [ளகூக]

மாற்றவள் பிணியுண் மூழ்கி வனப்பழிந் திடநீள் வையம்
போற்றுமன் னவடன் போகம் போக்கியின் னவட்கே முற்றுந்
தோற்றமில் பொக நல்கச் சுகமனு பவித்தாண் மூத்தா
ளாற்றலிற் சிறந்த கைம்மா வானன னருளா லம்மா. (ளகூ௨)

வளர்சிறப் பனைத்து மல்க வாழ்வுறு மூத்தா ளொற்றை
யிளவலைப் பயந்து கிப்பி ரப்பிர சாத னென்ன
வளைவள ருரகம் பூண்ட வண்ணலன் றிசைத்த வாறே
களிர்தரு நாமந் தந்தா ளுயகற் கேமந் தந்தாள். (ளகூ௩)

பிறையென வளர்ந்து மைந்தன் பிராயநான் குறத்தாய் மாற்று
ளிறைமைதன் சேயி மூக்கு மெனவுளத் தெணிக்கொ னஞ்சு
செறியமு தீய்ந்தாண் மூத்தாள் சிறுவனுக் கவனே ருது
தறைவிழ வரச னஞ்சி யதுதவிர்த் திடமு யன்று. (ளகூ௪)

பல்வகை புரிந்தும் யாதும் பயன்படா திருப்பக் கண்ட
வில்வளர் மணிப்பூண் கோதை விமலனன் றருளிச் செய்த
நல்வர நினைவுட் டோன்ற நலிவுறு கணவற் றேற்றி
மல்வளந் தருசெய்க் கொண்டு வனம்புக மாய்ந்தா னங்கண். [ளகூரு]

மிக்கெழி லுடல முற்றும் வெயர்வொடு குளிர்தல் கண்டாள்
சக்குபஞ் சடையக் கண்டா டளர்ந்துயிர்ப் புடையக் கண்டா
ணக்குபல் கரியக் கண்டா ணுசிகை சரியக் கண்டா
டுக்கமிக் கனவென் செய்வாள் சொரமுற் றழுது சைவாள். (ளகூசு)

வேறு.

என்னருமை மகனேயோ விளமடங்க லேறேயோ விரும்பூ வாரூ, மன்னரசுக் குரியமழ மன்னேயோ பொன்னேயோ மண்ணின் மன்னு, மொன்னலர்செய் பகையினைவு முறவினர்செய் நகையினைவு மொழித்தென் கண்ணே, முன்னவனின் னருளின்வந்து முளைத்தெழுந்த முளையேயோ முடிந்தா யேயோ. (௱௩௰௭)

ஆவாவென் கண்மணியே மாற்றுந்தாய் கூற்றமென வறையு மாற்றஞ், சாவாவென் பதுநேறச் சான்றுறு யான்றாழ்வு சார்ந்தே னென்று, மோவாத மும்மைநல னும்பெறநின் னுதாவை யுன்று மென்னை, மாவாழுங் கானவிடுத்து வானடுத்த தென்னையிது மாண்பே மைந்தா. [௱௩௰௮]

வேறு.

என்னவிவ் வண்ணங் கீர்த்தி யிரங்கிடு மேல்லை யாங்கே
துன்றுபல் விலங்கும் புளளுந் மருமமுஞ் சொரிந்த கண்ணீ
ரன்னையே யனைய நாத னருளினால் வனத்தின் கண்ணே
மன்னுமெய்த் தவக்கி ருச்ச மதமுனி மனத் துணர்ந்து. [௱௩௰௯]

ஒல்லைவந் தெதிர மாதன் றுவாமுக னருளிச் செய்த
தொல்லைமா தவனென் றுன்னிச் சுதனைமண் கிடத்தி யன்பின்
மல்லன்மா தவற்ப ணிந்து வாவுரை திரந்து நிற்ப
வல்லறிர்த் தருள வல்ல முனிவா னஞ்ச லென்று. [௱௪௰]

பின்னரோர்ந் துரைப்பான் கீர்த்தி பிறங்கவாழ் கீர்த்தி மின்னே
வன்னிமென் றளிர்கொண் டெம்மான் மனாமல ரடிவ ணங்கி
முன்னொரு தினத்துப் பூசை முடித்தனை யதினற் பேறு
தன்னைநின் மைந்த னங்கைத் தலத்தினி தளித்தி யென்றான். [௱௪௰௧]

அருமைநற் பொருளோ வீதென் றதிசய முடைய ளாகி
யொருமக னங்கை நல்க வுறங்கினேன் விழித்தான் போலும்
பெருமக னெழுந்தான் கீர்த்தி பிறங்குசீர் முனிவற் றொழா
மருவுமிழ் சமியின் மென்மை வழங்கென வழங்கு மேலோன். [௱௪௰௨)

வேறு.

உண்மணக் குருகிப் பணிவோர்க்கே யுறுநோ யொழித்தின் னருள்பொழியும்
வண்ணக் களிற்று முகப்பெருமான் மலர்த்தாட் கன்பு செயுமாதே

கண்ணுக் கினிய சமிநாம மொருகாற் கழறின் வாக்கதனு
லெண்ணுக் கரிய பவங்கடோறு மிழைத்த பவந்தீப் பஞ்சேயாம். (௱௪௩)

நினைக்கிற் கழிந்த பவந்தோறு நிகழ்த்திச் செறிந்த பவத்தோடு
மனத்தி னிகத்துப் புரிந்ததுவு மடியும் வலஞ்சூழ்ந் திடலுடலங்
குனித்து வணங்க லதற்கியற்றிற் குரம்பை யகனுற் புரிதீமை
யனைத்தும் பரிதி யெதிரினிலா தழியு மிருள்போ லழிந்திடுமால். [௱௪௪)

தவத்தான் மகத்தா னினிதளிக்குந் தான மதனு னனிவிரத
மெவற்று னடையும் பெறும்பேறு மிணையில் சமியின் றளிர்கரங்கொண்
டுவப்பா னியற்று மருச்சனைக்கங் கொவ்வா துலக வளங்களொடு
தெவிட்டாக் கனியாம் பாகதியுஞ் சேர்க்கு மெனவின் னதுமவிலும்.[௱௪௫]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பவகனி யகற்று மரியமா தவருட் பாழியா ராளியே றனைய, சவுனக மு
னிவ னிடும்பணி புரிமந் தாரனும் பெயரினன் மறையோ, ரவுரகன் புதல்வி
சமியெனும் பெயரா டனைமணந் தரியசாந் தியுஞ்செய், துவமையின் மனையு
ந் தானுந்தற் பயந்தா ரிற்புக வுனிநெறிச் செல்கால். [௱௪௬]

வினைப்பய னிரண்டுந் தினைத்திடுங் கால மேவலி னவரொதி ருற்ற, த
னிக்களிற் றனை முகன்றிரு வுருவந் தாங்கிய புருசுண்டி முனிவன்,முனித்து
திக் கையும கன்பெரு வயிறும் பார்த்துமுன் னகைத்தன ரதனு, லனைத்து
ல குயிர்க்கும் பயப்படா மரங்க ளாகுமி னெனத்தவன் சபித்தான். (௱௪௭)

தவமுனி சபித்த வாறிரு வருந்தந் தம்பெயர் கொளுமர வுருவா, யவ
னியி னெடுகா ணின்றன ரதனை யறிந்தன சவுனக முனிவன், கவல்வுகொ
ண்‡டொருத்தன் முகனடி பன்னுட் கருத்தினு ளிருத்திநோற் றிடலும், ப
வனவன் முன்மா வதனநன் கிலகப் பானிற வரியிவர்ந் தெதிர்ந்தான். [ ]

அரிறபு தவன்கண் டடிபணிந் தெனையா னையமந் தாரனு மவற்குப்,
புரிவுசேய் மனையாஞ் சமியுமாங் கேய்ந்த புனைசெறி மாவுரு வகன்று, நவு
ருப் பெறுமா றருடியென் றிரப்ப நாதனூர் நமதுவெஞ் சாப, மொருபொழு
தொழியு மொழிதரா வடியா ருருத்திடு சபிப்பருந் தவனே. [௱௪௯]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னண மாயிற் றேனு மெமக்குநீ யன்பு செய்தா
யன்னது னூலே யன்னோ ரமைந்தவா மாமே யாகத்

‡ஒருதலை—யானை,

துன்னுபன் மேன்மை யெல்லாந் துலங்கயா மவற்றி னீழன்
மன்னுது மெம்மோ டாங்கே யவற்றையும் வணங்க யாரும். [௫௰]

பாவுபல் பொருளு மங்கைப் படும்வகை விழைகின் றோருந்
தீவினை வலத்து வந்து செறியும்விக் கினங்க ளெல்லாம்
போவதற் குழைகின் றோரும் பொலிவுறு மவற்றி னீழனை
மேவுநம் பதும பாத விணைமலர் பணிதல் செய்க. [௫௧]

பலதிர வியங்க ளின்றிப் பத்திசற் றேனு மின்றி
நலனொடு குலமு மின்றி நண்ணினுஞ் சமிமந் தார
விலைமல ரானச் சிப்போ ரெண்ணிய வெண்ணி யாங்கே
நிலைபெற வவர்க்க ளிப்பா நிலைவா மிதுதே ரொன்று. [௫௨]

அத்தரு நிழல்வா யெம்மா னருளின்வீற் றிருந்த தாகு
மெய்த்தவ முனிவ னுமச் சவுனகன் முதல மேலோ
ருத்தமச் சமிமந் தாரத் துறுமுறி மலர்கைக் கொண்டு
கத்தனைப் பூசை செய்தார் வன்னிமங் கையைப்பெற் றாளும். [௫௩]

ஆங்கமர் கணேசற் போற்றி யரியசா லோகம் பெற்று
ளோங்கறு கில்லாத் தோட முயர்மந்தா ரப்பூ நீக்கும்
பாங்கினிவ் விரண்டு மில்லாப் படுகுறை வன்னி போக்குந்
தேங்குநீர்ச் சடையெம் மானுந் திருமுடி மிலைந்தான் வன்னி. [௫௪]

என்றுமா தவத்தோன் பின்னு மிரணிய கருப்பன் மேனா
ளன்றருள் சுமுகர் போற்று ணயந்திடா தியற்று தற்காங்
கொன்றிய மகத்தின் வாணி யுருத்திடு வெஞ்சா பத்தா
லன்றரி யாதி †தேவர் நீருரு வான வாறும். [௫௫]

அன்னநீ ருருவ மாற்றற் கவர்மண மகளிர் வன்னிப்
பன்னமென் றளிர்கொண் டெம்மான் பதமலர் பூசித் தேத்தி

---

† தேவர் நீருருவானதும் அதுமாறியதும் என்பது:- முன்னொருகாலத்தில் பிரமனுனவன் தன் பத்தினிமார்களிருவரில் சாவித்திரியையன்றி காயத்திரியொடு தேவர்களெல்லாம் புடைசூழச்சையவரைச் சாரலையடுத்து யாகஞ்செய்வதைக் கேள்வியுற்ற அச்சாவித்திரி ஷெ வேள்விக்கு உடம்பட்டிருந்த மகாவிஷ்ணுமுதலிய தேவர்களையெல்லாம் நீருருவமாகும்படி சபித்தவாறு அவர்களுக்கமைந்ததை மாற்ற இலக்குமி முதலிய தேவமாதர்கள் விநாயகமூர்த்தியை அநேகவிதமாய் வெகுநாள் பூசிததுந் தங்கள் எண்ணம் நிறைவேறாமைக்காக வருந்திய போதுண்டான அசரீரிப்பிரகாரம் வன்னிப்பத்திரத்தால் விநாயகனைப் பூசித்துத் தத்தங் கணவர்களது நீர்வடிவை மாற்றியதாம்.

நன்னயம் பெற்றவாறு நவின்றுதிர்த் தியின்சே யாயுண்
மன்னநா லெழுத்தா லாய மனுவவன் செவியி னோதி. (௯௬)

தலனொடு தீர்த்த மூர்த்தி தன்மையிற் சிறந்தெந் நாளு
நலனருள் காசி மேன்மை நவின்றதற் கிறையாந் திங்கண்
மிலைதரு செக்கர் வேணி விசுவேசர் திருமுன் வாழு
மலவலி தொலைத்தா டுண்டி விநாயகர் மலர்த்தா ளேத்தி. (௯௭)

தொகுவரங் கோடி யென்று தூய்க்கிருச் சமத மேலோ
னகற மகனோ டன்று ளவிழ்த்தத் தலத்தி னெய்திப்
புகறரு மாசித் திங்கட் பொருவின்மங் கலவா ரத்துத்
தகவுறு மமர பக்கஞ் சதுர்த்தியாஞ் சுபதி னத்தில். (௯௮)

காலைசெய் கடன்க ளாற்றிக் கவின்றரு சமிலா யுற்று
நாலெழுத் தோதி மாலை நளிர்மதி யுதய வேலை
பாலிழு தறுகு வன்னிப் பாசடை மந்தா ரத்தின்
கோலமென் மலரு மற்றுங் கொண்டுவா முகற்பூ சித்தான் [௯௯]

பூசனை முடிவி னெம்மான் பொருவிலா னனமோ னைந்தாய்க்
கேசரி யிவர்ந்து சேய்முன் கிடைத்திருஞ் செல்வ மாதி
யாசற வுறுக நிற்கென் றறைநதொரு பாசு மல்கிப
பேசநிற் பாசு பாணி யெனப்பிறங் குலகிற பிள்ளாய். [௧௦௦]

ஆயிர வருட மண்ணுண் டைதிமைய முலக மென்று
நேயர்தம முளத்து மன்ன நிருமலன் மறைந்தான் மைந்தன்
றுயொடு தன்னூர் சென்று நரணிபா யிரமாண் டாண்டு
பாயொரு மருப்ப னுதி பதவிபுக் கின்புற் றுறல். [௧௦௧]

பொருகைம்மா முகத்தோன் வன்னி புனைந்துவந் ததுவ் மற்றால்
வருபெரும் பயனு மீதவ் வாதனும் யாமும் வேறென்
திருவளா மடந்தாய் சற்று மெண்ணலை யனைய வள்ளற்
குரியன வெவையும் யாமு முவந்துமே லணிந்தா மாதோ. [௧௦௨]

எனவரா னிமய வல்லிக் கியம்பினான் வன்னி மேன்மை
தனையுளம் பிதிரோ கொள்கத் தனியறு கில்லா வேலை
நனையவிழ் சமிமந் தார நறுமுறி மலர்க ளாலே
யனகனுக் கிசைந்த பூசை யாற்றுகென் றயனை வின்றான். [௧௦௩]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மனவிட ரொழிக்குஞ் சங்கட சதுர்த்தி மகத்துவங் கேட்டதென் பு
லத்தோனை, வினவுவா ன் கமலன் மலரடி தொழுதவ் விரதமுற் றுறுவகை

விரம்பு. கெனவது தொடங்கு மதியிலேம்மதியி னெல்லைதேழ் மதியில்வந் திலையுந், தனைநிகர் சதுர்த்தி நாட்னிற் கலசந் தாபித்துத் தட்டமொன் றிட்டு. [௱௬௪]

ஒருமடி விரிதமேதந் திரமமைத் தாங்கே யுவமையில் சித்திபுத்திகளோ, -டுா்பொழி கணேசர் திருவுரு விருத்திப் பூசனை யாற்றுக பின்னர்க், குருமிளிர் பொன்செய் விநாயக ருருவை யேந்திரத்தொடுகுர வனுக்குப், பெருமையி னளித்தா குதிமுறை புரிந்தெட் பெறுமுறை குறுணியீயந் திடுக [௱௬௫]

பொருளுளார் சுரபி பூமுதற் றான மவரவர் தகுதியிற் புரிக, விருமறை யாள ரிருபதோ டொருவர்க் கின்னமு தூட்டுக் ஆட்டிப், பெருகிய சேடந் தனையன்பி னுகர்க பிழைதவிர்த் தேனைநற் பயனுந், தருமரும் விரத முடிவிஃ தென்னச் சாற்றியே நான்முகன் பின்னும். [௱௬௬]

†கருக்கடை வரையை யொரீஇய பொதியத் தமிழ்முனி யாதியர் பேறு, பெருநகநல் கின்ன விரதநன் காற்றிப் பெற்றன ரவரவர் வேட்கை, திருக்கிள ரரிபு மமரரும் யானுஞ் செல்லல்வந் துற்றிடி லதனைக, கருக்கவிவ் விரதம விதிமுறை யியற்றிக் கதநலம் பெற்றன மென்றான். (௱௬௭)

பிதிரனிவ் வுரைகேட் டியானுமென் குலமும் பிழைத்தன மெனப்பெரி துவந்தவ், விதிசொன படியவ் விரதமேன் மையினை விளைந்தெரரு புத்தகத் தெழுதிச், சுதனடைதனவி னவற்களித் தெனையாள் சுமுகநாக குவந்தோன் பியலபா, மிதுவித் முறையி னியற்றினான் மகவுண் டென்மக வென்றகன் றன்றல். [௱௬௮]

மகன்கன வகன்று மனைக்கிது புகன்று மணிநிக டன்னக ரடைந்து, புகலரு மறைவல் லபவை ரலப் புத்தகத் தடங்கிய விதியோர்ந், தகமகிழ்ந் தனைய சதுர்த்திகோன் பியற்றி யந்தணர்க் கேழ்மதி யினிற்பொன், றகவுற வளித்து நிகழூரண் மனையோர் தனையனைப் பயந்தனண் மாதோ. (௱௬௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறுவனைப் பயந்த மாதச் சேயிரு கரந்தா ளின்றிப்
பிறவுறுப் பமைந்து தோன்றக் கண்டினைந் திடப்பி தாவு
நிறைமகிழ் விலனுய்த் தேறி நிகழ்சாத காதி யாற்றி
விறல்கொடன் சேய்க்குக் கார்த்தி வீரிய னெனப்பே ரிட்டான். [௱௭0]

‡ திருக்கடைவரை—இருமாப்புற்றமலை-அஃதாவது விந்தகிரி.

அன்னசேய் தனக்குப் பன்னீ ‡ரகவைவந் துறலு மாங்கே
முன்னுதெத் தாத்தி ரிப்பேர் முனிவரன் கருணை கூர்ந்து
மன்னுமே காக்க ரத்தை வழங்கமா முகவன் போற்று
றுன்னிநோற் றுவந்தான் பன்னீ ராண்டுகா றுற்றம் மைந்தன் [௱௭௧]

கடமுமிழ் கயமு கத்தெங் கடவுளன் னவன்பாற் றோன்றித்
திடமுறு காலி ரண்டுஞ் செங்கையா யிரமு நல்க
முடமெனு நவைதீர் கார்த்தி வீரியன் முதிரன் பெண்மைக்
கடருமக் கான கத்தோ ராலயம் பிறங்க வாற்றி. [௱௭௨]

வேறு.

தவளமதி நிலவுமிழுஞ் செக்கர்வார் சடையண்ண றன்முன் காட்சி
பவளநிற வடிவினல்கு பான்மையினாற் கடலபடுசெம் பவளந் தாலே
சகளவடி வாமூர்த்தஞ் சமைத்தாங்குப் பதிட்டைசெய்து சார்பா வத்தைக்
கவளமிடக் களித்துண்ணுங் கருணைவா ரியைத்தொழுதான் கவலைதீர்வான்.

ஆதலினால் வெங்கலிதீர்த் தாள்சூர சேனனெனு மரச னேற
மியதமிற்சங் கடசதுர்த்தி யொருநாட்செய் நோன்பதனை யென்கை நல்கிற்
றீதறுசெம் மணிமான மெ[illegible]ர்வா னுலகத்துச் சேரு மென்றான்
மாதவர்தோளிதம்பரிப்பச் சதமகஞ்செய் தம்பனையாண் மகிபன்மன்னே.

வேறு.

ஆதலாற் பொழுதோ ரில்லி னன்றுறு சதுர்த்தி நோன்பெண்
ணாவதே வனைப் புசித்து நிவேதநத்து மிசைமிசை யடகைப்
பாவுறு தெருவில் வீசப் பகரொணாப் பசியோ டயகன்
மேலொரு புலைமா துண்டு வெம்பசி நோய்த ணிந்தாள். [௱௭௫]

பின்னர்தற் செயலா லில்லோர் மும்முறை கணப திப்பேர்
பன்னின ரவளுங் கெட்ட படியப்பேர் பகர்ந்த நீரான்
மின்னெழில் விமான மெய்த விவர்ந்துவிண் படர்வா னோக்கம்
பொன்னகர்க் கிறைமா னதுப் பொருந்தலா லதுவு மன்னோ. [௱௭௬]

இம்மென வெழுத லுற்ற திருமறு முறைப யின்ற
செம்மைமாந் திரிக னோக்காற் சிற்றறி வலகைப் பற்றின்
மம்மருற் றவனபி ணிப்பற் றெழலினிவ் வாறோர் மானங்
கம்மடுத் தலுமிம் மானம் போதலுங் கண்ட வேந்தன். (௱௭௭)

---

‡ அகவை—வயது.

*மாதவர்தோளிதம் பரிப்பச்சதமகஞ்செய்தம் பனையாண்மகிபன்—என்பது பூவுலகத்தில் நூறு அசுவமேதயாகஞ் செய்தமகத்துவத்தினால் இருடிகளில் உயர்ந்தோராகிய, அகத்தியன், ஆங்கிரசன், கோதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்னும் சத்தரிஷிகள் சிவிகை தாங்கப்பெற்றும், தேவர்களையாளப்பெற்றும், அரசனான இந்திரன்.

மாசிமா மதிசேய் வாரத் துற்றமாண் சதுர்த்தி தன்னி
லாசிலவ் விரதங் கைக்கொண் டடுத்தெய்து சதுர்த்தி தோறும்
பேசுநோன் பாற்றி வாழ்நாட் பிறைமருப் பிறையு வந்தோர்
தேசுறு மானந் தேவ கணத்தொடுஞ் செறித்தாங் குய்த்தான். [௱எஅ]

வணங்கலர்க் கரியே றன்ன விறைகண்டு மகிழ்தாங் குற்ற
கணங்களை வணங்க வன்னோர் கற்செய்தோண் மன்ன வெம்மோ
டணங்கு சேர் விமான மூர்ந்தே கெம்பிரா னருள்செய் தானென்
றிணங்கின ரழைப்ப வேந்த னிவர்ந்துட னியம்பு கின்றான். [௱எகூ]

என்னைநீத் திடையும் வாழா விந்நக ரினரு மானந்
துன்னுமா றருண்மி னென்னத் தொகுகணத் தவரு நேர்ந்தா
ரன்னவர் யாரு மானத் திவ ரலு மஃதெ ழாது
மன்னலிற் கணத்தோ ராய்ந்தோர் வணிகன்வெந் தொழுநோ யாளன். [ ]

இன்னபொன் மானத் தூடே யெய்தலா தெழாதாற் றென்மை
பன்னுது மிவன்பு தப்பேர்ப் பனவஞ்சா வித்தி ரிப்பேர்
நன்மனை யோடும் வாழ்நாட் பரத்தைதோ ணயந்தோர் வின்றித்
தன்னையின் றவளை யோர்நாட் டடிந்திட மனைபொ ருளாய். (௱அக)

என்புரிந் தனைநீ யந்தோ விருமுது குரவர் தம்மைத்
துன்புறக் கொல்வா ரிந்தத் தொல்லுல கத்து முண்டோ
வன்பின்மே வாது பொன்னி னணையுயா தார்வத் தாலே
பின்புறு பழிபா வத்தைப் பேணிடாப் பேதை நீராய். (௱அஉ)

விலைமகள் பற்று முற்றும் விளையுமுன் வேத மாதி
கலைபயி லறிவு மில்லுட் கனதன மனைத்துந் தோற்றாய்
தலைமைமல் கைய னோடு தாயையு மிழந்தாய் சீரார்
நிலமனை யின்றோ நாளை யேல்காலோ நம்பி னீங்கும். [௱அந]

பின்னர்நன் றுடோ காடோ பெறுமிடம் வரைவின் மாதர்
தன்னிதி யற்றா லின்ப நல்கிடா ரேவல் கொள்வா
ரென்னையொத் தழுகுங் கற்பு மிளமையு மேக மாக
வுன்னுமுன் னன்பு முள்ளார் யாவருண் டுணர்தி நன்றாய். [௱அச]

ஆதலி லன்பு நின்ற னுவலி னடப்பேன் கண்டாய்
கோதுறு பழிபா வங்க ளென்னுடன் கூடி னில்லை
யீதுநன் மார்க்க மென்றாள் புதனென்பா னெனகுப் புத்தி
போதகனின் சாமே யென்ன வடன்றவ டனையுங் கொன்று. (௱அரு)

மன்னிவை யறியிற் றன்னை மாய்க்குமென் றன்றி ராவே
துன்னினன் றவத்தோர் வைகுந் தூய்வனத் தாங்கோர் மேலோன்
பன்னியைத் தொட்டன் னுள்சா பத்தினாற் றொழுநோ யுற்றே
யுன்னரும் பாவி யாவி யொழிந்தரு நரகுற் றுங்கே. [௱அசு]

இன்னவன் படுபா டென்னென் றியம்புகே நரகி யாவு
மன்னிமுன் பாவ சேடத் தாழ்மக் கற்பின் மாது
பன்னிய சாப சேடத் தானுமபின் பாத னுய்த்தோன்
றின்னசன் மத்து மங்கோ யிரிதரா துற்ப வித்தான். [௱அஎ]

அடுபெழி யஞ்சா தாற்ற வறன்கடை நின்றான் றன்னைத்
தொடுபழி யாவுந் தீர்க்குஞ் சுமுகர்தாட் போற்றி டாரை
விடுவதொத் திறக்கி மண்ணின் விடின்மணி விமானம் வேந்தே
முடுகிமேற் செலுமோர் கோட்டு முதல்வனு லகமென் றார். [௱அஅ]

மன்னவ னனைத்துங் கேட்டு வாய்மையென் றுளத்துத் தெள்ளி
யென்னையாட் கொளவ டுத்தீ ரித்தொழு நோயா ளற்குத்
துன்னிய பாவ மெல்லாந் தொலைந்திடற் குரிய பற்றி
தன்னைநீர் சூழ்மி னென்றக் கணத்தவர் பதந்தாழ்ந் தானல். [௱அகூ]

இணைமலர்ப் பாத மேத்து மிறையவற் கிரங்கி யன்ன
வணிகனைச் சிவக ணத்தோர் வளமருள் விழியி னோக்கிக்
கணபதி யென்று முக்கா லன்னவன் காதி லோத
வணிய தொழுநோய் நீங்கி யமலமா ரமர னானான். [௱கூ0]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மேருவை யடைந்த *கொடியும் பொன் னிறமாய் விளங்குமென் றுரைப்பான் னதுபோற், காரிரு ணாகாழ் வணிகனுங் குரிசில் கருணையிற் கதிக் குரித் தானான், சூரசே னனுமப் பதியினுள் ளவருந் தூவிமா னத்தொடு மெழுந்தார், காருயிர்க் கருளே ரம்பனு ருலகத் தடைந்தவ ரடிநிழல் வாழ்ந்தார். [௱கூக]

* கொடி—காக்கை.

சங்கடசதுர்த்திவிரதப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (௰௫) க்குத்திருவிருத்தம் (எ௱உ௰).

காசிபர்முதலியோருபாசனைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சங்கட சதுர்த்தி நோன்பு தகவுறப் புரிந்தோர் நால்வரிய்ச்
செங்கையைந் துடைய வள்ளல் சிவநகர் சென்று னந்தம்
பொங்கிவீற் றிருக்க லீது புகரில்கா சிபன்ப யந்த
மங்கலி லன்ப ரெல்லாம் வழுத்திய திறனுஞ் சொல்வாம். [௧]

பங்கயன் பயந்த காசி பப்பெய ரோன்பன் னுன்கா
மங்கைய ரொனுந்த னில்லார் மணிநிக ழகட்டு வந்த
சங்கையி லமா ராதி சராசர வுயிர்கட் கெல்லா
மைங்கரன் றனக்கு ரிந்தா மந்திர மநேகத் துள்ளே. [௨]

இன்னல மெளிதி னல்குஞ் சின்மனு வெடுத்தி யம்ப
வன்னவ ரமா ராண்டோ ராயிரஞ் செபித்து வந்தார்
மன்றுமு றுறக்க மின்றி மாமுகப் பெருமா னேகை
துன்னியங் கவர்முன் பல்வே றுருக்கொடு தோன்றுற் றுனல். (௩)

சிலர்முன மரியி வர்ந்துஞ் சிலர்முன மயிலி வர்ந்துஞ்
சிலர்முன மாகு வூர்ந்துஞ் சிலர்முனம் பாய்மா வூர்ந்துஞ்
சிலர்முன மனந்த வெண்ணாச் செஞ்சுடர்த் தேசு போன்றும்
சிலர்முன மனந்த வெண்ணத் தெண்மதித் தேசு போன்றும்.

†வித்துரு மத்து மேனி விளங்கிடச் சிலர்கண் முன்று
மைத்திர ளனைய தூம வடிவொடு சிலர்கண் முன்னுங்
கைத்தல மோரி ரண்டு கவினுறச் சிலர்கண் முன்னு
மத்தமோர் நான்கி லங்கு மழுகொடு சிலர்கண் முன்னும். (௫)

துன்னுகை யாறிற் சில்லோர் முனுஞ்சிலர் முனுந்தோ ளெட்டிற்
பொன்னெறி கரங்கள் பத்திற் சிலர்முனும் புயமீ ராறு
மன்னிடச் சில்லோர் முன்னும் வாகுமூ வாறிற் சில்லோர்
முன்னுமம் பாணி யோரா யிரத்திற்சில் லோர்தம் முன்னும்.

சிலர்முனம் விருத்த ரூபஞ் சிலர்முனந் தருண ரூபஞ்
சிலர்முன் மழவு ரூபஞ் சிறப்பவுந் தோன்றி நிற்ப
விலகுவா னவர்முன் னைய வேவருந் தானும் வென்றாழ்
கவர்சல சம்போற் றுத்த மகமுடன் முகம லர்ந்தே. [௭]

† வித்துருமம்—பவளம்.

காசிபர்முதலியோருபாசனைப்படலம்.

இருநிலத் துடல மாரப் பணிந்துசூழ்ந் திறைஞ்சி நேர்நின்
றருவிகண் பொழிய வின்ப வாழியுட் படிந்து செங்கை
திருமுடி மிசைமு கிழ்ப்பத் திகழுளத் தன்பு பொங்கிப்
பெருநாக் குழற மெய்கம் பித்திடத் துதிக்க லுற்றார். [அ]

கலிப்பா.

அடியார்தம் இடர்கடிவீர்த் தாள்பவனே மயின்மயிலைக்
கொடியானே யன்புவலைக் குட்படுமா குஞ்சரமே
நெடியோன தரவுருவ நீக்கியரு ளின்மலனே
கடியார்பொற் கொன்றைமுடிக கணபதிநின் சரணடைந்தாம். [கூ]

பாரினிடை யோரைந்தாப் பயத்தினிடை யோர்நான்கா
யானலி லோர்மூன்று யசையனிலத் தோரிரண்டா
யோர்பெருகும் விசும்பிலொன்று யியங்கிடுவோ யெனைத்துயிர்க்குங்
காரணனாய் நின்றருளுங் கணபதிநின் சரணடைந்தாம். [ய]

ஆணவமா மலவிருளி லனாதியா வுழலுமுயிர்க்
கேணுறுமம் மலநீங்க வினை மாயா மலமபொருத்திப்
பேணுவினைப் பயனொழிந்த பெற்றியர்க்குந் தனிவீடு
காணியதாத தந்தருளுங் கணபதிநின் சரணடைந்தாம். [யக]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எனவனே வருந்து திப்ப விரங்கிநுந் துதிக்கு வந்தா
ங்கனிவரங் கொண்மி னென்ன நல்கியெம் பெருமா னீங்க
வனைவருந் தாங்கண் டாங்கவ் வமலனுக் குருவி ற்றியுட்
கனிவுறப் பூசித் தின்ன திருப்பெயர் கழற லுற்றார். [யஉ]

வேறு.

இலங்குஞ் சுமுக னெனத்தேவ ரேக தந்த னெனமுனிவர்
பலங்கொள் கபில னெனவீணை பயில்கந் தருவர் கிம்புருட
ரலங்கு மேனிக் கெசகன்ன னெனச்சா ரணர்குய் யகர்சித்தர்
துலங்கு மிலம்போ தரனென்னத் துகடீ ரகில மானிடரே, [யங]

விளங்குங் கணநா யகனென்ன வியாழம் விகட னென விருகம்
துளங்குந் தூம கேதுவெனச் செல்லெண் டிக்கி லுள்ளோர்கள்
வளங்க டருவிக் கினராச னென்ன விலங்கன் மாங்கருணை
தளம்பு பால சந்திரனெனத் தனிர்புற் றிடங் கிருமிகளே [யங]

பொன்னாங் கணுத்தி யக்கனெனப் பொருவில் கங்கை நதியாதி
துன்னும் பலவாம் பெருந்தீர்த்தந் துலங்குஞ் சுசவா னனொன்ன
மன்னு முயிரின் றொகையனைத்தும் வழங்கி யவன்றாள் பணிந்தேத்தி
மின்னுந் தமது பதிபுகுந்து வாழ்ந்தா ரின்ன வியனுமம். [௰௫]

முந்தம் புதியின் மதித்தெடுத்த முதிருஞ் சுவையா ரமுதேபோற்
சந்தம பெருகு மாயிரமாக சாற்று நாமந் தனிலாய்ந்து
சிந்தை மகிழ்ந்தங் கெடுத்தனவாந் திகழா யிரமு மெடுத்தோதி
னெந்த நலனு மந்நலனை யிவ்வி ராறுந் தருமெளிதில். [௰௬]

வேறு.

என்னமு வுலகு மிக்க வெடுத்தினி தியம்பு மென்னி
னன்னசீர் நாம மேன்மை யாவரோ யறைய வல்லார்
தன்னனோர் விகடர் வானுந் தாணியு முய்வா றுற்று
மன்னிவீ லையினை யிங்கே வழங்குதுந் தெரிந்த வாறே. [௰௭]

காசிபர்முதலியோருபாசனைப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (௰௬) க்குத்திருவிருத்தம் ௪௱௩௰௭.

உபாசனுகாண்ட முற்றுப்பெற்றது

ஓம்.

விநாயகபுராண சங்கிரகம்.

இரண்டாவது

இலீலாகாண்டம்.

வக்கிரதுண்டன் றிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

மழைமதம் பொழிகை மாவின் வதனனாய்ச் சுமுகன் வண்மை
தழைதரு கபில னேக தந்தனல் விகடன் றக்கோர்
விழைகெச கன்னன் லம்போ தரன்விக்ன ராச னென்றெண்
குழைகொள்கா தினனாய் நின்ற னெவனவன் குளிர்தாள் போற்றி. (க)

கனிதூம கேது பால சந்திரன் கணாத்தி யக்கன்
முனிதீருங் கெசான னன்வக் கிரதுண்டன் சூர்ப்ப கன்னன்
புனையேரம் பன்க ணாதி பதிகந்த பூர்வன் போற்றற்
கெனவீரெண் டிருப்பேர் கொண்டா னெவனவ னிணைத்தாள் போற்றி. (உ)

சாற்றரு நெறிச்செல் லாரைத் தாக்கரு நிரையத் துய்த்து
மேற்றனிப் போகத் துய்த்தும் வினையிரண் டையும்பொ ருத்தி
மாற்றரும் பவநோய் தீர்க்கு மருத்துவ னாகி யாரும்
போற்றிட முதற்றே வானா னெவனவன் பொற்றாள் போற்றி. (ங)

வானவர் குழுவு நீர்சூழ் மண்ணவர் குழுவும் போற்றத்
தேனென வருள்வான் பெய்யுஞ் சிந்துர முகத்தி னாற்கு
ஞானமே கிரியை யென்ன நவிலிரு சத்தி மாராம்
பூநறுங் கூந்தற் சித்தி புத்தியர் திருத்தாள் போற்றி. (ச)

ஓமென லயத்து லாவு முவாமுக னாட லெண்ணின்
றாமென வுளைப்ப னோனு மவற்றுளா றிரண்டெ டுத்துக்
காமவேள் புரமெ ரித்த கணனுதன் மூர்த்தி நீபத்
தாமவேள் கேட்ப நன்கு சாற்றலுற் றனனென் பாரால். (ரு)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கறைவார் சடையான் றிருவவ தாரங் கழறிடின் வக்கிர துண்டன்
வெற்றிகொள் சிந்தா மணிவிநா யகன்சீர் விளங்கிய கசானன் பலவாங்

குற்றமுங் குணமாக் கொண்டடி யார்முன் குலவிடும் விக்கின ராசன்
பற்றுமுற் றொழித்தார்க் கருண்மயூ ரேசன் பண்புடைப் பாலசந் திரனே. சு

கதிதரு தூம கேதுநற் கணேசன் கணபதி பெருமகோற் கடன்மா,
மதியரு டுண்டி வல்லபை கணேச னென்னவா றிரண்டுமேற் றவற்றுட்,
பதுமன்முன் மூவர் போற்றும்வக் கிரதுண் டப்பெயர் மூர்த்த†முன் பகர்ந்
தா, நிதிபொழி சிந்தா மணிவிநா யகன்சீர் நிகழ்த்துது மறிதரு மளவே. எ

வக்கிரதுண்டன் றிருவவதார முற்றுப்பெற்றது.

சிந்தாமணிவிநாயகன் றிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

வளைவள நிரையார் முல்லை வளங்கடல் வளநீர் சூழ்ந்த
தளைவளம் பொலிவுற் றோங்குந் தண்டமிழ் நாட்டு வேந்தன்
களையில்சீ ரபிசித் தென்போன் குணவதி யென்னுங் கற்பிற்
புளையிலா மனைவி தன்பாற் கணனென்றோர் புதல்வற் றந்தான். (க)

அத்தகு புதல்வன் பால னாகிய பருவ நீங்கி
வித்தகத் தவமி யற்றி விதுமுடிப் பெருமா னல்கு
முத்தம வரத்தால் வேந்தா யுலகம்வான் பிலமும் வென்று
சித்தமீக் கூர்ந்து தேவர் திரட்கெலா மிடர்பு ரிந்தான். (உ)

புவிபுகழ் கணனிவ் வாறு பூபதி யாகி வாழ்நாட்
கவர்படு வேட்டம் போய்மீள் கால்வழி தப்பி யோர்காட்
டிவர்பரி சனரோ டும்ப ரொட்டும்வான் பொழில்வாய் மௌவ
லவிர்குறும் பந்தர் வாவி யருகுறல் கண்டாங் கெய்தி. (ந)

பலகலைச் சங்க நண்ணிப் பயின்றுணா ரறிஞர் மான
நிலைபெற வளர்ந்து வாச நிறைமலர்ச் சோலை நீங்கா
வொலிபுனல் வாவி மேவி யொளிர்முல்லைப் பந்தர் தாவி
யலர்மண முழுது முண்டாங் கசைந்தசைந் துலாந்தென் காலும். (ச)

மனமொழி வாக்குக் கெட்டா மறைமுத லொருவ னாய
வனக்கனை யுன்னிப் பல்கா லருந்தவம் புரிந்து கற்றுச்

---

†முன்பகர்ந்தாம்-என்பது உபாசனாகாண்டத்தில் மூவருபாசனைப் படலத்திற்காண்க.

சினமிரிந் தடங்கி னார்தஞ் சிந்தையின் றேற்றம் போலும்
புனறெளி கலுழி யுஞ்சேர் பொருந்துத னோக்கு தோறும். (இ)

புளகித மெழலா லன்ன பொழுற்பமை நதிநீ ராடித்
தளர்வகன் றிடலு மேவ ருங்குவோர் கனிகாய் கந்த
மூளகொணர்ந் தளிப்பத் துய்த்தா னிம்பதவ னுறைந்து நோற்கு
வளமலி கபில னோர்ந்தம் மன்னைமயிங் கழைத்தி யென்ன. (சா)

கலிநிலைத்துறை.

நின்ற சேடனை விடுத்திட மன்னவ னோர்ந்து
குன்ற லுன்பதம் பணிதலு மாதனங் கொடுத்து
வென்றி வேந்தவீண் டெய்தினோர் பசியொடு மீளா
ரின்று நீயுநன் கருந்தியே கெனவிறை யிசைந்தான். (எ)

பின்ன ரம்முனி முன்னர்வா னிறைதரப் பெற்றுத்
தன்னம் மார்பணி யாக்கொள்சிந் தாமணி தனையோர்
பொன்னி னாசனம் வைத்துபா சித்திறை புசிப்ப
நன்ன ரார்விருந் தியற்றுக வெனநவின் றிசந்தான். (அ)

அன்ன மாமணி நன்றென நகரமொன் றமைத்துப்
பொன்னி னற்கலம் பல்பொரு ளுணவமைப் போர்க
ளின்ன வாக்கிநான் குணவறு சுவைமற்று மியற்றி
மன்ன னாதியர் மிசைந்திட வழங்கிய தன்றே. (கூ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

மனமகிழ்ந் தயின்ற மன்னன் கபிலமா தவன்றாள் போற்றிப்
பனவருந் தவத்தி னெல்லா மனத்தினாற் படைத்துக் காத்துப்
பினாழித் திடவல் லோய்நிற் கெற்றிற்கிம் மணியே ராழி
புனையுல கோம்பு வேற்குத் தருமருள் புரிக வென்றான். (கo)

மாதவன் செவிக்கிம் மாற்றம் புகமிக வெகுண்டு மன்ன
கோதிலிம் மணியென் னாவி போன்றது கொடுத்த லொல்லா
தீதொழித் தெதுகேட் டாலுந் தருவலென் றிடப்பின் னெய்துந்
தீதுணா ராதா னன்ன மணிவலி தினிற்ப றித்தான். (கக)

---

*முன்னர்வா னிறைதரப்பெற்றுத் தன்னம்மார்பணி யாக்கொள்சிந் தாமணி என்பது-முன்னொருகாலத்திற் கபிலமுனிவரிடத்துப் போந்ததேவேந்திரனுக்குச்செய்த விருந்துக்கு அவ்விந்திரன் உவந்து அம்முனிவரற்குப் பூஷணமாக வணியப்பெற்ற சிந்தாமணி.

ஐம்புலக் குறும்பொ ழித்தே யான்றவா லறிவன் கோயித்
தெம்பொரு டனைவ லிர்தின் றபகரித் தனையித் தீங்கா
லும்பரோத் தெங்கோ வந்தன் னுயிர்தெறு மெனச்ச யித்து
வம்பவே கென்முன் னில்லே லெனமணி யொடும கன்று. (கஉ)

முனிவர னிட்ட சாப முறையென வளர வோர்பா
னனிவிருப் பெவையு மன்ன நன்மணி யுதவ வோர்பான்
மனமகிழ் வுற்றான் மன்னன் ‡மணியிழந் துழல்வி யாழ
மெனவுயர் கபிலன் றானு மயமபருந் துயரி னுழா. (கங)

வலிந்துதன் பொருள்கைக் கொண்ட மன்னவ னெவ்வாற் றானு
நலிந்திட நினைந்தான் பனளி மறு துகெட் டுயிர்தது நன்மெய்
மெலிந்திடத் தவஞ்செய காலை மேநகு மாயா சத்தி
யலர்ந்தழ லுருவாய்த் தோன்றி யறைந்திடுந் தவத்த ரோறே. (கச)

முத்தொழில் புரிவோ ரானு முடிவுறா வரங்கொ ளிவ்வேந்
தித்தலத் தொழிதல் வேண்டின் விநாயகத் தேவிங் கெய்த
வித்தகத் தவஞ்செய் யென்றவ் விதியுநன் கியம்பி யேக
வுத்தம னவ்வா றேனோன் போமமற் றியற்ற வாங்கே. (கரு)

கலிப்பா

தேசவிர்மா மகுடமொடு திகழ்குழையு மணிவடமு
மாசகல்சீர் முக்கண்ணு நாற்கையு மங்கதமும்
பாசிழையா சித்திபுத்தி பாகமும்வாய்ந் தரியிவர்ந்து
நேசமுறத் தோன்றினனந் நீள்ரவி 'னேசமபன். (கசு)

கத்தனுருக் கண்டிடலுங் கபிலமுனி மகிழ்ந்திறைஞ்சி
யத்தவென துறுகிளையோ டடியேனு முய்ந்தனனு
னித்தமுநின் னடிபோற்று நெறிநீங்கா தருள்கென்னச்
சித்தமகிழ்ந் திறைமுனிவ தெருமானின் னெடுந்தவத்தால் (கஎ)

நின்மனைப்போந் தனந்தேர்ந்தி நினக்கிடர்செய் கணனொன்று
மன்னனையின் னேயட்டுன் மணிமீட்பா மெனக்கேட்டு
நன்மகிழ்வுற் றிருந்தானந் நாபதியோர் கணக்கண்டு
தன்னமர்தா தையையமைச்சர் தமைப்பிறனாக் கருவிக்கான் (கஅ)

---

‡மணியிழந் துழல்வியாழமென்-சிந்தாமணியை யிழந்து வருந்தும் சர்ப்பம் போல.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அந்திலன் னவர்வந் தெய்த வாசனவ ராக விழ்ந்து
சிந்தையா குலிந்தி ருந்தா னதுபொழு தமிசித் துப்போர்த்
தந்தையுற றனையென் னென்னக் கபிலன்பாற் சாற்றோர் நாற்கை
மைந்தனென் முடிது ணிபபக கனகண்டேன் மற்றந் நீர்மை. (கசு)

நுவலுமா றுமைய ழைத்தே னீண்டென நூல்வல் லோராய்த்
தவரவர்க் கேற்ற வண்ண மறைந்தன ரோர மைச்சன்
றவவலிக் கபிலற் கோற றகவெனக கணன்கேட் டன்ன
பவநெறி யமர்கமெ ழும்பும் பான்மையிற் றீவி ரிந்தான். (உ௦)

அறநெறி தவறு நானை யன்னதூச செயலை யோரா
விறனமிகு தனைய பார்த்து விழிசிவந் தியமபு மைந்த
நிறையணி மௌலி விண்ணோர் நீள்பகை கொண்ட வன்றி
யுறுவர்தம பகையுங கொண்டா லுறுங்கன வபல மமா (உக)

ஆதலி னடன்மீக கொள்ளு மளவறு சேனை போடு
போதலசெய் திடினும் வென்றி பொருந்திடாய விணைவி னந்
மாதவன் பானீ வவ்வு மணியினை கொடுபோய் முன்னா
மேதக வளிததுப் பின்னர் வேண்டுகொள் ளவனை யென்றான் (உஉ)

இன்னணந் தாதை சாற்றும் வாய்மையை யிறையுந் தேறு
தொன்னலர்க் காதி வையஞ் சுகமுற வாழ்வித் தோம்பு
மன்னனீ யேயா யிங்க ணிருப்பினு மானம் பொன்றிவ்
வுன்னுனை கொளேனெ னப்போர்க் குழ்றன னனைய வேலை. (உங)

விருப்பொடு கபில மேலோன் விநாயகக் கடவு ளார்குத்
திருப்பளி யெழுசசிப் பூசை செய்திருந் தலுந்தர் சிட்டா
தரிப்புறு தூசவா யன்றன் றனிமணி பறிந்துப போன
யொருப்புறழ் திண்டோண் மன்னன் போர்கருற்று வின்ப மென்றார் (உச)

முனிவரன் கேட்டொப் பில்லா முதல்வனு யிரகா மந்தாற்
றனிமலர் கொடுநாண் மீதர்ச் சனைசெய்து பூசை யாற்றி
யன்கவென் மணிக வர்ந்து மடவரு கொடியோன் கைகின்
றீனிவிடுத் தருளென் றேத்து மெல்லைவேந் தனுமங் கெய்ந்தான். (உரு)

கணவெறுங் மெந்திர்வா னைங்கைக் கடவுளுட் டுனலு ளூழ்றுர்க்
திண்ணமல ரடிதாழ்ந் தன்று னிடமமர் சித்தி மாகங்

கணன்றருள் பெற்றுப் பல்வே றுபெடை படைத்தம மன்னன்
றணிவில்சே னையின்வி டுத்தான் சார்ந்தது மலையான் பாலோர். (உகூ)

பலபல சேனை யோடும் படர்தந்து சபதங் கூறி
நவுரு தமர்செய் யேல்லை நாயகி படைமெ லிந்த
நிலைநுத றன்பா னின்றோர் திறலன்றேன் றிடுவா னுன்ன
வலியவோர் வீர னுமை யிலக்கனென் பவன்வந் தானுல். (உள)

சித்திபால் வருவீ ரன்சென் றமைச்சரா தியர்தோ மாக்கண்
மொய்த்திறத் தடர்த்தம் மன்சே யிருவரை மொய்ம்பிற் பற்றி
நித்தன்முன் னுய்த்தெதங் தாயிக் கிருபமைங் தளைக்காத் தாள்வா
யத்தகு கணனும் வேங்தென் னுடெதிர்ந் தமரி யற்றன். (உஅ)

ஆகையா லவனை நீயட் டடிநிழ லளித்தி வர்க்கவ்
வோகையா ரரச ளிப்பா யெனவிரங் தனனோர் கோட்டெம்
மேகனு மிசைய வேந்த னிகற்கெதிர்ந் தெம்மான் மின்னார்
பாகனுய்ச் சிய மூரும் படிவனுய்த் தோற்றல் கண்டான். (உகூ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பண்டுசெய் தவத்தத் திருவுருக் கண்டும் †பால்வழி மறைத்தலிற் கபிலற், கண்டுணர் விலனுய்க் கருடனை நாகங் காதுமோ வேனிவற் கொணர்ந்தாய், துண்டமாக் குவனோர் கணைகொடிங் கென்றுன் குனைக்குநாய் கடித்திடத் துணித, லுண்டுகொல் கணனே யெனத்தவன் கூளோ டொத்தலும் புழுங்கிய வுளத்தான். (௩0)

வரிசிலை வளைத்தோர் சிலீமுகம் பவந்தீர் மாமுகத் திறைவனெற் றியினு, மிருகக மிரண்டு புயத்தினு மிரண்டு புதையிரு பதத்தினு மேவ, வெரிதரு கணைகள் குறியிழை யாதங் கேகினீ ருயின வடலா, ரரியனை பகலா திருந்தவா றமல னனுப்பினன் றனதுகைம் மழுவே. (௩க)

அன்னது பரிதி பற்பல வொருங்கே யெழுந்தபோ லவிரொளி பரப்பித், துன்னல னுயிரைப் பொருக்கெனக் குடித்துத் துகளறு கங்கை தோய்ந்தெவர்க்கு, முன்னவன் காத்து மீண்டதங் கமரர் மொய்த்துநின் றலர்மழை பொழிந்தார், மன்னரு ளுலகுக் களித்தவற் றெழுவான் வருதல்போ லருணன்வங் துதித்தான். (௩உ)

தந்தைபோர் திறந்த தனையனை நோக்கித் தணிவிறுன் புற்றாற் றினனுய் வெந்தழற் பள்ளி யவனுடற் கிட்டு மீண்டுதன் னிடத்தமை தொளிசேர்

நந்தலில் சிந்தா மணியைக்கொண் டடைச்ச ரோடெற் கபிலனுச்சிரமத்
தெந்தைசந் நிதிவந் தடியினைவைத் திறைஞ்சி யெண்ணறு மறைகளாற்
றுதித்து. (௯௩)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கணமனைத் திறுக்கு மேலாங் கடவுணீ யென்ப தோராக்
கணமனிற் கெதிர்ந்து மாய்ந்தான் கருணையங் கடலே யன்னோன்
‡கணமனன் மணிநேரின்ன காதலர்க் காச ளித்தங்
கணமனப் பரிவு நின்றாட் கண்ணெனக் குளவா மாறு. (௯௪)

வரமருள் கெனவி ரப்ப மதகரி முகத்தே ‡வாதி
யரசெனு மபிசித் தோது முறையுவந் தவன்சேய் சேய
ரிருவரு மவனோ டேக விடுத்தெழின் மணியை முன்னீத்
தரமிழந் திறைஞ்சி யேத்துங் கபிலனுக் குதவ வேற்று. (௯௫)

முன்னவ னெந்தா ன்ன மணியென்பா லபக ரித்தோன்
றன்னைமாய்த் தித லாற்சிந் தாமணிப் பெயர் தாலத்தி
னின்னதா கவுமோர் பூணு யீதுநின் றிருமே னிக்கட்
டுன்னவு மருள்செய் வாயென் றிரந்தனன் சுமுக வள்ளல். (௯௬)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பணியெனக் கொளுமா றவன்பிரார்த் தித்த படிதிரு வுருவினச் சிந்தா, மணியினைத் தரித்தா னுதலாற் சிந்தா மணிவிநா யகன்றவக் கபிலன், றணிவின்மா மனைவந் தவதரித் ததனாற் கபிலன்றண் மலர்த்திரு முகநல், லணிதர வரலாற் சுமுகனென் றெவரு மறைந்தன ரவற்குமுப் பெயரே. (௯௭)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

தென்றமிழ்நாட் டரசனபி சித்தென் போன்சீர் சிறந்தமணி தரித்தவிநா யகனைப் போற்றித், தன்றிருமா நகரடைந்து பவுத்தி ரர்க்குத் தரணியளித் தினிதிருந்தான் சுமுகவள்ள, லின்றகபி லனுக்கருள்செய் தருக்க ரந்தா னிகழ்த்துமிது நிற்கவினி யைங்கைப் பெம்மான், மன்றகஜா னனனெனு யுலகம் போற்ற வருமொன்று மவதாரத் திறன்வ குப்பாம்.

சிந்தாமணிவிநாயகன் திருவவதாரப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (உ) க்குத் திருவிருத்தம். (௬௫)

---

‡கணமனன் மணிநேரின்ன காதலர்-அழகினால் நிலைபெற்ற நல்லகண் மணிபோன்ற புத்திரரிருவர்.

‡ஆதியரச-கணவேந்தனது பிரதானிய வேந்தன்.

கஜானன் றிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

முன்னொரு கற்பந் தன்னின் முளரியான் கொட்டா விப்பால்
வந்தனன் சிந்தூ ரப்பேர் மருவொரு புருடன் சென்னி
யைந்திரண் டோடு மன்று னழன்றெவர்த் தழுவி னாலும்
வெந்தவர் நீறு மாறு §விதியுழி வரம்பெற் றானால். (க)

பெற்றவ னவனி மேல்காற் பெற்றவன் வரஞ்சோ திப்பான்
மற்றவன் மாட்டு மன்னிக் கடல்களும் வறப்ப வானத்
துற்றபல் லுடுவு ந்சிந்த வுருத்தட்ட காசஞ் செய்தான்
முற்றுல களிப்பா னன்ன மூடனுட் கோளை நோக்கி. (உ)

எனதுட றழுவு தற்கோ வேடவிங் குற்றாய் நன்றா
னினதுயிர் குடிப்பா னெந்தை நிருமல கணேசன் றோன்றி
மனுவென வுரைத்தே மால்வா ழிடம்புக்கங் கியம்ப மால்கேட்
டனியிதைம் முகந்தே வன்றி யொழிப்பதியா னுங்கால் வெய்யோன்

ஏலமா விடத்துப் போந்தா னிவற்கஞ்சித் திறலோய் நொய்ய
வாவிலை யொன்றிற் றங்கிக் காவல்செய் யரியான் போதன்
*காலிரு மூன்றுற் றூலுங் கரும்புளே றிடவுந் தாங்கா
வாவிதழ் மனைமேல் வைகு மெல்லியன் மறைக ளோதி. (ச)

ஆக்கல்செய் திடுவா னிவ்வா றலைபுன லணைய யாங்கண்
மேக்குய ரசல மன்ன நின்னொடு வெம்போ ராற்ற
லூக்கமேன் ளளவு மில்லை முயர்வரை வரையை நேர்ந்த
னேகமில் புகழே யன்றி மற்றென்னை நிகழ்ந்த துங்கேள். (ரு)

உலகெலா மழிக்க வல்லா னுளனவ னிருபபோ வெள்ளிச்
சிலையவ னங்கை கொண்ட திகழ்கொடு மரமோ மேருங்
குலவிய விடப்பா லுற்ற கோமளக் கொழுந்தா னோளா
மலைந்தரு புதல்வி மெய்யோ வன்னியா மின்னும் யாங்கள். (சா)

இருவரோந் தருக்கைப் பல்கா லிரிந்துளா னற்றன் மிக்கா
னொருவரு கிகரில லாதா னுவனுழை நீசென் றேங்கு
செருவினை விளைந்து வெற்றி பெற்றிடிற் றிசைகண் முற்றும்
பெருமைகொண் டாடு மென்னப் பிழைதழை மனச்சிந்தூ ரான் (எ)

---

§விதியுழி—பிரமதேவனிடத்து.
*காலிரு மூன்றுற் றூலுங் கரும்பள்—அறுகாலுடைய தாய்த்தேஞ்செய்யுங்

அரிவிரி யுளைய வேத்து மழுதென மாந்தி வெள்ளி
வளையிறைப் போது பாய்ந்தாங் கமர்சிலை வதனங் கண்டிப்
புளையறு தேசி ஞானக் கோடுமென் றவனோர் புக்கான்
பளைபரி தயித்தி யோகத் தூற்றமர் பாற்கி தோதும். (அ)

கண்ணினு நகையி னானுங் காலினு ‡மொன்னார்க் காய்ந்த
வண்ணலே னினைத்தி யானிப் பார்க்கரு ணீயோ கத்து
நண்ணுத லெற்றே: மென்ன நாதனும் விழித்தாங் குற்ற
வெண்ணலற் பொருவான் போந்தா னிரும்படை யாதி யோடும். (௯)

இன்னவேல் வையிற்சிந் தூா னெம்பிராற் றழுவ நேர
வன்னபோ தைங்கை வள்ள லாங்கொரு மறையோன் போன்று
துன்னியோர் பாசு நாட்டித் துன்னல ஸிரிவா றுற்ற
மின்னுவா ளினைய கூங்கண் விமலையுள் ளுவகை பொங்கி. (௧௦)

ஆங்கவ்வே தியன்போன் றானை யாரைநீ புகறி யென்னத்
தீங்குநிற் கிழைப்பான் போந்த செறுநனைத் தெறுவா னன்று
யீங்கொரு மகவாய் நின்பால் வருவனீ யஞ்ச லென்று
நீங்கினா னதன்பின் சிந்து ரப்பெய ரினனி லத்தில். (௧௧)

மன்னுபல் லுயிர்க ளோதநன் வன்கையாற் றழுவி நீற்றிப்
பொன்னக ரத்தார்க் கூறு பொருத்தலங் திடலு மன்னோர்
துன்னிநான் முகத்தோற் கோத லவனொடுந் தூய வேதாப்
பன்னுமைங் காப்புத் தேவைத் தியானித்துப் பரிசி னோடும். (௧௨)

வான்வளி யெரிநீர் வைய மதிதின காரன் மாவென்
றானவெண் வடிவ மாய்மண் ணாதிதத் துவங்க ளான்மாத்
தானுறப் புணர்த்தி ரண்டு வினையொப்பாஞ் சமையந் தன்றா
ஞானமில் லாது சூட்டு முயர்கண பதியே யோலம். (௧௩)

என்றுதோத் திரிப்ப வோர்கோட் டிறையெதிர்ந் தஞ்ச லீர்நந்
துன்றுதீ தொழிப்பச் சேயாய்ச் சிவைவயிற் றோன்று வோமென்
றன்றுமை திருக்க ருப்பத் தெய்தினா னுக வம்மை
நன்றமை பரியி லிப்போர் வனத்துநம் பரனோ டேய்ந்தாள். (௧௪)

இன்னண முறையாள் காவேட் டிருக்குளையர் பரவ வாழ்நாண்
முன்னவன் யோகில் வைக முந்தையின் மயேசு ரப்போர்

---

‡ ஒன்னார்—மன்மதன், திரிபுரம், இயமன், ஆகிய இம்மூப்பகைவர்.

பன்னுமோர் தருவன் றூனு ரதமுனி பகர்சா பத்தான்
மன்னினன் வேழ மாயஃ தகலெல்லை வந்த டுப்ப. (கஙு)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

தனைநிக ருமைவீற் றிருக்குமண் டபத்தைச் சார்ந்தொரு நாட்டனைச் சாய்ப்பப், புனையிழை யஞ்சிப் பரமனுக் குரைத்தாள் பொள்ளெனக் கனன்றதைச் செகுத்தே, யனையது சிவாய நமவெனு மனுச்சொற் றிறத் தலாற் கதியளித் தருந்தா, சினவத னுரித்துப் போர்த்துநல் லன்பிற் றென்றதன் சென்னிபூ சித்தான். (கசு)

மதகரி யுரிமெய் போர்த்ததாற் கிருத்தி வாசனென் னுமமூற் றூங்கே முதல்வியோ டமர்ந்தா னிதுநிற்க வொருபான் முகமுடைச் சிந்தா மன்னோர் நாள், விதியொடச் சுதன்மற் றெவரு மென்றனக்கு வெரின்கொடுத் த வரென வவைக்கண், ணிதயிலான் மதயிக் குரைப்பவோர் வாக்கந் தரத் தெழுந் ததுமதி யில்லாய். (கஎ)

என்னைநீ செருக்கோ டியம்பினை சிவைபா லிபமுகக் கடவுடான் கருவாய், நின்னைமாய்த் திடவுற் றனனஃ துணர்தி யெனவவ னடுங்கி நீள் வனஞ்சென், றன்னையா முமைகண் வளர்தல்பார்த் தகட்டின் மருத் துரு வாயடைந் தாங்கண், மன்னிய கருவின் சிரமரிந் தகன்று விந்தமால் வரையினை யடுத்து. (கஅ)

நருமதை நதிபால் வைத்துட னகன்று னம்பிரான் சிரமுறு மிடத்துப் பெருகுசெம் புனல்செல் சூழலைச் சோண நதியெனப் பேசுவ ரன்ன, சிரமொடு புவனி குழிந்ததைக் கணேச குண்டமென் றியம்புவர் சிறைசார் வரையதிற் சரிந்திவ் வுலகெலாம் வணங்க விநாயக ருருவின்மன் னியதே.

இறைதிரு வுருவம் பெற்றவச் சுயம்பை யாவர்பூ சனைபுரிந் திடினு, மறமுத லன்கு பொருளையு மடைவ ரந்நதி படிந்தவர் விழைந்த, பெ றுவர்சிந் தூரன்செய் யரியவிச் சூழ்ச்சி யவனுமெம் பிரானுமோர் குவர் பின், னிறைகரு வுயிர்த்தா ளுமைதலை தவிர்சேய் கயிலைவெற் பேகியந் நிலையே. (உ0)

ஆன்மகோ டிகட்கு மருள்விநா யகர்வே றம்பிகை கண்களித் திட வோர், பானெனுங் காம்பூண் படைதரித் திலங்கச் சித்திபுத் தியர்கள்பா லுறப்பஞ், சானன மிவர்ந்து தோன்றியா னன்னு யனைத்துயிர் கட்குநின் றனக்குந், தினமோர் தருசிந் தூரனைத் தெறநின் றிருவயிற் றுதித்தன னென்னு. (உக)

விண்டிட னேயவ் வுருக்கரந் தேக விமலையுண் மகிழ்ந்தன ளெனினு, முண்டமற் றுதித்த கான்முளை தனைக்கண் டினைந்தனண் முதல்வனு முவப்புட், கொண்டுமொழ் கினன்பேரான் றிருப்பமா லமரர் குழாங்கட்கு நந்தியங்குணர்த்த, வண்டரா தியர்வந் திறைஞ்சியம் மகப்பார்த் தலைகடல் வீழ்த்துமா றறைந்தார். (உஉ)

அன்னவர் தன்மையே தாமிகக் கனன்றச் சுறுத்தியவ் வருண்மகப் பார்த்தெம், முன்னவ சென்னி யின்றியின் றுதித்த தெவனென முகுந்தன் மெய்க் காதி, சென்னியங் கற்றோர் சேய்வளர்ந் திடலெவ் வாறுபே தாயென்றான் சிறுவ, னென்னவோர்ந் தனைகொன் முத்தொழிற் கிறைக்கியா திருந்தெனின் றுயினென்னமாலே. (உ௩)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

குறைமதி யுடைய வானோர் கூறிய தெரப்ப நீயும்
பொறியிலார் போலீ தோத னன்றென்றான போதன் பின்ன
ரறிவினு ளறிவா யெல்லா மறிபவன் செவிவா யாதி
செறிதலை யிலாதி ருந்துஞ் செப்புவா னிங்ஙந யற்கு. (உ௪)

†முந்தியாஞ் சிருட்டி தந்த முறைமையி னெவ்வா றெம்மைப்
புந்தியோ டன்பு பொங்கக் கண்டுநீ போற்றல் செய்தா
யந்தவா றுமைபா லும்வந் தவதரித் திடலா லின்றுஞ்
சிந்தையா குலம்விட் டோடத் தெரிசிக்கப் பெற்றாய் போதா. (உ௫)

வெய்யசிந் தூர னுனி விட்டிநல் லோரைக் காக்க
வையைபாற் றோன்றுற் றியார்க்கு மன்பனாய்ப் போற்ற னன்கென்
றுய்வகை தெரிப்ப வீச னுவந்துபோற் றிபமு கத்துச்
செய்யதா னவன்வீழ் சென்னி நம்முருச் சேர்த்தற் கென்றே. (உ௬)

சிரமிலா துதித்தோ மென்று சிரந்தவிர் விதமுஞ் செப்பி
யருளமுன் னிறைவன் பூசை யாற்றுசென் னியுமாங் கெய்தித்
திருவுரு வொன்ற லான்மா வதனமுந் திகழ்முக் கண்ணும்
பரிவின்வாழ் சித்தி புத்தி பாகமுங் கொண்டு தோன்ற. (உ௭)

---

†முந்தியாஞ் சிருட்டி தந்த முறைமை-என்பது வக்கிரதுண்டவிநாயகராய், பிரமா, விஷ்ணு, ருத்திரர், என்னு மூவரையும்படைத்துப் பிரமாவுக்குச் சிருஷ்டிவிதியை, சித்தி, புத்தி, என்னுந் தமது சத்திகளால், தெரிவித்தகாலவிலைமையாம்.

அன்னமூர்த் தங்கணும்ப ராதிய ருவகை பொங்கி
முன்னரோந் தரித்த வேத மனுக்களான முறையி னேத்தி
யின்னநா டொட்டெங் கோவே கயானன னெனும்பேர் நிற்கு
மன்னிவிக் கினங்கள் யார்க்கும் வராவண மருளுந் தேவாய். (௨௮)

இம்பரிற் சிறக்க வென்ன விரந்தன ருமையா ளோடு
நம்பனு முத்தி சித்தி நல்குவான் விழைந்த தீவான்
றம்பதந் தொழுவார்க் கின்ன றவிர்த்துமே லையர்க்குத் தந்து
மும்பர்சேர் விக்கி னேச னெனவுரைத் துபாசித் தாரால். (௨௯)

கண்ணுதல் பூசை யாற்றிக் களித்தநா ளிரவி சிங்க
நண்ணிய மதிமுன் பக்கச் சதுர்த்தியா மற்று லந்நாள்
விண்ணவர் மண்ணோ ரெல்லாம் விநாயக சதுர்த்தி யென்று
திண்ணமா வருடந் தோறும் பூசிக்கச் சிறந்த தாமால். (௩௦)

திருத்தமா மிந்நாட் பூசை செய்பவர் பேறெண் ணின்றாற்
பொருத்தமின் மனச்சிந் தூரன் புவனைபாற் சுமுக வள்ள
லொருத்தன்மா முகங்கொண் டவ்வா றுதித்தமர்ந் திடறெ ரிந்து
‡கருத்தறை போய்ப்பின் றேறிக் கயிலையம் பொருப்பி னேறி. (௩௧)

தரியல னெனக்கென் றீங்கே தங்கிய சிறுக ணீள்கைக்
கரிமுகன் றலைது மித்துக் கடிதுகொண் டேக யானே
ரரியென வந்தே னென்னத் தன்புக ழுரைத்து மோதிப்
பொரவழைத் திடலு மெந்தை பொள்ளென வவன்முன் றோன்றி. (௩௨)

அச்சுறா †தறைகூய் நின்றோ யரிமுதற் றேவர் போலுன்
§பிச்சுளத் தெமையு மெண்ணிப் பேசினை யாமே நின்னை
முச்சகம் பழிச்ச வின்னே முடிக்குதுங் காண்டி யென்ன
விச்சுவ ரூபங் காட்டி வீட்டிமுத் தியுமீய்ந் தானால். (௩௩)

மலர்மழை பொழிந்தார் வானோர் விகடன்றோல் வடிவின் மன்னி
நலமலி சூல மீச னல்கவேற் றலரோன் றண்பூச்
சலபதி பாச மற்றோர் தத்தங்கைப் பொருடந் தேத்தக்
குலிசனன் னிருத்த கீதம் புரியக்கொண் டிருக்க ரந்தான். (௩௪)

‡கருத்தறைபோதல்—விவேகங்கெடல்.
†அறைகூவல்—போர்க்கழைத்தல்.
§பிச்சளம்—மயக்கம்பொருந்திய மனம்.

இந்தமான் மியம்பு கன்றே றெழின்மக மின்பம் வெற்றி
புந்தியின் விழைந்த யாவும் பொருந்துவ ரீது நிற்க
வெந்தைவிக் கினரா சப்பே ரியையநான்கா மவதா ரத்தி
னுந்துமான் மியத்தை யன்று னருள்கொடிங் குரைக்க லுற்றும். (ருடு)

கஜானனன் றிருவவதாரப்படல முற்றுப்பெற்றது.

ஆகபடலம் (ரு) க்குத் திருவிருத்தம். (அய)

விக்கினராசன் றிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பனிவரை விந்த மென்னப் பகரிரு வரைக்கு நாப்ப
ணனிமலர்ப் பொழில்சூ ழேம வதியென்றோர் நகராள் வேந்தன்
றனியபி நந்த னென்றுன் றகவினோர் மகமி யற்ற
வனையனை மகத்தி னேடு மழிப்பவா னவர்கோ னுன்னு. (க)

உன்னரும் விக்கி னங்க ளுளுற்றிடுங் கால ரூபி
தன்னையங் கேவ வன்னுன் சார்ந்தபி நந்த னப்பேர்
மன்னெடு மகம ழித்து மாயவே டங்கொண் டாங்காங்
கின்னல்செய் தேகி வேள்வி யியற்றுவோ ரையுங்கெ டுத்தான். (உ)

பாருளார் கால ரூபி செயல்கண்டு பதைப தைப்பச்
சீருளார் பலரு மாற்று மகமெலாஞ் சிதைந்த வாற்று
ளுருளா ராய வேத முனிவரோ ரிடத்து நண்ணி
யேருளார் விகடன் பொற்று ளிணைதுணை யென்னத் தேறி. (ங)

ஆதியாய் நடுவா யீறு யவையொரு மூன்று நீந்த
சோதியாய் நானு வாகித் தோன்றுயிர்க் குயிரா யார்க்கும்
பேதியா யன்ப ருள்ளம் பெருந்திருக் கோயி லாக்கொண்
ணீதியாய் புவிதாங் கொண்ணு விக்கின நீத்தல் வேண்டும். (ச)

பாவலர் மாலை நின்பொற் பதத்தினில் வேய்ந்து வாழ்த்து
காவலர் தமக்கு வேண்டு நலநிலத் தருளிச் செம்பொற்
பூவடி நிழலு நல்கும் புராதன தேவர்க் கெல்லாந்
தேவவை யகங்கொ ளாத விக்கினந் தீர்த்தல் வேண்டும். (ரு)

எனத்துதித் துருக வாங்கே யேரம்பப் பெருமான் றேன்றி
யனைத்திட ரொழியின் றாய்நி னமர்தரு *வரேணி யன்றன்

*வரேணியன்—ஓரரசன்.

மனைக்கண்வந் தவத ரித்து மாற்றுது நுமது புன்கண்
ணுனித்தமா தவத்தீ ரென்ன னோவகன் றிருந்தா ரிப்பால். (௬)

கலிநிலைத்துறை.

முடிவி லாதவின் பருளிய வேரம்ப மூர்த்தி
நெடிய மாதவ நிரப்பிய வரேணியன் மனைவி
படியி லோவியப் பாவைபுட் பகைபெனும் பெயராண்
மடியி லார்கருப் புகவவண் மகவுயிர்த் திடலும். (௭)

உயிர்த்த சேயுரு மறைந்திய முகத்தொடா யுதகான
கயிரா த ம கைகளுஞ் சிறியதா ளொடுபெருந் வயிறு
மியற்ப டந்திகழ் வடிவுமுற் றிருந்தல்கண் டிருந்தோர்
பயிர்ப்பி னஞ்சியோ டினரன்னை.. கவன்றுளம் பதைத்தாள். (௮)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அன்னதம் மடந்தை கேள்வ னறிந்¶துவ ளகத்துச் சென்று
தன்னிக ரில்லா முன்னோன் றயங்கெழி லுருவு கண்டு
மின்னன்மேல் விளக்கு மிச்சே யெனவுளத் தெண்ணி வீரந்
துன்னுபல் வீரர்க் கூய்க்கைக் கொடுத்திது சொல்ல லுற்றான். (௯)

திடவுட லுடையீ ரின்ன சேயையில் விரவே சோலை
யடர்மடு வரையிட் டொல்லை மீளுமி னென்ன வன்னோர்
கடகரி முகத்தே வாஞ்சேய் தனைக்கைக்கொண் டேகிப் பாசத்
தொடர்பொழி பராசு வப்போர்த் தொன்முனி சாலைப் பாங்கர். (௰)

நன்றுறு மடுத்தீ ரத்து நறுந்தளிர் மிசைக் கிடத்திச்
சென்றன ரிறைவ னக்கை தீண்டமுன் னவர்செய் நோன்பு
மன்றநன் மனைவி பாற்றன் மனையவ தரித்துந் தீங்கா
மென்றிட வரோணி யன்முன் பிழைத்தபா வமுமென் னென்கேன். (௧௧)

தளிரணை மிசைக்கி டந்த தம்பிரான் றமது மெய்யி
னொளிசிறி திலகச் செய்ய வுதயவர் கோடி யொன்றாய்
வெளியில்வந் ததுபோ லெங்கும் வெயில்விரிந் திருளி ரிந்த
நளினம்வாய் மலர்ந்த வாம்ப னகைமுகங் குவிந்த வன்றே. (௧௨)

அற்புத மடைந்தா ரும்பராரக விடத்தார் தங்கள்
பொற்பமை யிரதி போன்ற பூவையர் சேக்கை நீத்தங்

¶உவளகம்—அரசன்றேவியிருப்பிடம்.

கெற்பொழு தகன்ற தென்று வெழுந்தனர் பொழில்வாழ் புட்கள்
பற்பல விருக மெல்லாம் படர்ந்தன விரைக டேர்வான். (கங)

பராசுவ முனியுஞ் சந்தி பண்ணுதற் கமையம் வந்த
திராவகன் றதுனன் கென்ன வெழுந்துதண் மடுப்பாங் குற்றங்
கராவணி சடில னென்னை யாள்விநா யகத்தே வைங்கைப்
புராதனன் றளிரின் மீது பொருந்தல்கண் ணுாக் கண்டான். (கச)

ஆடின னடுத்து வமைந்த னருளுரு நோக்கி நோக்கிப்
பாடின னின்ப வெள்ளம் படிந்தனன் மறைக ளொன்குந்
தேடியுங் காணொ ணாத சிற்பர னுன்முன் செய்த
நீடிய தவத்திங் கேய்ந்தா னெனவெடுத் தேகி நேரே. (கரு)

பொருவிறன் மனைப்பு குந்து புலர்பொழு தாகக் கற்பி,
திருமனை யவள்கை யீய்ந்தியாஞ் செய்தவப் பேற்று விச்சேய்
வருதல்கா ணெனக்க ளிப்பின் வாங்கிமா முகத்தே வென்றோர்ந்
துருகலுந் தனஞ்சு ரப்ப வூட்டின ளிவனோன் பென்னே. (கசு)

வேறு.

இவ்விதமாய்ப் பராசுவனு முனிமனைவி வற்சலைபா லெழிற்க ணேசன், செவ்விதமர்ந் திடமுன்னு ளிமவரைப்பாற் சவுபரிப்பேர் முனிவன் சீர்சான், மௌவனகை மனுமையயாந் துணையொடுவாழ் பவன்புனரோய் வான்செல் லோர்கா, லவ்விசும்பார் கிரவுஞ்ச னெனுமொருகந் தருவனவ ளழகாற் போர்ந்து. (கஎ)

காம்வலிப்ப வவள்வெருளுங் காலையினீர் குடைந்துசெல்கா ...ன் கண் டக்கந், தருவனைமிக் குருத்தருங்கற் புடையவள்கை தீண்டி... தகவித் தீங்கா, விருணிறமு டிகமாகென் றிட்டனன்வெஞ் ... ...ன் னிடருற் றெந்தாய், தெரிதலிலேன் காம்வலித்த பிழை ... கெனவணக்கஞ் செய்ய மேலோன். (கஅ)

காந்தருவர் காவலனே நீர்வெம்மை தீதண்மை காணு மேனு, நாந் தருவெஞ் சாபமொழி யாதுசர ணடைந்ததனு னவில்கேம் பினை..ட், சாந்தமுனி பராசுவர்தம் மனைவயினே ரம்பனெழுந் தருள்வா னன்றைற், கேந்துநல்வா கனமாயுய் குவையென்று னகிதவ்வா றெய்து மேல்லை. (கக)

துன்னலின்மூ டிகமாகிப் பராசுவப்பேர் முனிமனைக்கட் சுலவிப் பல்வே, றின்னல்விளைத் திடத்தவத்தோன் வருந்தலுமெம் பெருமான்கண் டிணைய வீது, தன்னையடக் குவலெனக்கைப் பாசம்விடுத் தாருசெலுங்

தான மெங்கு, முன்னைவினை போற்றொடர்வித் தீர்த்தல்செய வயர்ந்தெந் தை முன்வந் தன்றே. (௨0)

அடியார்தம் பவந்தொலைக்கும் விநாயகன்சன் னிதியினிவ்வா றடைந்த வாகு, படியார விறைஞ்சித்தன் வரலாறு சொலக்கேட்டெம் பரியா கென்று, முடியார்பொன் னிதழியந்தார்க் கணேசனதி னிவர்ந்துலக முற்று ஞ் சென்று, கடிதாங்குற் றதின்வலிதீர்த் தனும்பரா சுவமுனிவன் களிப் பிற் போற்றி. (௨க)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பொக்குறு மனத்து விக்கின னென்போன் புவிக்கெலாந் துயர்செய் தின் றனனவ், விக்கினந் தவிர்த்தா னையவென் றிரந்தான் வேண்டுகால் வசிட்டரா தியர்வந், தக்கொடி யவன்றீங் கியம்பலும் விமல னபயமீய்ந் தாகிவர்ந் தங்கை, தொக்கவர் குசத்தை விடுத்துவிக் கினனைக் கொணர் கென்றான் றாய்த்தவர் களிப்ப. (௨௨)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அங்குச முலக மெல்லா மஞ்சவல் லேகி வீரந்
தங்குவிக் கினனைப் பற்றித் தம்பிரா னெதிரே யுய்ப்ப
வெம்முனு நிறையே சம்பன் மூடிகத் திருந்த வாறே
யங்கணின் றழலெ முப்பார்த் தனுமவ னமர்கு றித்தே. (௨௩)

விண்ணவர் முனிவர் மற்றோ ரெருவப்பல் லுருக்கொண் டார்ப்போ
டண்மி வெஞ் செயலி ழைத்தா னவையெலா மையன் மாய்ப்ப
நண்ணும்விக் கினனின் னுனை நயந்தன்றி வாழே னென்று
வெண்ணிமுன் னுருவுற் றேத்தி யிகல்செய்தே னெவர்க்கு நிற்கும். (௨௪)

அடிகளே பொறுத்தாட் கொள்ள வேண்டுமென் றிரப்ப வையன்
கொடியவ நமைத்து திப்போர் கும்பிடு வோர்நி னைப்போர்
புடையுறே லேனோர்க் கின்னல் புரிந்தா சியற்றின் றேனீ
கெடுவையென் றருள வவ்வா றியற்றுவ லெனக்கி ளத்தி. (௨௫)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அனுதினின் பெயரென் பெயரொடேய்ந் திருப்ப வருளென விக்கின ராச, விநாயகப் பெயரோன் றுறுகவெற் கின்று முதலென்றான் விமலன் விக் கினனுந், தனுதுள மகிழ்ந்து பூசைசெய் தகன்றான் றண்மலர் தூர்த் தனர் வானோர், ‡மனுதியால் வழிபா டியற்றிவேண் டியபல் வரங்கள் பெற் றனர்தவ முனிவர். (௨௬)

‡மனுதியால்-மனம், வாக்கு, காயம் இம்மூன்றாலும்.

மன்னவர் பெருமா னெனும்வரே ணியனீ தறிந்துதன் மனையொடு போந்து, தன்னிக ருயர்வொன் றிலாதவ னடிக டாழ்ந்துநல் வரங்கொ டங் ககன்றான், முன்னவன் றலைமைத் தவப்பரா சுவற்கு முலையமு தருந்திய வணைக்கு, மன்னிய வரமீய்ந் துலகுய வுயர்வான் சிவபுரம் வந் துவீற் றிருந்தான். (உஎ)

சரணம்வந் தடைநமேதார் யாவரா யினுமன் னவர்பிழை தவிர்த்தருள் செய்யும், வரதன்விக் கினனெனன் பவன்புரி யாந்தை மாய்த்தவன் பெய ருந்தன் பெயர்முன், விரவவைத் துலகம் துதிசெய விதித்த திதுமயூ ரே சனுய்க் கமலா, சரனுயிர் தொலைப்ப வருமவ தார மைந்திணை யினிச்சொ ல லுற்றும். (உஅ)

விக்கினராசன் திருவவதாரப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (ச) க்குத் திருவிருத்தம். (௱அ)

மயூரேசன் றிருவவதாரப்படலம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சிந்தையான் மொழியா லளக்கொணுப் பரமன் றிருவருள் வலியி னுன் மலரோன், முந்தொரு கற்பத் தாவணை யுறங்கு முன்னவ னுந்தி வந் துதித்துப், புந்தியிற் றெளிவு பெறவரு மறையும் புராணமும் பொருவில்சாத் திரமு, மிந்துசே கான்பாற் றெளிந்துல கனைத்து மினி தினிற் பண்டுபோற் படைத்தான். (க)

அன்னமா மறையா திகள்பொறித் திட்ட வரியபுத் தகத்தைநான் முகத்தோ, னன்னிய தியிற்பூ சனைபுரிந் திருக்கு நாளசு ரருக்குநற் சுரர்க்கு, மன்னுபோர் மூள வும்பர்தோற் றவினுன் மறைமனு வினைப்படை யாக்கிப், பன்னிய பிரமாத் திரத்தொடெய்த் தசுரர் படையெலாந் துரந்து வென் றனரால். (உ)

வலியழி தருவர் வெள்கின ரிருக்கு நாளவர் மரபின்வெண் சங்கொத், திலகுமெய் யொருவன் பிறந்தனன் சங்கா சுரனெனும் பெயரின னிவ னிற், பலமிகு கமலா சுரனென்றோ ரிளவ ரேன்றிமுன் னவன்பணிப் படிவாழ்ந், துலவல்கண் டிவர்பா லவுணர்யா வரும்வந் தும்பரான் மெலிந் தன முரத்தீர். (ங)

நமைபிடர் புலவோர் தமக்கடு படைதோன் றிடநவின் மறைமனு வமைசெய்புத் தகங்க ளயன்புரி பூசை யகத்துள வவைகவர்ந்

திடினின், றிமையவர் கெடுவ ரென்னலுஞ் சங்கா சுரனிள வலைவிட வவன்செல், சமையம்வே தாயோ குழந்தல்கண் *டருவிற் றனிச்சுவ டிகளெலாங் கவர்ந்து. (௪)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சென்றவன் முன்னோன் முன்னர்ச் செறித்திட வுயப்பி னோக்கி
யன்றவன் கடலுட காவ விட்டன னவற்றை யற்று
னன்றருள் வேத நீந் நானிலத் துறுமை யாலே
துன்றுகல் குரவி னுற்றுர் தொல்லுல கத்தோ ரெல்லாம். (௫)

விரியிதழ் மறைவா முண்ணல் விழித்துழ் பூசை யாற்று
மரியபுந் தகங்கள் காணு ‡தலமந்து கயிலை யெய்தி
வரியர வணியெம் பெம்மான் மலரடி யேத்தி யும்பர்
தரியல னிழைந்த யாவுந் தளர்வொடு சாற்ற வெந்தை. (௬)

கண்படை நீங்கி மாயன் கயவருண் முன்னோன் றன்னைத்
திண்படை கொடுப ரீத்துச் சிறந்தநின் சுவடி நல்கி
மண்படு துயா முற்று மாற்றிடு மதற்கு முன்னர்
விண்பட மலைக்கும் பின்னோன் றனைவினித் திடுதல் வேண்டும். (௭)

அன்னவன் வலியோன் றேவ ரனைவரு மொருங்கு கூடித்
துன்னமர் புரிந்திட் டாலுந் தொலைவுறு னவனி ருப்பின்
முன்னவன் மாய்த ரூனு மரிதுமுண் டகத்தோ யற்றூன்
மன்னருள் புரியே ரம்ப வள்ளலைப் பணிதி யாயின் (௮)

தீதியற் றிடும்பின் னோனைத் தெறுதருந் திண்ண மென்று
வேதனை விடுப்ப வன்னுன் விதிமுறை தவறு தைங்கைப்
போதக முகத்து வள்ளல் புனைகழல் கருதிப் பூசை
காதலி னியற்ற நாளுங் கணேசனின் னருள்செய் தாங்கே. (௯)

பாசமங் குசந்தண் கஞ்சம் பாசமர் நாற்கை யோடு
தேசவிர் சித்தி புத்தி சிறந்திரு பாலும் வைக
மாசறு வயமா வூர்ந்து வரவான் பார்த்துள் ளூறு
நேசமே லெழவா னந்த நேமியுண் மூழ்கி யிப்பால். (௧௦)

---

* அருவில் -- உருவந்தோன்றுவண்ணம்புகுந்து.

கண்ணினீர் வார நெஞ்சங் கரையவெண் கரமுங் கூப்பி
மண்ணிடை வீழ்ந்தெ ழானுய்க் கிடப்பமா முகத்து வள்ள
றண்ணருள் சுரந்த யன்றன் றளிர்க்கரம் பிடித்தெ ழுப்பிப்
பண்ணிறை மறையோ னுள்ளப் பரிவுதேர்ந் தருளிற் பன்னும். (கக)

அருமைசான் மறைபு ராணஞ் சாத்திர மாமிம் மூன்றும்
பெருமொளி தருநம் மூன்று விழியிலும் பிறந்த தாரு
மருவளர் கமலத் தோய்மற் றவையெலா மாண்ட தாகக்
கருதியுள் ளிணையன் முன்போற் கவினுற விளங்கச் செய்வேம். (கஉ)

பண்ணவர் முனிவ ரேனைப் பாருளா ரெவரு மின்ன
னண்ணவெவ் வினைக ளாற்றி நலன்றராக் கமல னென்னுந்
திண்ணிய வசுர னுவி செருநிலத் தியாமே கொள்வேங்
கண்ணனெம் மருளாற் சங்கா சுரனுயிர் காதும் பின்னர். (கங)

என்றுரு மறையோ னுக யிருமறை யாதி ¶கோசம்
வென்றிகொ டோளிட் டோது மாயிரம் வியன்மா னுக்கர்
துன்றவந் தாத்தி னின்றுஞ் சுந்தராச் சிரம நோக்கி
வன்றனை யிழிந்தா னெண்ணில் வான்சுடர் வருத லேய்ப்ப. (கச)

சுந்தராச் சிரமத் துள்ள தொன்மைமா தவர்க ளெல்லா
மிந்தவா னெளியா தென்னு வுளத்திறும் பூது பூத்து
வந்தமா மறையோன் பாதம் வணங்கினின் றுய்ந்தே மெந்தா
யெந்தலூர் துமக்கு நாம மெவன்வந்த தெவன்கொ லென்றார். (கரு)

பவவினை தவிர்த்தா னங்கைப் பனவனூர் கருணை கூர்ந்து
தவவலி யுடையீ ரெம்மைச் சாற்றுமல் லால ரென்ன
நவையறு மறையவ் வாறே யுலகமு நவிறல் செய்யு
மிவணுரு மறைக ளோதன் மகங்களாற் றிடுமி யற்கை. (கசு)

நித்தியத் தோடு நைமித் தியங்களு நிகழ்த லின்றி
முத்தலத் தோரு நோயுண் மூழ்கலோர்ந் தியாமுன் சொன்ன
வித்தையத் தனையுஞ் செவ்வே பொறித்தல்செய் துணர்வின் மிக்க
புத்தகங் கொணர்ந்தா மேற்றுப் பொருடெளி வுறவே கற்று. (கஎ)

பண்டுபோற் கிரியை யாவும் பயிற்றியின் புற்று வாழ்மின்
மண்டுசீ $ருறையு ளொன்று வளங்குமி னெமக்கிங் கென்று

¶ கோசம்--புத்தகம்.

$ உறையுள்--வீடு.

ரண்டரேத் தெம்பிரான் மருள்ளுனா தீலக்கொண் டாங்கட்
கொண்டதோ ருறையு ளல்கிக் கோதம றுதி மேலோர். (கஅ)

அருணிறை மறைகேட் டையத் தகன்றனர் சில்லோர் சில்லோர்
தெருணிறை புராண முற்றுஞ் செவிக்கமு தெனக்கேட் டுள்ளத்
திருணிறை மயக்க நீத்தா ரிணையிலா கமங்கேட் டுண்மைப்
பொருணிரு ணயமோர்ந் தாங்கே புலப் பகை வென்றார் சில்லோர். (கக)

இன்னன மனைத்துங் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்து மின்பிற்
றுன்னுதம் மாணக் கர்க்குத் துகளறப் பயிற்று வித்துந்
தென்னிறை கிரியை யாவும் பண்டுபோற் செய்து வந்தார்
முன்னவன் முன்வந் தெய்தின் முருவுருட் பொருளொன் றுண்டே. (உ0)

வேறு.

வண்டுளருந் தண்டுளவ மணிமார்ப னுந்திவந்த மலரோன் முன்ன, ரண்டர்பிரான் றனக்குரைத்த முதனூலை நியதிமுட்டா தருச்சித் தேத்திக், கொண்டிருந்த தொழிந்ததென மனக்கவலை கொண்டிருந்துங் குலவு வேத, மெண்டிசையுந் தழைந்ததெனவோர்ந் தின்புற்றே ரம்பனடி யிறைஞ்சி வாழ்ந்தான். (உக)

தெள்ளுமறை முதற்றொன்னூ னெறியுலகி னிவ்வாறு செறித லோக்கிக், கள்ளவுளக் கமலனெனுந் தீயவுணன் றனதுமுன்னோன் கழற்காறூழ்ந்து, முள்ளளையம் புயத்துறையுந் திசைமுகதந்தோன் சுவடியெலா முனர்யான் சென்று, கொள்ளைகொடு வந்ததனாற் பயனென்னை குணன் சிறிதுங் கொண்டே மல்லேம். (உஉ)

சுந்தரநல் லாச்சிரமத் தொருமறையோன் சுவடியொடு தோன்றி யாங்கே, யந்தணர்தம் முளமகிழ மறைமுதனூற் பொருள்விரித்தா னவ்வூக் கத்தாற், சந்தமறை நெறியொழுக்க மாச்சிரமம் வருணமுறை தவறா தெங்கும், பந்தமுற வேவளர்ந்த மகநிமிர்ந்த வமரரவிப் பாகம் பெற்றார்.

இனியெவரு நமைமதியார் வடுவிளைத்தே மொன்றின்முயன் றிடையிற் றேற்ற, றனிவலியோ வெனவயர்வி்ற் சாற்றலுமுத் தோனினையோய் தளர லம்பா, னனிதிறனே மியனுதி யமரரும்பொர்க் குன்னார் கைப் பலியே னுண்கொள், பனவனெதிர் பவனேபோ யவற்படுத்*தி லேகமெனும் பகுதி யாவும். (உச)

---

* இலேகம்-எழுதியபுத்தகம்.

வேறு.

கவர்ந்திவண் மீடி யென்னக் கழறின னாகப் பின்னே
னுவந்திருந் தும்பை சூடி யொருவயப் புரவி வென்மீ
திவர்ந்தொலி கடல்போற் றானை யெம்மருங் கினுஞ்சூழ் போதத்
தவம்பயி லுரவோர் வைகுஞ் சுந்தராச் சிரமஞ் சார்ந்தான். (உரு)

அன்னவன் வருதல் காயி லாணியா லறிஞர் கேட்டு
முன்னவன் மலர்த்தாள் போற்றி முகிழ்த்தகை சிரமே லேற்றித்
தன்னிக ரில்லாத் தீய தகுவனுங் கமல னிங்கண்
டுன்னின னெமையு டற்குத் தொகையறு தானை யோடும். (உசா)

எவரினி யஞ்ச லென்றெம் மிருமபகை நீக்கு விப்பா
ரெவர்சரண் சார்வேஞ் சாரா திரியவோர் வழியுங் காணே
மெவர்வலி யவுண னேடிங் கெதிர்த்தவ னுயிரை யுண்பா
ரெவருமின் றழியு நாள்வந் தியைந்ததென் றினைந்து நிற்ப. (உஎ)

வரந்தரு பனவ மூர்த்தி மறுகுமா தவரை நோக்கி
யிரங்கலி ரெவரு நம்பின் னிருமினத் தகுவன் றன்னைப்
பரந்தவெஞ் சேனை யோடும் படுத்துநஞ் சேவ கத்தி
னுரந்தனை நுமக்கின் றேகாட் டுதுமென்று ளுங்கவ் வேலை. (உஅ)

எண்டவிர் படைஞர் தாமவ் விறையரு ளாற்¶றூ சோடு
மிண்டிவந் திறைஞ்சி யாஞ்செய் பணியெவ னெனமிக் கார்ப்பக்
†கண்டக வவுணன் கண்டு கனன்றுதன் படையை யுய்த்தான்
றிண்டிறற் படையி ரண்டுஞ் செருச்செயத் தொடங்க லுற்ற. (உகூ)

தேர்கரி பரிந டாய்வெஞ் செருச்செயும் வேலை வஞ்சன்
பேர்படு சேனை யஞ்சிப் பிறகிட வழன்றன் றொன்கைக்
கூரிய கட்கங் கொண்டெங் கோன்படை களைத்து ரங்கே
யாருயிர்க் குயிரா னானை யடுத்தடு படைவிட் டார்த்தான். (ஙய)

விடுபடை யனைத்து நூறி விடையவன் படையை யெமமான்
றொடவிஃ தடுமென் றஞ்சித் தோற்றுமா யையினுற் றீயோன்
புடைபடு தன்னூர் புக்கான் பொன்றுசே னையையெ ழுப்பி
மிடல்கொடு மீண்டா னெந்தை சுந்தராச் சிரம மேவ. (ஙக)

¶ தூசு--படைவகுப்பு.
† கண்டகவவுணன்--கொடியவனான அசுரன்.

சிந்தூர முகக்கோன் பாற்செய் தியன்போர் பார்த்த 0நீது
சிந்தூர முகத்தல் போன்மேற் சிந்துவின் மூழ்கி னு*னென்
றந்தவென் றடர்த்த தீதிற் றுஙிறத் தெங்க ணும்ப
ரந்தவென் றடுத்து ரைத்தாங் கடர்ந்தது விசும்பிற் கங்குல். (௯௨)

அடுகளத் தொளித்துர் புக்க வவுணனை முன்னோன் பார்த்தென்
மிடலைநின் றுளிசெய்த் தோர்பசர் விழினுமாங் கதினின் போல்வா
ருடனுநித் திடுவ ரன்ன தோர்ந்திலை மீண்டா யின்னும்
புடைபடை தொகச்செல் போர்மேற் பொருளெனன் மான மன்றே. (௯௯)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

எனவவ னிசைந்து புலர்பொழு தெதிர்ப்பார்த் திருப்பயா வையு முண ரெந்தை, மனமகிழ் தவத்தோர்ப் பார்த்தற வீர்நம மலைதனின் மலைந்து செல் லவுணன், சினமிகுந் தினியேற் றுலகெலா மளிப்பச் செல்வனன் ன வற்றற வெமக்கோர், புனைமயிற் பரிதோன் றிடமகம் புரிவல் பொருந் ‡துப கரணநீர் கொணர்மின். (௯௪)

என்றருந் திருவாய் மலர்தலு மவர்வேண் டியவனைத் தினையுமாங் குதவத், தன்றுணை ஞானங் கிரியையி னுருக்கொள் சத்தியாஞ் சித்தி புத் திகள்வந், தொன்றவுன் னுதலும் மனையவர்யோத வொளிர்மகம் விதி வழி புரிந்தா, னன்றருண் மகமு மதனுள பொருள்கள் யாவுமா மொரு தனி நாதன். (௯௫)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பாசமார் வேள்வி முற்றப் பசியவெற் பென்ன வாங்கோர்
கேசய மெழுந்தே யண்டங் கிழிபட வுரத்துக் கூவி
நாகமன் னவனுஞ் சேட னடுத்தலை நெரிய மண்ணில்
வாகுறு கால்கண் மாறி மாறிவைத் தாடிற் றன்றே. (௯௬)

வருமயூ ரத்தி வர்ந்தான் வள்ளலன் றதனு ளைம
மொருமயூ ரேச னென்ன வுரைத்தன ருறுவ ரின்ன
திருமலி நாமஞ் சொன்னோர் சிந்தித்தோர் திருவி னைய்வர்
தருணமற் றுகக் கிழைச் சாகாத் துதித்தான் வெய்யோன். (௯௭)

---

0 நீது சிந்தூர முகத்தல்போல--நீதைச்சிந்தத் தக்கவலிமைப் பாட்டை முகந்து கொள்ளுதல் போல
*என்று-சூரியன்
‡உபகரணம்-அங்கமான பொருள்

அன்னபோ தவுணன் முன்போ லளவறு தானை யோடு
துன்னவே ஈம்பன் பாதத் துணையடி தொழுது புத்தி
யென்னுமா தைய யான்சென் றவுணனோ டிகற்போ ராற்றி
வென்னிட வென்றி கொண்டு மீள்வலெற் கருள்க வென்றான். (௩௮)

அவ்வணை மருளப் புத்தி யமர்க்களஞ் சென்று வேண்டுந்
தெவ்வடு படைசி ருட்டி செய்துய்ப்ப விருதி றத்தும்
வெவ்விய வீரர் பாய்மா வேழந்தே ராதி யாகத்
தவ்வலில் வகைர · ரத்திச் சாரிசென் றமர்செய் தாரால். (௩௯)

செருநிக மேல்வை புத்தி சேனைவாள் வயவ ராற்று
தொருவிகின் றிடுத ளேக்கி யுடவிழி சிவந்தா ளாங்கே
பொருபடை தரித்தோர் வீர னுதித்தவ டிணைத்தாள் போற்றி
யுருமைமா தவர்வாழ் புண்யாச் சிரமஞ்செ றைங்கைப் புத்தேள். (௪௰)

சிரடி தொழக்கண் டெங்தை திருவுள [illegible] ந்து தொண்டர்
போர்மலி யினைய னந்தம் புதல்வனு மவனு னுங்கட்
கார்தரு மிலாப மிக்கா மிலாபனென் றழைமி னென்ன
வாரமுற் றழைத்துத் தாழ்ந்தார் மாதவ ரதன்பி னெங்கோன். (௪௧)

தன்னரும் புதல்வன் றன்னைத் தரையினின் றெழச்செய் தேபோர்க்
கின்னினிச் செலக்கு றிப்ப வேகினு னேக லோடு
கன்னர்மா தவரோத் தைங்கை நாதன்றன் சிறுவ னுட
லொன்னலர் முனையிற் காண்டு மென்றுட னேகி னன்பின் (௪௨)
அரிகரி குழாத்துட் புக்காங் கடுகளத் தடுத்த வீரன்
வரிசிலை குனித்து வாளி மழைசொரி தொறுமெ திர்ந்த
தரியலன் சேனை யாவுந் தளர்ந்துட லழிய வாவி
யெரியுமிழ் செங்கட் கூற்றா ரிம்மெனப் புகுந்த மாந்த (௪௩)

முன்னவ னருள்சே யிவ்வா றெதிர்படை முழுது மாறத்
துன்னல னுய சங்கா சுரன்றனக் கிளவ லேுக்கி
யுன்னருந் திறத்தின் னுனை யுபாயத்தாற் படுத்தல் வேண்டு
மென்னவங் குன்னி மோகாத் திரமெடுத் துபயோ கித்தான். (௪௪)

மொய்த்தவப் படையாற் றுனை யனைத்தொடு முனிவர் தாமு
மெய்த்துவெஞ் சோகத் தேய்ந்தா ரின்னறீர்த் தருளே ரம்ப
மெய்த்தரு மூர்த்தி தானு மனையமா தவர்போன் மேவ
வத்திற வறியா தாட விலர்பனப் படையை மீறி. (௪௫)

வானவ ரெவரு மெச்ச வன்சமர் புரியா நிற்பத்
தானவன் விடம்போற் சீறிச் சரமழை பொழிந்தா னன்ன
மானமிக் கிருவர் தாமும் வருகணை விலக்கிப் பின்னுஞ்
சோனையிற் சொரிவார் சாரி சுற்றுவா ரவனி நின்றும். (௪௬)

விண்ணுல காதி சேடன் வீழ்பில மாதி கீழ்மே
லெண்ணறு தானந் தோறு மேன்றிரு மூன்று திங்க
ணண்ணள வுடற்றத் தீயோ னலிதளர் வொழித்தேய் வேனென்
றுண்ணினைந் தேகி ஞனஃ தொத்திலா பனுமீ ளுற்றான். (௪௭)

மீண்டவன் கடைநாட் சீவர் சுழுத்தியில் வீழ்தன் மான
வாண்டறி ஞருமற் றோரு மறிவொரீஇக் கிடத்தல் கண்ணுற்
காண்டலு மிஃதென் னென்னுக் கலங்கஞ ரெய்திப் பின்னு
மீண்டரு மருந்தொன் றுண்டே யெனத்தெளிந் தியற்ற லுற்றான். (௪௮)

வெவ்வினை தவிர்த்தா ளெந்தை விநாயகர் திருநா மத்தை
யொவ்வநூற் றெட்டு வட்ட முளங்கொடொண் ணீறு வீசித்
திவ்விய மனுவை வீழ்ந்து சாம்பினர் செவிதோ றோத
வவ்வழி யெம்மா னன்றி யனைவரு மெழுந்தா ரன்றே. (௪௯)

அனையவ ரெழலுந் தாதை யெழாமைகண் டிலாப வண்ண
வினையது சாத்தா லன்றென் பிழையினேய் வுற்ற தாமென்
றுனியழன் மூட்டிப் பாயப் புகவுவா முகத்தே மைந்த
நினதுளஞ் சோதித் தேனுற் பத்தியி னிறைந்தோ னீயே. (௫௰)

என்றெழுந் தருமை மைந்தற் கின்னருள் செய்தே னோர்க்கு
நன்றுபா லித்தா னீது நிற்கமுன் னலியாப் போரிற்
றன்றளர் வகற்றச் சென்ற தகுவன்மொய்ம் புற்றுச் சேனை
துன்றவெய் திடலு முத்தி தோய்விப்பா னினைந்தன் றோன்முன். (௫௧)

மாகத மலைநேர் மஞ்ஞை யிவர்ந்தைங்கை வாத னிற்பக்
கருணைவெற் பினைக்கண் ணுற்ற கருதலன் றோன்று லென்முன்
0 குருவிவென் னிவர்ந்தி வர்ந்தாய் கொலைபயி லெனத யிற்கிங்
கினையுனை யிடுவே னென்ன வெந்தையுங் கனன்று கூறும். (௫௨)

வக்கிர துண்ட னேனை மூவரா வருத்தல் செய்வான்
பொக்கமில் கணமன் னாவி போக்கிடச் சமுக னேனஞ்

---

0 குருவிவென்னிவர்ந்து-மயிலென்னும் ஓர்பறவையினது முது
கின்மேலேறி

செக்காரர் நிறச்சிந் தூரத் தெறக்கயா னனனென் றனேம
விக்கினன் கொடுமை மாய்க்க விக்கின ராச னேனம். (௫௩)

இன்றுன துயிரை வௌவ விம்மயூ ரேச னேனே
மொன்றுநம் மவதா ரப்பாங் குணர்கில யுணர்வி றீயோய்
நன்றறி யெனவே ‡வீற்று நாண்முகி லெனப்பொ ழிந்து
நின்றன னவற்றே டன்னோன் சேனையுஞ் சிதைத்தா னிந்தன். (௫௪)

கறைதிரை நதியா வோடிக் கடல்புகக் கழுகு சேனம்
பிறையெயிற் றலகை யுண்ணப் பிணக்குவை படலாற் சேனை
பொறியிலி யழன்று தெய்வப் படைதொட்டா னவற்றைப் போக்கி
யிறைவனோர் தண்டன் றனெஞ் சிடையுய்த்தா னிழியசெந்நீர். (௫௫)

இருநிலத் திழிந்த செந்நீர்த் துளிதொறு நின்றின் றேன்றேல்
வருமுறு செயலால் வீரர் வடிவமா தியிற்ற னைப்போற்
கணையில ருதித்தார் வானோர் கண்டரந் தையிற்சு ழன்று
ரரியயன் மகவா னஞ்சி யம்பொனோங் கலிதெ ளித்தார். (௫௬)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அரந்தைசெய் யவுண னொருவனுற் றலுக்காற் றுதயா மவனேக சகேகர்,
பரந்தன சேனிசென் செய்துமென் றுள்ளம் பதைபதைத் தலமா லுற்றார்,
பெருந்தவர் பசிய பிணிமுக மூர்ந்தார்க் கிஃதொரு பெரிதுகொ லென்ன,
நிரந்தர மகிழ்ந்தான் பரமன்மற் றெவரோ நினையவு நிகழவும் வலரோ. (௫௭)

உலகொரு மூன்று முய்யுமா றெம்மா னும்பரோ டிமபரும் வியக்கும்,
வலிமலி மயிலைத் திசையெலாங் கடவி வளர்தரு தசக்கரங் களினு, மலகி
லம் பகழி மழைபொழிந் துதித்த வசுரரைத் தெறுந்தொறு மவர்தந்,
தொலைவில்செல் குருதித் துளிகளி னின்றுந் தொகையறு தருவர்வந் துதி
த்தார். (௫௮)

உதித்தவர் தமையுந் தெறத்தெறப் பின்னு மொழிவிலா தெழுவர்பல்
வீரர், மதிப்பற வவுண வெள்ளமிவ் வாறு வருதலை தனைத்தொழு வோர்க்
கே, கதித்திற மருடே வருளிலா பன்றுன் கண்டுமுன் றனையனை மாராய்,
விதித்திடுஞ் சித்தி புத்திக டம்பால் விளங்குற வுளத்திடை நினைந்தான்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அன்னவ ரிருவர் தாமு மாங்குவந் தொன்பான் கோடி
பன்னருந்திறத்தினோங்கு பூதரைப் படைத்துவிட்டா

‡சுற்றுநாண்முகிலெனை-கற்பாந்தகாலத்துப்பொழியுஞ் சத்த மேகம்போல.

ரின்னர்பல் கசுரர் தம்மை யெடுத்துவாய் மடுத்து மண்ணிற்
றுன்னுசோ ரியையு நக்கத் தொலைவுற்று ருதிப்போ ரெல்லாம். (சுயு)

சாலநா ளிழைத்த தூய தவத்திலும் பெருஞ்செல் வத்தை
ஞாலமீ தறஞ்செய் யாது நழுவவிட் டிடுவார் மான
மேலைநாட் டவத்தான் வாணுள் விளைந்ததை யோம்பா தந்தோ
மூலகா ரணற்ப ஸைத்து ¶முடிக்குநா ளடுத்த திப்போர். (சுக)

தன்னருந் தளமு மேகத் தாங்குகைப் படையு மேக
வுன்னரும் வரமு மேக வொருவனுய் நின்று னன்னுன்
மன்னுயிர் தனது செந்தா மரையடி புகவெம் மான்பின்
கொன்னவி றிரிசூ லத்தாற் றடிந்துமுக் கூறு கண்டான். (சுஉ)

மருமல ரிறைத்தார் வானோர் மாதவர் தொழுது நின்று
ரரிமுத லமரர் போந்தாங் கமலன்சீர் பரச லுற்றார்
பொருவிலன் முகனு ரன்பிற் பூசை செய் தனனவ் வேலை
காககீர் கவிழ்ந்தோ ராருய்க் கதழ்ந்தவ ணோடிற் றன்றே. (சுஙு)

ஓடுநீ ணதியி னூடி யுறுவா ராரா தித்தார்
நீடுவான் கருணை பூத்து நின்மலன் மகிழ்ந்தெ வர்க்குஞ்
சேடுசேர் வரந்தந் திந்தத் திருநதி நதிகட் கெல்லாம்
பீடுசான் றெமக்கு ரித்தாய்ப் பிறங்குமிங் கமர்வோ மென்றும். (சுச)

என்னலுங் கமலத் தோனோர் நிகேதன மியற்று விக்கத்
தன்னிக ரில்லா னங்கட் டங்கின னினைய வாற்று
லந்நதி படிந்தெம் மானை யருச்சித்தோர் தருப்ப ணுதி
துன்னுவித் தவர்சேய் செல்வம் சுகமுற்றுண் டமா ராவார். (சுரு)

வருமயூ ரேச னுய வணமிக்க தவனே பின்னர்
முருகுலாங் கொன்றை சூடு முக்கணர் வாம பாகம்
பிரிவுறு வுமையாட் கேமம் பெருகவோர் மகவாய்த் தோன்றிப்
பொருவிலா மஞ்ஞை யூர்ந்த புகழினி யுரைக்க லுற்றும். (சுசா)

மயூரேசன்றிருவவதாரப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் ௫-க்குத்திரு விருத்தம். (௱எயச)

¶முடிக்குநாள்-மயூரேசமூர்த்தியால் தான்முடிவடையப்பெறுங்காலம்.

பிருந்தியமயூரேசன் றிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

மைக்கனந் தவழ்கா வோங்கு மைதல தேய மன்னன்
சக்கர பாணி யென்போன் றழைதரு கற்பி னல்லா
ளுக்கிரை யோடு செங்கோ லோச்சிமண் காக்கு நாளவ்
விக்கன மொழிமா தீன்ற மகவெலா மிறத்தல் காணூ. (க)

பலபரி காரஞ் செய்தும் பயனின்றி வனத்துச் சேற
னலமெனத் துணியு மேல்வை நற்றவச் சவுன கப்போர்க்
குலமுனி வரத்தாழ்ந் துள்ளக் குறையுரைத் தலுங்கேட் டேந்தால்
கலைமதி முடியோன் வாழ்மண் டலத்தனுங் கதிரோன் றன்னை. (உ)

நன்மையிற் பூசை செய்யின் மகவுண்டா மெனந வின்று
ன்னகட் டொகைக் கொண்டன் பார்ந்திறை பூசை செய்நாண்
மன்னொளி பரப்பா தித்தன் மகிழ்நனு யுருக்கொண் டன்ன
மின்னிடை பள்ளி கொள்ளும் வேலையிற் கனவிற் போந்து. (ங)

கோங்கரும் பெழில்க வற்றுங் குவிமுலை நலந்தோய்ந் தேக
வாங்கவள் கருப்ப முற்று ளவ்வழி யகட்டார் வெம்மை
நீங்கிடச் சிந்து வென்னு நெடுநதிக் கரைப்பாற் சென்று
பாங்கிய ரொடும்வாழ் நாளொன் பான்மதி செலச்சே யீன்றாள். (ச)

மடமயி றருசேய் கையில் வன்றிறற் சூலநேமி
யுடன்விழி மூன்று மாக விருத்தல்கண் டென்று ளோடும்
புடையமர் பாங்கி மாரும் பொருக்கென வெருண்டி ருப்பக்
குடதிசைத் தலைவ னங்கோ ரந்தண னுருக்கொண் டெய்தி. (ரு)

சாற்றுசேய் தனைக்கைக் கொண்டு சக்கர பாணி யென்னு
மாற்றலி ருதைக் கீய வாங்கிநற் சாத காதி
யாற்றுவித் துவப்பி னுமஞ் சிந்துவென் றழைத்து வையம்
போற்றவை கினன்ப யந்த புதல்வனும் விறன்மீக் கொண்டான். (சா)

வேறு.

அணையன் செயல்கண் டிவன்சுரார்க்கோ ரரியென் றெண்ணிப் புகர்வேண்டு
மனுவஞ் செவியுய்த் தானைமுன்னி வனத்தி னேற்பான் விடுப்ப வவன்
பனியென் றாழ்மற் றெனைத்துமொன்றுப் பருவ மீரா யிரந்தவஞ்செய்
தினைய வீசன் றோன்றிவிரும் பெல்லா வரமு நல்கிப்பின். (எ)

பாமே யாய தலைமையுளா னருளே யிசைந்த வடிவமுளான்
றேமே றிதழி முடியுடையான் சிறுகண் வேழ முகமுடையான்
றாமே தினியுற் றெதிரினல்லாற் றனுவும் வரமு மழியாயென்
றேமே லருளி யுருக்கரந்தா னிப்பே றடைந்து மிறந்தனனால். (அ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

இத்தகு வரங்கள் பெற்றசிந் துவுமீண் டெழிறிகழ் கண்டகபுரத்துற், றொத்தசீர்த் துக்கை தனைமணந் துயர்க வுத்துவன் மித்திர னமைச்சா, வைத்ரக னிலத்தா ரசுரரா தியரை வலிதின்வென் றும்பரை வெளவி, மெய்த்தகு சுரரோ டரியையுஞ் சிறையின் வீக்கினன் கொடிதவன் வீரம்.

அழிவில்சீர் வேத யாதிநூல் கலையா றகன்மடிக் கடலினுய்த்தமரர்; குழுவெலா மிறைஞ்சத் தன்னைநேர்த் துருக்கள் குயிற்றியீய்ந் தனன் முறசறைவித், திழிதொழி் லினும்வே றியற்றின ரூற்றூ றிமையவர் குரு வையுற் றெந்தாய், பழிபடு செயறீர்ந் துய்யுமா றெங்ஙன் பகரென விறை ஞ்சலும் பாரா. (ய)

ஒண்ணிட ரனைத்துந் தெறும்விநா யகனை யுன்னியா ராதிமி னீவி, ரெண்ணியாங் கெய்து மெனவவன் மொழிந்தாங் கியற்றினர் புகர்முகத் திறையோர்ந், தண்ணன்மா மடங்க விவர்ந்திரு மருங்கு மணியிழைச் சித்திபுத் திகளு, நண்ணவந் துமைசே யாகிநுந் தெவ்வை நலிக்குது மெனச்சுரர் மகிழ்ந்தார். (யக)

சிந்துசெய் துயரா லிரிந்தமா தவத்தோர் சிலர்திரி சந்திவைப் பிருந்து, கந்தரங் கறுத்த முதல்வனை யுளத்துக் கருதிநோற் றனரவர்க் கிரங்கி, யிந்துசே கரன்வெற் பரசியோ டெருதூர்ந் தெதிர்ந்தவ ருளாவினு யரு ள்வா, னந்திலாங் கியோகத் தமர்ந்தனன் மலைமா தையுநீஇ யெம்பிரா றபணிந்தே. (யஉ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

நினையும்யோ கினர்க்கு நல்கு நிமலநீ யோகு முப்பென்
னெனவிவ் தரிய மன்*மந் தணமென்று னற்றே லெற்கு
மனையது தெளிய நல்கென் றிடவறைந் தோரெ ழுத்துட்
கனிவினோர் வித்தா னீரா றுண்டதைக் கணித்து நோற்றாள்.
மலைமக டிருமுன் னைங்கை வள்ளலம் புயன்மா லீச
னலர்திரு முகங்கண் மூன்றும் வலமிட நடுவாக் கண்க

*மந்தணம்—இரகசியம்

ளிலகவே றூக்கை யாறு வெஃகுமுத் தலைவேல் சங்கங்
கொலைமழு வக்க மாலை குண்டிகை யாறுந் தாங்கி. (கச)
வெண்ணிற முடைய ராய்வெள் விடையிவர்ந் தெதிர்நிற் பக்கண்
டெண்ணிறை யுவப்பி னோக்கி யொருவநின் பாலன் பென்று
நண்ணவெற் கருளென் றேத்த நயந்துநின் மகவாய் வந்தா
றெண்ணுசிந் துவைக்காய் வாமென் றிசைத்தகன் றனன் பிராட்டி. (கரு)
உற்றவிப் பான்மை யெயந்தைக் கோதிவாழ் தனுஞ்ச னூர்த்தி
பெற்றநாள் வரக்க ணேச னுருப்பிரு துவியி னக்கி
முற்றளி யோடு பூசை முடித்தன ளதற்கு வந்தே
மற்றவ னெங்குந் தானு மருவுபே ரொளியாய் நின்றான். (கசா)
நிற்றலு முமையா ளஞ்ச நிருமல னுருப்பொவ் வொன்றுஞ்
சொற்றலுக் கொண்ணு வெண்ணந் துலங்கிடக் கொண்டா னாக
மற்றதன் னவள்கண் டைய வொருமக வாகி நீயிங்
குற்றிடல் வேண்டு மென்ன விரந்தன ளுவந்தெம் மானும். (கஎ)
மூவிரு காமு மூன்று விழியும்வெண் ணிறமு முத்துக்
கோவையார்ந் திலகு மார்புங் குலவவோர் மகவ தாகித்
தேவிமுன் னின்றான் கண்டு திருவுள மகிழ்ந்தெ டுத்தே
யாவிநா யகன்றி ருக்கை யீய்ந்துதன் னங்கை யேற்று. (கஅ)
குளிர்புன லாட்டி யன்பு கூட்டித்தன் முலைப்பா லூட்டிக்
களிமிக விருந்தா ளாகக் களங்கமவா னறநீர் முற்றுந்
தெளிவுற வசந்தம் வீசத் தியந்தநீ டருக்க ளெல்லாந்
துளிருறக் கறவை நீத்த சுரபிகள் கறப்ப வாக. (ககூ)
மூவுல கத்தி னோர்க்கு முடிவுறு வின்பந் தானு
மேவின வுருமே றென்ன விண்டுதுந் துபிக ளார்த்த
தேவர்நன் னிமித்தங் கண்டார் சிந்துரன் னிமித்தங் கண்டா
னாவிது பெரிதே யைய னுடலொவ் வொன்று மாயின். (உ0)
கண்ட@வுற் பாதத் தாலாங் காரியந் தேற வுன்னி
யண்டரைத் தனியிட் டாளு மடற்சிந்து வொற்றர்க் கூவித்
தெண்டிரை யுவரி ஞாலஞ் சென்றுசென் றறிச யங்க
ளுண்டெனி லறிந்து வம்மி னொல்லையி னெனவி டுத்தான். (உக)
அன்னவொற் றுவர்தஞ் செய்கை யறைதும்பின் வனத்தி னேற்ற
மன்னுமா தவரில் லோடும் வந்தா னுமைமே யாய

@ உற்பாதம்-துன்னிமித்தம்.

தன்னிக ரில்லான் பாதந் தாழ்ந்திறைஞ் சித்தி ருப்பேர்
பன்னினர் கணேச னென்னப் பரிவினற் றுக வோர்நாள்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அங்குயர் மரீசி முனிவரன் கணேச னடிதொழச் சென்றக லேல்லை, தங்குமா தவரன் னவற்பணிந் தெமக்கோர் தளர்வுறு வகையுரை யெனவத், துங்கமா முனிவிக் கினந்தவி ரிறைபார்ப் பதிக்கொரு சுத னெனத் தோன்றி, யிங்கிருத் தலினென் ..ளார்ச்சியா யினுமவ் விறைமகிழ் கவசமொன் றுரைப்பன். (உந)

முதலுகத் தினிற்றோள் பத்துருப் பொன்மை முடங்குளை வாகன மிரண்டா, றுத... றுரு வெண்மை நெறின்மயில் வாகன மூன்றும், விதயுகத் தினிற்றே ஞன்குருச் செம்மை மூடிகம் வாகனம் விரிநாற், பதயுகத் தினிற்றே ளிரண்டுருத் தூமம் பாய்பரி வாகனமாகும். (உச).

இவ்வடை வினின்மா முகப்பிரான் வடிவுள் ளிருத்தியே யோகசாதனத்தாற், கவ்வையில் சிகையை விநாயகன் முடியை மகோற்கடன் கவின்றிகழ் நுதலை, யொவ்வுகா சிபன்வின் னிகர்புரு வத்தை மகோதரன் னொளிர்தரு விழியைத், தெவ்வடு பால சந்திர னிதழைக் கெஜமுகன் செவ்விய நாவை.

உயர்கணக் கிரீட னுடியைக் கிரிசை சுதனுவந் தோதிய வாக்கைச், செயவிநா யகனன் னகையினைச் சிறந்த துன்முகன் கேள்விசால் செவியை, மயர்வறு பாச பாணிநா சியைச்சிந் திதார்த்தன்மா மதிநிகர் முகத்தை, யியல்கரு ணேசன் கழுத்தினைக் கணேச னிரும்புயத் தைக்கந்த பூர்வன்.உசு

முலையைவிக் கினவி நாசன்முன் னிதயந் தனைக்கண நாதன்மொய் வயிற்றை, நிலை செயே ரம்ப னேரிரு புறத்தைத் தராதர னிகழ்பிருட் டத்தை, யலைவறு சீர்விக் கினகர னிலிங்கத் தினைவியாட் பூடண னுங்கே புலனிலாக் குயத்தை வக்கிர துண்டன்சகனத்தை யனபன்புன் றொடையை

மங்களமூர்த்தி யிருமுழந் தாளை மகாபுத்தி வனசநேர் பதத்தைச், சங்கையி லேக தந்தன்றிண் காத்தைச் சார்ந்தகிப் பிரப்பிர சாத, னங்கையை யாசா பூரகன் விரலைப் பதுமவர்த் தனனணி நகத்தை, யிங்கித மருளும் விநாயகன் காக்க வியலுஞா னங்கல்வி மானம். (உஅ)

குலமதி தானந் தவம்புகழ் மெய்ம்மை கொழுநிதி தானிய மனுட்டி, பிலகுசேய் மனைநட் பேபோநாற் கதியு மினியசர் வாயுதன் மேன்மை,

மலிபவுத் திரார தியகிலை யனைத்து மாமயூ ரேசனுள் ளூயினா, நலமருள் கபில னற்படை யதனை விகடன்வே தாளமோ கினியே. (௨௯)

பிறவுயிர் களினால் வருந்துயர் பற்பல் பெயருறு நோய்களு மணுகா, திறவுயர் பாசாங் குசதரன் காக்க வேய்ந்திடு நன்பகற் போது, மறமலி யேக தந்தனற் பொழுது மற்றிரு சந்தியு மாறுத், திறன்மலி தருவிக் கினகிரு துப்பேர்ச் செம்மறண் ணருளொடுங் காக்க.* (௩௰)

இந்திரன் றிசைபுத் தீசன்றீத் திசைசித் தீசனந் தகன்றிசை விநாயக, வந்தவி ருமாபுத் திரன்வரு நிருதி திசைகணே சான்வரு ணன்போற், றந்திசை விக்கி னவர்த்தனன் பவனன் றிசைகெச கன்னனூர் நிதிக்கோன், றந்திசை நிதிப னினியவீ சானன் றிசையீச நந்தனன் காக்க. (௩௧)

என்றுயி ருடல்பந் தஞ்செ ய னலந்தீ திடம்பொழு தனைத்தினுங் காப் பான், மன்றநா டொறும்புப் போதுமவ்விறையை வழுத்தலா மிக்கவ *சத்தா, னன்றறி முனிவீர் போற்றுமி னிடர்போ நலமுறுஞ் சாதமீ தொழுக்கன், பொன்று மற்றவை யன்றியார் செயினு மெண்ணியாங் குறுவரொன் றகன்றுன். (௩௨)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

செப்புமீ திருக்கச் சிந்து செலுத்துதூ துவரொங் கெங்குந்
தப்புறு தேகிப் பின்னர்த் திரிசந்தித் தலஞ்சார்ந் தாங்கே
யெப்புவ னத்து மென்று மறியா விவ்வதி சயந்தேர்ந்
தப்பரி சொல்லை போய்த்தம் மாசனுக் கறையலுற்றார். (௩௩)

செருவிரும் பிறைவ வண்சீர்த் திரிசந்தி வனமென் றென்றுங்
கிருவருந் துருவ நீண்டோ னிமமலை வல்லி யோடும்
பொருவருந் தவத்தோர் பூதர் போற்றவாழ் கின்ற னன்றி
யொருபெரும் புதுமை மேலு முண்டஃ துரைத்து மாதோ. (௩௪)

கண்ணக னுலகின் றேம்புங் கவுரிநோன் பியற்றி தென்னற்
றண்மதி வாரத் துற்ற சதுர்த்தி *வை காசி நாளி
லெண்ணிலக் கனஞ்சிங் கங்கோ ளெழிற்சுதி னத்த வட்கோர்
விண்ணவர் புகழ்ந்தி றைஞ்சும் விமலநந் தனன்றோன் றுற்றான். (௩௫)

§ஒழுக்கன் பொன்றுமற்றவையன் றியார் செயினும் என்பது— பொருந்திய ஒழுக்கமும் அன்பும் இல்லாதவர் மிக்கதகுதியுடைய வராயினும் அவருக் கின்றி பொருந்திய ஒழுக்கமும் அன்பும் உடையவர் எளியதகுதியுடையவராயினும் அவருக்குப்பயன் படுமென்பதுகருத்து.

* வைகாசிநாள்-விசாகநட்சத்திரம்.

கண்ணொரு மூன்று நீண்ட கரங்களோ ராறும் வெள்ளை
வண்ணமு மாகத் தோன்றம் மகற்குப்பேர் கணேச னென்னத்
தண்ணளி சுரக்கும் வேத முனிவரர் சாற்றி யெண்டோ
ளண்ணலின் வணங்கு இன்று ரன்பின்முப் போது மென்றார் (கசு)

ஒற்றுரை கேட்ட சிந்து வுமாபதி திருவாக் கான்முன்
சொற்ற தோர்ந் தெமையித் தோன்ற ஞெலைக்கும்போன் மெனவுட் கொ
ள்கால், வெற்றிமல் இவனே நின்னைவிட்டிடு மெனவோர் வாக்கு,
மற்றவ னஞ்சுமாறு வானினின் றெழுந்த தன்றே. (கஎ)

அன்னசொற் கேட்டுச் செந்தீ யழன்றெனக் கனன்றிச் சேனை
யின்னினிப் படுத்து மீள்வ லெனவெழுத் தடுத்த மைச்சர்
மன்னவர் மகவைக் காய்தன் முறையன்று மாயை வல்ல
துன்னெறி யசுர ராலே தொலைந்தல்பல பாகு மென்றார். (கஅ)

மந்திர ருரையான் மாயை வல்லபல் லவுணர்க் கூவி
நந்தவில் பொன்பூ ணுடை நனியளித் துய்ப்பித் தானீ
ரைந்ததன் மேலு மாமயோ சனையெல்லை பருத்தோங் கன்று
ரிந்துசே கரன்சேய் முன்ன ரெய்தினு ரிறப்ப தோரார் (கசு)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கிருத்திர னெனும்பேர் தரித்தவோ ரசுரன் கழுகதாக் கிளர்சிறை பரப்பு, மருத்திஞல் வரைக ளடுக்குறத் தருக்கள் வன்றரை சாய்ந்திடத் துகள்வான், பொருத்திட வெழுந்து விண்படர்ந் துமையாண் முன்றிலிற் பூம்புன லாட்டி, யிருத்திய மகவை யிம்மென வீழா வெடுத்திரு விசும்பிடைப் பறந்தான். (சய)

அடிகண்மார் காணு வரற்றியேங் குற்று ரடன்மிகு பூதர்க டலைவ, ரிடியென முழங்கி விசும்பிடைப் பாய்ந்தா ரிதன்முனங் கணேசனு மிளஞ்சேய், கொடியபுட் களத்தைப் பிடித்திருங் கரத்து நெரிந்துமீண் டுலகனைத் தீன்ற, துடியிடை யமலை மடிமிசை யிருந்த தொல்லுரு வொடு பிறர் காண.

பாரிலவ் வசுர னிறந்துவீழ்ந் தனன்வீழ் பரப்பதி னைந்தியோ சனைத்தா, யோர்தரு தருக்க ளொடும்பிதிர் வுற்ற திம்மெய்யும் மாயையும் வல்ல, சூரியோன் னலனைப் பிறந்தமுன் ருநாட் குழவிபோய் முடித்ததிண் டென்றுற், போதி சயந்தா னிதனினு முண்டே யெனப்பெருந் தவர்மகிழ்ந் திருந்தார்

பக*திரு திங்க டொட்டுப் பத்தெனுந் திங்கள் காறுந்
தருவர்க ளெலிக ளாயுஞ் சாற்றுமார்ச் சால மாயு
மிகறரு புலத்தை வெல்லு மிருந்தவர் சிறுன்போ லாயு
நகைமலர் கனிகாய் பிஞ்சார் நச்சுமா மரம தாயும். (சுஅ)

மகபதி மனைபோ லாயும் வலிமிகு கமட மாயும்
பகலவ னிவுளி யென்னப் பாய்பரி யாயு நஞ்ச
மிருகனி தருவோ னுயும் வீங்குட னுக மாயும்
புகர்முகற் செருப்பான் போந்து பொன்றினர் புகலற் பாற்றே. (சுகூ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பதினொரு மதியிற் பழமறை முனிவர் பாவையர் புடைதொறும பொ துளக், கதியெவ ரெவர்க்குந் தருமொரு முதலாங் கணேசநா மதனிச சே யை, மதிநுத லிமவா னொருமக ளிருகை வாரிவைத் தலர்செறி பொழில வழய்ப், புதுமலர் பறித்துத் தென்றலி னுலாவப் போயினு ளாயிடை மா தோ. (சுற)

அருத்தியோ டுருமைப் புதல்வனை யெமையா ளத்தனை யாடலின் விடு த்தாள், கருத்தினே டழைப்பார் மடித்தலத் திருப்பான் கனிந்தவாய் முத் தநன் களிப்பா, னொருத்திதோ ளுகைப்பான் கைத்தலத் துயர்த்தி னுவந் தவள் கொங்கையி னடிப்பான், பொருத்துபூ ணணியைப் பிடித்திழுத் து குப்பான் புணர்முலை வாரினைக் கிழிப்பான். (சுசு)

அடித்திடு மொருத்தி தனைப்பிடித் திழுப்பா னம்மைமுன் கொண்டு போய் விடுப்பான், கொடிக்கிணை யிடையார் விழிப்படை புதைப்பான்

---

* இருதிங்கடொட்டுப் பத்தெனுந்திங்கள் காறுந் தருவர்கள் என்பது— இரண்டாந்திங்களில் கேமாசுரன் குசலாசுரன் இவர்கள் எலிகளாயும், மூன்றாந்திங் களில் குரூராசுரன் பூனையாயும், நாலாந்திங்களில் பலாசுரன் முனிவர்சிறுன்போலா யும், ஐந்தாந்திங்களில் வியோமாசுரன் நச்சுமாமரமாயும், ஆறாந்திங்களில் சதமயிட பக்கணியெனும் ஓரசுரமா இந்திராணியைப்போலும், ஏழாந்திங்களில் கமடா சுரன் ஆமையாயும், எட்டாந்திங்களில் கற்பாசுரன் குதிரையாயும், ஒன்பதாந்திங்களி ல் துந்துபியசுரன் விடத்திரை நாவற்கனிகளைச் சமைத்துக்கொண்டு ஒருமுனிச்சிறு ன்போலும், பத்தாந்திங்களில் அசுகராசுரன் மலைப்பாம்பாயும், உருக்கொண்டுவரஅவ ர்களை முறையேபகவானசை பூனையுருக்கொண்டும் வேதங்களை நாயுருவாகச் செய்தும் தம்மிலேயாட்டிழுலும் மா ய அலைத்துப்பிளந்தும் அரக்கி செவியைப் பிடித்திழுத் தும் காலினுல் துவைத்தும விளாவாய்ச்செலுத்தியும் மோதகத்தையளித்தும் விழுங் கியபாம்பின்வயிற்றைப்பிளந்தும், கொன்றனர்.

குறியின்றன் கண்புதைப் பாரைப், பிடித்திட விழிப்பான் மரத்தடி யொழிப்பான் பினும்பல வாடலங் கிழைப்பான், றொடிக்கையின் மடவார் குழுநடு வாறு தோளுடை யண்ணலவ் வேலை. (சஎ)

மறமிகு சுலபா சுரனொரு சரப மாய்வர மடலா ரிரிந்தா, ரறம் வளர்த்திடுதா யனையபுட் கஞ்சி யன்பருக் குரைக்கவோ டினளாற், றிரகர சிங்கமாயினை யடக்கச் சிம்புளா யுருக்கொள்சே வகனூர், 'விறன் மக வொருபுள்ளாமவு னனுக்கு வெருவுமே யொருவுமே விடுமே. (சஅ)

வந்திடு சிம்புட் கால்களைப் பற்றி வச்சிரப் பாறையெற் றிடமெய், சிந்திமாண் டதுபன் னிரண்டெனு மதியில் வீமனென் றோர்திறற் றகுவ, னுந்திரு தகுவர் தமையிரு சிலம்பா வுளுற்றியோர் ‡புனைவனு யிசந்து, தந்திமா முகன்பாற றுளவேற் றடியிற் றரித்துவந் தாடின னன்றே. (சகூ)

ஆடலு முலக மனைத்துமா டினபின் னணிசிலம் படியிணை மலர்நின், றோடிட வுதற விருதயித் தியரோ டொன்றிவீ மனுஞ்சிதர்ந் தொழிந்தார், வீடுமற் றொருநா ளுவிச னெனுமோ ரவுணனோர் கொடியகீள் கரியாய்த், தேடிநங் கணேச னுட்டயர் களத்துச சென்றன னதநிறந் தெரியா.(ருo)

மடங்கலி னிவர்வான் கரியையென் செய்யான் மற்றதன் கவுளினங் குசங்கொண், டடங்கிடப் புடைத்தூர்ந் தியாங்கணு நடாத்தி யுழுவலி யடக்கவீழ்ந் திறந்த, தடங்கிடைம் புலத்தார் நோக்கிமுன் றந்தை யருமகத் தெழுகரி யட்டாங், கிடம்படு முடற்று னவமத கரியை யிருத்ததிம் மகவெனக் களித்தார். (ருக)

கூடனென் றொருவ னுண்டிரண் டினிற்சேய்க் குழாத்தொடைங் கான்புனல் படிநீ, ரோகூடயின் விடஞ்சேர்த் தொளித்தனன் சிறார்தோய்ந் துயிரிழப் புற்றன ரதனை, நாடிநல் விடக்கண் ணுகைகளும் பிழைத்தா ரஞ்சொழிந் ததூட மசுரன், வீடினன் றந்தை நுதல்விழிப் படுவேள் வெந்தன னெனினிதோர் வியப்பே. (ருஉ)

பின்னர்மூ வாண்டுவரச்சிறு ரொடெம்பிரான்பிறி தோர்வனத் தாடத், துன்னுபூந் தடத்து விகிர்தனென் றொருநா னவன்சுறு வெனச்சுழ லுதல்கண், டன்னதைத் தந்தை சலதிவாய்ப் படுத்த சுறுவெனக் கைக்கொண்டாங் கெறியச், சின்னமா யிறந்த தங்ககன் றுமைவாழ் திரிசந்தி வனஞ்செலு நெறிவாய். (ருங)

---

‡ புனைவனுய்-கம்மியசாதியான்போன்று

மாயையாற் பொருப்பொத் திடும்பனென் றொருதா னவன்வழி மறித்தனன் *கவுஞ்ச, மாயவெற் படுசேய் முன்னவ னோர்நெட் டுயிர்ப்பெறிந் தனுவென வடர்த்துத், தாயின னண்டோர் நாலின்வெற் பாசி தருசிவ பூசையாற் றலும்பா, வீயென வவள்பாற் செலவான் பூசை யியற்றள வுறேலென விசைந்தாள். (ருச)

அறைதரு தாய்முன் முகங்களோ ரைந்துங் கரங்களீ ரைந்துமான் மழுவுங், கறைதரு மிடறுங் கொடுசதா சிவமாங் கடவுளாய் நிற்பநேர் கண்டாங், கிறைவியேத் தெடுதநென் பிழைபொறுக் கெனலு மெம்மனை யிற்றைதொட் டியானிற், குறுகுகா லெல்லாம பாறரு கென்று குழவியா யமுதருந் தினனால். (ருரு)

அன்னகா லையினிற கருத்தம னெனுமோ ரவுணனண் டரியவிஞ் சையன்போற், றன்னிமா தவர்தஞ் சிறுனைவாய் மடுத்துத் தணைக்கணு சியின்வெளிப் படுத்தான், மன்னுநீள் செவிகண் ணாசியின் வழியுட் பெய்துவாய் வழிவரச் செய்தான், பின்னைவந் துமைசேய் தன்னைவாய் வழியுட் பெய்தனன் விடான்விண் ணே கினனால். (ருசா)

முக்கணு யகன்சே யக்கணம் விமலை முகத்தில்வந் துதித்தவன் கவுளிற், கைக்கொளோர் புடைப்பாற் புவிவிழுந் திறப்பக் கண்டன னகவையைந் தெய்தத், தொக்கமா தவரிற் றொறுஞ்சிறு குறும்பு செயவவர் தொடர்ந்துமைக் குரைப்பச், சிக்கெனச் சிறையிட் டனளதன் மேற்பல் குறும்பவ சகஞ்செறிந் தனவே. (ருள)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

இனையவா றைய னாட்டி னியல்பினை யறவோர் நோக்கிப்
புனிதநின் செயலோ ராது புலந்தன மெமைக்காத் தாளென்
றனையதம் மகங்க டோறும் பூசிப்பா ரப்ப மாதி
யினிதளித் தனுஞ்சி றூர்கட் கிமின மிசைந்த தேய்க்கும். (ருஅ)

என்னவவ் வாறீந் திட்டா ரோரம்ப னுவந்தா னற்றான்
முன்னவற் கருத்து சிற்றூண் முதன்மகார் தமக்க ருத்த
வன்னனொன் றெவரு மின்று நடத்துவ ரினும்$பல் வேறுத்
துன்னவு ணரையு மட்டான் மூவிரண் டகவை தோன்ற. (ருகூ)

---

* கவுஞ்சமாய வெற்பு—கிரவுஞ்ச மென்னப்படும் பருவதம்.

$ பல்வேறுத்துன்ன வுணரையு மட்டது என்பது—ஒட்டகமாய் வந்த கடகாசுரனைத் தூரத்தில்வரும்போதும், சாயைபிடிப்பதில் வல்லவனை சாயாசுரனை உருத்துப்பார்த்தும், முனிச்சிறுனைவந்த சஞ்சலாசுரனை விளையாட்டினலும்போராட்டினலுங்கொன்றதாம்.

பொன்னகர் யவனை னெம்மாற் போற்றிவெம் பாசந் தோட்டி
பின்னுமிழ் பாசு கஞ்ச மெனவிளம் பாயு தங்கொண்
டின்னவை கதிரோ னங்கங் கடைந்தது ளாற்செய் தேன்கொணை
முன்னவ வெனவேற் றீய்ந்தான் முனிவிலா வரங்கள் பின்னர். (சுய)

மேவினுன் செந்நா யாக விருகனு மசுர னெந்தை
தேவகம் மியன்முன் னீயந்த வங்குசத் தவற்செ குத்தான்
றுவிலாண் டேழ்வந் தெய்த வதிதிகா சிபர்தம் மோடாங்
கோவிலா தெய்தி யேத்தி யுறுவரம் பெற்றுள் பின்னும். (சுக)

பெற்றனர் வரம நேகர் பெரிதும்வந் திறைஞ்சி யந்நா
ளெற்றிரண் டாளி யாகக் கிருதாந்தன் காள னென்பார்
துற்றலுந் துதிக்கை கொண்டீர்த் திரண்டுமுட் டமர்க்குத் தூண்டிச்
செற்றன னெந்தைக் காண்டெட் டுறச்சிகி யிவர்தல் சொல்வாம். (சுஉ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஓதுகா சிபப்பேர் முனிதுணை வியரிற் கத்துரு வினதையென் போர்க்குள், வாதநேர்ந் ததனல் வினதைபுத் திரனைக் கத்துரு மைந்தராம் புயங்கர், பாதலத் திடைவன் சிறைசெயத் தாய்தன் பதிக்குறைத் தவர்த்தெற வோர்சே, யீதியெற் கெனது மவனின தகட்டோர் முட்டையேய்ந் திடுமின்னே யஞ்சேல். (சுங)

அன்னதே னயரா லன்றிமா முகத்தே வங்கையி னுகிர்நுதிக் கீற்றுற், பின்னமுண் டதிலோர் மயிலெழு மதையப் பிரானிவர்ந் தன்புதல் வனைமீட், டன்னதீர்த் தருள்வ னென்றவட் புணர்ந்தா னியல்கருப் பத்தினோர் முட்டை, மன்னிய துயிர்த்துக் காப்புழி யாங்கெம் வாதன்வந் தனன் வினை யாட்டால். (சுச)

அங்கணே ரசுரன் கரியனு யிரத்தக் கண்ணனு யொருதலை யிரண்டு, பைங்குரன் மூன்று வத்திர நான்கு செவியைந்து மருப்பறு தோகை, பொங்கெழு விழியெண் டாளுடைப் புள்ளாய்ப் போந்துபல்கிறிசெய்து மருட்ட, வெங்கடம் பெருமான் கண்டுபின் றொடர்ந்தீர்த் திருத்தனன் பாசமூய்த் தவனை. (சுரு)

ஆங்கமர் வினதை தன்வயிற் றுதித்த முட்டைகொண் டடிக்கண் வைத் தேத்தத், தேங்கறற் சடையா னதன்வா வுணர்ந்து திருநகங் கொடுபிளந் ததினின், றோங்கல்போல் வருமா மயிலிவர்ந் துலாவி யொண்டொடி குறைவினு யருள்செய், திங்ககன் றுமையோ டெம்பிரா னமாச் சிரமஞ்சென் றிறைஞ்சியிற் றிருந்தான். (சுசு)

அன்றுதொட் டெந்தைக் கொருபெயர் மயூரேச் சுரனென யாவரும் புனைந்தார், நன்றுறு மனைய நாமமோ தினர்க்கெஞ் ஞான்றுமே லொன்பதா மாண்டி, னென்றுபல் சிறுரோ டம்மயி லிவர்ந்தாங் கோர்சுனைப் புனற்படி காலை, மன்றவா சுகிப்பேர்ப் 0புயங்ககன் னிகைதோ ழியரொடாடிடவவண் வந்தாள். (ருஎ)

வருமட மயின்மர முகப்பிரான் றனில் வணங்கியெந் தாயெளி யேனிற், கருளினுற் றுற்று பூசைகொண் டாள்கென் றறையமுன் வினதைபா னல்கு, மிருவர முணர்ந்தாங் கேகிப்பூ சனையேற் றீன்றவா சுகிதொழா மையினவ், மா மணயைப் பறித்தது மெதிர்ப்ப வுட்கவீர்த் தணிந்தனன் றேட்கே. (ருஅ)

அன்னதோர் செயல்பன் னகவிறை யுணாந்து படையொடு மமர்குறித் தடுப்ப, முன்னவன் பரியா மயிற்செவி யிடைநன் மனுமொழிந் தாத்தொகை முரணை, யின்னினி யட்டெய் தெனவிடப் படர்ந்தேற் றனந்தனைக் கொத்திவா யிடைக்கொண், டுன்னுமுன் றாப்பெற் றனையிறுணுக்கிப் பிறவரா வுட்கியேத் திடலும். (ருகூ)

பரிவொடு மவற்றைத் தோளணி காதி னணியுரத் தணிபதத் தணிமேல், விரலணி யாதி யாத்தரித் தான்மெய்ம் மிலைதிருப் பணியின்மேதினியோர், பொருவறு தாதை புனைகலன் புதல்வர் புனைதனமாண் பெனற் கொருகாட்டாத், திருவிளை யாடல் செய்தன னெம்மான் செயலெவ ரறியகிற் பவர்மேல். (எய)

வாசுகி தனையை முதலகன் னியர்க்கு வாநல்கி வினதைசேய் மூவ, ராசுறு சிறையும் விடுத்தனன் பின்னர்க் கோரனென் றேதுமோ ரசுரன், பாய்சிறைக் கொக்காய் முனிவர்தஞ் சிறுரை வாய்ப்பெய்தெம் பண்ணவன் வாவ்பார்த், தேசறவிருந்தான் பாசினு லவனைத் தெறச்சிறார் பிழைத்திறைஞ் சினரால். (எக)

சாற்றுசம் பாதி சடாயுசே னப்பேர்ச் ‡சகுந்தங்க ளாமொரு மூன்றுங், கூற்றுறைத் தவன்றன் சுதன்விடை கொடுதங் குரவனைத் தாழ்ந்துவாழ்ந் திருந்த, தோற்றுபுத் தாண்டிற் காரள னென்போன் பன்றியாய்த் துன்ன

---

0 புயங்க கன்னிகை-நாகவேந்தன் புத்திரி.

ஒருகாட்டா-ஓர்திருஷ்டாந்தமாக.

‡ சகுந்தங்கள்-பட்சிகள்.

வங் கதனை, யாற்றல்சா 0லரியா மரியைவென் றவன்சே யஞ்சுமோ பாசம் விட் டழித்தான். (எஉ)

கலனொடு விகார னெனுமிரண டசுரர் காட்டுமே றியினுரு வாய்மெய், வலனொடு மெதிர்ப்ப மாமுகக் கடவுண் மாய்த்துயர் கமண்டல நதிதோய்ந், தலகில்சீர் பெற்ற பராசரன் றொழுப்பல் வரநல்கிக் கார்க்கிய வறவோ, னிலகுமெய்ஞ் ஞானம் வேண்டலு நவின்றே பெழிற்சின கரந்தமர் காலை. (எங)

புறனமர் முனிவர் சிறுனைவந் தூர்த்த கேசனுந் தருவனோர் புலியா, யிறையின்வாய் மடுத்துட் புகவவன் செவிமுக கீர்ந்துபற றகர்த்துனை யேவுந், திறலனை யடைந் தெனவிடுந் தழுவை செருபபமாள் சிறுவொ டு நம்முன், மறவியைக் கொணர்கென் றுய்த்தனன் பாசப் படையையஃ தேகிமற் றவனை. (எச)

வலிதின்யாப் புறுத்திச் சிறுவொடுங் கொணர்ந்து விடுப்பவந் நகன் மகோற் கடவோ, நலனருள் பவவோ நாயினேன் பிழைத்த தின்றுதா னவப்புலி நவிய, வலேவொடு மென்முன் வந்தனா சிறுவ ரஃதடி யேன்றவ றெனினும், விலகுமா றருளென் றிரப்பவெம் பெருமான் விரைந்தருள் புரிந்திஃ துரைப்பான். (எரு)

இற்றைநாண் முதனம் மடியனை யாமென் றெண்ணிநீ யணுகலே யணுகின், முற்றநின் றொழிலு மாவியு மிறுமே கெனமொழிந் தருளநன் றெனக்கூற், றுற்றனன் றன்னூ ரெந்தைமெய்ஞ் ஞான முரவனுக் குணர்த்திவீற் றிருந்தான், செற்றபுல் லவுணன் றன்னிழி விறைக்குச் செப்ப வேனையருமாங் குரைத்தார். (எசு)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

சிந்துமன் கேட்டு டன்று செருக்குறித் தனிகம் யாவும்
வந்திடப் பணித்து நூறோர் மந்திரர் சூழ்ச்சி யுட்கொண்
டந்தமில் வரங்கள் பெற்ற கனலனு மவுணன் போரில்
வெந்திற லினன்ற னைப்போன் மிக்கவீ ரியனன் றனை. (எஎ)

அழைத்தணி கலன்பொன் மற்று மளித்தெண்ணில் பதாதி யீய்ந்தே
தழைத்தநம் மினத்தோர்க் கின்னல் புரிதந்தி முகவ னோடும்

---

0 அரியாமரியை வென்றது-நரசிங்காவ தாரஞ் செய்த விஷ்ணுவைச் சரபப்பட்சியாக வடிவங்கொண்டு வகிர்ந்து நகத்தையணிந்து கொண்டதாம்

பிழைத்திடா வமர்செய் தாவி கொடுவென்றி பெறுகென் றேவ
வுழைப்பினன் சென்றெங் கோன்வை கிடமுற்றி யொல்லை யார்த்தான்.

கண்டருந் தவரி டும்பைக் கடற்படிந் தீசற் போற்றி
யண்டர்நா யகனே யோர்தா னவன்பெயர் கனல னென்பா
னெண்டகு தானை யோடீங் கிண்டினு னவற்காய்ந் தெம்மைத்
தொண்டுகொள் சரணீ யென்னத் துதித்தனு முமாம கேசன். (எகூ)

படந்திக ழரவப் பைம்பூட் பாலக கணேசற் கூவி
யடர்ந்தநாற் றானை யோடு மனற்பெயர்த் தகுவ னீங்கே
படர்ந்துளா னவனை யுவி படுக்கெனத் திருக்கைச் சூல
வுடம்பிடி நலகக் கையேற் றெந்நநாற் படைக ளாக்கி. (அய)

வரைபுரை மஞ்ஞை யூர்ந்து மருவினான் றகுவன் முன்னர்த்
திரைசெறி கடனி கர்த்த விருதிறப் படையு நேர்ந்து
பொரவிர வலன்ப தாதி மாய்தலும் பொருன்வில் வாங்கி
யெரிமுத லியவே வேவி யெந்தைசே னையையட் டேற்றான். (அக)

பொருகன லன்பல் வாளி புனிதன்மேற் செலுத்த லோடும்
வருகணை யாவு மட்டெம் வள்ளலெண் ணிறந்த வாளி
யொருமுக மாக வேவி யுடற்ற வாற் றானின் றோர்ந்தே
யரியமா யாசா லத்தா னலதடற் கொல்லா தெனன். (அஉ)

மாயைகள் பலவி யற்ற வருபவை யனைத்தும் போக்கிக்
காயன் வடவை மூன்றுக் கனலிய தெனச்செல் சூல
நாயகப் படையைச் செம்ம னடாத்தலும் போயன் னானைத்
தீயமாய் விந்துக் கங்கை தோய்ந்து சேர்ந் ததுங் தேவை (அங)

மறந்திகழ் சூல்கைக் கொண்டெம் வள்ளன்முன் னிறந்தோ னல்லா
முடங்கினோர் களினை முச்செய் துவப்பினெம் பான்பா னண்ண
வறந்திகழ் சுரன்மெய் தைவந் தளவிலா வரிசை நல்கித்
துறந்தவர் தொழுமே வேனோர்கருஞ் சுரந்தருள் வழங்கி னானல். (அச)

பின்னர்முன் னோன்முன் னெய்தப் பெற்றுளோர்க் கருளி வைக
மன்னனுஞ் சிந்து வின்பால் வந்தொற்றர் கனலன் மாண்டா
னென்னலு மழன்றே ரம்பன் றனைப்படை தொடாதெவ் வாறட்
டின்னதீர்த் திடுவா மென்றோர்ந் துளந்தெளிந் தினைய செய்வான். (அரு)

0 சூல்-சூலப்படை

அருளொரு மேனி யாய வைங்கரன் வதியுங் கானத்
$திருள்வலி மதிவா னீர்கா லெரிபுகா வகைய ணிப்பப்
பெருவளங் குறைந்தாங் குற்ற தவர்செயல் பிறழ்ந்தவாற்றால்
வெருவியைங் கரற்கு ரைத்தார் கேட்டிமுக் கணும்வி ழிப்ப. (அசு)

கருணைசெய் வல்க்கண் பானுக் கார்வழி தாவி டக்கண்
டிருமதி யொடுபைங் கூழா தியபொரு டாறு தற்கண்
டாமகக் குரிய முத்தீ யாவுமுன் னையிற்ற ழைப்பப்
புரிகரு மங்க ளாற்றிப் புன்மைதீர்ந் திருந்தா ரெம்மான். (அஎ)

தீயன வினைத்தா நம்பாற் செய்தனன் சிந்து வென்னக்
காயழல் போன்றுட் பொங்கிக் கண்ணுதற் பிரானைத் தாயோ
டேய்வுறப் போற்றி நிற்குங் 'குறிப்பறிந் திறைபல் வீரர்
§பாயசா ரதத்தூ சிந்தப் பதகனைத் தெறப்ப ணித்தான். (அஅ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

தாதைதாண் மீட்டுந் தாழ்ந்தறு புயந்துத் தனிமுத றளிப்புறத் தணையக், காதுவேற் குமரன் பத்திர னிலம்ப கன்னனோ டிரணிய கருப்பன், நீதுரு விரத்த லோசன னந்தி திறற்பஞ்சா னனன்புட்ப தந்தன், மாதரார் பிருங்கி பிரமதன் சோமன் மாண்டதா வானல னரனே. (அகூ)

சாமளன் பூத ராசனெண் சபலன் சஙகனல் விகடனேழ் கோடி, யாமெனுந் தருசா ரதரொடுந் தொக்காங் கடியிணை பணிந்தன ரவரை, மாமைசேர் தத்தம் விமானமூர் தரச்செய் தருந்தவா மகார்சிறை மருவ, வேமமார் தேரூர்ந் தயிற்கரத் திளவ லருகுற வெழுந்தனன் கணேசன். (கூ௰)

‡ஆயிரத் திரட்டித் தடக்கையை யுடையா னாயிரம் வளையெடுத் தூதப், பாயிருட் படலங் கிழித்தொளி பரப்பும் பான்மதிக் குடைநிழல் கவிப்பத், தோயறற் றிரைபோற் கவரிக ளிரட்டத் தோகைவின் னூரிஞ்சவொன் றிரண்டு, வாயுடைக் கருவி யாதிபல் லியங்க டிசைதொறும் வாழியென் றியம்ப. (கூக)

$ இருள்வலி-சூரியன்

§ பாயசாரதத்தூசு-பரம்பியபூதப்படைகள்.

‡ ஆயிரத்திரட்டித் தடக்கையை யுடையான்—இரண்டாயிரம் கைகளை யுடைய பானுகம்பன்.

தேசவிர் மணித்திண் டேர்கள்பல் வரைபோற் செலநடந் தொண் ணல னகர்க்கோர், யோசனை வரைப்பி னமர்ந்துசிந் துவின்பா லொற்று னூன் முறைவிடற் கோர்ந்தே, யாசினந் திசைக்கூஉய்ப் பரம்பரன் வர நின் றிடவிழைந் திடினண்டர் சிறைநீக், கேசற விழையா யெனினமர்க் கெழுகென் றிசைத்துமீ டெவ்விடத் தென்றூர். (௩௨)

அப்பணி தலைக்கொ ணந்தியீ சனைவெற் பரசியை யுளங்கொடு சூக்கத் தொப்பிலோர் வடிவிற் சிந்துவி னவைபுக் குவன்றவி சினுமுயர் பீடஞ், சுப்பிரத் தமைத்தாங் கிருப்பமாற் றனஞ் சூழனீத் துற்றநீ யாரை செப்புக வந்த தெனமயூ ரேசன் றூதன்யான் வந்தது தெரிக்கின். (௩௩)

திருவறி வென்னு மிரண்டினு ளொன்று சேர்ந்தவர்க் கொன்றுமே சாதீ, திருநிலத் தியல்பா தலிற்றிரு வெய்து நினக்கறி வெய்தலின் றெ னினு, நிருமலக் கடவுள் பானெடுந் தவந்தாற் பெறுவர நிலைப்பநீ செங் கோ, லருளொடு நடந்த விலையிறை நினக்கோ தமைச்சமின் றினித்திரு வேண்டின். (௩௪)

உம்பரார் சிறைநீத் தறநெறி செலுத்தி வாழ்தியின் றேலமர்க் குறு தி, யெம்பிரா னருண்மேற் கொண்டுரைத் தனனென் றனனிது சிந்து மன் கேட்டே, கம்பமொன் றிலனாய் நகைத்தெரி கண்கள் காலநந் தி யைவெகுண் டிளஞ்சேய், நம்புநின் முதல்வ னவன்சொலான் மற்றைத் தானவர் போலெணி நவின்றாய். (௩௫)

கந்தடு களிற்றைக் காய்தரு மரியென் காற்புண்மு னெவன்செயு மனைத்தாப், புந்தியில் பிறரைச் செயித்தன மெனத்தற் புகழ்ந்தவன் பு கன்றனன் கொன்னீ, யுந்துதூ துவனிற் கோறன்மாண் பன்றே கென நந்தி யுளம்பொறு திறையை, நிந்தைசெய் தனைசே யெனவவன் சொலி மீ ளென்றலா னினையடநி னையேன். (௩௬)

இல்லையே னினது படையெலாங் கையாற் பிசைந்துசாந் தெனவி ணைப் புயங்கட், கொல்லைபூ சுவன்காண் மதியிலா யெனவோ ருயிர்ப்பெ றிதலுமதன் மருத்தா, னல்லெழிற் சபையின் வலையொடிந் ததுவிண் ணேறென நடுங்கியும் வியர்த்தும், வல்லையோ டினரங் குறைந்தவர் சிந் து மயங்கின னுடனவ னகன்றே. (௩௭)

நடந்தவிவ் வனைத்து நந்திவந் துரைப்பக் கேட்டிள நகைசெய்தா ளுதன், மடம்புய புட்ப தந்தனும் பூத ராசனுந் தம்பிரான் குறிப்போர்ந்-

நடங்கலா விறற்பா ரிடமொரு கோடி யடுத்திடச் சிந்துவாழ் நகர்க்கு, நெடுங்கடி யெனச்செம் பொன்னினு லிழைத்து நிமிர்தரு மெயிற்புறத் தேகி. (௬அ)

அடுத்தெயிற் புறங்க ளுன்கையும் புரக்கு மாளிமா முகன்புலி முக வன், கடுத்தமர் புரியுங் களிற்றுமா முகவன் காய்சினச் சீயமா முகனும், படைத்திறத் தவுண ரீரிரு வரையும் பாங்கமர் நூற்றுப்பது கோடி, விடத் தைநேர் மறவர் தமையுமோர் கொடியில் விட்டிமீண் டனரிவ் தாக. (௬௯)

கண்டக நகர்க்குள் மயங்கிய சிந்து தெழிந்தெழீஇ யொற்றுரை கருதி, மண்டழல் விழிகான் றெழுவினை பொருது மாற்றலர்ச் செகுத் தவ ராவி, யுண்டல துண்ணே னுற்படை களுமிங் குறுகவென் றடுசமர்க் கோலங், கொணடெழு கையிலவ் வெயிற்புறத் தவர்மாய்ந் திடுதிறங் கூறினு ரொற்றர். (௭0)

நெருப்பிடை வறந்து கொதித்தெழு பாலந் நெருப்பிடை கவிழ்வது போலுஞ், செருப்புகு சினத்தோ டெழுந்தமன் மேன்மேற் சினங்கொ டு மதிற்புறத் தோம்பிப், பொரப்பல்வீ ரரையு மகத்தநே கரையு நியமித் தும் பூண்டுகில் பரிதேர், வரைப்பறு களிறு தியசில சிலர்க்கு வளங்கியுந் தேரிவர்ந் துய்த்தான். (௭௧)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

கடலென வியங்க லிப்பக் கவரிதுள் ளுறப்ப தாகை
குடைகள்வான் றொடநி முற்றக் கொடியனுர் நடித்தி டப்பல்
படைகள்சே றவினை முந்துாள் பரவுதல் யாண்டுஞ் சிந்து
மடிபொழு தடுத்தல் பூவா மடந்தைசென் றுரைத்த னோரும் (௭௨)

சிந்துமன் வருதல் கேட்டெந் தேவமர்க் கெழுத னேக்கி
நந்திதாழ்ந் தைய வீர பத்திர னுனுள் ளிட்டோர்
வெந்திற லமர்செய் தாற்றன் மெலியினேற் றிடனன் றுருங்
கந்தனு நீயு மென்ன விரத்தலுங் கணேச வள்ளல். (௭௩)

சிந்துவோ டமர்செய் வாஞ்சை சிறந்துளே மவன்ற னுவி
சிந்துவோம் யாமே னுைச் செகுமினென் றருள்வா னுண்ணுேக்
கந்தனை யாய்வுற் றார்தி கனினமர்க் கவின்கொண் டேவேற்
கந்தனை யாதி வீரர் கணேசமூர்த் தியின்பாங் குற்றார். (௭௪)

மெய்யறி வறியாச் சிந்து வேந்துசெய் கொடுங்கோல் வெப்பார்
வையகங் குளிர்ப்பத் தண்ணென் மதிவால் போலுர் தொங்க

ஐயணி முடிந்தி றுற்ற வவன்புக ழுலக மூன்றுஞ்
செய்யல்காட் டிதல்போற் றுள்ளுங் கவரிகள் செறிந்து மேல்வீழ். (௱௫)

சத்திய முளங்கொ ளாவெந் தயித்தியர் கோவாஞ் சிந்து
மித்திரத் துவஞ்செய் யாதும் பணைச்சிறை செயல்வி டுப்பா
னித்தின மவனை யெம்மா னொழிப்பனீ துணர்மி னென்பா
ரொத்தன வியோமத் தெல்லை யுராவிய கொடிக்கு ழாங்கள். (௱௬)

கருதலை னிடையெம் மான்கொள் கோபத்தீ கருணை நீர்வந்
தருகிடி னின்னுந் துன்பத் தாழுமே யுலகென் றூற்றல்
வருநெறிக் குதவி யாய காலெழுப் பிடுவார் மான
முருகவி மூல வட்ட மிரட்டினர் முனைசெய் பூதர். (௱௭)

சிறுவனென் றிகழ்ந்து ளைத்த சிந்துவுக் கிறையே யென்ன
வறிவுறுத் திடமுச் செய்கை யயன்முதன் மூவர்க் கியந்த
விறலினன் வந்தான் வந்தான் வெய்யனுங் கணமேவந் தாதி
தெறுநரைச் செறுத்த வண்சீர்ச் சேவகன் வந்தான் வந்தான். (௱௮)

என்றெமை யுடையான் சீர்த்தி யெடுத்திசைத் தனர்பல் பூதர்
மன்றவிண் ணுதி யெங்கும் வதிசரா சரங்கட் கெல்லா
முன்றெறு துயர னைத்து முடிந்திடுஞ் சோர்வு தீர்மி
னென்றுமின் பென்பார் போற்பே ரொலிசெயு மியமி யம்ப. (௱௯)

அவ்விடை நின்றும் போந்தே யமர்தொட வயிற்கைப் பெம்மான்
றெவ்வினுண் மித்தி ரப்பே ரமைச்சொடு செருந டாத்தி
யெவ்வமல் கமைச்சை யும்பின் னேலவந் தெதிர்த்த வீர
ரோவ்வொரு வரையுங் கூற்றூர்க் கொல்லையிற் புகுமா றுய்த்தான். (௱௰)

மிகுதிறற் றக்கன் வேள்வி யழித்திடு வீரன் வெய்ய
தருவனுங் கவுத்து வப்பே ரமைச்சொடு சமர்செய் தட்டே
யகல்விசும் புய்த்துச் சங்க மார்த்தனன் மற்றை வீரர்
தொகுபடை யொடுமே மர்க்குத் தொடர்ந்தன ரனையர் தம்மில். (௱௧௧)

தனிப்படர் நந்தி புட்ப தந்தனம் பூத ராசன்
சினத்தெதிர் விகடன் வீரஞ் செறிதரு சபல னின்னோ
ரனற்கணார் வீர ராசன் றுவசனு காயன் றூர்த்தன்
மனக்கிடர் புரிசார்த் தூல னிவர்தமை மாய்வித் தார்பின். (௱௧௨)

மும்மையு மருளு மெந்தை முனைப்படை தாங்கும் வீரர்
தம்முளே சங்கன் றன்னோ டிகல்சங்கா சுரனை வென்று
தெம்முனை சாய்த்தான் சோமன் றிறற்பிர சண்டற் கொன்று
னிம்மெனக் கோலன் றன்னை யிரணிய கருப்பன் வென்றான். (௱கங)

சண்டனை யிலம்ப கன்னன் சரமழை பொழிந் தொழித்தான்
முண்டனை முனிந்து தாவா நலன்முடித் தனன்கை வாளாற்
கண்டனை நலமார் பஞ்சா னனன்கணை யாலே காய்ந்தான்
மிண்டிய கதம்பன் றன்னைச் சாமளன் வீட்டி னானால் (௱கச)

கலனைநல் லரன்செ யிர்த்துக் காதினா னிரத்தக் கண்ணன்
வலபிர பலனை யட்டான் வயிரங்கொள் பூவுமன் றன்னை
யலமறு பிருங்கி வென்று னசுரர்தம் வீர ரிவ்வா
றலைவுறீஇ யழிந்தார் தானை யுவரியு மொழிந்த தன்றே. (௱கரு)

நரிகொடி யலகை சேன நாய்கழு கினமங் கெய்தி
யுருவழி பிணவீட் டத்தை யுண்டுணக் களிப்பின் மூழ்கும்
பெருகுசெங் குருதி மாந்தித் துணங்கையாட் டயருஞ் சில்பேய்க்
கருகுற நின்று பாடு மங்கைகள் கொட்டிச் சில்பேய். (௱கசு)

இரத§நா வாய்போல் வெங்க ணிபம்பெருஞ் சயிலம் போல்வாம்
பரிகணீர் நாய்போன் மற்றும் பாணிகால் வதனங் கண்கள்
புரையிலா வனச நீலம் போனிண நுரைபோற் சாய்ந்து
விரவிவார் குடர்க ணீண்ட பாசிபோல் விளக்க மெய்த. (௱கஎ)

அடுகளத் தெழுந்த செந்நீ ராறுடைத் தோடி வார்ந்த
கடல்புக விசய மாது களித்தமர்க் களத்து லாவி
நடமிட வழற்கட் பூதர் நாலைவா யெழுந்த காள
விடமென வெகுண்டு சிந்து வேந்தனோ டெதிர்த்தார்த் தாரால். (௱கஅ)

தன்பெருஞ் சேனை யாவுஞ் சாய்ந்ததுந் தலைவ ரெல்லா
மென்புதோ றசைசெந் நீரா யிற்றதும் பூத வீரர்
வன்படை கொண்டு போர்செய் மறமும்பார்த் தயர்ந்து தேறிக்
கொன்பயில் வேற்கைச் சிந்து குறுநகை பூத்த டார்த்தே. (௱ககூ)

$கார்முகத் தேற்றம் பானுங் கைப்படை யாதி யானும்
போர்முகத் தெதிர்த்த பூதர் புயந்தலை யாதி யங்கம்

§ நாவாய்-மரக்கலம்.
$ கார்முகம்-வில்.

பார்முகத் தருள வீட்டிப் பகர்சங்க ளுதி வீரர்
சார்முகத் தேவை யேவிச் சாய்த்தெம திறைமுன் சாரா. (கஉ0)

கனவினு மெவருங் காணற் கரியவோர் கடவு டன்னை
முனைவினை நலத்தாற் றன்கண் மூன்றுமா னந்த மெய்த
நனவிடைக் காணப்பெற்று நல்லருள் பெறுமூ ழில்லான்
சினவியொல் லாடை யேசித் தெறுபடை பலவிட் டார்த்தான். (கஉக)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

சீரருள் கொழிக்கும் விநாயகன் றமது சிலைநிகர் சிலைகுனித் தடைய, ணேருற விணைத்து மணிவிர றெரிப்ப வெழுமொலி சேடனுட் கலங்கப், பாரமுதற் சகல புவனமு மலைந்து பற்றலன் சாங்குலைந் தனபின், காரெ ன விசிகம் பொழிதலு மொன்னன் ‡கவானுதல் புயமுரந் துளைத்த. கஉஉ

தரியல னவச மாயிர தத்துச் சாய்ந்துபின் றெளிவடைந் தழிவு, கருதுறு மனத்து மானமீக் கொளவிற் கதிரவன் படைவிடுத் தார்த்தான், பொருவின்முத் தலைவேல் விடுத்தன னெந்தை பொள்ளென வதுவரு ப டையை, யிரையென மடுத்தாங் கொன்னலன் செவிக ளிரண்டையு மறுத் துமீண் டதுவே. (கஉ௩)

ஓரிரு செவியு மிழந்தவன் முகத்தை யுடைகொடு மறைத்தொளி தருகண், ணீருறத் தன்னிற் போந்தொரு மூலை யிருந்தன னிருமல மூர்த்தி, போரிடை விளிந்தா ரெழவருள் புரிந்து பொலந்திகழ் பாச றை யடைந்து, சீரருண் முருகக் கடவுளா தியர்சூழ்ந் திடக்களிப் பெய் திவீற் றிருந்தான். (கஉச)

தன்பெயர்ப் படையை விடுத்திடிற் போரிற் சயம்பெற லாமென மதித்து, வன்புடை மனச்சிந் தேவமாய்ந் தவன்றன் வார்செவி களுமி ழப் பித்த, தென்பய னெனுமுட் குளஞ்சுடக் கடற்புக் கிருந்தது தணிது மென் பவன்போன், மினபொலி வழியத் தேரொடு மேலை வேலைவா யென்று மேவினனால். (கஉரு)

சிந்துமன் னுளம்போற் கங்குல்வந் திறுத்த சீரருள் விநாயக னிசை போ, லிந்துவந் துதித்தான் கண்டக நகர மெங்கணு மிரங்கொலி யெ ழுந்த, தந்தமன் மனைவி தன்பெருங் கணவ னருமுழந் திருத்தல்கண் டவன்கொல், வந்தவென் கெணவ வெனவவ னுற்ற துரைத்தலும் வருத் தமுற் றுரைப்பாள். (கஉசா)

---

‡ கவான்-தொடை.

வேதமு மகமு முலகிடை மலியின் வேண்டுவ யாவையு மலியுங், கோதற வவைசெயாம் பமரர்கட் கவியூண் கொடுத்திடு மரையர்தங் குலத்து, நீதச வுதிந்து மமரர்தங் குழுவை நிகழ்ந்தருஞ் சிறையினுட் படுத்தி, யேதமிக் கியற்று நிசாசரர்த் தழுவி யினிதருள் புரிக்துவந் தனையால். ()

வேந்தர்க டரும மிதுவல வமரர் சிறைவிடு விடிலொரு வெண்கோட், டேந்தலின் னருளா லிடர்களத் தனையு மிரியுமெக் கூளியும் வந்துறுமென், றுந்திற னியம்பல் கேட்டமா கூழின் றுகலி னவண்மொழி மறுப்பப,போந் தன ளழுங்கி முகமலர் *புலர்ந்து புலர்ந்தது கங்குலாம பொழுதும். கசஅ

காலையி லிவளோ டுதித்திடு விகலன் கலனெனு மிருவர்வெம் படையோ, டேலமர்க் களஞ்சே றலுமிவர் விரவை நாரதர் விநாயகற் கிசைப்ப, மாலைதா முயிற்கை யிளவனமுன் னவன்றாள் வணங்கியுக் கிரன்முதல் வீரர், சாலவாங் கேகி யமர்செய்து சேனைக் குழாஞ்சவட் டலும்விறற் பூதர். (கசகூ)

வீரமுற் றெதிர்ந்தா ரதுகண்டு கலனும் விகலனும் பலகணை மழையாற், சாரதப் படையைச் சாய்த்தடற் புட்ப தந்தனை நந்தியைச் சினந்தவ், வீரனைக் கவற்ற வில்லிகண் டழன்று விகலனைப் புடைத்துயிர் தொலைத்தான், கூரயிற் படைக்கை வேள்கலற் பிடித்துக் குலையத் தடித்துயிர் குடித்தான். (கருO)

கொற்றவன் மனைவி துணைவரோ ரிருவ ரிறத்தலாற் கோதித்தயர் காலைப், பெற்றகா தலராந் தன்மனே யதன்ம னெனும் பெயரினை யுடையோ, ருற்றுவேந் தவலமொழிந்தவன் விடையேற் றுவரிநேர் தானையோ டடுத்து, வெற்றிவேற் குமரன் பாலமர் வீர வாகுவா தியரைவீ துற்றே. (கருக)

வருத்தலு நீபத் தொடையுடை முருக வள்ளலவ் விருபுதல் வரையுந், தரைத்தலத் தெற்றி யாவிமாய்த் தன்னத் தன்மைவேந் தறிந்துளந் தளர்ந்தே, பாற்றலு மன்னோன் புரோகித னடைந்தவ் வயர்வொழிப் பானெம தண்ணல், பெருத்தவின் னவரைச் சிறைசெய்தோர் நேமி யுருட்டிமா யாவரம் பெற்றாய். (கருஉ)

---

* புலர்ந்து-வாடி.

கலிவிருத்தம்.

தந்தைதாய் மனைசுதர் தாவில் சுற்றமா
வந்துதோன் றுதல்பினர் மாய்தல் புற்பல
மூந்துகாற் றென்றினோர் முகங்கு ழீஇப்பினோர்
§வங்தெறி தாப்பிரிந் தோடன் மானுமே. (கஙங)

தவ்வலில் வினைவசத் தானு தித்திடு
மெவ்வுயிர் கட்குமுண் டெண்ணி லுற்பவ
மவ்வுயிர்க் கப்பரு யரிய சேய்மனை
யொவ்வுத லளவில் வுயிர்க்கெ லாந்துணை. (கஙச)

வீதறேன் றுதலிலா விமல னேயலா
லோதுசிற் றுயிர்கொலோ வோரிற் பாரினி
லாதனி லுயிர்ப்பொருட் டழுங்கி னேண்கெடு
†மேதிலா ரிகழ்வர்தொல் லிசையி றந்திடும். (கஙரு)

இசையிற வசையுறு மென்ன றிண்ணமவ்
வசையற வகங்கெழு மம்மர் விட்டெழீஇப்
பசையுட லோம்பினீ பகைவ ரைதெற
நசையுற வேண்டுமா லெனந வின்றனன். (கஙசா)

புத்தியிற் கூர்த்துளை புரோகி தன்சொலைப்
பத்தியி னுளங்கொடு பரிவு தீர்ந்தெழுந்
துத்தம வுணவயின் றுடுத்துப் பூண்டரு
மத்திர சத்திர மனைத்துங் கொண்டபின். (கஙஎ)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

தடவரை நிகர்தே ரூர்ந்து தானையங் கடலோர் நான்கு
புடைகளும் பொதுள மன்னன் போர்க்களத் தடுப்ப வாங்கே
யடல்கெழு ‖வில்லி நந்தி யாதிய வீரர் பூதர்
மிடையவெஞ் சூரை யட்ட வேளடுத் தேற்று னன்றே. (கஙஅ)

---

§ வங்கு-காற்று.

† ஏதிலார்-பகைவர்.

‖ வில்லி-வீரபத்திரன்.

அன்னதே வொடுசென் றேரு ளடல்கெழு வில்லி நந்தி
யென்னும்வீ ரர்கள்கைம் மாவை யிவுளியைப் புட்ப தந்தன்
பன்னரும் பிருங்கி யென்போன் பதாதியைப் பூத ராசன்
மின்னிர ணியகர்ப் பப்பேர் வீரரேற் றறச்செய் தாரால். (௧௩௯)

வடுவில்சீ ரிலக்கத் தொன்பான் வயவரோ டிற்கை வள்ள
றடவரை யனைய திண்டேர்த் தானையந் தலைவர் சூழ
விடமென வெகுண்டு போர்செய் வேந்தனுஞ் சிந்து வின்ற
னடல்கெட விரதத் தானை யாவையு மழித்துப் பின்னர். (௧௪௦)

அன்னவ னிவர்தின் டேருஞ் சேமத்தே ரனைத்து நூறிப்
பொன்முடி கார்மு காதி படைகளும் பொடித்த லாலம்
மன்னவன் றனித்த லர்ந்த வதனமும் புலர்ந்து ளாறுய்ந்
தன்னிலை தளர்ந்து நிற்ற னோக்கிநந் தனிவே லையன். (௧௪௧)

வடுவறு வீர மக்கண் மந்திர முறைபபோர் வீர
ரடல்கெடக் கரிதேர் பாய்மா யாவுமிற றனைநீ னென்னன்
மிடலகன் றுட்கி வீட்டுட் புக்கனை மீட்டு மின்று
படுகளத் தேக னுைய் பயினிரா யுதனு மாகி (௧௪௨)

ஆதலாற் கள்வ னேநீ யருங்கதி யடைய வேண்டின்
மேதகு நமது பாத விரைமலர்ச் சரண்பு கின்றேற்
பூதல மாதி மூன்று புவனத்து நின்னொ லுற்ற
வேதமும் வேத மோது மிருந்தவ ரெய்து துன்பும். (௧௪௩)

உம்பரார் சிறையு முன்ற னூழ்வலி வினையு மொற்றை
யம்பினு னொழித்தல் செய்வே னறநினைந் தாற்றற் கொல்லேன்
வம்பவின் றேகி நாளை வாவெனச் சென்றான் மேலைப்
பம்புவே லையில்வெய் யோனும் பகல்செய்வே லையினீத் தற்றான். (௧௪௪)

இருள்வலி யறக்கோ லோச்சு மினன்குண கடல்வாய்த் தோன்ற
மருளறு மனத்து வீணை முனிவன்மா முகத்தெம் மான்றா
டெருளுற விறைஞ்சி யெந்தாய் தெவ்வுயி ரழித்தல் செய்தற்
கருள்செயா திருத்தல் யாது திருவிளை யாடல் கொல்லோ. (௧௪௫)

என்னலு மெம்மா னென்ன விளவலா விரிந்த சிந்து
மன்னவு னுமுற் றேற்பி னன்றிமாய்த் திடனல் லாறே
பின்னுமென் றிடப்பி ருங்கி பகைவன்வந் தேற்குஞ் சூழ்ச்சி
யுன்னியாற் றிடுதி மென்ன வுறுபடை மொய்ப்பச் சென்றே. (௧௪௬)

இடையிடை யரண்க ளெல்லா மெற்றியுண் ணகர்புக் காங்கே
படையொடு மமர்ந்த மூலப் படையழித் தவனில் லாடன்
முடியரிந் தெதிர்த்த சிந்து மோலியுங் காலிற் றள்ளிக்
கடிதின்மீ டரலுஞ் சிந்து கனன்றடு களஞ்சென் றாங்கே. (௧௪௭)

ஆறுமா முகத்தோன் வீர பத்திர னாதி யாதி
வேறுவீ ரர்கள்செல் லற்க வியன்மயி லிவரோ ரம்பன்
கூறமர்க் கெழுகென் றேற்று விட்டறை கூவி நின்றான்
மாறுளத் தவனை மாய்ப்ப நினைத்ததே மறுக்குங் கொல்லோ. (௧௪௮)

மற்றது செய்வ லென்ன மகிழ்ந்தடு களஞ்சென் றேற்றா
னுற்றசிந் துவுமுன் றன்னோ டெதிர்த்தவா ழியினை யுய்த்தான்
வெற்றிகொண் ணேமி போர்த்தெம் விமலன்றாட் கலர்போல் வீழப்
பெற்றதன் னதுகண் *டென்றிற் பிறங்குசூ லத்தை யுய்த்தான். (௧௪௯)

விடுபடை யனல்கா றிய விடம்பல கான்று பொங்கி
யடுபடை யலகை பூத ரவுணரா தியர்ப்ப டைத்துக்
கடுகிமண் ணோடு விண்ணுங் காலவீ றுற்ற தென்ன
நடுநடுக் குறவே போத நாதனங் கதனைநோக்கி. (௧௫௦)

மாற்றலற் செருக்குஞ் செவ்வி வரத்திரு வுளத்து முன்னி
யாற்றலார் மழுவை யுய்த்தா னதுதடு படைக்கு ழாங்கள்
வீற்றுவீற் றாக்கிச் சூலப் படையொடும் விட்டா னுவி
பாற்றியொண் கங்கை யாடி மீண்டுபெண் டெனக்கை யுற்ற. (௧௫௧)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்தரத் தவர்செம் மலர்மழை பொழிந்தா ரார்த்தன துந்துமி யையந் துஞ், சுந்தரத் தவரம் மறைகளிற் பலவாத் துதித்தனர் தொழுதனர் கறையார், கந்தரத் தவர்தந் தருளிய முருக னுதிய தானைகா வலரு மெந்தரத் தவரு மின்பவா ரிதிதோய்ந் திபமுகன் மலரடி பணிந்தார். ()

அன்னதற் குவந்து விண்ணவர் சிறைநீத் தருள்புரிந் துறைந்தன னங்கே, யென்னையா ளுமையோ டைமுகப் பெருமானேற்றின் வந்தி பமுகத் திறையைச், சென்னியா றுடையெம் பரனையுந் தழுவித் திருக் கணோக் கேனையோர்க் கருளி, நன்னரார் கயிலைத் திருப்பருப் பதத்து நண்ணினீற் றிருந்தன ரிப்பால். (௧௫௩)

*என்றிற்பிறங்குசூலம் - சூரியனைப்போல்பிரகாசிக்குஞ்சூலாயுதம்.

மிடல்கெழு சிந்து விளிதல்கேட் டவச மீப்படு தந்தைதீக் கரு மம், படிகளத் தவனுக் காற்றிய பின்னர்ப் பாசறை யுறைகணே சனைத் தாழ்ந், தடியனே னகஞ்சென் றியற்றுபூ சனைகொண் டருளெனச் செ ன்றுபூ சனையேற், றொடிவில்வேந் தியலன் னவற்களித் தகன்று திரி சந்திவனத்துறைந் தனன்பின். (கரு௪)

திருவுள மகிழ்ந்து பலர்க்கு நல்கருளிச் சிகியெனுந் தனதுவா க னத்தை, முருகனுக் கருளி யிளையவ னின்னே மூவுல கங்களு மென்று ம், பொருமயிற் றுவச னெனவழைத் திடுக வென்றுபொற் புறவிடை கொடுத்துப், பெருமுனி வரர்தஞ் சிறுரொடு தனது பேருல கடைந்து வீற் றிருந்தான். (கரு௫)

மூவர்கோ னருளாற் சிந்துவா மகன்கோன் முறைபெறு சக்கர பாணிக், காவல னுலகங் காத்தன்ன் மறைகள் கலித்தன கலிகளுந் தீர் ந்த, யாவருந் தத்த நிலைமையி னமர்ந்தா ரமரரு மகிழ்கொடு மகிழ்ந்தார் தேவரா லயங்கள் சகலமு முன்போற் சிறப்பொடு பூசைகொண் ட னவே. (கரு௬)

வேறு.

திருமா முகனம் பிகைமகனுய்ச் சிந்து தனைமாய்த் திடலீதா
மொருமா வனல னெனுநமன்சே யுயிருண் பால சந்திரப்பேர்
தருமா வவதா ரத்தைமுனஞ் சாற்ற லால்வைத் ததன்பின்னர்
வருமா தூம கேதுவவ தாரந் தனைமேல் வகுப்பேமால். (௩௰௭)

பிந்தியமயூரேசன் பாலசந்திரன் றிருவவதாரப்படலம்
முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் எ-க்குத் திருவிருத்தம். ௩௱௩௧.

தூமகேதுதிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

*பகுவாய் விகிரம் பெடையொடுகண் படைகொள் பொழில்விந் தியநா
ட்டின், மகிவா தினியென் றுரைநகர்க்கு மன்னுந் தூமன் றகுவர்குலத்
திகழீர் தரவந் தறநெறிக்கோ லெங்குஞ் செலுத்தி வருநாளந்
நகர்வா ழுரையர் குலத்தினன்மா தவநா மத்தன் கலைவல்லோன். (க)

*பகுவாய்விகிரம் பிளந்தவாயையுடைய பட்சி.

இம்மைக் குரிய செயன்மறுமைக் கியைநற் செயல்கள் சுமுதை யெனு, மெய்ம்மைக் கற்பா ளொடுமியற்றி வாழ்நாண் மகவின் மையின் வெறுப்பாற், பொய்ம்மைப் பழிச்சொ லவட்கிசைப்பப் பொருதுவனம் புக் காழியங்கைச், செம்மைத் தேவை நினைந்தீரா றுண்டு தவஞ்செய் திருந்தனளால். (௨)

யாதோர் தெய்வந் தனைக்கருதி யாதா மொருவர் தவஞ்செயினு
மாதோர் பாக னஃதேற்று மகிழ்ந்து வரநன் கருளுமெனல்
வேதா கமத்தின் றுணிபென்ப துணர்த்து மாறு மெய்த்தேவிற்
பேதா பேதந் தீர்தரத்தோன் றினனெங் கரத்தெம் பெருமானே. (௩)

வேறு

அரியெனச் சின்னம் யாவு மணியுரு வுடன்முன் றோன்றப்
பெரியதே வினைமா லென்று பெரிதுவந் திறைஞ்சி யன்னா
டிருமறு மார்ப சேயில் சிறுமைதீர்த் தருளின் றேலெற்
குரியவன் பழிசொல் லாதிங் குயிர்துறந் திடுவ லென்றாள். (௪)

ஏத்துவா ரிடர்க டீர்க்கு மிறைவனன் னவள்பே ரன்பைப்
பார்த்துநங் காய்நின் சேயாய்ப் பரிவினு முதிப்பே மென்ன
†வார்த்தி யினுளைத்துச் சென்னி யங்கைவைத் தகன்று னன்னாள்
சீர்த்திகொ டன்னார்க் கேக முன்னிச்செந் நெறிகா ணாளாய். (௫)

கொலைபயில் பலமா வைகுங் கொடுஞ்சுரத் தூடு சென்றே
யலைபுனற் சடையெம் மீச னருளினார்ப் புறத்துச் சேர
மலைபுரை புயவேந் தன்னு ணிலைமைதேர்ந் தழைத்தான் மாண்பிற்
கலைமதி முகத்தாள் சென்று காதலற் பணிந்து முன்னர். (௬)

புரிசைசூழ் நகர நீத்துப் போந்தது முதனி கழ்ந்த
சரிதமும் விமலன் சேயாய் வரத்தரு வரமுஞ் சாற்றப்
பரிவுடன் கேட்டுள் ளோகை படைத்துவாழ் நாண்மா மாயன்
கருவினுற் றனனன் றுடோல் கவின்றிரி தரவ யிற்றின். (௭)

இன்னணஞ் சுமுதை கர்ப்ப மெய்திமுற் றவுமங் நாட்டு
மன்னனுந் தூமன் றெவ்வின் வலிதெறச் சமர்மேற் செல்கா
னின்னைமாய்த் தற்கா மாய னேரிழைச் சுமுதை சேயாய்த்
துன்னிடு மெனவோர் *காய வாணிவான் வயிற்றெ ழுனித்த. (௮)

---

†ஆர்த்தி மகிழ்ச்சி.

*காயவாணி-ஆகாயவாக்கு

அந்தவாக் கரசன் கேட்டு மீண்டுஃ தொழிப்பான் றீமை
சிந்தைசெய் தனனல் லோனு யிருந்துமுன் வினைத்தி றத்தப்
புந்திவாய் தரவென் றாழும் போயினன் குடபா லாங்கே
வெந்திறல் வீர னும்வித் துருமனை விரைவிற் கூவி. (கூ)

மாதவ மன்னே யன்னுன் மனைவியைக் கருவோ டின்னே
வீதல்செய் யெனப்போய்ப் பற்பல் வீரரோ டுறக்கஞ் சோதித்
தீதுநல் லமைய மென்னு மஞ்சமோ டவர்க்கொண் டேகித்
தீதுறு கானிட் டுள்ளந் துணிவெய்தான் சிந்திக் கின்றான். (ம)

கொடியது துயில்வோர்க் கோறல் கொம்பனூர்க் கோற லறறிற்
கொடியது கருப்ப மாதர்க் கோறன்மீக் கொடித வற்றிற்
கடிதுகா ணிதிற்புக் கேனென் றழுங்கக்கண் டயிறீர்ந் தன்னூர்
கடிதுகா ன க்கான் வீரர்ப் பார்த்தஞ்சக் கழற்கால் வீரன். (மக)

அருளினு னிகழ்ந்த யாவு மறைந்தனன் சுமுதை கேட்டு
மருளிலா மனத்தா யெம்மை வதைப்பினின் றேரும்பு நிற்கியார்
தருகைம்மா றெவன்பொன் னுடன் றளாவைமுன் †முதுகென் பீந்தோ
ருரவனேம் பினனன் றேவெம் முயிரைமுற் றவுங்காத் தின்னும் (மஉ)

அத்தனு றருளுக் கேற்ப வாற்றுக நினைவி டுத்தோன்
சித்தமை யுறுதோர் சூழ்ச்சி செய்துமாற் றுகசி றந்த
வித்துரு மப்பேர் வீர வெவ ஹும்வேந் துரைம ருதோ
னுைத்தில னுகவின்றே லுவப்புறேன் சபிப்பே னென்றுள். (மங)

வீரன்வேல் விழிநின் சாப விளைவுபின் முன்வேந் தாற்றுங்
கோரமெய் தலினெல் லேனின் கூற்றினுக் கெனவன் னுண்முன்
சீர்வர மளித்த தேவைச் சிந்தைசெய் தலும்பல் வீர
ராரரு ளாற்போந் தன்னூர் தமையட்டா ரவரு ளஞ்சி. (மச)

ஆயிடை யிரியல் போம்வித் துருமன்றா மப்பே ரண்ணற்
கேய்திற னுரைப்ப நாணுற் றெரிசினத் தவற்செ குந்தே
மாயையின் வல்லோர் நான்கு வயவரை விளித்துக் கான்போய்த்
தேயிடைச் சுமுதை சேயைச் செனித்தபின் செகுமி னென்றுன். (மரு)

அன்னநால் வருங்கா னுற்றே யமர்ந்தனர் மறைந்தே குற்றூர்
முன்னரோ ரம்ப னுற்போந் தவர்விலங் காதி மோதித்
துன்னுரு வகைவா ளேந்தித் துயின்றிலன் மாத வப்பேர்
மன்னிருள் வலிக வர்ந்து வயங்கிருள் வலியும் வந்தான். (மசு)

---

†முதுகென்பீந்தோன்-ததீசிமகாரிஷி.

வேறு.

கங்குன் முழுதுந் துயர்க்கடல்வீழ் காந்தன் காந்தை காய்கனியுண்
டங்கண் வதிமா தவர்போன்று ரவர்முன் னிறைவ னருள்வரத்தாற்
றிங்கண் முடியுந் தவளநிறத் திருமா முகமும் விழிமூன்றுந்
தங்கு மழுத்தண் கமலமக்க வடமோ தகஞ்சேர் நாற்கரனாய். (௧௭)

செம்மே னியனா யொருமகப்போற் சிறந்து தோன்றக் கண்டைய
வெம்மா வழுங்கிக் கொடுஞ்சுரதது மேவு நீயா ரெனச்சுமுதை
யெம்மான் பால சந்திரனென் றறைய வெங்கு நிறைந்தடியர்
தம்மா ருளத்து நிறைபொருள்யா தஃதென் றுணர்வாய் தவவடிவாய். ()

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நின்னுளத் தமைத்த வாறுமா யனைநின் கருப்பத்தி னிகழ்வித்து நுங்கட், கின்னல்செய் தூமா சுரனைமாய்த் திடச்சே யெனவந்தோ மிரவினும் பகைஞா, துன்னுறு தொழித்தோர் நங்கணந் தவர்மா றோன்றலா யுதித்துல கோமடும, பொன்னனை பாயினை வரனொடெம் முல கம் புகுமின்மே னானென வறைந்தான். (௧௯)

†அறைந்தபின் னிறைவ னெழிற்றிரு வாய்க ததன்னுளத் துலகத்தை யுங் காட்டப, பிறங்குசீரச் சுமுதை சகலதே வருந்தும பெரியதோர் பிரமமீ தென்றுண், ணிறைந்தபே ரன்பால வியாதுசே யெனலா னீள் கரத் தெடுத்தனண் முலைப்பா, லிறங்கவு முட்ட னேச்கிமுன் மறை நால் வருமிரீஇத் தம்மிறைக் கிசைத்தார். (௨௦)

காயிரும்பனைய வுளைசெவி நுழையக் கலங்கினன் விழுங்கனன் புரண்டான், மாயிரும் படிக்கணொருவழி சேறு மாமருமை வடவை யிற் சீறப், பாயிருங் கடலிற் படைபுடை பொதுளப பலைப மிடியெ னக்குமுறச், சேயெனச் சுமுதை பாலயின் றங்கைச் செமமல்வாழ் வனத்தினெய் தினனால். (௨௧)

எய்திவிற் கோட்டிப் பல்கனை பூட்டி யெம்பிரான் மிசைவிட வீட்டி, ‡வெய்துயிர்த் தஞ்சு நன்முலைத் தாயைத் தநதையை வெருவலி ரெனச்சொற், றையன்வாய் நின்றோர் புகையுயிர்த் தவனி பிளப்பித்துத் *தூமனை யதில்வீழ்த், துய்வுறு தொழித்தா னன்னதாற் றூம கேதுவா யினதவற் கொருபேர். (௨௨)

(†அறைந்தபின்) என்றதனால் விநாயகக்கடவுள் சொல்லியதில், சுமுதைக்குச்சந் தேகம், செனித்ததையறிந்து தமதுதிருவாய்க்குள், சகலபுவனங்களையும் காட்டி யருளினார்.

‡வெய்துயிர்த்தல் - பெருமூச்சுவிடல்.

*(தூமனை)யென்றதனால், தலைமைபற்றி தூமனும் அவனோடுவந்த கடல்போன்ற, சேனைகளுமெனக்கொள்க.

மகவினிவ் விளையாட் டயர்பிரான் மறைந்தான் மாதவன் முசு
தையா மனையோ, டகமகிழ் வாற்றன் னகரடைந் தரிவை மகவெனப்
பெற்றா சானுந், தகவின்வாழ் தரக்கண் டமர்ந்துசின் னுட்சே றலுமரு
ட்டம்பிரா னுலகம், புகுதலுற் றுலகந் தணந்தன ரிம்மான் மியம்புகன்
றோர்கதி புகுவார். (உ௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொருவிலங் கரத்து வள்ளல புகையுயிர்த் தவுணற் காய்ந்த
சரிதமீ தினிக்க ணேசன் றனியவ தாரஞ் சாற்றற்
குரியதென் னினுமுன் சாற்ற லுற்றதால் விடுத்த தன்பின்
வருகண பதிதோற் றத்தை யறிந்தவா வகுக்க லுற்றும். (உ௪)

தூமகேதுகணேசன்றிருவவதாரப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் அ-க்குத் திருவிருத்தம். ௩௭௫.

கணபதிதிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடியவிழ் கடுக்கை யான்*மெய்க் காப்புவெண் மதிதண் கங்கை
விடையயி ரவ ணப்பேர் வேழத்தி னொளிசெய் தம்மை
வடிவினிற் பசுங்கா வார்ந்து வயங்குசீ ரடியா ருள்ளின்
படுகரா தியநீ மல்கிப் படர்ந்திடுங் கயிலைக் குன்றம். (௧)

பன்னருஞ் சிறப்பா ரின்ன கயிலையம் பருப்ப தத்தே
யென்னையாண் டருளு மெண்டோ ளீசனு ரிமய மீன்ற
வன்னையோ டமர்நாள் வேனி லான்விழாப் பருவ மெய்த
மன்னுமைம் பருவத் தோங்கு மரமெலா மிலைக *ளுழ்த்து. (உ)

மென்றளி ரீன்ற ரும்பி மலர்ந்துகாய் கனிகண் மேவி
நன்றுற நளின மெல்லா நமக்குநம் பதிக்குந் தெவ்வாத்
துன்றிய பனியை வென்றே மெனநகை முகந்து லங்க
நின்றெனத் தடம லர்ந்து நிறைதர மலர்த லுற்ற. (௩)

*மெய்க்காப்பு-திருநீறு.

*உளழ்த்தல் - உதிர்த்தல்.

நன்றிசெய் தோர்க்குப் பின்னர் நன்றிசெய் திடல்க டப்பா
டென்றறி மாந்த ரேய்ப்ப விருஞ்சுனைக் கரையிற் சூழு
*மொன்றறி மரஞ்சி ரங்கொண் டுகுக்குந்தேன் மாரி யென்ன
முன்றடத் தடியிற் கொண்ட முதிர்சுவை யமுதந் தன்னை. (௬)

†ஐங்கணை மதன்வி ழாவிற் கலங்கரித் தெனத்து ளித்தார்
பொங்கராம் படைவீ டுற்ற பூங்குயி லினங்கண் மாவின்
செங்கொழுந் தளிர்கோ திப்பூஞ் சிலீமுகன் வந்தா னென்று
மங்கையர் சமுகமெல்லா மகிழ்வுறக் கூவு மாதோ. (௫)

குயிலினங் கூவக் கூவக் கொண்டல்கண் டாடும் பைந்தண்
மயிலின மாண்பில் வேந்தன் படைவர மாண்பார் வேந்த
னயர்படை நாடு நீங்கி யகங்கொளா தொடுங்கு மாபோற்
பயமுறீஇ யிறகொ டுக்கிப் பதுங்கின வரமகு தேடி. (௬)

இவ்வண நிகழ்வ சந்த காலத்தம பிகையோ டெம்மான்
றிவ்விய வளஞ்சே ருய்யா னத்துலாய்ச் சித்தி ரத்தா
0னவ்வியார்ந் தங்க ணுற்ற மண்டப ஞாங்கர் நண்ணை
வவ்விடை யெம்பி ராட்டி சித்திரத் தணிநோக் குற்றாள். (எ)

அன்னதிற் பிரண வத்தோ ரத்தியோர் பிடியைத் தோய்ந்து
நன்னலம் பருகி நிற்கு நிலைகண்டு நாத வீதென்
னென்னமுன் னவனின் னுட லீதென்று களிற்றை நோக்க
மின்னிடை பிடியை நோக்க விநாயகன் சேயாய் வந்தான். (அ)

ஈன்றசேய் கதிரோர் கோடி யிலங்கல்போற் பிரண வத்தி
னுன்றபே ருருவோ டீச னமலைதா டொழுவெ டுதந்தே
யேன்றவன் புடன ணைத்து மகிழ்ந்தபி ன்னெந்தை நோக்கித்
தோன்றனீ நம்மில் வேறன் றுனைத்தொழார் துன்பிற் றோய்க. (௯)

மணமுத லியதொ டங்குங் காலுமுன் மலர்த்தாண் முன்னாப்
பணிபவ ரருள்பெற் றுய்க பல்கணங் கட்கு மேலாக்
கணபதி யெனப்பேர் பெற்றெக் கணங்கட்கு மருளிப் போரிற்
றுணிகச முகற்செற் றும்பர் துயர்தவிர்ந் திடப்பு ரப்பாய். (௰)

---

*ஒன்றறிமரம் - பரிசஅறிவு ஒன்றைமாத்திரம்உடையமரங்கள்,

†ஐங்கணைமதன் - முல்லை, அசோகு, மா, தாமரை, நீலம், என்னும் ஐந்துபுட்பங்களையும் பாணமாகஉடையமன்மதன்

0கவ்வி அழகு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எனவருளி யுமையோடங் ககன்று கோயி லெய்தியங்கு முதல்வா யிவிருப்பை யன்ன, பனைமுகக்கைச் சேய்க்களித்தா னெவரும் போற் றிப் பயனெய்த விதுசிறக்கப் பரனோர்நாளென், னனையுடன்சூ தாடகினைத் தாங்குநீவென் றனமது பூணினக்குமி யாம்வென் றேமே, னினதுபூ ணெமக்குமுரித் தெனப்ப கர்ந்தா னோர்ந்துமைமா யவனைநடு நிலையா வைத்தாள். (௧௧)

இருவரும்பல் லாடலியற் றிகொல் வென்றா ளிறைவியஃ துணர்ந்து மிறை யெவனுட் கோளோ, வொருவினையா டலிகினைந்தான் போலும் வெற்றி யுமையேயெம் முடையதுன்பூ ணுகவி டென்றான், பொருவின் மலை மகளீது மறைசொன் னுவாற் புகலவற்றோ வெற்றியெற்கும் பூண னைத்தும், தருகவென மாலும்வெற்றி யிறைக்கென் றஞ்சிச் சாற்றவெ குண் டரவாவா யெனச்சபித்தாள். (௰௨)

பனைசபித்தல் கேட்டயர்மால் பரமன்றாளிற் பணிந்திதுதீர் வரு ளெனலும் வடதீ பத்துப, புரிவொடுசேர்ந் துறைகவிப முகச்சே யாக் குப் போதருகா லகலுமஞ்சேன் மாய வென்றான், றரணிதங்தோன் றனைத்தந்து மனைபுதுங் காத்துஞ் சங்கரிப்பான் பாலமர்ந்துந் தழைப் போ னோர்பொய், யுரையதனுக் கிச்சாப மென்னி னென்று முறை பொய்யாக் கெற்றோமோ வுணாகி லேமால். (௰௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருட்டனு வாரோ ரமய னடிமல ரகத்து முன்னி
மருட்டனு வுறச்சா பங்கொண் மால்வட தீபஞ் சென்றோர்
குருட்டர வாய்நீள் கோட்டோர் *கோளியந் தருவை யுற்றே
யிருட்டுதை பொந்துட் புக்காங் கிருந்தன னினைவுற் றிப்பால். (௧௪)

இந்திர னாதி வானோ ரிபமுகத் தவுண னாற்றும
வெந்திறல் வினைக்காற் றாது †வெள்ளிவே தண்ட மெய்தித்
தந்திர நவின்ற வாற்றாற் றந்திமா முகற்பூ சித்து
மந்திர வுரைக ளாலே வழுத்தியுள் ளுருகி நின்றார். (௧௫)

உருகுநெஞ் சினராய் நிற்கு முப்பரார்ப் பார்த்தே ரம்பன்
பெருகுமன் பொடுசெய் பூசை பெரிதுவந் தனநும் வேட்டல்
விரிமினென் னலுமெங் கோவே விளம்பரு மனூர்செய் தோங்குங்
கரிமுகா சுரற்காய்ந் தெங்கட் காத்தியென் றிரந்திட் டாரால். (௧௬)

*கோளி - ஆலமரம்.

†வெள்ளிவேதண்டம் - கயிலையங்கிரி.

அருள்செயே ரம்ப வள்ள லவர்துய ரகற்று மாறு
மருளுமோ ரசல மன்ன வசலனும் பூதர் மன்னன்
பொருவறு களத்தி வர்ந்து பூதரா தியர்சூழ் போதக்
கரிமுகத் தவுணன் வைகுங் கடிநகர்ப் புறத்த ணைந்தான். (௧௭)

மாயவல் வினைகீ ரெந்தை வரவறிந் தசுரர் கோனுங்
காயிர வெள்ளஞ் சேனை யடரவந் தமர்செய் காலைக்
காயரி போற்சி னந்து கணபல பூதரோவத்
தீயசெய் யவுணர் சேனை சிதைந்துடைந் தோடிற் றன்றே. (௧௮)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்ன தானை வென்செ ரீத்த தன்மை கண்ட சுரமனும்
பன்னு மானை வதன னுட்ப டர்ந்தெழுந்த வெஞ்சின
வன்னி பொங்கி விழிக ளார வயமிகுந்த பூதரைத்
துன்னி யெண்ணில் வாளி கள்சொ ரிந்து காதி யங்ஙனே. (௧௯)

அந்தி யிந்து வேணி வேயு மண்ண லார்தம் முன்னரே
வந்து நின்று நிந்தை பேசி வார்ந்த *சாபம் வாங்கியே
பந்தி பந்தி யவ்வெவ் வேறு பகழி மாரி பெய்தன
ணெந்தை யந்த வம்பி லாப மெய்தி டாது செய்துபின் (௨0)

மாய வஞ்சன் †வானி யாவு மாய்வு செய்ய வுந்தனித்
தேய்தல் கண்டு நெஞ்ச கவதி னெஞ்சு ருத வெஞ்சின
மேய தால னேக வாளி விட்டு வெய்ய போர்செய
வாய போத வன்வ ரங்கள் யாவு மைய னுன்னியே. (௨௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்வலப் புறத்துக் கொம்பின் ‡றுரைசேர் நுதியொ டித்து
மின்விரித் தெனச்செ லுத்த வன்னது வெய்ய கள்வன்
பொன்னுரங் கிழித்தான் மாவைப் பொள்ளென வுண்டு சுத்த
மன்னுநீர் வாரி மூழ்கி மீண்டது வள்ளல் கையில் (௨௨)

பூமழை பொழிந்தார் விண்ணோர் புனிதமா தவத்த ரெல்லா
மாமறை யாசியோதி வரன்முறை வணங்கி நின்றார்
நேமியில் வரைபோல் வீழ்ந்த நிசாசரர் குலனுக் கெல்லாங்
கோமக னன கள்வ ०னுந்துரு வுருவங் கொண்டான். (௨௩)

---

*சாபம்வாங்கி - வில்வளைத்து.
†வானி - சேனை
‡தாரைசேர்நுதி-கூர்மைபொருந்தியநுனி
०னுந்துரு-பெருச்சாளி

அந்தரை யாதி யண்ட மனைத்தையு மழிக்க வெண்ணுஞ்
சிந்தைகொண் டண்ட முட்டுந் திறலுரு வெடுத்து வந்த
வுந்துரு வினை நேர் கண்ட வும்பரார் முனிவரெல்லாம்
புந்திநைந் திரியல் செய்வான் பொள்ளெனத் தலைப்பட்டாரால். (உச)

வெருவுரு வெடுத்துப் போந்த வெய்யமூ டிகத்தி னுண்மை
கருகிட வதனை யையன் கதுமெனப் பிடித்திவர்ந்தான்
பெருமைசா லறவோ ரெல்லா மாகுமேற் பிறங்காநின்ற
வொருமருப் பினனைப் பூசை யுஞற்றிமா வரம் பெற் றாரால் (உரு)

அங்கணோர் சைவ லிங்க மணிபெறத் தாபித் தார்வம்
பொங்குபூ சனைசெய் தீது கணம்'தீச் சுரப்பே ராற்பூ
வெங்கணும் பொலிக வென்ன விசைந்தன னிமையோ ரெல்லாஞ்
செங்கையைக் குடைய வள்ளல்விடைகொடு வான்சேர்ந் தாரால்(உசு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விடைகொடு விண்ணோர் மீண்டபி னெம்மான் வியன்வட தீபமே கலுமுன், றடமலை யரவா யுறைதிரு மான்மேற் றனியருள் விழிபடச் சாப, வுடலகன் றெந்தா யுமைதரு சாப மொழித்தனை யென்றுபூ சை யுஞ்செய், தடையுமித் தினநற் றனுமதிதிதியா முதலா வித்தினந் தோறும்

உனைவழி படுவோ ரறமுதனன்கு முறவருளெனவுரைத்தனனு லனையவா றிசைந்தே கயிலையுற் றனனுங் கமரர்போந் தையமுன்யாங் க, ணினைவொடு தோப்புக் கரணமுங் குட்டு நிகழ்த்தினங் கயமுகற்க வை நிற், கினியிபற் றிடவு மியற்றுவோர்க் கிதநீ யீயவு மருளெனவிசைந் தான் (உஅ)

மத்தகத் திருகை கபித்தமாத் தாக்கல் குட்டெனும் வணக்கமி ன் னதைத்தென், னத்திரி தனில்வா ழகத்திய முனியு மழகிய விலங் கைமன் னவனும், வித்தகம் வழங்கும் விநாயகன் றிரு முன்வேறுவே றேல்வையிற் புரிந்தந், நித்தனல் லருளைப் பெற்றன ரெனவு நிகழ்த்து வ ரான்றவர் மன்னோ. (உகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சோதியரு ளேரம்பன் கயமுகத்து நிசாசரனைத் தொலைத்துப்பின்ன
ரோதரவா மால்சாப மொழித்தனமைமீ தன்னபிரா னுலக முய்ய
மாதவக்கா சிபன்மனைவி யதிதியருந் தவத்தாலோர் மகவாத் தோன்றிக்
கோதின்மகோற் கடனைய வவதாரந் தன்னையினிக் கூற லுற்றும் (௩௦)

கணபதிதிருவவதாரப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (௧)க்குத் திருவிருத்தம் - (௩௭அ௰)

மகோற்கடன் றிருவவதாரப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அளியுழுதே மலர்ப்பொழில்சூ ழுங்கமெனு நவிலுட்டஞ் சாலியா ர்ந்து, விளைகழனிப் புறம்படுத்த காத்திரமென் றிசைகெழுவும்வியன்மூ தூரிற், கிளருமறை பயில்சிரவுத் திரகேது வெனுநாமங் கெழுமுந் நூலோன், வளர்பெருமைக் கற்புடைய சாரதைப்பேர் மனைவியொடு வாழ்வா னுளன். (௧)

அன்னவடன் வயிற்றுடைப் புதல்வருதித் தனரவருக் கறைநூ லாற்று, மன்னர்வினை மிரப்பிமுன்னோன் பேர்தேவாந் தகன்பின்னோ னராந்த கப்பேர், பன்னவளர் நாள்வனஞ்சென் றுயிரப்பத் தாண்டுசிவ பரன்றாள் சிந்தித், துன்னலற நோற்றலுஞ்சா ரதர்சூழ வம்பிகையோ டிறைவன் றோன்றி. (௨)

மறையீர்நும் விழைவியாதென் றருளின்வின வலுந்தாழ்ந்து மா யோனாதி, முறையாவெய மேவல்செயும் வாழ்வுமெவர் படையாலு முடியா மெய்யு, மிறைவாஞ் கென்றார்கேட் டிபமுகத்தே வாலன்றி யீறு றீரென், றறையாவாங் குருக்கரந்தான் மகிழ்வொடிரு வருமகன் றீன் றார்பா லண்மி. (௩)

மிகுவரத்தின் றிறநவிலக் களிக்கடறோய்ந் தனர்சுதரும் வீமகாயந், தொகவினவு ணரைப்போன்று ரவர்தமிற்றே வாந்தகன்போய்த் தொடர் ந்தான் போரின், மகபதிபால வனுற்று தொளித்தனன்மே ருவின்வெள் ளமதமா வூர்ந்து, நகுமரியா சனத்திருந்து மசுரரொடு சுரரையுமன் னுக வாண்டும். (௪)

வேறு.

போதன்மா லொடும்போர்க் கேய்ந்தான் வரவறிந் தொளிப்பப் புக்கவ்
வேதமி லுலகங் காக்க வவுணரை யிருத்தி விண்சேர்ந்
தாதரத் தாண்டான் மற்றை நராந்தகன் புவியாள் வாரோ
டோதம ராற்றித் தோற்பித் துற்றனன் பிலத்துடன்றே. (௫)

உடனுறு மவுண ரெல்லா மோங்குபுள் ளரசா யுள்ள
படவர வனைத்து மாய்ப்பச் சேடன்பன் மணிக ணல்கி
யடிதொழு தனனே ல்லான்வெஞ் சிறையிட்டோ ரவுணன் றன்னை
யிடலினங் கோம்ப வைத்து மீண்டற வோனை யெல்லாம். (௬)

இன்னவிப் பாகந் தேவர்க் கிடாதுவன் றளப்ப டுத்தித்
தன்னர சாண்டா னின்ன தகையுணர் தாதை யோகை
மன்னுமங் கலம்பு ணர்த்த மகப்பயந் துயர்ந்தா ரீது
மின்னிடை யதிதி யாற்றுள் காசிபற் கியம்பி மேலோய். (எ)

துன்னுமென் புதல்வர்க் கின்னல் சூழ்தேவாந் தகந ராந்த
கன்னெனு மிவனை வீட்டோர் *கான்முளை யென்பாற் றோன்ற
வின்னருள் புரிதி யென்று விரந்தனள் கேட்டம் மேலோன்
மின்னிடை யணைய ரீசன் வரம்பெற்று ரெவரால் வீவா (அ)

மாதங்க முகப்பெம் மானுவ் மாய்வரவ் விறைஙின் சேயாய்ப்
போதன்பு மிகுநோன் பாற்றப் பொருந்துவை யென்னிற் றோன்று
மீதொன்று புரிதி யென்றைந் தக்கா முபதே சித்தான்
சீதந்துன் றமுதுண்டாள்போன் றதிதியோர் வனஞ்சென் றளால் (கூ)

சென்று றாறுண்டே ரமபன் றிருவடி சிந்தையுட் கொண்
டொன்றிய புலனோ டைநதக் கரஞ்செபித் துறு நோன் பாற்ற
வென்றுகோ டியின்மெய் தோளீ ரைந்தொடீரஞ் சடையி லங்கத்
துன்றுகோ ளரியி வர்ந்து தோன்றினா னவணமுன் னெம்மான் (ம)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பேரொளி யாற்கண் கொளாமையின் வெருவி யிறைஞ்சி யெந் தாய்சிறு பேதைக், காருரு வொடுநின் றருள்கென விரப்ப வவ்வுருக் கோடலு நோக்கிச், சூருடைத் தேவாந் தகனரா்ந் தகனுற் றுயருறு முலக மன்னவனைப், பாரின்வீழ்த் திடுமோர் மதலையா யெளியேன் பால்வர வரமரு ளென்றாள். (மக)

அமரர்க டாய்சொற் கிசைந்துருக் கரந்தா னண்ணலன் னவள்வன மகன்று, தமைநிக ரன்பற் குறுவர மியம்பக் களித்தலுந் தானிப முகன்றா, ணிமிடமு மறவா துபாசனை புரிவா ணையமோர்ந் தையனோ ருறுப்புங், கமைகொளா யிரமாப் பொலிதரு வடிவங் காட்டியுற் றனனவட் கோர்நாள். (மஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தையன்மகிழ்ந் தெந்தாயீ தருளுருவாயினுமன்று சாற்றியாங்குக்
கையிலெடுத் தணைத்துவிரை நீராட்டிப் பாலூட்டிக் கனிவாய் முத்தஞ்
செய்யநகை முகமலர்தந் துறுபருவந் தொறுமியற்றுஞ் சீராட்டாற்றி
வையகத்தார்மகிழ்குழவியெனவந்தென்மனக்கவலைமாற்றுயென்றாள் ()

---

*கான்முளையென்பது-மகன்.

எவரேனு மொருநிமிட மன்புதலை யாவணங்கி யெதுகேட்டாலு
மவர்வேட்ட வாறருளவ் விநாயகனுர் தமைநினைந் தேயள வில்காலந்
தவமேத மறவியற்றி யுபாசிப்பாள் கேட்டிடுங்காற் றரிப்ப ரேயம்
புவிமீதன் றுதித்தவொருசேய்வடிவாயமாந்தன*ரேழ்பொழிலும்வாழ ()

உலகமெலாந் தொழுமகிழ்வார் மகவுருவா யழுதணாவ் வோசைகேட்ட
மலடியரும் கருவடைந்தார் வற்றலுறு மரந்தழைத்த மகத்தீ யோங்கி
நலமுறவே வலஞ்சுழித்த திளந்தென்ற லுலவியது நதிக ளாதி
யலைதிரைநீர் தெளிவுற்ற தாகாய நிருமலம தாயிற் றன்றே. (கரு)

வானவாநன் னிமித்த மூற்றுர் மாற்றலர்துன் னிமித்தமுற்றுர் மதி யொன் பானுந், தானகடு விபுலமுறத்தாங்கியுயிர்த் தவள்போன்றவதிதி நீம்பான், ஞானமளிப் பார்க்களித்தா னந்தமெனுங்கடல்படிந்தாணுவா லைந்தென், றுனவெழுத் தோதவருள் காசிபர் சேய்க் காஞ்சாத கன்ம மாற்றி. (கசு)

புனிதமகோற் கடனெனநா மமுமியற்றி மகிழ்ந்தனன்புங் கவனுமை ந்த, னனைமலர்ச்சீ றடியின்முனி வரர்தொகைவந் திறைஞ்சிடநாண் மதி போ னுளு, மனிவளர்ந்தோ ரகவைவரு முனநராந் தகனுட்டின் மாரிசோ ரி, யெனவிசும்பின் மீன்வேறு யுற்பாத முறவேந்தல் கணிதர்க் கூவி(கஎ)

வேறு.

பன்னுதுன் னிமித்தத் தோடுற் பாதமெய் துவதென் னென்ன
வன்னர்கா சிபற்கோர் சேயுற் பவித்தன னமக்கா காதா
னென்னலு மவனைக் கோற நகவியான் செயலு மாகா
துன்னுமா யையள ரக்கி விரசையாற் றொலைத்தல் வேண்டும் (கஅ)

எனநினைந் தவள்க ருத்துக் கேயச்செய் தேவ வன்னு
ளுனுதவ மாதின் வேடத் தொடு சென்றம் மகவை வாய்க்கொண்
டனள் வர வயிற்று ரெம்மானனல் விழி வெப்பாற் றுக
மனுதலிற் புவிநீர் யாவு முண்டுந்தீ ராள்வா னேய்ந்தே (ககூ)

கங்கைநீ ரையுமுணச் செல் காலிறை விரல்கொ டூன்ற
விங்கமர்ந் தனள் வயிற்றை *யுகிர்கொடீர்ந் திரந்தாண் மார்பிற்
றங்கின னதிதி சேயைக் காண்கிலா டுருவித் தாணுந்
துங்கிருந் திடல்கண் டோகை யுடனெடுத்தாட்டி னுணீர் (உ0)

*ஏழ்பொழிலும்-சப்தலோகங்களும்
*உகிர்-நகம்.

தன்மனைக் குடன்சென் றூன்ற சாந்திக ளிழைத்தோம் புற்றாள்
கன்மண விரசை யையற் காதவாய் மடுத்தா ளேனு
நின்மல நோக்கம் பெற்ற நெறியினுன் மறையு நேடு
சின்மய மான முன்னோன் றிருவடி சேர்ந்தா ளன்றே (௨௧)

வெங்தொழில் விரசை வீதல் கேட்டிரண் டாண்டில் வெய்யோன்
றுந்துமி யுதத்த னென்னு மிருவரைத் தொலைமின் சேயை
யுய்ந்திடா தெனவி டுப்பத் தத்தையா யூங்குற் றுரை
யெந்தைபுள் ளரசாய்க் கொத்தி மாய்த்திளஞ் சேயாய் மீண்டான்(௨௨)

காசமுற் றிடினு மன்னூர் நம்பன்றீ ண்ட விஷ்வான் பெற்று
ரேசின்மூ வாண்டின் முற்சா பத்தினு லிடங் கராகிப்
பேசுசித் திரப்பே ரான்கந் தருவன்வாய்ப் பெயத்த னைத்தீர்ந்
தாசற மாய்த்தி டங்கர் வடிவொழித் தரும்வீ டெய்த்தான் (௨௩)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒருநாலாண் டெய்தலுமா காலூ கூத்தும் புருவெனுமுக் கந்தருவர் கயிலை செல்வார், வரவின்றூர் விருநதுரையாற் பூசை செய்கால் வரத னுமை கணபதிமா லருக்க ளுமைந், துருவாமூர்த் திகளைமறைந் திடச் செய் தன்னு ருயிர்விடமுன் னுதலுமகோற் கடனங் காப்பத், திருவா யுண் மூர்த்தமைந்தும் பிறவும் வைக றெரிந்தெங்கோ னெனத்துதித் துண் டமர்ந்தார் சென்றூர். (௨௪)

ஐந்தெனுமாண் டினிலீன்றோன் மகற்கு மூந்நா லருங்கடியாற் றிடலறிந்து நராந்த கப்பேர், வெங்தொழிலோ னசுரனைவர் தமைகோற் போர்போல் விதிமுறைதூ வரிசியம்புள் ளுடைய தாத்தந், தந்தம கோற் கடச்சேய்க்கிட் டெயிர்மாய்ப் பானே வலுமவர்தூ வலுமம்புற் றடிதா முக்கண், டெந்தைமற்றைந் தரிசியன்னோர்க் கிடவ திற்பல் லே வெழுந்து மாய்த்தனவாழ்த் தெடுத்தார் விண்ணோர். (௨௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அத்தலை யீச னிந்து பிறைகமுத் தலைவேல் பாலம்
பத்தியி னீய்ந்து பால சந்திரன் பரசு பாணி
யித்தகு பேரு மம்மை யரிப்பரி கட்க மீய்ந்து
நத்தரி யூர்தி கட்க தரனென்னு மமும ளித்தார். (௨௬)

இன்னண நிகழ்கால் விண்ணு ளிறைமகோற் கடன்று டாழா
துன்னிய தருக்கா லங்கி யுலவைக்கூய்ப் பொரப் பணித்தா
னன்னவ ராண்மை முற்று மடக்கியண் டங்கண் முற்றுந்
தன்னிடைத் தோன்றக் கொண்டான் றம்பிரான் விசுவ ரூபம். (௨௭)

அச்சுத ரனேக ரண்ட மாக்கு வோ ரனேகர் பைவாய்
நச்சற வணிவோன் ருளை நணுகுவான் மகங்க ளாற்றும்
பொச்சமி றவர்விண் ணுள்வோர் புவனமண் டமுமற் றேயவ்
விச்சுவ வுருவத் தால வித்திறைக் கினன் வலாரி. (உஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நோக்கலுந் தருக்கு நீங்கியெம் மைய சிறியையென் றுனைத்தொழா நொய்மை, போக்கியென் பிழையைப் பொறுத்திந்த வுருவை மழவுரு வாக்கியென் புந்தி, தேக்கிட வருளென் றிரப்பவவ் வாறு தலுமுபா சித்துவெங் குலிசந், தாக்குமங் குசங்கம் பகதரு வேவற் சிலதிய ரிருவருந் தந்தே. (உ௯)

பேறுநன் கருளும் வியாபக னென்னும் பெயருமிட் டருள்கொடு பெயர்ந்தா, ணுறெனு மகவை யெய்தலும் பரசோ டங்குச மாதிய படை கொண், டேறின்மா மடங்க லூர்நதொவ்வோர் தினத்தொவ் வோர்புவ னந்தொறு மேகி, யீறிலான் மகிழ்வாற் றிருவிளை யாட லியற்றினு னிய ற்றுமிந் நாளில். (௩0)

வாசமார் தருநீர் கங்கையோர் புறத்து மருவவண் டுளர்மலர்ப் பொழில்சூழ், காசிமா நகர்மன் றன்மகன் மன்றல் வினைசெயக் காசிப முனிபாற், பாசம்வைத் தழைப்பான் போந்திறைஞ் சலுமம் முனிம கோற் கடற்கிது பகர்ந்து, தேசுறு மதலாய் சாதுர்மா சியத்தால் யானி தற் கேகல்செய் யேனல் (௩௧)

அன்னதை நீசென் றாற்றிமீள் கென்று ளுவதோர்ந் திசைதலுங் கணேசன், றன்னைமன் னவன்றேர் மிசையமர் வித்துத் தனிநகர் கோக் கியுய்த் திடுகாற், துன்னலு ருய நராந்தகன் சிறிய தந்தைதூ மாக்கனென் போனந், நன்னெறி தனிலா தவற்குறித் துறுநோன் பியற்றலின் ஞாயிறு மகிழ்ந்தே. (௩௨)

ஓதுமோர் படையங் கவன்றனக் குய்த்தா னஃதெதிர் படப்பிடித் துவன்மேற், றீதுற விடுத்துச் செருக்கலுந் தூமாக் கன்றரு சிறுவர்வந் தெதிரக், காதின னுயிர்ப்பான் மகோற்கட னதுதேர் காதக னராந் தக ன்பன், மாதவர்க் கேத மியற்றுவான் மாயை வல்லசிற் சிலர்களைக் கூவி. (௩௩)

ஆயபஃறுகில்பூ ணளித்துயர் *வார ணுசிமன் முனிசுத னிவனை யேயெனு மளவிற் பிடித்திவண் வம்மி னெனவிடுத் தனனவ ரேகி, மாய் தல்பின் னுமைப்பன் மன்னனோ டிரத மூர்ந்தருண் மகோற்கடன் கா சித், தூயமா நகர்மாட் டெய்தவங் குள்ளா ரணிசெய்வார் மறுகெலாந் துலங்க. (கூச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூரண குடங்கள் வைத்துப் பொற்சுண மணிக டூவித்
தோரண நிரைநி ரப்பித் துளங்கொளித் தீப மேற்றிப்
பேரணிக் கணிசெய் தென்னப் பிறங்குமா மறுகிற் றுங்க
வாரண மின்றுங் காணு வமலனு ரணுகி னரால். (கூரு)

நாமமு முருவு மில்லா நாதனை யவையுள் ளானைப்
பூமனு மாலுங் காணுப் புனிதனைக் கங்கு லானைக்
காமனுங் காமர் கொள்ளுங் கவினிறை வானைக் கொன்றைத்
தாமனைத் துதிக்கை யானைத் தனித்தனி காண்பார் சார்ந்தார்.

கலைமதி தவழ்மா டத்துக் காந்தையர் பல்லோர் நின்று
மலையன தடந்தே ரூர்ந்து வருமகோற் கடனு லாக்கண்
டுலைவினன் மகவ வாவா லுளமழுன் மெழுக தாக
முலையமிழ் தவனி பாய முகடுறு பாவை யொத்தார். (கூஎ)

ஐயன்மெய் யழகு கண்டாங் கருங்கலை யணிபூ ணெல்லா
மொய்யென நெகிழ வெள்கி யொளிரும்வெண் முத்தா ரத்தைச்
செய்யசிந் துரஞ்சேர் நெற்றிசேர்த்தன ரிலம்ப கத்தைப்
பெய்தனர் பயோத ரத்துப் பேதையர் நகைப்பச் சில்லோர். (கூஅ)

ஒன்னலர் புரமூன் றட்ட வும்பரார் பிரானோ வன்றேற்
பன்னகா சனனோ வானுள் பாகசா தனனோ பொன்னு
ரன்னவா கனனோ வாரோ வறிகிலே மழகார்ந் திம்பர்
மன்னுலாப் போதல் செய்யு மகனென நவில்வார் மைந்தர். (கூகூ)

வரனென முன்னி னூர்க்கவ் வரனுமாய் வனப்புமிக்க
வரியென வுன்னி னூர்க்கவ் வரியுமா யவர்க்கு மேலாம்
பரனென வெண்ணி னூர்க்கப் பரனுமாய்த் தோற்ற லுற்று
ளொருவனே யுலகில் வெவ்வே றுறவுபெற் றிடுமா றொப்ப. (எ௰)

இருமையுந் தருமே ரம்ப னின்னணம் பவனி போதுந்
தருண்முன் னராந்த கப்போர்த் தலைவனு லேவப் பட்டு
வருமருண் மாயை வல்லோா தம்முளே வலிமிக் கார்தத்
துரனிகல் விகண்ட னென்னச் சொலப்படு மிருதி யோரும். (எக)

*வாரணசி - காசி.

மாயையின் வார ஞூசிப் புரோகிதன் மகாரிற் போத
னேயனா யெதிர்தன் மான நிருமல னிரத நீத்தங்
கேயினர் தம்மைப் புல்லி யெடுத்தவம் மாயை போக்கி
யாயிடை யுளார்வி யப்ப வணிமணித் தேர்புக் கான்பின். (௪௨)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பதங்கன்'மவவ விதலோ னெனுமிரு தீயோ ரூழிமா ருதமெனப்ப டர்ந்தேர், துதைந்தவங் நகர மனைத்துநுண் பொடியாச் செய்திவர் தே ரையுந் துளக்க, விதந்தெரிந் துதர பங்கன மாஞ்சே டனைவிடுத் துண்பி த்து விட்டி, யிதம்பெற நகருங் கண்டுமன் கோயி லெய்துவான் வாயி லிற் புகுகால். (௪௩)

பாயதோ ரடைகல் லுருக்கொடு தடையாய்க் கூடனென் பவனெ திர் படக்கண், டேயதி தியின்சே யாமிறை கணேசற்கினியதாந் தெங்கி னெண் கனியோ, ராயிர நேர்ந்தே னிருபனே கொணர்வித் திக்கன்மே ற் சிதறுற வடித்து,நேயமுட் டுகவென் னலுமவ னுழையராலஃ தியற் றின னேர்ந்தே. (௪௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பின்னரத் துண்டம் யாவும் பெரும்படைக் கலமாய்க் கல்லின்
வன்மைசிந் திடலாற் கூடன் றொல்வடி வாய்ந்தின் றுரைத்
துன்னிவாய்ப் பெயத்தொ டங்க மழுக்கொடன் னவற்றொலைத்தே
யன்னமென் னடையார் நீராஞ் சனஞ்சுற்ற மனைபுக் கானல். (௪௫)

மன்னவன் மனைகேண் மக்க ளேனையர் வரதன் முன்வந்
தின்மொழி யாற்று தித்து மிறைஞ்சியு மகிழ்ந்தா ரிப்பான்
முன்னவ னெடுவேந் துண்டு முறையினங் கமர்ந்தார் பின்னுட்
டென்னுற வெங்கோ னுடற் சிறுரொடு மாடல் செய்தான். (௪௬)

அங்கிலே தரும தத்த னெனுமவ்வூர்ப் புரோகி தன்பார்த்
துன்னிய முகத்தாற் குத்தா னுதவிடு சித்தி புத்தி
யென்னுமங் கையனை மன்ற லியற்றமன் னனுரைை பெற்று
வின்மணிச் சிவிகை மேற்கொண் டெழிறிகழ் வீதி செல்கால். (௪௭)

செற்றமார் நராந்த கப்போர்த் தீயனே வலினி ரண்டா
யுற்ற*வா லேப மானோ றொருவனு †யும்ப லானோன்

---

*வாலேபமானோர்-கழுதைவடிவங்கொண்டுவந்த காமன்,குரோதன்என்னும் இரண்டசுரர்கள்.

†உம்பலானோன்- யானைவடிவங்கொண்டுவந்தகுண்டனெனுமோரவுணன்.

கொற்றமுற் றெதிர வன்னூர்க் கோறல்செய் தரிய மன்றன்
முற்றுறத் தரும தத்தன் மனைபுக்கான் முதல்வ னம்ம. (சஅ)

அங்குமுன் னழிந்து மாக்கன் மனைவியாஞ் சிரம்பை நஞ்சம்
பொங்கிய தயிலத் தோடப் புரோகிதன் கிளையாள் போல்வந்
தெங்கண பதிமெய் யூர்த்தா ளிறந்தனள் புரோகி தன்பின்
மங்கையர் தமைத்தீ முன்ன ரளித்தனன் மனுநீர் வர்க்கே. (சகூ)

நறும்புன லொடுதேன் பண்டை ஞானமே கிரியை யென்னுஞ்
சிறந்தசத் திகள்கை பற்றிச் செந்தழல் வினைமு டித்தா
னறம்பொரு ளின்ப மெல்லா வகிலமுந் தழைப்ப யாவுந்
துறந்தவ ருளத்து வாழுந் தோன்றறன் கருணை தோன்ற. (ருய)

அத்தகு தரும தத்த னய‡னவி முத்தத் தைங்கைக்
கத்தனை வணங்க முன்னங் கருதிய வணமு டித்தா
னித்தலத் தவன்பாற் றோன்றங் கனையரவ் விறைம ணப்பச்
சித்திபுத் தியர்நா மத்தாற் சிறந்துளா ரிவர்க டம்மை. (ருக)

மங்கல முடித்தோன் மன்றன் மகளிரோ டையன் கோயில்
சிங்கமூர்ந் தடைந்தா னந்த விரவுதீ வளிசார்த் தூலத்
துங்கவெவ் வுருவுற் றெண்ணி றுயர்நகாக் குறுவித் தோரை
யங்குமாய்த் தின்ப மவ்வூ ரடையநன் கருள்செய் தானல். (ருஉ)

பின்னைநாட் சதுர்த்திப் பூசை பெரிதுசெய் புருசுண் டிபபேர்
பன்னுமா முனிபே ரன்பைப் ⊙போரணு பரண நீர்த்தான்
மன்னனுய் தரவன் னூனை வரச்செய்தா சார பூர
கன்னெனு மமும்பெற் றுடல புரிமகோற் கடனு யுற்றான். (ருங)

அடுத்தநாட் கணிதன் போன்மே காசுர னென்பா னவ்வூ
தொடுத்துமன் னனைமுன் பின்னெஞ் சோதியைப் பேதிப் பானு
யெடுத்தவா சகந்தோந் தன்னுற் கிடவெநதை பூண்முத் தாரங்
கொடுத்தழ லெழச்செய் தாவி குடித்தன னெருக ணத்தில. (ருச)

---

‡அவிமுத்தம் - காசி.

⊙போரணுபாணநீர்த்தால்-போசனம் ஆபரணமிவற்றின றன்மைகளால், அஃதாவது புருசுண்டிமுனிவர் தண்டகவனத்தில தாம் வழிபட்ட விநாயகமூர்த்திக்கு நிவேதித்த அன்னபானாதிகளும் திருமேனியிற்சூட்டிய ஆபரணாதிகளும் மகோற்கடமூர்த்தி பரிகலத்திலும் திருமேனியிலுமிருக்கக் கண்டவாறும்.

பின்னருங் கூப னென்றோ ரசுரனோர் பெருங்கூ பம்போன்
மன்னவோர் தவளை போற்கந் துரனென்றோ ரசுரன் வைகிப்
பன்னுசீர் மகோற்க டப்பேர்ப் பரனையா டலினான் மாய்ப்பான்
றுன்னலோர்ந் தவனை மாய்த்துத் தொன்மையி னாட்ட யர்ந்தான் (௫௫)

முந்திறந் திடபெ தங்கள் மைந்தரோர் மூவ ராங்கே
யந்தகன் றுங்கீ ளம்ப னுமத்தோ டிறவன் னாரி
லந்தக னாண வம்போ லடரிரு ளாய்முன் னம்மை
யெந்தைகண் புதைத்த ஞான்றின் றேகொலென் றயிர்ப்பச் செய்தான்.

தாவினால் வருணத் தாருந் தந்தொழி னழுவ னைந்தா
ரேவலர் சோம்பர் மந்த ரிரவென வனுந்தல் கொண்டார்
காவலி றார்த்தர் மாதர் கலவியிற் றிளைத்தார் கற்பின்
மாவடு விழியா ரிட்டார் மணிவிளக் குடன டங்கி. (௫௭)

தீதுமல் கிருளா லிங்ஙன் றியக்குறத் துங்க னென்போன்
சோதியந் தருநீள் வல்லி சுடர்மணி மிளிரோர் வெற்பாய்
†மாதிர மெட்டு மோங்கி வளர்ந்தன னகரை யெல்லாஞ்
சேதனன் றன்னைத் தொல்சஞ் சிதம்வளர்ந் திடுதல் போன்றே. (௫௮)

அம்பனென் பவன்கொண் மூவா யனந்தனு நடுங்கப் பற்பல்
‡சம்பையாய்ப் பிறங்கல் செய்து தனித்திடி யேற்றி னார்த்திட்
டும்பனீர் காம்போ லொவ்வோர் தாரைவார்த் தூழி வெள்ளத்
திம்பர்நீர்ப் பெருக்க மானான் சராசர மெனைத்து மாழ. (௫௯)

இன்னணம் வருமி டுக்க ணோக்கிய மகோற்க டேசன்
றன்னுதற் கண்ணாற் றுன்னு மிருளுநீத் தழுந்த ணித்துப்
பன்னரும் பெரும்புள் ளாய்த்தன் னிறகெறி பவன வேகத்
தன்னவெற் பொடுகொண் மூவு மகற்றிமாய்த் தனனவ் வாற்றால். ()

அழிவுறு மினைய மூவர் தாய்பிர மரையென் பாளாய்ந்
துழையுறு பாங்கி மாரோ டொழுகுசீ டருந்தற் சூழப்
பழிதரு விட்வூண் கொண்டெம் பரனைநல் கதிதி போற்பைம்
பொழினிறை காசி யெய்திப் புரவலற் கினைய வோதும். (௬௧)

---

†மாதிரம் - திசை.
‡சம்பை - மின்னல்.

அன்றென தறிவ ழிக்தென் னரும்பெறன் மகற்கொ ணர்ந்தாய்
கன்றக லாண்போ லானேன் கணவனைப் பிரிந்திட் டாலு
நன்றிரு மையினு மோங்க நல்குநந் தனற்பி ரிந்து
தன்றனி வாழ்தல் கற்பார் தையலார் தரத்த தாமே. (கூஉ)

அருமகப் பிரிவாற் றுமை யாற்கொழு நனுக்காற் றேவல்
புரிதலு நீத்தே னென்னை யொழிக்தன்னேன் வாழ்தல்போற்றுன்
மருவலர்க் கரியே றன்னாய் தாழ்க்கிலா தெனது மைந்தற்
றருதியன் றெனிலென் னுவி தணந்திடுஞ் சரத மென்றாள். (கூக)

அன்னபோழ் தஃத றிந்தெம் மையன்வந் தன்று யுண்டற்
கென்னசிற் றுண்டி கொண்டு வந்தனை யீய்தி யென்ன
நன்னர்வாக் கொடுநஞ் சேய்ந்த தீதலு நயந்துண் டானஃ
துன்னவ ளொடுசூழ்ந் தோர்க்குந் தலையுற்று வியையொ ழித்த. (கூச)

அன்னிறத் தவுண ரின்னு மாற்றிய பலவ னைத்தும்
பன்னின்முற் றெய்தா வீது கிறகவெம் பரம னுட
லென்னவுந் தேர்ந்து காசி யெழிற்பதி வாண ரெல்லா
மன்னவற் கமுத ருத்த வவாவிமன் னனைவேண் டிற்றூர் (கூரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்னவ னெவ்வா னுரைப்பநின் றயர்த லெங்கை தயோர்ந்தவர்ம னமகிழ, *வென்னவ ரையும்பார்த தமைமினூண் யாம்வந் தருந்துது மெனவருளியதாற், பின்னவர் மறுகு மனேமுத வியவும் புதுக்குவித் தறுசுவை பிறங்கூ, னன்னரி னமைப்பச் சனகரா தியரா நால்வரு மர சவை யேய்ந்தார். (கூகூ)

அவரையு முடன்றுய்த் திடநவின் றுறைபோ தாங்கமர் சுக்கில னெனுமோ, ருவமையின் மறையோன் றுணைவிவித் துருமை யுடன் பலி யேற்றுணும் வாழ்வோன், பவனையுட் டிடுமென் பொடுபலிக் குறக் கிட் டாதுமுன் னெஞ்சுபுன் பைங்கூழ்த், துவையரி கொடுமென் பத முத வியாவுஞ் சுவைபட வமைத்தெதிர் நோக்க. (கூஎ)

அன்பினுக் கெளிவந் திடுமகோற் கடத்தே வவன்பத முந்தவுண் டருளிப், பின்பெவ ரெவரிற் றெறுமொவோர் செயலி னிசைந்தொரேய

---

*என்னவரையும் - யாவரையும்.

மையத்துப் பிறங்க, மென்பத நுகர்ந்தின் னருள்செய்து சருவ வியாபக த் துவந்தெரித் தமர்ந்தான், வன்புறு மனத்து நராந்தகன் றனதே வல் ரெலா மடிந்தமை தேர்ந்தே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வடவையி னழன்று தானை யனைத்தும்வந் திடுக வென்ன
மிடலொடு பணித்தா னவ்வா றுற்றன வேலையொப்ப
வடுவில்வெண் கவிகை யீட்ட மதிகளாக் கவரிக் காடு
படுதிரை நிரையாத் தோனறப் பல்லியங் கறங்கச்* செய்து. (கக)

வங்கமீ திவர்ந்கா லென்ன வையமீ திவர்ந்து வேந்தன்
கங்கையந் துறைசூழ் காசிக் கடிநகர்ப் புறத்து வந்தா
னங்கது வார ஞாசி யரசறிந் தமைச்சாக கூவி
யிங்குநம் மடலார் சேனை யாவுமீண் டிடுக வென்றான். (எ0)

மந்திரர் தொழுதுரைப்பார்மன்னமன் னவர்க்கு நான்கு
தந்திர முண்டெ டிர்த்தோர் தளர்வுடை யவரே யென்னின்
வெந்திறற் றண்டஞ் செய்து விளம்புறு சமானரென்னி
னந்தமில் பேதமாற்றி யவனைவென் காண னன்றும். (எக)

மிகுவலி யுடையா ரென்னின் வெம்மைதீர் சாம தானத்
தகுதியான் வேற னூலின் றன்மையிங் கடுத்தோன் யாரு
மிகரில ஞாத லாற்பின் னிகழ்த்திய வுபாயஞ் செய்யிற்
பகையிலை யெனவே ரம்பன் பதத்தன்பு பதித்த மன்னன். (எஉ)

திடமின்மந் திரரை நோக்கிச் செறுந்ன்மா வலியன் யாமோ
வடலிலே மெனினு மெம்மை யாதரிப் பானிங் கேய்ந்த
கடவுளு மடலி லானே கழறுமென் றிடவ மைச்சர்
மடமையின் மறந்து ரைத்தா மன்னவ பொறுத்தி யென்றார் (எங)

ஆயபின் கருவித் தானை யுடனமர்க் களதத டுத்தான்
மாயஞ்செய் நராந்த கன்றன் வன்றிறற் படையுஞ் சென்றாங்
கேய்தலி னமர்வி ளைந்தே யிவுளிகைம் மாத்தேர்காலாள்
வீய்தலிவ் வளவைத தென்னவிளம்புதற் கரிதே யம்ம. (எச)

கலிவிருத்தம்.

இன்னதரு ணந்தகுவ ரேந்தலவி முத்த
மன்னவனை மன்னருமை மக்கடமை யூகம்

---

*வையம் இரதம்.

பன்னுமதிநால்வலரையங்கைகொடு பற்றித்
துன்னுசிறை யிட்டுடன்வ ளைத்தொனிசெய் தானல். (எ௫)

முழக்கின னளக்கரு முகிற்குலமு மாற்று
தெழுப்பினவி முத்தமம ரேந்தன்மனை யோராச்
சழக்கெமை யடுத்ததெனநெஞ்சது தளர்ந்தாள்
விழுப்புவிவ யிற்றனுவெருக்கொள வெழுந்தே. (எசு)

துயர்க்கட லகற்றியருள் சோதியிருதாளம்
புயத்தற னிறக்குழ ஜெடுத்தொழுதபோழ்தின்
மயக்குறன் மடக்கொடி யெனப்பரம வள்ள
றியக்கறு பலத்தொடருள் செய்திடுதுமென்றுன். (எஎ)

என்றரச மாதுகுல மேகவருள் செய்து
கொன்றைபுனை யெந்தைகொடி தானவைசெய் தான
வன்றணிவின் மைந்ததனை வாட்டியுயிர் வீட்டி
வென்றிதரு வாகையணி வேயவுள முற்றே. (எஅ)

முனைப்படு களத்தரு குறப்பரன் முகத்துத்
தனக்கிணையில் வீரரோர் சகத்திர ருசித்தார்
மினுக்குறு முகம்பலகொள் வீரர்தமில் வீர
னெனப்பனு குரூரன்முக மாயிரம துற்றோன். (எகூ)

எந்தையிரு தாளினை யிறைஞ்சியென தைய
பந்தவினை போலுதர மேறுபசி யாறத்
தந்திடுதி யின்றுணவு தானென நயந்தே
வந்துவினை யொப்பிலிரு வாழ்வருளும் வள்ளல். (அ௦)

கலிநிலைத்துறை.

முனைமு கத்தடர் நராந்தகன் படைமுழு வதையுந்
தனதங் கைகொடு சுட்டியித் தளத்தையோர் கணத்தி
லுனது வாய்மடுத் துள்ளமர் காசிமன் னவனை
யனையன் மைந்தனை யமைச்சரைக் கொணர்கெனப் பணித்தான். (அக)

அன்ன வாறவ னடர்த்திறை யாதியா னையுமீட்
டொன்ன லன்றனைத் தேரொடு மும்பரி னெறியப்
பன்ன ருந்தல மேழினும் படர்ந்துதேர் சிதையத்
தன்னு ணர்ச்சிபோய்த் தரையிடைவீழ்ந்துளந் தளர்ந்தான். (அஉ)

அறிவு தித்தவன் காசிப னளித்திடு சுதனைச்
சிறுவ னென்றெணி யிகழ்ந்தன னவன்றிரு முகத்து
மறுவில் பல்படை வயவர்வந் துதித்தன ரவரு
ளுறுதி றத்தொருவீர னம் முயர்படை முழுதும். (௮௩)

ஒருப டைக்கல னேனுமில் லாதுடன் மிடல்கொண்
டிரிவு செய்தென தாற்றலு மொழிப்பனே யிவனைத
தருப வன்றிற மிற்றெனச் சாற்றுதற் கொணுமோ
வரிய மாயையி னவற்றெற றகவென மதித்தே. (௮௪)

இன்ன றந்திடு பற்பல மாயையுங் கியற்ற
வன்ன மாயையா வையுமகோற் கடனழித் தறுத்தான
சென்னி தன்னையு மதுபிறா தெரிதருமுன்ன
முன்னெ னத்தனி முடித்தலை முளைந்தன வவற்கே. (௮௫)

வந்து வந்துறு முடித்தலை யாவுமாய்ந திடச்செய்
தந்த ரத்துமெண் டிசையினும புவிக்கணு மலையார
சிந்து சூழ்பல தீவினுஞ் செறிந்துமொண் டலைகண்
மூந்து போலடுத் திடுதலைக் கருதியெம் முதல்வன். (௮௬)

ஒண்ணி றந்திகழ் விச்சுவ வுருவெடுத் திருந்தா
ணண்ண கத்தவ னுரங்கிழித் தொழித்தன னறுமபூ
விண்ண கத்தவர் சொரிந்தனா மாரியின் விமலன்
மண்ண கத்தவர் மகிழ்வுற மகோற்கட ஞகி. (௮௭)

காசி மாநகர் கலந்திறை பேரவை குறுகி
யாசி லாவர தனத்திமை யாதனத் தமரா
நேசமேலெழப் பணிந்தெழு நிருபனு தியர்க்கு
மாசி லாவருள் வழங்கிவீற றிருந்தனன மகிழ்ந்து. (௮௮)

அறுசீரக்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*பின்னவன் மாய்வன் ஞன்முன் பிறந்தமே வாந்த கன்கேட்
டின்னல்வே லையின்வீழ்ந் தாய்வுற் றிருங்கடற் றுனை சூழப்
பொன்னவி ரெயில்சூழ் காசிப் புறநக ரடுத்தா னெற்று
லன்னது காசியேந்த லறிந்துவா முகற்றுழ்ந் தோதும் (௮௯

---

*பின்னவன்-இளையவன்.

அருந்தவப் பயனே தேவாந் தகனராந் தகன்ற னண்ணன்
பொருந்திரைக் கடலிற் றூனை பொதுளவந் தடுத்தா னன்ன
*திருந்தலன் றன்னை மாய்த்துச் சிறியனை யாளென் றேத்த
வருந்தலேர் தாலென் றன்னோன் மகிழ்வுற வமரின் முண்டான். (கூ௰)

வஞ்சகன் றூனு மேற்று வானவப் படையுய்த் தாற்று
தெஞ்சலின் மாயை யாற்போ ரியற்றினு னிவைகட் கேந்த
யஞ்சுமோ வவைய னைத்து மழித்தவ னருந்த வத்தா
னஞ்சணி மிடற்றெம் மான்பாற் பெற்றமா வரத்தை நாடி. (கூக)

கொலைபுரி நீடு திக்கைக் குஞ்சர வதனங் கொண்டு
கலைநிறை மதியின் றுண்டங் கடுக்கும்வெண் கோட்டி லொன்றை
யுலைவிறன் கடகக் கையா லொடித்தவன் றலையி லுய்ப்ப
மலையென வீழ்ந்தி றந்தெம் மானடி நிழல்சேர்ந் தானால். (கூஉ)

பன்னுமூ வுலகு முற்ற பழங்க ணற்றனபூ மாரி
துன்னிவா னவர்க ளார்த்தார் துந்துமி யைந்து மார்த்த
வெள்ளையா ளிறைபண் டென்ன வெழின்மகோற் கடனுய் மன்னன்
மின்னுபே ரவைபோய்ச் சிங்கா சனத்தின்மீ திருந்தா னிப்பால். (கூங)

கங்கைசூழ் காசி மன்முன் கருதிய தெய்து மாறு
மங்கல வினைமுடித்து மகிழ்வித்து மணநா ளேந்து
மங்கமர் தனுமின் றேரை யனுதுறு மார்வ மீக்கொண்
டெங்குமார் பவன்வேந் தன்பா †ளளவளா யெழுவா னேய்ந்தான். (கூச)

பல்லிய மியம்ப ‡வாத பத்திரம் பதாகை மொய்ப்ப
வில்லிடு கவரி துள்ள விரிபுகழ் பூதர்பாட
மல்லலங் நகரா ரன்பின் வந்து நான் மருங்குஞ் சூழ்ந்து.
தொல்லையும் மலந்தீ ரெந்தா யெனத்தொழ விரதத் தேறி. (கூரு)

குணநிறை நகருளார்க்குக் கூறுமெம் பெருமா னந்தங்
கணபதி யெனுமூர்த்தத்தைக் கனகமற் றுலோகந்தன்னு
லணிபெற வகுத்து நுந்த மனைதொறு மமைத்துப் பூசை
யெணமுறப் புரிந்து வாழ்மின் சென்மினின் றிடுமி னென்ன. (கூசு)

---

*திருந்தலன் - பகைவன்.

†அளவளாவல் - கலத்தல்.

‡ஆதபத்திரம் - குடை.

இன்னவாக் கமுதுண் டின்போ டேய்ந்தன ரெவருங் காசி
மன்னவன் பலகா றுறு மலைகள்பிற படவோர் கோட்டு
முன்னவ னமரும் பொற்றேர் முறபட நடவி யெந்தை
யன்னையா மதிதி பாங்க ரணைந்திட விடுத்தா னன்றே. (கூஎ)

இருமுது குரவ ரன்பி னெதிர்ந்துகை தழீஇயின் *புற்றார்
திருமுவேந் தவர்பொற் பாதஞ் செறிந்துதாழ்ந் தவர்கண் மைந்தன்
புரிதிரு விளையாட் டியாவும் புந்தியுண் மகிழ்ச்சி பொங்க
வுரைசெய்து புசித்த லாதி யுதவவேற் றடைந்தான் றன்னூர். (கூஅ)

பகல்சில செலவே ரம்பன் பயந்தவர்க் கியம்பு நீவி
ரகநினைந் தளவில் கால மருந்தவம் புரிந்தீர் யாம்போந்
திகலினர் தமையொ றுத்து மின்பமே யனையர்க் களித்து
மகமுத லறந்த ழைத்து மலர்தர வருள்செய் தேமால். (கூகூ)

சிவநிறை யெமது வைப்புச் சேறுமென் றிடலுந் துன்ப
வுவரிதோய்ந் தனரன் னோரைத் தேற்றிப்பின் னுமைசே யாவேங்
* கவலொரீஇக் காண்பீர் நின்மி னெனக்கரைந் தகன்று னந்த
பவனமென் றியம்பு மேலாம் பதிபுகு தினிதி ருந்தான். (ள)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீத்தவ ருள்ளங் கோயிலா வுறையு நிருமலன் விதித்தருள் வண்ணம்
பூத்தடம் புடைசூழ் காசிமா நகரார் பொருவிறம் மனைதொறுங்கணேச
யாத்தனை நிறுவி விதிமுறை பூசை யாற்றினர் பிறருந்தம் மகத்துட்
டேத்தல மமைத்தெங் கணபதி பூசை தொடங்கிவாழ்கின்றனரின்னும். ()

நன்றருள் புரியு மகோற்கடற் பிரிந்த நாண்முதற் காசிமன் புனிற்
றுக், கன்றக லான்போ லன்னவன் கழற்கட் கருத்து வைத் தநேகநாள்
கழித்தான், றுன்றிட ரனைத்து நம்பினோர்க் ககற்றுஞ் சுமுகமா மூர்த்
யுள் ளிரங்கி, மின்றிகழ் மணிசெய் விமானமொன் றுய்த்தான் விறற்சிவ
கணங்க டம்மோடும். (ளஉ)

காசிவேந் தனுகண் டுழுவலன் போங்கக் கவின்றரு விமானமீ திவர்ந்து
மாசி † லானந்த பவனமென் றியம்பு மாநக ராஞ்சிவ நகர்புக்
கீசனுண் மலர்ச்சே வடிகிழல் பிரியா தினிதுவீற் றிருந்தன னதனாற்
பேசின்மா முகத்தே வொடுசதா சிவ மும்பிறி தலவிதுமறை பேசும். ()

* கவல்-கவலை

† ஆனந்தபவனம்-சிவலோகம்

காரிருண் மிடற்றுச் சிவபெரு மானே கழறுமூ வகையுயிர் கட்கு
நேரிட ரொழிப்பா னவைதனை முதலில் வழிபடு கியதிகொண் டருளச்
சீரருள் சுரக்கும் விநாயக னெனவோர் திருப்பெயர் தரித்தன னிதனை
யா ரறி வுடையோ ரறிவரவ் வறிவில் லாதவ ரறியகில் லாரே. (௧0௪)

உலகிட ருவரி படியமர் கோர முனூற் ‡ திருதகுவரை முருக்கி
யலகிலின் புயிர்கட் கருண்மகோற் கடப்பெம் மானவ தாரமின்னதுநன்
னலமிகு துண்டி விநாயக ரென்ன மலைமக ணகைமலர் முகத்துப்
புலவர்தந் தொகுதி தொழவவதரித்தபுதுமையையினிப்புகல்கிற்பாம். ()

மகோற்கடன்றிருவவதாரப்படல முற்றுப்பெற்றது.
ஆகப்படலம் (ம) க்குத் திருவிருத்தம (சா௬ம)

துண்டிவிநாயகன்றிருவவதாரப்படலம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மஞ்சுகண் படைகொள் சோலை மல்குகை வர்த்த தேயத்
திஞ்சிவிண் டொடமி வந்த பன்மக மென்றோர் நாமத்
தஞ்செறி நகருண் டங்க ணச்சுத னெழில்சேர் மோக
வஞ்சியா யமர்த லாற்பேர் முகுந்தையென் னவும்வ குப்பர். (௧)

அங்கக ராண்ட பன்மா சுரனை * யைம் படைக்க ரத்தோன்
மன்னுமோ கினியாய் மாய்த்த பின்னரம் மன்னன் மைந்தன்
பன்னுறு துராச தன்றான் பரமனார் செம்பொற் பாத
முன்னியா யிரமாண் டஞ்சக் கரமுளத் தோதி நோற்றான். (௨)

இத்திற நோற்பான் முன்வெற் பிறைவியோ டெம்மான் றோன்றிப்
பத்தியின் வணங்கிக் கேட்ட வரநல்கிப் பரையின் பானஞ்
சத்தியே விநாய கப்பே ருடனுதித் தனைத்தன் பாதத
துய்த்திடும் பிறநீ துய்ப்பா யெனவுரைத் தருக்க ரநதான். (௩)

வரம்பெறு துராச தன்றான் வலியபல் லவுணர் தம்மை
யுரம்பெறு துணையாக் கொண்டிவ் வுலகை வென் றும்பர்க் கேகத்

‡ இருதகுவர்-தேவாந்தகன்- நராந்தகன் என்னும் இரண்டசுரர்கள்.
* ஐம்படைக்கரத்தோன்-சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம், என்னும் பஞ்சாயுதங்களையுடைய திருமால்.

திரங்கொளிந் திரன்வே தாவா தியருணர்க் ககன்று காசிப்
பெருந்தலஞ் சேர்ந்தா ரன்னுர் பதிக்கெலாம் பிறழுங் கோலான்(௪)

தமனைவைத் தமரர் நாட்டைத் தன்னர சாணைக்காக்கி
யமர்தலுற் றனன்பின் விண்ணோ ராதிய ரிரிந்து சென்ற
விமலவா•ரணவா சிக்கு மப்பெயர் வெய்யோன் செல்ல [ருர்.()
வெமையுமோர் பொருளாக் கொள்ளெம் மீசன்ருள் சரணென் றுற்

அன்னவர் தமக்கெங் கோமா னிரங்கியு மவன்வ ரத்தாற்
பொன்னுலகீரத் தீயோன் வரம்பன்ஞள் பொன்ரு வற்ருற்
பின்னர்நுங் துயரொ ழிப்பே மென்றுமீ டுறுகே தார
மென்னுமா தலத்து வெற்பி னிறைவியோ டேய்ந்தாங் குற்ருர்(௬)

பின்னர்யா வருங்கே தார மடைந்துமை திருத்தாள் பேணி
யன்னையே யுலகம் யாவு மீன்றனை யனைத்துங் காத்து
மன்னினை யிளைப்பொ ழிப்பான் மாற்றுவை துராச தப்பேர்
பன்னுதீ யவனுல் யாங்கள் படுதுயர் தவித்தா ளென்ருர். (எ)

வே று.

மாலை யனைய சுரிகுழலு மதியை யனைய திருமுகமுஞ்
சேலை யனைய விருவிழியுஞ் சிலையை யனைய கனதனமும்
பாலை யனைய கனிமொழியும் பணியை யனைய நுணுகிடையும்
வேலை யனைய கருணையுமா விண்ணு டவர்தம் மெதிர்தோன்றி.(அ)

ஆதி பரைவா னுலகிருள் ளயர்த லொழிமி னெனவன்பி
ஞேது மமையத் தவண்முகத்தெம் முடைய பெருமா னருட்சத்தி
சோதி பரவு மொருகோடி சுடர்போ லுதித்த தமரரெலா
நாத னருள்கண் டௌம்வியந்தார் நனியுள் ளுவந்தா ளம்பிகையும்.()

அனைய சத்தி மதிச்சடையு மைந்து முகமு மருணுக்கும்
பணகா பரணத் திருமார்பும் பத்துக் கரமும் பதமிரண்டுந்
தனிமுந் நூலு நுதற்கீற்றுந் தயங்கு முருக்கொள் விநாயகனுய்ச்
சினமிக் குறநின் றிடலால்வக் கிரதுண் டப்பேர் செறிவித்தே. (௰)

வே று

•அயனர வனையோ ஞதி யமரரைப் புரவெந் தாயென்
றுயரரிப்'பரியும் பூதப் படையுமோ தையின ளித்தாண்

மயர்வில்வக் கிரதுண் டப்பேர் வள்ளலவ் வரியூர்ந் துற்றுன்
பயனருள் காசி மூதா ரிணையதப் பதகன் கேளா. (ம௧)

புடைவளை சேனை யோடும் புறநக ரடுத்தான் போருக்
கடன்மிகு பூதர் சேனை யடர்ந்தவன் படையெ லாமாய்த்
திடவது தூராச தன்கண் டிருஞ்சிலை வளைத்தே வேயி
மிடல்செய்சா ரதரை யட்டெம் விமலன்பாங் குற்று னன்றே. (ம௨)

அன்னவற் கினிய கூறி யருளலுங் கொள்ளா னீயென்
முன்னர்நின் றனைசே யென்று முனிதரே னயன்மா லேனோர்
துன்னுறு ராவி வேண்டி னகலெனத் தீயோ னூர்தி [தான்.()
மன்னிவெம் மழுவை யுய்த்தா னனையன்வாட் படைவிட் டார்த்

அன்னவா டனைம ழுக்கொண் டமலனூர் விலக்கிக் கையா
லொன்னலா னுதற்க ணெற்றி மீளவவ் வோரெற் றுலப்
புன்மைய னுதலிற் புண்ணீர் சாய்தலி னவசம் பூண்டு
பின்னறி வேய்ந்து வெள்கிப் பெயர்ந்துறை விடம்புக் கானல். (மசு)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தன்னிக ரில்லான் வீய்ந்தசா ரதரை யுயிர்ப்பித்துப் பாசறை சார்ந்தான், பன்னமர்க் கொளித்தோற் பார்த்தகண் டுடைப்பான் போன்று மேற் கடல்புக்கான் பானு, தொன்மைவன் படையெங் குளவவை யனைத்துந் தூராசத னிரவிலே தொகுத்தா, னன்னவெய் யோன்மாய்ந் துலகன் குறல்காண் பவனின்வந் தானன்ன வெய்யோன். (ம௫)

புறப்பெருங் கடலி * னறுவகைப் படையும் பொதுளவந் தனன்களத் தசுரன், விறற்பெரும் பூதர் மிடைதர வாங்கே விமலனேய்ந் † தேழுறழெட்டாந், திறத்துருக் கொண்டு மடங்கலிற் பத்துச் சிகியிலா ருகுவினன்கு, மறப்பரி தன்னி லிரண்டுகை யினனு யிவர்ந்துமாற் றலனொடாடினனல். (மசா)

இருவிசும் படைந்துங் குற்றுயி ருற்றும் வீழ்ந்துமெண் டிசைபுகுந் தொளித்துங், கருதலன் படைகள் சிதறலுந் தீயோன் கனற்படை விடுத்

---

* அறுவகைப்படையாவன-கூலிப்படை நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, கைப்படை, மூலப்படை, இவைகளாம்.

† எழுறழெட்டாந்திருவுரு என்பது ஐம்பத்தாறுதிருவுருவம், இதுஉபாசனாகாண்டம்,சோமகாந்தனுபாசனைப்படலத்திற் காண்க.

திறை படையைப், பருவரல் செய்யப் புனற்படை யாலப் படையைமா
ய்த் தலுமவன் சோனே, பொருவவா னவப்பல் படைபொழிந் தனனெம்
மிறையவை போக்கலும் வெய்யோன். (௰எ)

பலபல மாயை புரிந்தனன் யாதும் பயன்படா மையினினி யிவனே
வெலவரி தொளித்தோ டுதறுணி பெனவுட் கொண்டுவெள் குற்றன ன
ன்று, னிலேய்றை யறிந்தோங் குருக்கொடோர் பதமந் நேரலன் றலேயி
ல்வைத் திருத்தி, நலவரம் பெறலா னமதடிக் கீழநீ நன்கிலார் தமைத்
தெறும் பாங்கால். (௰அ)

செழுநகர்க் கீழை வாய்தலி லென்றுஞ் சேர்ந்திரு வெனப்பணித்தி
ட்டா, னழிதகை யுடைய துராசதன் சுமுக ரழகிய தாடலே யுறமுற்,கெ
ழுமல வினைதீர்ந் தமர்ந்தனன் காசிப் பதியிலம் பிகையொடு கிரீசன், ற
ழைசின கரஞ்சேர்ந் தமர்ந்தனன் றவமுந் தருமமுந் தழைத்தன வெ
ங்கும். (௰௯)

மாசில்சீர் விசுவ நாதர்சன் னிதியின் வக்கிர துண்டன்வை குதலா
ற், றேசுறு காசிப் பதிக்குயர் துண்டி நகரமென் றொருபெயர் சிறக்கும்,
பேசரு மற்றை யைம்பதோ டைந்தாப் பிறங்குரு வினரெழிற் கோயிற்,
காசிலா தமையே யாவர ணத்து மமர்ந்திருக் கின்றன ரின்றும். (உ௰)

முன்னமோர் காலிப் பதிதனிற் பன்னுண் முகில்வழங் காமையிற்சா
ம, மன்னநான் முகன்வேண் டலிற்றிவோ தாத மன்னனு னவன்சுரரீண்
டு, துன்னலி னீதுற் றனவவர் தம்மூர் செலினலந் துதையுமீங் கென்று,
புன்னவே தாவோர்ந் திப்பதி யீசன் பணியினீங்கார்சுர ரென்றே. (உக)

எம்பிராற் குரைப்ப வெழுந்துமந் தரவெற் பெய்தி * யெட்டயுதவா
ண் டமர்கா, லும்பர்நீங் கினர்மா ரியும்வளந் தரமீண் டுமாபதி யங்குற வு
னலாற், பம்புசீர்த் துண்டி விநாயகன் காசிப் பதியினோர் கணிதனிற் பக
ர்ந்து, நம்பமா லாற்பே தித்தும்வேந் தனைநன் னெறிபிறழ் வித்துநீக் கின
ஞல். (உஉ)

பின்னரெம் பரன்மா தோடுமந் தரத்தைப் பெயர்ந்திவண் புதிது
செய் கோயின், மன்னிநற் றுண்டி விநாயகச் சேயை மடியில்வைத் துச்சி
மோந் துன்னு, வின்னதொல் பதியெய் தினமென்றுன் றுண்டி விநாயக
விறையவ தாரம், பன்னின மினிவல் லபைகண பதியாய்ப் படரவ தார
த்தைப் பகர்வாம். (உங)

துண்டிவிநாயகன்றிருவவதாரப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (கக) க்குத்திருவிருத்தம் (ருாகங)

---

* எட்டயுதவாண்டு என்பது - எண்பதினுயிரவருடம்.

வல்லபை கணேசன் றிருவவதாரப் படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வெறிகமழ் கமலப் புத்தேள் வியனுல கத்தோர் வேலைச்
சிறுவிதி முதலோர் தொக்க வவைதனின் மரீசி யென்னு
மறிவனுன் முகன்பான் மும்மூர்த் தியரில்யார் நித்த ரெந்தாய்
பறைகவென் னலுங்க ணேசன் பதந்தொழு துரைக்க லுற்றான். (க)

படைத்தல்காத் திடறு டைத்த லெனுந் தொழிற் பகுதி மூன்றுட்
டுடைத்தல்செய் பவனே நித்த னெனமய றுதைம ரீசி
துடைத்தலும் படைத்தல் காத்தல் போல்வதோர் தொழிலஃ துள்ளோற்
குடைத்துநித் தியமென் றேத லெற்றி னுலுணக்க வென்றான். (உ)

துடைத்தல்யா வையும ழித்த லொன்றைவைத் தொன்ற ழித்த
றுடைத்தலன் றீற்றில் யாவும் படைத்துக்காத் திடுது யோரோ
டொடுக்குதல் செய்வா னித்த னன்றுகொ லொடுக்கி யாவும்
படைத்துக்காத் தவர்க்கு மீண்டும் படைத்தல்காத் தலும ளிப்பான். (ங)

அன்னதாற் படைக்கும் யானுங் காத்திடு மரியு மன்னோன்
சொன்னவா ரணவாற் றுலத் தொழிகளாற் றுவமெ மக்கு
முன்னவற் கெமையொப் பாக மறையொர்சார் மொழிந்த தென்ப
தென்னுப சார மாமவ் வீசனே கணேச னுகும். (ச)

உன்னருங் கணேச னெப்ப வெமையுரைத் திடல்செய் வோனு
மன்னிறை யத்து வீழ்த்து மாபவ மனைத்துஞ் செய்தோ
னென்னலு மரீசி யையந் தீர்ந்தன னிதயந் தேர்ந்து
பன்னெடுங் கால மோரம் பனேயுளத் தெண்ணி நோற்றான். (ரு)

அளியினேற் பான்முன் னண்ண லாகுவா கனத்துப் பைம்பூண்
மிளிர்தா மழுக்கை யோனுய் மேவலு முவந்தி றைஞ்சித்
தெளிமறைப் பொருளா லேத்தல் செய்தனன் மகிழ்ந்து செப்புன்
னுளம்விழை வெனம ரீசி யும்பரோ டிம்பர் யாரும். (சு)

யானிடம் பணிக்குள் ளாக யானவற் கிறை வனுக
வீனமெற் செய்தா தாக விருஞ்சிறு ரளவின் றாக
வானவர் முதல்வி யாயுன் வாமபா கத்து வைகு
ஞானகா யகியெ னக்கோர் நந்தனி யாக வேண்டும். (எ)

அனையபெண் ணமுதை யெந்தைக் கருங்கடிமுடித்தல் வேண்டு
மினையல தேனைத் தேவை நினைத்திடா திருத்தல் வேண்டு
மெனவிரந் திடலு மன்ன திசைந்துருக் கரந்து நின்றான்
றனையும்வேண் டினர்க்கு நல்குந் தயாபர னெனுங்க ணேசன் (அ)

முன்னவ னிடத்திவ் வண்ண முதிர்வரம் பெறும ரீசி
தன்னடி யுலக மூன்றுந் தாழவெங் கணுங்கோ லோச்சி
மன்னின னீது நிற்க வானவர் கயிலை வெற்பிற்
றுன்னியோர் நாளெம் மீசன் றுணையடிதொழுது நின்றார். (கூ)

அதுபொழு தெம்பி ராட்டி யமலனை வணங்கி யைய
துதையுல கியல்பெ னக்குச் சொற்றரு ளெனக்கீ ரீசன்
முதறுணை நிமித்த மென்னுங் காரண மூன்று மென்றுந்
திதிகொள்கா ரியமு லோக மவற்றின்முன் னையதே மாயை. (ய)

பின்னைய தெமது சத்தி யேனைய தியாமே யென்று
பன்னலு முமைத ருக்குற் றெனையன்றிப் பரம போத
வுன்னதோ ரசைவுண் டோவா தலினுல கென்று னிற்ப
தென்னவோ தினள்பி ரான்கேட் டீதுநிற் கறிவிப் பேமால் (யக)

மாதரா யென்ன யாண்டும் வதிசெய்தஞ் சத்தி யாண்டும்
போதரா தடங்கத் தன்னு ளொடுக்கினன் புதுமை யென்னே
யோதுமுச் சுடர்க ளற்ற வுறுபக லிரவு மற்ற
யாதொரு செயலு மற்ற வூழியி னிருளாங் குற்ற. (யஉ)

வேறு

திருமலை மங்கைநோக்கி வெருவந்தெம்மாதி சிவமூ வருக்கு முதலே
கருவிதை யின்றிநாறு வளர்விக்கநல்ல கருணை தகம்பெய் புயலே
யருமறை யென்றுநேடி யறியாததாக வகல்கின்ற ஞான மயமே
பிருதுவி யம்புதீகா லெனுமண்டகோடி பிறநல்கு நாத சரணம். (யங)

சிவசிவ தேவ தேவ செகமெங்குமார்ந்து திகழ்கின்ற சோதிவடிவே
பவபவ நோயின்மூழ்கு முயிர்கட்குவேண்டு பதமுத்தி நல்கு பொருளே
யெவரெவர் யாததாக விதயத்தினின்னை யெதுபோது சிந்தை செயினு
மவரவ ரார்வநோக்கி யதுபோததாக வருளோம்பு நாத சரணம் (யச)

உயர்புவி யாதிபூத மெனவோது மைந்து முதிகால மொன்று தனினென்
றியல் பட வாகிநான்கு வகைதோன்றிவாழ்மல் லுயிர்மற் றெனைத்து

மடைவே, துயர்கெட நாடியவ்வவ் வினையாற்றின்மேன்முத் தொழிலு நிக ழ்த்து நினைவா, லயலற வீறுசெய்து பொடியாடுமேனி யரனுகு நாதசர ணம். (மரு)

வே று.

எனமுழு முதலை யேத்தி யெம்பிரா னுலகியங்க
ணினையல திலையென் றேர்ந்தேனென்றுநின் மலையு னாத்தாண்
மனமகிழ்ந் திறைவன் ஞைவகி யருளவம் மயக்கத் தாழ்ந்த
வனமிவர் தேவுள் ளிட்டோ ரடைந்தர னடியிற் றாழ்ந்தே. (மசு)

கொத்திருட் பிழம்பிற் றாக்கங் கொண்டுளேம் பன்று ளெந்தா
யத்துய ரகன்றே மின்றுன் னருளினு னென்னல் காறு
நித்திய கரும மாதி நீங்கிவாழ் பிழைத விர்த்தற்
கொத்தநூன் முறைபி ராயச் சித்தமொன் றுணைந்தா ளென்றார் (மஎ)

முருகுமிழ் கடுக்கைவேணி முன்னவ னடுவோர்ந டின்ன
தருவரை மங்கை யுற்ற தருகக்கிணு தியவாற் றுலத்
தெரிவையே யப்பி ராயச் சித்தமாற் றுதல்வ ழுக்காம்
வெருவன்மி னீவி ரென்று னகன்றனர் வெற்பின்செல்வி, (மஅ)

ஒருவயா னியற்று மாறிங் குணாத்தரு ளெனவெம் மானுங்
கருமைசால் யமுனை யென்னு நதியிலோர் கவின்சங் காகிப்
பிரமமா புரமெ னப்பேர் பெறுநக ராட்சி செய்யுஞ்
தெருணிறை மரீசி யென்போன் மகளெனச் சேர்தி பின்னர். (மகூ)

ஆண்டுபன் னிரண்டு செல்ல யாமவ ணெய்தி நினைக்
காண்டகு மணமு டித்து மெனப்பெருங் கருணை செய்தா
னீண்டியாங் கோர்சங் காய்ப்பங் கேருகத் தமர்ந்து நோற்றாள்
வேண்டுவார் வேண்டு மாறு மெய்வர மருளெம் மன்னை. (உ0)

சங்குரு வாய தாயைத் தாங்கமுன் றவஞ்செய் கஞ்ச
மங்குள முளரிக் கெல்லா மதிக * மஞ் சுளம தாகிப்
புங்கவ ரொவரு மார்வம் புரிந்திடப் பொலிந்த தென்னி
லிங்கதன் பெருமைப் பாட்டை யாவரோ யிசைக்க வல்லார், (உக)

தனையடை பவருண் மாசு தவிர்த்தர னடிக்கீ ழாக்க
லனைகிக ரிமையச் செல்வி யியல்பற்று லவளு ருக்கொள்

* மஞ்சுளம் என்பது - அழகு.

கணேசுரி முகமுந் தன்னைக் கலந்தநீர் முழுதுஞ் சுத்தி
யினையரு ளுர்த்த மாக்கு மியல்புடைத் தாயிற் றன்றே. (உஉ)

தன்னிக ரில்லாள் சங்காய்த் தம்பிராற் கருதி நோற்பத்
துன்னு † மாயிரங்க ரத்தோன் சுருவுறு மதியில் வாய்க்கா
லென்னுமா நாளிற் போந்தா னில்லொடும் படிவா ணங்க
ணன்னவா கனத்தோன் மைந்த னுமருந் தவம ரீசி. (உஙு)

திருந்தருந் தவன்சங் கற்பஞ் செய்துநீ ராடித் தேசார்
பெருந்திரு நீறு மாடிப் பேறருண் மணிமெய் தாங்கிக்
கரந்தைபொற் புறுத்த வேணிக் கடவுளைத் தியானஞ் செய்காற்
பொருந்துமூ ழாலங் கீரின் பொற்பும்பூ வனப்பும் பார்த்தான். (உச)

கங்கைசங் குருவா யங்கு கண்ணவிற் பனியாற் றீயோர்
மங்குசெல் வம்போல் வாடும் வனசநல் லோர்செல் வம்போற்
பொங்குமுற் றிணைய தெவ்வாம் பனிதனை நகுதல் போல
வங்கலர் தரலெற் றுலென் றிசையித் தணித்தாச் செல்ல. (உரு)

வண்டரு வுலகர் போற்று மலைமகள் செயிர்தீ ரக்கொள்
வண்டரு டரவோர் பூவின் மன்னல்கண் டெடுப்பான் பாங்கார்
வண்டரு ளயர்ந்தெ முக்கிட் டமையத்து மறைத லாற்று
வண்டரு மயல்கொள் காலோர் மகவினின் றனனோருக் குற்றே. (உசு)

முன்னவன் றன்னை முன்னி முன்னருந் தவஞ்செய் நாளி
லங்கிரு மலனன் றெய்தி யளப்பரும் வரம ளித்துப்
பொன்னக மடந்தை தன்னைப் புகல்வியாத் தருது மென்னப்
பன்னிய வாறிச் செல்வி பாங்கிலென் பாங்கி னுற்றாள். (உஎ)

என்றுதா மறையோன் மைந்த னிதயதா மரைவைத் தில்லா
மின்றிகழ் நுசுப்பா டேவ வல்லிகை மிசைக்கொ டுத்தான்
மன்றவுண் மகிழ்ந்து வாங்கி மார்பணைத் துச்சி மோந்து
மென்றனஞ் சொரிபா லூட்டி வேணவா வொடுமோம் புற்றாள். (உஅ)

பவக்கடற் படிவாற் றுது பரமனைக் கருதி நோற்போர்க்
கவத்தைநீத் தருள ளிக்கு மனையையோர் மகவாப் பெற்றான்

---

† ஆயிரங்கரத்தோன் சுருவுறுமதியில் வாய்க்கா லென்னு மாநாளில் என்பது ஆயிரங்கைகளையுடைய சூரியன் மகர இராசியிலுற்ற திங்களில் மகாநக்ஷத்திரத்தில்.

சிவக்கொழுந் தினையே மேலாந் தேவென வுணரிம் மேலோன்
றவத்தள வினைத்தென் றோதத் * தாலமேற் றூல முண்டோ. (உகூ)

பழிதவிர் தீர்த்தத் தானும் பயன்கரந் தனிற்கொண் டோருள்
ளெழில்கொளிம் மகவைப் பெற்ற வெம்மையொப் பவர்யா ரென்று
தழைதிரு நாமந் தான்வல் லபையெனச் சாற்றித் தனுட்
டுழையமர்ந் தனன்ம ரீசி யுவள்விளை யாடல் செய்ய. (கூ0)

வல்லவை யகவை யைந்திற் றவத்திற மதித்த லோர்ந்து
மெல்லிடைத் தாய்ம ரீசிக் கவடிறன் விளக்கி,நோற்பா
னல்லவோர் சாலை கோலு வித்தலாற் பிராட்டி நன்றென்
றொல்லையே காக்க ரத்தைத் தியானித்தாங் குறைந்து நோற்றாள். (கூக)

அகவைபன் னிரண்டின் காறிவ் வருந்தவம் புரிய யார்க்குந்
தகவருள் வரத ருள்ளஞ் சகிப்பரோ தனிம னுட்டி
மிகவயர் வொடுநோற் றற்கோர் வேதியர் போன்று போந்தார்
முகிணகை யிறைஞ்சி மேலோய் வரவியா தெனமுன் னேனும், (கூஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வந்ததுனை மணம்புரிவா னென்று ரீசன் வாமபா கத்துறுநோன் பா
ற்று வேற்கின், றிந்தவுரை கேட்கவற்றே சிவவென் றங்கை யிருசெவி
வைத் தறிவிலியே கென்று ளெங்கோன், சந்தமறை பலகலைதேர் தரினு
நீங்கா தையலர்க்கு மடமையென்ப விறைவ னின்னே, யுந்திமணந் திடுங்
கொலென வுறுனே லாவி யொழிப்பலிவ ணகறியென்று புறம்போ குற்
றாள். (கூங)

கண்டிறைவன் கதிர்கோடி யெழுந்தாங் கோங் கரமுடையோ னாய்
மயின்மேற் காட்சி நல்க, வண்டணிசெங் கரத்தாள்வல் லபைகண் டை
ய வந்தனையோ சிறியேன்சொன் மனக்கொ ளேலென், றண்டர்பிரான்
பதத்திறைஞ்ச வுவந்தே நங்கா யறைதிவிழை வென்றுனின் வாம பாகங்
கொண்டருளு யேனையென்று கூறத் தந்தேங் கோடியென்றான் குறை
பொறுக்குங் குணக்குன் றனேன். (கூச)

---

* தாலமேற் றூலமுண்டோ - உலகத்தில் (மரீசிமுனிவரது தவப்பேற்றை இவ்வளவினதென்று சொல்லத்தக்க) நாவினையுடையார்கள் உண்டோ என்றபடி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈதுநின் றிடம ரீசி யிடஞ்சென்று நிகழ்ந்த வண்ணந்
தூதுவ னுரைப்பக் கேட்டெஞ் சோதியன் றுரைத்த வாறே
போதர லுற்றான் போலும் பொற்புறு திரும ணத்திற்
கோதியா வையும் யற்ற லுறுமினென் றனனு வந்தே. (௬௫)

அன்னண மதற்கு வேண்டும் பொருளெலா மமையச் செய்து
மன்னிய நகர மெங்கு மணிநிறை தீபந் தூபம்
பொன்னிறை குடமி ரப்பிப் பொற்சுணக் கோல மிட்டுக்
கொன்னிறை மாட கூட முதலணி குயிற்றி னால. (௬௬)

மாதவ மரீசி யிப்பான் மாதவன் பிரமன் றேவ
ராதிய மற்றோ ரெல்லா மணிமண வதுவைக் காங்கே
போதர வழைத்துப் போந்த புலவர்மற் றெவர்க்குந் தக்க
மேதகு வரிசை செய்து மகடவச் சாலை மேவி. (௬௭)

சிவபரஞ் சுடரோன் செய்ய திருவடி பணிந்தன் றனைத்
தவவடி வாய வல்லி தன்னொடு மழைத்து வந்து
நவமணிக் குலங்கு யிற்று மண்டப நணுகச் செயது
கவின்மணக் கோலங் கொள்வான் காதலி தனையுள் ளுய்த்தான். (௬௮)

குளிர்புனல் படிந்து நித்திக் குருமணி யணிக டாங்கி
வளரிளங் கொம்பர் போல வரன்புடை யிருந்தாள் சூழ்ந்து
நளினமென் மலர்மா தாதி நங்கையர் பல்லாண் டோதத்
தெளிமறை முனிக்கு றாமா சிகள்செய வியங்க ளேங்க. (௬௯)

நந்துநல் லோரை நேர்ப்ப நன்மனை புனல்கை வார்ப்பச்
சிந்துநேர் தவம ரீசி சிவபிரான் கழல்கை பூசி
வந்தனை பலவி யற்றிவல்லபை யங்கை பற்றி
யிந்துசே கரன்கை நல்க வெற்றன னனைய காலை. (௭௦)

காரணன் றிருவோ டெய்தா நன்குதா னருளீ ராறுஞ்
சீரணி * மோதை யேயா திப்பெயர்ப் புதல்வி மாரைப்
பூரண கணேச னுக்கும் புரகரற் கீய வேற்றே
யாரணன் சடங்க னைத்து மாற்றநன் மணமு டித்தான். (௭௧)

---

* மோதையாதியபெயர் புதல்விமார், என்பது, மோதை, பிரமோதை, சுமங்கை, சுந்தரி, மனோரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருகாசை, சுமத்திமை, நந்தினி, காமதை, என்னும் பன்னிருபுதல்வி மார்களாம்.

முன்னவ னினைத்தா வெற்பின் முதல்வியோ டரிய யந்த
கன்னியர் தமையும் வேட்டுக் கடிமண வினைநி ரம்பப்
பன்னுமச் சுதன்முன் னுன பண்ணவர் முனிவ ரோடு
முன்னரு மோகை யுற்றார் திருமறு மார்ப னோர்ந்தே. (சஉ)

மலக்குறும் பொழிக்கு ஞானம் வழங்கென விறைபால் வேண்டக்
கலக்கமீங் கிடவல் வாறே யருளியங் கணமா ரோடு
நலத்தகு கணேச மூர்த்தி நண்ணிவாழ்ந் திருந்தான் முன்னை
யுலப்பில்சீர் மணித்தீ பத்திற் பிறருந்தம் பதிக்கே குற்றார். (சங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இத்தகை யனவா மைங்கரப் பெருமா னினியமான் மியத்திற முன்ன மெய்த்தகு பிருகு சோமகாந் தப்பேர் வேநதனுக் குரையுப புராணக், கொத்தினு ளொன்றைச் சூதமா முனிநைம் மிசவனக் கோதில்சீர் முனிவர்க், கொத்தவன்பொடுமோாகதோதியா ரியத்தி னேங்குபார்க்கவமெனு னும் பெயர்த்தாய். (சச)

வழங்கலுற் றதையா வடுதுறை நமச்சி வாயதே சிகனருள்வாய்ப்புற், றுழந்தமா தவத்தா லுயர்சிவ ஞான முனிதன்மா ணவனென வுணர்ந்தோர், மொழிந்திடு கச்சி யப்பநற் றவன்செய் தென்சொலான் முன்னவன் புராணத், தழங்குபே ரியதை விநாயக புராண சங்கிர கப்பெயர் தந்தே. (சரு)

அடியனேன் றெருகுத்த சரிதமின் னதூஉன் றிடவினி யன்னவண் பொருளைக், குடிஞையா சிந்து பூந்துறைச் சித்திக் குஞ்சர முகப்பிரான் கன்பர், படிவயிற் சமவத் சரந்தொறும் வசந்த விழாவொன்று பாரிப்ப ரதையு, முடனுரை செய்வான் றுணிந்தன னவன்றா ளுச்சிமேற் கொண்டுளமுவந்தே. (சசு)

வல்லபைகணேசன்றிருவவதாரப்படலமுற்றுப்பெற்றது.

ஆகப்படலம் (கஉ) க்குத் திருவிருத்தம் (ருாருஎசு)

வசந்தோத்சவோபாசவனைப்படலம்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வண்டமிழ் மலைய மெனுமொரு பெருந்தாய் வயிறுளோந் தீன்றிடப் பொருளை,யொண்டொடி யெனுங்கைத் தாயுமூ தூட்டியும்பர்செல் * சந்திரதிலகத்,தண்டலை மனைவாய் வளர்த்துநாற் றிணையாந் தனிமுற்றந்தோறும்விளையாடல், கண்டிட விடுத்த மகவெனு மிளங்கா றளர் நடை காட்டலிற் கருதும். (க)

*சந்திர திலகம், சந்தனவிருக்ஷம்.

வனிதையர் வருந்துங் கோடையை வருத்து மான்மகன் வைகுபா சறைகள், புனிதமா விருத்தல் கடனெனத் தமதோ ரறிவினாற் புதுக் குதல் போன்முற், பனியினு லவல முறுமிலை யாதி பழுதறத் தருப்பரி சனங்க, டுனிதவி ரிளங்கா லசைதரத் துளிர்த்துத் தூமலர்சொரிதரத் துதைவ.

இடர்நுமக் கிழைக்குங் கோடையாம் பகையைக் கடந்திட வெண்ணுமா ணிடாகாள், பிடிநடை யிரதி கொழுநனெம பொருநன் பிறங்கு நாற் படைகளிற் பதாதிப், படைகொடம் மதன்றேர் நடத்துறக் கோப்புப் பண்ணுபா சறையடை குதிரென், றடலுறு சின்னமார்த்தெனக் குயில்க ளணிதரு கொம்பிருந் தரற்றும். (௩)

பெருவரை முலையார் மொழிகவர் கிளிமா பிறங்கெழிற் குழனிகர்திமிரம் பொருகரி வதன முறழ்மதி குடைதோள் புரைபசுங் கழைசிலை நகைநேர் தருமலர்கணைகண் ணிணைகயல் கொடியாச் சமைவுற வளைகட லுடுத்த விருநில வுயிராம் பயிர்வரு நிலம்வித் தியைதிறன் றருமதன்விழாநாள்(௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வாடைவாய் வாசந் தோய்ந்த வசந்தன்வந் தசைத ஞேக்கிக்
கோடைநோய் வருத்தந் தீர்ப்பான் குளிர்தட ஈளின மார்ந்த
வோடைவேய் சோலை சேர்வா ருரியர்கைப் பற்றிக் காமப்
பீடையோய் தரவு லாவிப் பிடியென நல்லார் சில்லோர். (௫)

கரிபரி யிரத மூர்ந்து காந்தைய ரோடு மாந்த
ருரியவில் லகன்று போந்தே ருறுநறும் பொழில்புக் காங்கே
பரிமள மலர்கள் கொய்தும் பந்தெறிந் தாடல் செய்தும்
விரிதிரை வாவிதோய்ந்தும் விடுப்ப * ரெற் பொழுது சில்லோர். (௬)

இந்தெனக் குளிருங் காந்த மணிகளி னிலக வாற்றி
யந்தர முரிஞ்சு மேடை நிலாமுற்றத் தமர்ந்து வாச
முந்துசந் தாதி பூசி யொளிர்முத்த மாலை வேய்ந்துந்
தந்திடை யவர்தோ டோய்ந்து தணிப்பரற் *பொழுது சில்லோர். (எ)

வேனிலான் சின்ன முற்றி வி ழாச்சிறப் பெடுக்குங் காலம்
†பூநதி பதிதென் காலல் பொழினிலாக்கொழுநற் புல்லா

---

* எற்பொழுது, பகற்காலம்.

* அற்பொழுது, இராக்காலம்.

† பூ, கணை, நதிபதி, முரசம், தென்கால், இரதம், அல், யானை பொழில், படைவீடு, நிலா, குடை இவ்வாறும், காமனது சின்னமாதலால் தலைவரைப்பிரிந்த தலைவியர்க்கு வருத்தந் தருதற்கும் அஃதல்லாதார்க்கு அதனைத் தராமைக்கும்உரிய பொருள்க ளாயின.

மானன நோக்கார் யாரும் வருத்தஞ்செய் யழலாக் காண்பா
ரானதங் கேள்வர் தம்மை யகறரா ரினிதாக் காண்பார். (அ)

இன்னதா விருதோ ராறி னினியதாத் திகழ்வ சந்தத்
தன்னபூந் துறைவாழ்ந் தெம்மை யாளுவா முகவற் கிம்பர்
மன்னுவார் வசந்த மென்னும் வைபவ விழாவென் றென்று
பன்னவா வுடனுண் டாண்டாண்டு பண்ணுவா ரவற்றோ ராண்டில் (கூ)

அன்னநல் விழாந டத்தி யமையுமண் டலபூ சைப்பேர்
பன்னுறு பெருஞ்சி றப்பு நாட்குறு பலவ ளங்
டுன்னவோ கையின்மு யன்றூர் சுமுகார லையஞ் சூழாற்றின்
முன்னின நீத்த மன்ன திறத்தினை மொழிதல் செய்கேன (ய)

‡ தன்றனை யூர்வோ னூருந் தவளநான் மருப்பி யானை
சென்றுதன் வடிவின் வேலை செறிந்துவர் நீருண் டார்ந்த
பின் * றரை யானை மேனி பெற்றதன் மைத்தாச் சூல்கொண்
டொன்றுநா னிலத்து நன்னீ ருதவமீண் டதுவான் கொண்டல். (யக)

கோடைவெம் பகைவற் சீறிக் குமுறலி னிடித்து வாட்போ
ராடலின் மின்னி யம்பின் மாரியம் புகுத்தக் கோடை
நாடனைத் துரந்து ஞால நண்பனன் குறவ மைத்துப்
பீடுடைப் பொதிகை யெய்திப் பிறங்கதன் முடிமீ தூற்ற. (யஉ)

உருமொலி காட்டி மாரி சொரிவன வுவரி யுண்ட
வருமுனி மறைபு கன்று வாமுகன் முடிமீ தந்நாட்
பொருவில்பூந் துறைநீ ராட்டல் போலுமப் புனிதன் றாவு
மருமலர் கடுக்கு மாரி மணிகள்சிந் திடுதன் மாதோ. (யங)

கள்ளவிழ் கடுக்கை வேணி யண்ணலார் கயிலை வாழ்ந்த
வள்ளிலை பொலிவே லன்ன மதர்விழிப் பொருனை மானவ்
வெள்ளியங் கிரியின் கூறுங் கொண்டுமே வினள் கொ லிங்கென்
றுள்ளவர் தங்கட் கைய முறப்பல வருவி வீழ்வ. (யச)

பொருவிறென் பொதிய மென்னு மொருமகள் புவிவா னுய்யப்
பெருகுதண் பொருனை மானைப் பெற்றரு மணியும் பொன்னுங்

‡ தன்றனையூர் வோனூருந்தவள நான்மருப்பியானை சென்று தன்வடிவின், மேகத்தை வாகனமாக வுடைய இந்திரனது அயிராவதம்போன்று வெண்மேகம் சென்று.

* றரையானை மேனிபெற்றது, உலகயானைபோற் சூல்கொண்டு கருமேக மானது.

குருவளர் குழையும் பூட்டிக் குழைகடற் கொழுந னுக
மருவவுண் மகிழ்தந் துய்த்தாற் போற்பிர ளயம்வந் தன்றே. (௰௫)

வாசமென் மலருஞ் சந்துந் திரைக்கையின் வாரிப் பாவ
நாசமுன் னுன தீர்த்தத் துறையெலா மோதநண்ணல்
பாசவல் வினைக டீர்ப்பான் பரிவுட னடிப் பூத்தூயப்
பூசைசெய் தீசன் பாதப் போதம ரடியா ரேய்க்கும். (௰௬)

அலைகடற் புவியி னுன்ற * வாறிட மேவ லானும்
சிலையினின் றிழிந்து செந்தில் வேலைவாய்ச் சேர்த லானு
மலைமக ளிடத்து வந்த மகிமையி னுனும் வாரி
புலவருக்கிடர்செய் சூரைப் பொருதிருக் குமரற் போலும். (௧௭)

கரிமுகத் தோற்றத் தானுங் கங்கையா ளிடத்து வந்த
பெருமையி னுனு மாலம் பிளிற்றராப் பிறங்க லானும்
† வருணமந் திரத்தி னுனும் வகிர்மதிப் பிளவின் மின்னு
மொருமருப் புடைய தேவை யொக்குமால் வருநீர் நீத்தம். (௧௮)

பொங்கர விந்தந் தோன்றப் பாரதி பொருந்த ‡ வாசை
யெங்குமா முகம தாக வெகினமீ திவர வூழிற்
o சங்கற்ப மறமீக் கொள்ளச் ? சங்கரன் முடியால் வானீர்
பங்கினுன் மலரின் வைகும் படைத்தொழிற் கடவு ளேனும். (௧௯)

* ஆறிடமேவல், திருக்குமரன்மேற் செல்லுங்கால், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், திருக்குன்றுதோருடல், திருப் பழமுதிர்சோலை, இவற்றில் அமர்தல் எனவும், நதிமேற்செல்லுங்கால், இத்தாம் பிரபன்னியின், தக்ஷணமும், உத்தரமுமான இருபாலிலுமிருந்து, வேணையாறு, நாகையாறு, கோணையாறு, சித்தையாறு, சாவையாறு, மணிமுத்தாநதி, கல்லாறு வாணதீர்த்தநதி, பாலாறு, கடனுநதி, பச்சையாறு, கம்பாநதி, சித்திராநதி, கோத ண்டராமநதி முதலிய ஆறுகள், தன்னிடம், சங்கமபபடுதல் எனவுங் கொள்க.

† வருணமந்திரத்தின், கணபதிமேற்செல்லுங்கால், வருணப் பிரியாயநம. என்னும் மந்திரத்துக்குரியனுதல் எனவும், நதிமேற்செல்லுங்கால், நீர் என்றும் வற்முத தன்மையுடையதால் எனவுங் கொள்க.

‡ ஆசை, திசை.

o சங்கற்பமறமீக்கொள்ள, அயன்மேற் செல்லுங்கால், தரும ஒழுக்க விதி யை மேற்படவகுத்தலால் எனவும், நதிமேற் செல்லுங்கால், சங்கின மிகுதிப்பட லால், எனவும் கொள்க.

? சங்கரன் முடியால் வானீர்பங்கினுல், அயன்மேற்செல்லுங்கால் இறை வன்முடிகாண ஆகாயம் பிளந்து துருவியதன்மையால், எனவும், நதிமேற்செல்லு ங்கால், இறைவன்முடிமேல் ஒலிக்கும், கங்காநதியின் பிரிவாதலால், எனவும் கொள்க.

சங்குகை மருவ ** வைந்தாத் தருபொரு ளிருக்கல் லோங்க
† மங்கையாப் பச்சை கூட வளர்கைவண் டிகிரி சுற்ற
வெங்கடுப் பாந்த டாங்க வேலைடுக் கணையும் வாரி
துங்கமா வுரத்து வைகுந் துளவமா யனையு மானும். (உ௰)

வளைபடு பொருளை வாரி வன்றளைப் பாலை சேர்த்தத்
தளைபடு பொருளை வாரிப் புறவுய்த்துப் புறவந் தங்கு
கிளைபடு பொருளை வாரி மருதத்து நிறைத்தாங் குள்ள
வுளைபடு பொருளை வாரிக் கடலிடை யொதுக்கு நீத்தம். (உக)

‡‡ புகலியே றந்நா ளிட்டு வையையிற் போமே டொப்ப
மகரவே றெதிரே செல்ல மற்றைய வமண ரோரெண்
டொகைசகத் திரர்வி டுத்த வோலையிற் சுழித்தீர்த் தோடி
யகல்புனல் வாரி வாரி யப்பொடு கலந்த தன்றே. (உஉ)

** ஐந்தாத்தருபொருளிருக்கல்லோங்க, திருமான்மேற் செல்லுங்கால், பஞ்சராத்திரோபதேச மதவேதார்த்தநெறி பெருக, எனவும், நதிமேற் செல்லுங் கால், பசுவிலிருந்துவருகின்ற ஐம்பொருளாகிய கவ்விய நீங்காமை பெருகஎனவும் கொள்க.

† மங்கையாப்பச்சைகூட, திருமான்மேற்செல்லுங்கால், நீலத்துடன் பச் சைவண்ணனுதலால் எனவும், நதிமேற்செல்லுங்கால், கங்காதேவியின் ஒரு கூறி னளாகப் பச்சையாறு சம்பந்தப்படலால் எனவும், கொள்க.

‡‡ புகலியே றந்நாளிட்டு வையையிற்போமேடு, சீகாழித்திருப்பதியில் அவதரித்தருளிப் பரசமையகோளரியென வெற்றிநாமமுடைய திருஞானசம்பந்த ப்பிள்ளையார் மதுரமாநகரத்தில், அமணர்சமையம், புக்க, கூன்பாண்டியனது சுரந் தணித்தகாலை, அவ்வமணசமையத்தின் பொய்ம்மையும், சைவசமையத்தின் மெய் மையும். விளங்கும்பொருட்டு, திருநள்ளாற்றுப்பதிகம்,பண்பழந்தக்காரம். "போக மார்த்த பூண்முலையாள்" ஷை திருவிராகம் பண்சாதாரி "தளிரிளவளரொளி" என்னு முதற்குறிப்புகளுடைய இருபதிகங்களால், நெருப்பிற்சாக்ஷியிட்டது மன்றி, நீரிலும் சாக்ஷிகொடுக்க, திருப்பாசுரப்பதிகம்பண், கௌசிகம், "வாழ்க வந்தணர்" என்னு முதற்குறிப்புடைய திருப்பாசுரம்புனைந்து வையைநதி யெதி ரேறவிடுத்த சைவத்தமிழ்மறைத் திருமுறையேடு எனக்கொள்க.

பொருண்முறை யுணரா தோது * மருகர்புன் சமையம் போதாப்
பருவமெய் திடுநா வேந்தின் மனமெனக் கலங்கிப் பண்டை
யருணெறி யுணர்த்துஞ் சைவ சமையமுற் றவர்தாம் பெற்ற
தெருணிலை மான நீத்தந் தெளிந்துயிர்க் கமுதா யிற்றால். (௨௩)

ஆயகா லையிற்பூ சைக்கு வேண்டுவ வமைத்துத் தொண்டர்
தூயவா லயஞ்செ லற்குத் தொக்குழிப் பொருனை முன்போ
லேயுநாண் முறைபி றழ்ந்து வருபெருக் கிடைவற் றாது
பாயல்கண் டிதற்கென் செய்து மெனபபரி வுள்ளங் கொண்டு. (௨௪)

எழுசீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

மருதமாங் கன்னி செவ்விநன் காய்ந்து செவிலியாம் பொருணைமான் வந்து,பெருகமு துதவும் பெற்றியிற் பிறழ்வென் பிரியநீர்க் கிறைவயின் மிகுலென், றுரைதரு பவரு மடியவர் சுழுகர்க் குவந்துசெய் வசந்தவை பவத்தா,லருளவிப் பெருக்கொத் தெனக்குட முனிதன் னனுபவங் காட்டுலென் பவரும். (௨௫)

சுரநதி யைய்கைச் சுதன்கொளும் வசந்தத் தூவிழாக் கண்டிடச் சுகையாம்,பொருனையாள் புதுசசீ ருருக்கொடு சென்றாள் போலுமென் போருமை ‡ யாறு, பெருகிவன் றொண்டர் வஞ்சிவேந் தொடுசென் றிடமுன்பு தடைசெய்த பெற்றி, புரையுமம மூர்த்தி பாடலால வழிபெற் றெனவெவர் பேறுவரொன் போரும். (௨௬)

---

* அருகர்புன் சமையம் போதாப்பருவமெய்திடுநாவேந்தின் மனமெனக்கலங்கிப் பின்பு தெளிதல், தமது ஈன்றோரை யிழந்தும், உடன்பிறந்த ஒரு கன்னிகையுடன் உணவாதிகளாலு முழன்றும், சமைய நிலை யுணரு மறிவற்ற பருவத்தில், அநாதமரேனைத் தஞ்சமையப்படு குழி வீழ்த்தலே தொழிலரான சமணாது துற்போதனைக்குள்ளாகித் தருமசேனரெனப்பேர் பெற்றுச் சைவநெறியின ராகும்,அச்சகோதரியாலுங் கைவிடப்பட்டு வருந்திய அவர், பின் அவள் பிரார்த்தனையாலிறைவன் கருணை பொங்கிச் சூலை குன்மமென்னும் பிணி யுறுவித்து, அச்சமணாது மந்திராதி ஆரிய சிகிச்சையாலுந் தீர்வின்றி, திருவதிகை வீரட்டப்பதிகம், பண், சொல்லி, "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் முதற் குறிப்புடையது முதலிய தமிழ்மறைச்சிகிச்சையால் எளிது தீர்வித்தல் பற்றிச் சைவமே மெய்நெறியெனக் கடைப்பிடித்துத் திருநாவுக்கரையர் எனப்பேர்பெற்று என்றுஞ் சைவ சமையாசாரியரா யிருத்தல் எனக்கொள்க.

‡ ஐயாறு வன்றொண்டர் வஞ்சிவேந்தொடு சென்றிட முன்பு தடைசெய்து த

முன்றனிமுதல்வ னோடுபென் னதியுமொய்த்திவண் பன்மலர் தூவி
நன்றுறப் போந்த பான்மையித் தினமு நண்ணிய தேகொலென் பாரு,
மன்றுயர் § வாத வூரரால் வரா நா ளாலவா யிறையருள் கொடுவெந். தொன்
றியே வையை பெருகிய செயலை யொக்குமென் றுரைத்திடு வோரும். (௨௭)

மேலைநாட் *காடு வெட்டிய நாம வளவன்மெய் யன்பினேத் திடுவா
னாலவாய் செல்லத் தடைசெய்த வையை யகன்பெருக் கொத்ததென் போ
ருஞ், சாலவே யானா சப்பொழு தைங்கைத் தம்பிரா னருளினைத் தடையு
மேனுறு தவனை வழுத்துது மெனச்சூழ்ந் தேத்தினா ரலகில் சீரடியார்

கலிநிலைத்துறை

அருமை மாதவர்க் கருள்புரி யாதியைங் கரனை
யொருவி யாதனிற் றொழாதனு ருழந்துபின் றொழலாற்
றெருளின் மேவுறச் சோமகாந் தப்பெயர்த் திறன்மன்
பொருவி னின்னுரு வுறச்செய்த புனிதனின் னபயம். (௨௯)

ம்மூர்த்தி பாடலால் வழிவிடப்பெறுதல், இறைவனது திருக்கயிலையிற் சாத்து நீறு திரு மலர்மாலைத் தொண்டுமுதலிய இயற்றிய ஆலாலசுந்தரர் சிவாக்ஞையாற் பூவுலக சைவ சமயாசாரியராய்த் தலதெரிசனமுந் திருநெறித் தமிழ்மறைபுனைதலுஞ் செய்துவரும் ஓர்சமையத்தில் திருவையாறு என்னுஞ் சிவஸ்தல தரிசனங்கருதி வஞ்சிநாட்டரசனாகிய சேரமான்பெருமானுடன் செல்ல இடையுள்ள நதிபிரளயத்ததாகி தடையாதல்கண்டு திருவையாற்றுப் பதிகம், பண், காந்தாரபஞ்சமம், "பரவும்பரி சொன்றறியேன்,, என்னுமுதற்குறிப்புடைய திருப்பதிகம் புனைந்தவுடன் அந்நதிநீர் ஊடறுத்து அணையிட்டாற்போல் விலகி வழிவிடச்சென்று திருத்தல தரிசனமுதலிய தொண்டியற்றிப் பிரசாதம்பெற்றது, எனக்கொள்க.

§ வாதவூரரால் வராநாளால வாயிறை யருள் கொடுவெந்தொன்றியே, வையைபெருகியசெயல், திருவாதவூரில் அவதரித்தருளியவரும் திருவாசகமென்னும், சைவத் தமிழ்மறைபுனைந்தவருமான மாணிக்கவாசகமூர்த்திமெய்ம்மைப்பொருளுணர்ச்சியுடன் மதுராமாநகர்க்கரசனாகிய அரிமர்த்தன பாண்டியன்பால் அமைச்சியன்முயற்சியும், உடையராய் ஒழுகியகாலை அரசனுக்கு வேண்டுங் குதிரைகொள்ளப் பொருள்கொண்டு சிவபிரானது திருப்பணிக்குதவுதலைத் தன்னைத்திருவருட்குரியனாக்குதற்கென்று உணராது அபகரித்ததாக உட்கொண்டு அவரைத் தண்டிப்புக்குள்ளாக்கிய அவ்வரசனது அறியாமையையும் அம்மூர்த்தியினது இடும்பையையும் நீக்கும்பொருட்டுச் சிவபிரான் வையைநதியைப்பிரளயத்ததாகக் காலத்துப் பிரளயத்ததாக்குவித்தல், எனக்கொள்க.

* காடுவெட்டிய நாமவளவன் மெய்யன்பினேத்திடுவா னாலவாய்செல்லத்தடைசெய்த வையையகன்பெருக்கொத்தது, சிவநேசனாகி காஞ்சிபுரத்தரசுசெய்த காடுவெட்

பணங்கொ ளாகணைப் பள்ளியோ னாதிமூ வருக்கு
மிணங்கு முத்தொழி லீய்ந்தய னிருந் § தொழி லறிவாங்
குணங்கொள் புத்திசிந் திப்பெயர்க் கோதையா மகாரை
மணம்பு ரிந்தருள் புரிந்திடு வரதநின் னபயம். (௯௰)

பார்த னுச்சியிற் பதிதரக் காங்குபாய் பணைதுஞ்
சோர ரிக்கவன் செவியினின் றுதிக்குமோ ரிரண்டு
வீர ரைத்தெற வல்லலா தஞ்சலின் விட்டுந்
தீர மன்னவற் களித்தருள் செல்வநின் னபயம். (௯௧)

தக்க மன்னனும் திறல்கொள்வல் லாளனு தனியே
றேக்கும் வீமனு மவன்றரு முருக்குமாங் கதனும்
பொங்க மின்மன வலாரியு மருநதவம புரிய•
மிக்க நல்வர மருளிய விமலநின் னபயம். (௯௨)

ததை மலர்ப்பெரு வனத்துறோன் புறகிருச் சமதன்
கதமி குத்திடு திரிபுரன் கற்பக நாட்டுக்
கதிபன் மற்றையர்க் கருள்செய்து முப்புர மழிப்பான்
விதுமு டித்தவற் குதவுறு மெய்யநின் னபயம. (௯௩)

முன்னு ருத்திரா கர்த்தமன் மூவிரு முகத்தோன்
பன்னு சேடன்வே ணாளன்பகர் சந்திராங் கதம
னென்னு மின்னவர் விநாயக சதுர்த்திரோன் பியற்ற
வன்னர் வேண்டியாங் கருளிய வரதநின் னபயம். (௯௪)

டியசோழனென்னும்பெயரிய அரசன் ஆலவாயிறைவனைத்தரிசிக்கும் பேரவாவினனாகியும் பாண்டிவேந்தன்பகைமைக்கஞ்சியிருத்தலையுணர்ந்து, ஆலவாயிறைவன் ஓரிரவில் சோழவேந்தன்கனவிற்போந்து நீ ஒருத்தனாகி, உருத்திரிந்து தனித்துவந்து நம்மைத் தரிசித்துச்செல்க எனத்திருவாய்மலர்ந்தருளியபடி அன்றிரவில் அவ்வரசன் நெறிக்கொண்டு வையைவடகரைவருகையில் அந்நதிப்பிரளயத்ததாகித் தடைபடுத்தலால்வருந்த, அவ்விறைவன் கனவிலும் அவன்பாற்போந்து நதிப்பிரளயத்தைவறப்பித்தும், கோட்டை வடக்குவாயிலைத்திறப்பித்தும், தம்மைத்தரிசிப்பித்தும், மீண்டுஅவனைவிடுப்பித்தும், அவ்வாயிற்குவிடைக்குறிபொறிப்பித்தும், அருளியது எனக்கொள்க.

§ தொழிலறிவு, கிரியாசத்தியும் ஞானசத்தியும்.

இரண்டுவீரரை' மதுகயிடவரை.

பூர ணப்பெரு நெறிப்படு புருசுண்டி முனிவன்
வாரி சுற்றுறு நிலமகண் மகனென வருசேய்
சீரமி ருத்திடு வெண்மதி பெருந்தவஞ் செயல்கண்
டேரு றத்திரு வருள்செய்த விறைவநின் னபயம். (க௫)

அறுகு வந்தொரு புலைச்சிக்கும் விடைக்குமத் திரிக்கு
முறுவ ரங்கொடுத் தடுத்தயல் லுறுவரர்ச் சிக்கு
மறுகு கொண் § டொரு பார்ப்பனி புதவுமோ ரறுகுண்
டுறவ ரந்துலை யறுகினல் கொருவநின் னபயம் (க௬)

சமிந றுந்தளி ருவந்தொரு வேட்டுவன் றனக்குந்
திமிர நேர்மெய்யோ ரக்கற்கு மருள் செய்தோர் சமிவா
யமைய வர்ச்சித்த மாயனுக் கிரணிய னுதி
குமையச் செய்திற மருள்செய்த குமரநின் னபயம். (க௭)

இலகு வன்னியந் தாளையாந் தருக்கண்மீற் றிருந்தும்
புலவர் மாதரார் வன்னியந் தளிர்கொடு பூசை
நிலைபெ றச்செய வருள்செய்தும் விடநுகர் நீர்மை
யுலைய வன்னியன் மாய்த்துமா லொருவநின் னபயம். (க௮)

பொருவி ல் சங்கட சதுர்த்திநோன் பாலரும் புதல்வன்
இருந வீரியன் சூரசே னப்பெயர் ளொத்து
மொருமை யாரொடுன் னுலகநற் கசியபன் முதலோர்
பெருகு நல்வரம் பெறவருள் பெருமநின் னபயம். (க௯)

கனைம றந்தனும் புரிந்திடாக் கபிலனுக் கிடனா
யனுகு விக்கிடு கணனெனு மன்னனை யழித்து
வனைபி குக்கிடு மாமுகங் கொண்டுசிந் தூரப்
பனிவி றுட்டனை யட்டிடு பரமநின் னபயம். (௨௦)

விரக்கி னப்புரி விக்கினன் றருமமொழித் தொரு † நாற்
றிக்கு வத்திரன் மறைகவர் தருவினை செகுப்பித்
தக்க மூன்றுடைச் சிந்துமன் னுவினை யருந்தி
மிக்க வெற்றிகொண் மெய்யர்தம் மெய்யநின் னபயம். (௨௧)

---

§ ஒரு பார்ப்பனி, திரிசிரசெனும் ஒருபார்ப்பான் மனைவியான,விரோசனையாம்.

† நாற்றிக்குவத்திரன் மறை கவர்தருவன், நான்குமுகங்களையுடையபிரமதேவ ரால், நித்தியபூசைசெய்யப்பட்டுவந்த வேதாகமாதிகளை அபகரித்த கமலனெனும் அசுரன்.

இணையி லாமனைக் கயமுகா சுரனையெவ் வுயிர்க்கும்
பிணிசெய் * யந்தக ரிருவரைத் துராசதப் பெயர்கொ
டணியில் வெய்யனைச் சமரிடைச் சாய்த்துல களித்த
கணித மற்றிடு கருணைமா வடிவநின் னபயம். (சஉ.)

புனித பங்கயன் புதல்வனு மரீசிபாற் புதல்வி
யெனவி மாசல மகளாவல் லபையெனு நாமம்
பனவ ளித்தர னெனவந்து மணந்திடப் பாக
மனவ மைத்தருள் வல்லபை கணேசநின் னபயம். (சங)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

புவனமத் தனையு மாக்கப் § போதபோ தகவில் லோனாய்
புவனமத் தனையுங் காக்கப் பூவைபூ வையின்மெய் யோனாய்
புவனமத் தனையும் போக்கப் பூதிபூ தியமுள் ளோனாய்
புவனமத் தனையும் வேறாய்ப் பொருந்தவாழ் விமல போற்றி. (சச)

அணுவனைத் தினும்வி யாபித் தத்தனா யாகி நின்று
யணுவனைத் தினுந்தோ யாதோ ரரியநுண் பொருளாய் நின்று
யணுவனைத் தினுஞ்சேர் பாச மறுத்தருள் குருவாய் நின்று
யணுவனைத் தினுமுள் ளன்பி லகன்றிடா வமுதே போற்றி. (சரு)

முத்தொழில் களைநி கழ்த்த மூவர்க்கு மருளா நிற்பாய்
முத்தொழின் முடிந்த நாளின் மூவர்க்கு மேலா நிற்பாய்
முத்தொழி லினருந் தம்முண் முறைபிறழ்ந் துதிப்ப வைப்பாய்
முத்தொழி லையுநின் னன்பின் முதிர்பவர்க் கருள்வாய் போற்றி. (சசா)

உருவெலா நோக்குந் தோறுன் னுருவென்றே யிதய முன்னு
மருவிவாய் துதிக்குஞ் சென்னி வணங்குமெய் முகம னன்று
லொருவமண் டலபூ சைக்கிங் குறுபுனற் பெருக்கா லூறு
தருமதோ வென்று தாழ்ந்தேந் தாபந்தீர்த் தருளல் வேண்டும். (சஎ)

---

* அந்தக ரிருவர், தேவாந்தகன், நராந்தகனென்னு மிரண்டசுரன்.

§ போதபோதகவில்லோனாய், பூவினுள்ளிடத்தைவீடாகவுடையபிரமதேவராகி

* பூவைபூவையின்மெய்யோனாய், காயாம்பூப்போலுந்திருமேனியில், இலக்குமியைவைத்தவிஷ்ணு தேவராகி.

* பூதிபூதியமுள்ளோனாய், திருமேனிமுற்றுந்திருவெண்ணீறிலங்கும் உருத்திரமூர்த்தியாகி.

* அத்தனாயாகி, பிதாவுமாதாவுமாகி.

அடியவர் குறைவு தீர்த்தாண் டருண்மத மழைபெய் தற்கே
கொடியதும் புடைக்கை கொண்ட நின்மலா வசந்த நாட்செய்
கடிவிழா முடிவிழாவாக் களிகொண்மண் டலபூ சைக்கு
வடியனீர் நதியிற் பண்டை வழக்கத்தி னருளல் வேண்டும். [௪௯]

எனவடி யவரெ லாஞ்சேர்ந் தெங்கைபே ரருணி னைந்து
கனியுள மயர்ந் * தெட் டங்க நானிலம் படியக் கண்கள்
புனல்வடி தரவி றைஞ்சப் புனல்வடி தரக்கண் ணுற்றான்
றனுமுத லெனைத்து நல்குந் தந்திமா முகத்து வள்ளல். [௫௰]

வருநன்னீர் தொன்னீ ராக மற்றைநாண் மதிகா ளாக்
கருதுவா ரெவரு மீது கணபதி நமதன் பேரா்வா
னொருவினை யாடல் செய்த தன்றிமற் றொன்றின் றென்னப்
பருகினார் களிம துப்பின் படர்ந்துளா ரெந்தை கோயில். [௫௰]

முத்திசா தனர்வெண் ணீறா் முழுமெய்யா் முனிவா் யோகர்
சித்திகை வந்தோ ரூழாற் சித்தியெட் டையுமுற் றுளுந்
தந்தமுன் னிலைதி றம்பாத் தகவுசால் சிவ முத்தா்
பத்திசெய் முதியோ ரீட்டம் பலபடக் குழுமி யார்ந்த. [௫௧]

மூவகைப் பசுக்கட் காப்ப மூவகை வடிவு கொள்ளுந்
தேவதே வமரும் கோயிற் றிருமெழுக் கிடுவோர் தூர்ப்போர்
பூவின்மா லைகள்ச மைப்போர் காவணம் புதுக்கு வோர் நாற்
பாவலோ ராதி மெய்நாத் தொண்டர்பற் பலர்மி டைந்தார். [௫௨]

ஈசனார் திருத்தா ளுள மிதயவா லயத்த மைத்துப்
பூசனை புரிகிற் போமைம் புலக்குறும் பெறிந்து பொய்தீர்
நேசமீ சன்பால் வைத்து நிகழ்மறைச் செபதி யான
மூசிய மனத்துத் தொண்டர் முறைமுறை மருவினாரால். [௫௩]

அந்தண ரனையர் நாய்க ரரியவே ளாளர் மற்றோர்
தந்தமா சாரத் தில்லக் கிழத்தியர் மகார்தம் மோடும்
வந்துழுவந் தனைசெய் தியாண்டும வதிந்தனர் துனைதோ றந்தி
யுந்துகஞ் சனைபாட் டாலைந் தொலிசெய்வோர் தொகையு மார்ந்த [௫௪]

---

* எட்டங்கநானிலம்படியவிறைஞ்சல், தலை, மோவாய், செவியிரண்டு, கையிரண்டு, காலிரண்டு, இவ் எட்டு அவயங்களும் பூமியிற்படும்படி நமஸ்கரித்தல்.

* நாற்பாவலோர், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், எனப்படும் ஸ்தோத்திரக் கவிவல்லோர்.

மழைமதம் பொழிதடக்கை மாமுகப் பெருமான் கோயி
லெழிலுக் கழகு செய்தாங் காம்பைபைங் கமுகு கன்னல்
குழைமலர்த் தொடைகு யின்றா கோதில்பல் தீபந் தூபந்
தழைதர விட்டார் கோலஞ் சாந்தஞ்சுண் ணத்த மைத்தார். [௫௫]

மண்டல பூசைக் கின்னும் வேண்டுவ வமைப டச்சோத்
தெண்டகு சுமுக மூர்த்திக் கியற்றபி டேக வர்க்கந்
தண்டளிர் புரைபட் டாடை யாதிய சாத்து வர்க்கம்
வெண்டா ளங்கோ மேத வடமுதல் வேய்பூண் வர்க்கம். [௫௬]

தூத்தளா வனங்கந் தூர்வைத் தொடைமுதன் மிலையும் வாக்கம்
பாத்தடு ததிகு ளம்பான் முதல்விராம பதத்தின் வாக்க
மாததில புஞ்சங் கஞ்ச மாதிபண் ணியத்து வர்க்கந்
தேத்துளி கதலி மாவா சினிமுதற் கனியின் வர்க்கம். [௫௭]

ஏனவு மமைத்துக் கும்பத் தாபன மியற்று வித்துந்
நூதனுந் * தயிலக் காப்புத் தொடங்கியா ரக்கு ழம்பீ
றனமட் டித்துக் கும்ப மாட்டியொற் றுடை சாத்தி
வானநீ றாதி யாவும் வனைவித்து நைவே தித்து [௫௮]

தூபதீ பமும்வி ளக்கிச் § சோடச முகம னாற்றித்
‡ காபதர் மறையுஞ் $ சைவா சாரியர் முறையும பண்ணே
டேபயின் முறைது திப்ப வியமுழங் கறைக திப்ப
§ மாபரன் புராண மோது மாபொழுக் கியல்வி திப்ப. [௫௯]

---

*தயிலக்காப்புதொடங்கியாரக்குழம்பீறு[௧]தயிலக்காப்பு[௨]மாககாப்பு(௩)நெல்லிக்காப்பு[௪]மஞ்சட்காப்பு(௫)பஞ்சகவ்வியம்(௬)ரசபஞ்சாமிர்தம் [௭]பலபஞ்சாமிர்தம்[௮]பால்(௯)தயிர்(௰)நெய்[௰௧]தேன்[௰௨]கருப்பஞ்சாறு[௰௩]எலுமிச்சை, நாரத்தை,தமரத்தை,குளஞ்சி,மாதுளை,இவ்வைந்தின்பழச்சாறாகியபலோதகம்[௰௪]இளநீர்(௰௫) அன்னம்[௰௬]சகஸ்திரத்தாரை[௰௭]சங்கம்(௰௮)கொண்டாமிருகக்கொம்பு[௰௯]விபூதி[௨௰]வில்வக்குழம்பு(௨௰௧)சந்தனம்ஆம்,நெய்அபிடேகத்துக்குப்பின்இளவேன்னீர்அபிடேகஞ்செய்தலும், ஓர் முறையாம், ரசபஞ்சாமிர்தம்என்பது,பால்,தயிர்,நெய்,தேனு,சாக்கரை இவ்வைந்தும் விதிப்படி கூட்டியதாம். பலபஞ்சாமிர்தம்,என்பது, ரசபஞ்சாமிர்தத்துடனவாழைப்பழம் மாம்பழம்,பலாப்பழம்,இம்மூன்றுங்கூடச் சேர்ப்பதாம்.

§ "சோடசமுகமன்" ஆவன — ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புட்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், ஆராத்திரிகை, ஜெபசமர்ப்பணை, என்னப்படும் பதினாறுவகை உபசாரங்களாம். இவற்றுள் ஆராத்திரிகையின் அங்கங்கள்,

இரததீபம், நாகதீபம், இடபதீபம், அன்னதீபம், புருடாமிருகதீபம், சிங்கதீபம், கூர்மதீபம், நவமுகதீபம், சத்தமுகதீபம், பஞ்சமுகதீபம், திரிமுகதீபம், ஏகமுகதீபம், கும்பதீபம், பருவததீபம், நட்சத்திரதீபம், கர்ப்பூரதீபம், ஆக இப்பதினாறு வகை ஆராதனைத்துடன், குடை, சுருட்டி, கண்ணாடி, சாமரம், விசிறியாகிய பஞ்சோபசாரங்களுஞ் சேர்த்து இருபத்தொரு வகையாம்.

‡"தாபதர்மறையும்". கோத்திர சூத்திரங்களிற்றவறாது ஷட்கருமங்களில் வழுவாதொழுகுஞ் சிரத்தையாளராகிய அந்தணர்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என்னும் நான்கு வேதங்களையும், சந்தஸ்முறைமை தெரிந்து குழுமிப்பாராயணைத்தாற்றுவித்தல்.

§ "சைவாசாரியர் முறைமையும் பண்ணோடேபயின்முறை" வைதிக சைவசமைய ஆசாரியர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரால் அருளிச்செய்து மூன்று திருமுறையாகவும். திருநாவுக்கரசுநாயனாரால் அருளிச்செய்து மூன்று திருமுறையாகவும், சுந்தரமூர்த்தி நாயனாரால் அருளிச்செய்து ஒரு திருமுறையாகவும், திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பட்டிருக்கின்ற எழுதிருமுறைகளாகிய தேவாரமென்னுந்தமிழ் மறைப்பதிகங்களையும், புறநீர்மை, காந்தாரம், பியந்தைக்காந்தாரம், கௌசிகம், இந்தளம், தக்கேசி, சாதாரி, நட்டபாடை, நட்டராகம், பழம்பஞ்சுரம் காந்தாரபஞ்சமம், பஞ்சமம், என்னும், பகற்பண் (ம௨) தக்கராகம், பழந்தக்கராகம், சீகாமரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி, குறிஞ்சி, என்னும் இராப்பண் [௯] செவ்வழி, செந்துருத்தி, திருத்தாண்டகம், என்னும்பொதுப்பண் (௩) இவற்றால் அவ்வக் காலங்களின் முறைப்படிக்கும், மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச்செய்து எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கின்ற "திருவாசகம்" திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் நாயன் மார் ஒன்பதின் மரால் அருளிச்செய்து ஒன்பதாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கின்ற "திருவிசைப்பா" "திருப்பல்லாண்டு" சேக்கிழார் நாயனாரால் அருளிச்செய்து பன்னிரண்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கின்ற பெரிய புராணம், அல்லது மற்றைய சிவபுராணங்கள், இவற்றையும், அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த திருப்புகழையும் அவ்வப்பண்களால் அமையவும் மூர்த்த சன்னிதான முறைநோக்கி ஓதுதலாம்.

§ "மாபரன் புராண மோது மரபொழுகியல்" என்பது பரமசரித்திரமென்னும், புராண படனம் பண்ணுவிக்குங்காலை திருக்கோயில், மடம், சபைக்கண் முதலியவற்றில் புராணசாலை வகுத்து அணிசெய்வித்து சுதினத்தில் உத்தம சதுர்வருணத்து தித்தோராய், அங்கஹீனம், தீயொழுக்க மில்லோராய் இலக்கிய, இலக்கண, சிவாகமத்தேர்ச்சி, சிவபூசை பஸ்மருத்திராக்ஷதாரணம் நீங்காத சிரத்தை யாளராய் உள்ளோரைப் பௌராணிகராக வரித்து ஆசாரத்துடன் சுத்த பீடத்தில் புராணத்தை வைத்து அருக்கிய நைவேத்திய தூபதீபமுதலிய வற்றாற் பூசித்துக் கீழ்த்திசை நோக்கி ஆசனத்திருந்து அவருக்கு அடுத்த தாமுள்ள பேர்களைக்கொண்டு மூலம் வாசிப்பித்து அவ்விராகத்திலே அவரும் அருத்தஞ்சொல்லும்படி வேண்டிக்கொண்டு, ஆசனத்திலிருந்தும்

நாரணன் முதற்றே வானோர் கணுகிவான் மலர்க ளேவ
வாரண முகத்தோ மென்ன வாய்மனு வகத்தோ வன்பர்
சீரண வுளத்தோ புத்தி சித்திமார் வளத்தோ யாண்டும்
பூரண னெனத்தோய் வுற்ற புண்ணிய னுவப்பச் செய்வார். [சுய]

நத்துசீர் வசந்தச் சாறு நடத்துமண் டலபூ சைக்கப்
§ பத்தருக் கருள்வெள் ளத்தாற் பாலிப்பான் பாங்கர் தற்சூழ்
புத்தெழிற் பொருனை நேர்த்தொண் பூதியங் கம்போர்ப் பாரஞ்
சுத்தநீ ரனம ருந்தந் தொடைசெய்பல் பொருள்சொல் லின்ன. [சுக]

காலை நீட்டியும், உடம்பு போர்த்தும், தாம்பூலம் தரித்தும், படுத்தும், துயின்றும், இடையே பிரிந்தும், நிந்தித்தும், பிறிதொன்று வசனித்தும், இருப்பவரை அப்புறப்படுத்திச் சபாரஞ்சிதப்பட உண்மைப்பொருள் உரைத்தலை, நல்லொழுக்கங்களைத் தெரிதலிலும் நித்தியாநித்தியங்களைப் பகுத்தறிதலிலும் விருப்பமுள்ள அனைவருங் கேட்டுணர்ந்துய்யும்படி செய்வித்தலாம்.

§ பத்தருக் கருள்வெள்ளத்தாற் பாலிப்பான் பாங்கர் தற்சூழ். புத்தெழிற் பொருனை நேர்த்தொண் பூதியங்கம் போர்ப்பாரஞ், சுத்தநீ ரனமருந்தந் தொடைசெய்பல் பொருள்சொல்லின்ன, என்பவற்றில் பொருனைநதி சூழ எழுந்தருளியிருக்கும் கணபதி மூர்த்தியின்மேற் செல்லுங்கால் (க) பூதியங்கம் போர்ப்பு (உ) ஆரம் (௩) சுத்தநீர் [ச] அன்னம் [ரு] அருந்தம் [சு] தொடை [எ] செய்பல்பொருள் [அ] சொல் என எண்வகையாகப் பகுத்து இவற்றுள் பூதியங்கம் போர்ப்ப என்பது, பரம சந்நிதானத்தில் மஹாசௌரியம் என்னும் திருவெண்ணீற்றுப் பிரசாதத்தைக் கையேற்றவுடன், என்றும் பிறவிக்கு ஹேதுவான ஆணவாதிமல நோயை நீற்றுந்திவ்விய பஸ்பமாகப் பரிசிக்கும்பொருட்டுத் தமக்கு கற்ப, உபகற்ப, அநுகற்ப, முக்கிய, அமுக்கிய, சாமானியம் என்னும் விபூதிகளை தருதற்குரிய வித்தாக விசுவாசித்து சென்னிமுதலிய விதித்த அவயவங்களிற் றரித்துக்கொள்ளச்செய்தல். ஆரம் என்பது, அபிடேகித்த சந்தனக்குளம்புப்பிரசாதத்தைக் கையேற்றவுடன் என்றும் சரீரம், உஷ்ணதூர்க்கந்தப்படவொட்டாத திரவியமாகத் திமிர்ந்துகொள்ளும் பொருட்டுத் தமக்குச் சீதசுகந்த வஸ்துக்களைத் தருதற்குரிய வித்தாகப்பாவித்துத் திலகமிட்டுப் பூசிக்கொள்ளச்செய்தல். சுத்தநீர் என்பது, அபிடேகித்த தீர்த்தப் பிரசாதத்தைக் கையேற்ற வுடன், என்றும் அகக்கரணங்களையும் புறக்கரணங்களையும் பரிசுத்தப்படுத்தும் அபிஷேகமாகக்கொள்ளும்பொருட்டுத் தமக்குப் புனிதரசவர்க்கங்களைத் தருதற்குரிய வித்தாக அங்கீகரித்து ஆசமிக்கும் புரோக்ஷித்துங் கொள்ளச்செய்தல். அன்னம் என்பது நிவேதிக்க அன்னப்பிரசாதங்களைக் கையேற்றவுடன், என்றும் பசிப்பிணியை மாற்றும் மருந்தாகப் புசிக்கும்பொருட்டுத் தமக்கு அறுவகைச் சுவையுள்ள நால்வகை யுணவுகளை தருதற்குரிய வித்தாக எண்ணிப் புசித்துக்கொள்ளச்செய்தல். அருந்து அம் என்பது, சருக்கரையும் எலுமிச்சங்கனிரசமுஞ் சுத்தோதகத்துடன் கலந்துநிவேதித்த பானகம், என்னும் பிரசாதத்தைக் கையேற்றவுடன், என்றும் தாகப்பிணியைத் தீர்க்கும் மருந்தாகப் பானஞ்செய்யும்பொருட்டுத் தமக்கு தவனநீரைத் தருதற்குரிய வித்தாக நினைத்து அருந்திக்

உவப்புற வுதவி யேனை யுலகவாழ் வுள்ள நல்கிப்
பவக்கடல் கடந்து மேலைப் பாகதிக் கரைசேர்ந் துய்யத்
† தவப்புனை விருப்பர்க்கென்றுந் தண்டைக்கா லினையீய் கின்றான்
சிவப்பெரு மதலை யென்றான் றேவதே வென்ன நின்றான் [௬௨]

கொள்ளச்செய்தல். தொடையென்பது, சாத்தியமாலையும், அருச்சித்த வில்வ முதலியதுமாகிய நிருமாலியப்பிரசாதத்தைக் கையேற்ற வுடன், என்றும் சரீரத்தை அழகியதாக்கும்பொருட்டுத் தமக்கு வஸ்திராபரண மலர்மாலைவருக்கங்களை தருதற்குரிய வித்தாகக் கருதிப்புனைந்துகொள்ளச் செய்தல். செய்பல் பொருள் என்பது, மற்றனைவேத்தியமான அபூபமுதலிய,பலகாரவருக்கம், நாளிகேரகதலிபலம் முதலிய கனிவர்க்கம், வெள்ளிலைச்சுருள் முதலிய திற்றிவர்க்கமாகிய நானாவிதப் பிரசாதங்களையுங் கையேற்றவுடன் என்றும் சரீர சுகபோகானுபவத்திற்கு நுகரும் பொருட்டுத் தமக்குத்தின்பண்டங்களைத்தருதற்குரிய வித்தாகச்சிந்தித்து நுகர்ந்து கொள்ளச்செய்தல். சொல் என்பது, பாராயணபடனாதிகளால் பயின்றஸ்தோத்திரங்களைச் செவியேற்றவுடன் என்றும் வருண, ஆச்சிரம, சமைய, ஆசார, பத்தியாதிகளை உணரும்பொருட்டுத் தமக்குக் கல்வி கேள்விகளைத் தருதற்குரிய வித்தாக நம்பி இறைவனை நோக்கி வேண்டுவனவற்றைப் பிரார்த்தித்து, பிராயச்சித்த, உபசாரவிண்ணப்பம் பண்ணிக்கொள்ளச் செய்தல் எனப் பொருள்படுதல்காண்க. கணபதி மூர்த்தியைச் சூழ்ந்து செல்லும் பொருனையாற்றின் மேற்செல்லுங்கால் (௧) பூதியங்கம்போர்ப்பு (௨) ஆரம் (௩) சுத்தநீர் (௪) அன்னமருந்து (௫) அந்தொடை (௬) செய் (௭) பல்பொருள் (௮) சொல் என எண்வகையாகப்பகுத்து இவற்றுள் பூதியங்கம்போர்ப்பு என்பது, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், என்னும் ஐந்திணைகளுள் பூராமுள்ள விடங்களனைத்தினும் இடையறாது நீரொழுக்கால் நிறைவித்தல். ஆரம் என்பது, முத்துப்பிறப்பிடம் பலவற்றுள், மேகம் யானைக்கொம்பு, சிப்பி, சங்கம், முதலை, மீன்களாதியொன்றுட முத்துத்திரளை இருபாலிலும் அலைக்கரங்களால் வீசச்செய்தல். சுத்தநீர் என்பது, உமாபரமேசுரியின் திருக்கரத்தினின்றும் பிறந்து கங்காநதியின் பிரிவான புண்ணிய தீர்த்தமாய்ச் சிரத்தையுடன் வந்து மூழ்குவோர்களுக்குப் பயன்றருவதுமன்றி, சரீரம், இடம், வஸ்துக்களைச்சுத்தி செய்வித்தல். அன்னமருந்து என்பது, வைத்தியசாஸ்திரமுறைப்படி அந்நீரைச்சுத்திசெய்து நீற்றினால் தாம்பிரபஸ்பமென்னு மருந்தாய்ப்பிணி நீக்குவித்தல். அந்தொடை என்பது, திணைதோறும் வியாபித்திருப்பினும் மருதத்திணையையே சீவளம்பொருந்திய ஹாரகத்ததாகக்கி அழகு செய்வித்தல். செய்என்பது, பரல் உவர்முதலிய வெறு நிலங்களையும், தானியாதி விளைவிக்கும் வயல் நிலமாகத்திருத்துவித்தல். பல்பொருள் என்பது, பொதுவில் யாவர்க்கும் யாவைக்கும் உதவிப்பொருள்களாவதன்றி உத்தம வருணாச்சிரமத்தவர்க்கு புனிதஉபகரணமாகும் கந்தமூலபதாதிகள் தேவபூசை, யாகமுதலிய கிரிகைகட்குவேண்டும், சுகந்த புஷ்பபத்திரகோடி திரணசமித்து ஓஷதிமுதலியவற்றைவளர்ப்பித்தல். சொல் என்பது பரமநைவேத்தியத்துக்கும், மாந்தருணவுகளுக்குஞ் சிரேட்டபதார்த்தமாகிய சம்பாமுதலிய பலவகை நெற்குவியல்களை உண்டாக்குவித்தல், எனப்பொருள் படுதல்காண்க.

† தவப்புனை விருப்பார்க்கென்றுந் தண்டைக்காலினையீய்கின்றான், என்பதில்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

இன்னபான் மையதாக் கணபதி மூர்த்தி யிணையடித் துணைமுடிக் கொண்டு, முன்னையோ ரருளும விநாயக புராண முழுவதுஞ் சங்கிர கப்போர் பன்னியாத் தருமைச் சிந்துபூந் துறையிற் பகர்சித்தி யைங்கரன் கோயி றன்னினன் கரங்கேற் றினன்சிறி யேன்சான் றவர்முனோ தினர்க்கெய்துந் திருவே. [சுா ங]

வாழ்கசெல் வேதம் வைதிக சைவ மாமக மந்தணர் வானம்
வாழ்கசெங் கோன்மன் னவரொடு கோவும் வண்பயிர் வர்க்கமெய் யன்பர்
வாழ்கநல் லறமுன் னானாற் பொருளு மல்லலம் புவியுமிக் கோங்க
வாழ்கவிந் நூல்கேட் பவர்பயில் வோர்கண் மற்றைய யாவையு மகிழ்ந்தே
[சுா ச]

வசந்தோத்சவோ பாசனைப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் யருக்குத் திருவிருத்தம் சுாஉயரு

ஆக காண்டம் இரண்டுக்குத் திருவிருத்தம் ஜுாசுய

திருச்சிற்றம்பலம்.

மஹாகணபதிதுணை

ஜலக்கடல்கடக்க மரக்கலம்பற்றும் மீகாமர்க்குக்களையும், திசைக்காற்றும் ஆகியஇரண்டும் அவசியம் வேண்டுதல்போல, பவக்கடல்கடக்கத் தவப்புணைபற்றும் அன்பர்க்கு வேதச்சிலம்பணிந்த ஞானபாத கிரியாபாத சொரூபமாகிய இரண்டுதிருவடிகளும் அவசியம்வேண்டுதலின் அவற்றை அருள்செய்கின்றான் எனப்பொருள்பட்டு நிற்றல் காண்க.

விநாயகபுராணத்தின் விரிந்தயாப்பைச்சுருக்கியாப்பாக அமைத்து "விநாயகபுராணசங்கிரகம்" எனப்பெயரிட்டிருப்பதால் அக்கதாசாரத்தின் வாயில்பற்றி அர்த்தசாரமௌளிது புலப்படுமெனக்கருதிப் படலசாரசங்கிரகத்தையும இங்ஙனங் காட்டவேண்டியதாயிற்று.

[அஃதுவருமாறு]

உபாசனகாண்டத்தில்

வியாசருபாசனைப்படல சாரசங்கிரகம்

வியாசமுனிவரென்பவர் ஆதியான எகவேதத்தை துவாபரயுகத்தில் நான்கு பாகப்படுத்தியருளியவர், அவர் அவ்வாறே விரிவினைபுராணங்களையும்பதினெண்டொகைப்படுத்தத் தொடங்கியகாலை அதற்குவேண்டும் அறிவுடைமைக்கு விக்கினமுண்டாகநிவிர்த்தித்துக்கொள்ள வழியுமறியாதவராய்ப் பிரமதேவர் பாற்சென்றறிவிக்க அவர் ஞானநோக்கால் இவ்விக்கினம் விநாயக மூர்த்தியை முன்வழுத்தாக் குறையால் சம்பூவித்ததென்றுணர்ந்து அவவிக்கினத்தை நிவிர்த்திக்கும் வழியையும் விநாயகமூர்த்தி மான்மியங்களையும் உணர்த்தக்கேட்டு அவ்வாறே வழிபாடாற்றி விநாயகமூர்த்தியின் அருட்பிரசாதத்தால் விக்கின நிவிர்த்திபெற்றுப் பதினெண் வகைப்பட முதன்மைப்புராணங்களையும் உபபுராணங்களையும் இயற்றப்பெற்றதை விரித்துக் கூறியதாம்.

உ. சோமகாந்தனுபாசனைப்படல சாரசங்கிரகம்.

சோமகாந்தன் என்பவன் சௌராட்டிரதேயத்து அரசன் இவன் ராஜசம்பத்தினனாயிருக்குங் காலை, கண்டோர் அருவருக்கத்தக்க குட்டநோயணுகியதால அரசியல் முதலியவற்றில் வெறுப்புற்று இராச்சிய பாரத்தை எமகண்டனென்னுந் தன் மகன் மேலிறக்கி பிரிவாற்றாத தன் மனைவி அமைச்சர் இருவர்சகிதம் வனம்புகுந்து பிருகு மாமுனிவனைக் காணப்பெற்றுக் குறையிரந்தான் அம்முனிவர் ஞானநோக்கால் அவன் பூர்வஜென்ம இயல்பும், வியாதிவரலாறும் அறிந்து அரசனை நோக்கி நீ முற்பவத்து காமந்தன என்னும் ஓர் வணிகன் கொலைமுதலிய பாவஞ்செய்தற் கஞ்சாதவன் ஆயினும் அந்தத்தில் ஓர் கணேசர் ஆலயம் ஜீர்ணோத்தாரணஞ்செய்து உற்சவாதிகள் முடிக்கவும் பெற்றாய், வாழ்நாள் கழிந்தபின் இயமன்முன விடுக்கப்பட அவன் உன் நன்மைதீமைகளை ஆராய்ந்து பலனளித்தற்கு உன்னை வினவியதில் நீயோணையொப்ப நல்வினைப்பயன் முன்னும தீவினைப்பயன் பின்னும் அளிக்கப்படவேண்டினாய், அவ்வாறனுபவிக்க இச்சென்மத்தில் முன் இராஜசம்பத்தினனும் பின் குட்டநோயாளியுமாயினாய், என்று உணர்த்தினர். கேட்ட அரசன் அதில் ஐயமுற்ற நிமித்தம் அந்நோய் முன்னினும் கொடிய வருத்தஞ்செய்யத் தலைப்பட்டது, அது பொறாஅரசன் பின்பு மிகவுங் குறையிரப்ப முனிவர் இரங்கிச்செய்ததற்கால சிகிற்சையால் பாவசேஷமுங்கொண்ட ஐயமும் நீங்கப்பெற்றான். உடனே அம்முனிவர் அரசனுக்குக் கணேசமூர்த்தியின் மான்மியத்தை முற்றுணர்த்த அதை விசுவாசித்து ஒருவருஷ பாராயணஞ்செய்த புண்ணியத்தால் அவனுக்கு ஜீவன்முக்த்துயக்குலம்வாரகணேசர் அருளால்

தேவ்விமானமெ போந்து அழைக்கத்தானும் மற்றைய மூவரும் ஆரோகணித்து அந்தர நெறியே செல்லுகையில் தன் தேயத்திற்றங்கிக் கணேச உபாசனையற சிறந்து அரசாட்சி செய்ததன் புதல்வனையும் நகரத்தவரையும் பரிசுத்தராக்கி விமானத்தேற்றி கணேசலோகஞ்சேர்ந்து தான் சாரூபபதவியடைய மற்றயைர் சாமீப்பதவியுற்றனர் என்பதை விரித்துக் கூறியதாம்

௩ மூவருபாசனைப்படல சாரசங்கிரகம்.

திரிமூர்த்திகளென்னும் பிரமவிஷ்ணுருத்திரர் ஆகிய மூவரும் ஓர் கற்பத்தில் தங்களைத் தோன்றச்செய்த வக்கிரதுண்டாவதார கணேசமூர்த்தியை நோக்கி நோன்பியற்ற அவர் முறையே சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழில்களையும் அவர்களுக்கு அநுக்கிரகித்ததும், சிருட்டிப் பினியலறியாத பிரமதேவருக்கு அதையறிவிக்க விசுவரூபங்கொண்டு தமது திருவயிற்றுக்குள் சமஸ்த ஜெகரூபமுங்காட்டியதும், தமமை முன்னிட்டு சிருட்டிசெய்யாமையால் விக்கினப்பட்ட பிரமதேவருக்கு அதை நீக்கி சித்திபுத்தியென்னும் தமது சத்திகளால் விளங்கச்செய்து அவன்பால் அவர்களை புத்திரிபாவனையாக வளரச்செய்ததும், விரித்துக்கூறியதாம்.

௪ திருமணப்படல சாரசங்கிரகம்

கணேசமூர்த்தி முற்படலத்திற் கண்டபடி பிரமதேவன் பால்மகளிராய் வளர்ந்த தமது ஞானம், கிரிகை, யாகிய சித்திபுத்தி என்னும் சத்திமார்களையும் அவனால் அளிக்கப்பெற்று உயிர் வருக்கங்களுக்கு தனுகரணபுவனபோகங்களை யூட்டுமாறு விளக்கும் பாவனையாகத் திருமணஞ்செய்தருளியதை விரித்துக்கூறியதாம்.

௫ விஷ்ணூபாசனைப்படலசாரசங்கிரகம்

விஷ்ணுபகவான் தங்காதுற்றோன்றிய, மது, கயிடவென்னு மிரண்டு அசுரரை வெல்ல விநாயகமூர்த்தியினுடைய சடாக்ஷர மந்திரத்தைப் பரமசிவனால் உபதேசிக்கப்பெற்றுத் தவமியற்றி வரம்பெற்று அவர்களை வென்றதும், அவர் பரசுராமனவதாரஞ்செய்தகாலத்தும் விநாயகமூர்த்தியைப் பூசித்து வரம் வாங்கி பகைமன்னர் குலங்களை மாய்த்து அவர்கள் பூமியை அந்தணர்களுக்கு வழங்கியதும், விரித்துக் கூறியதாம்.

௬ வீமனுபாசனைப்படலசாரசங்கிரகம்.

வீமனென்பவன் விதற்பதேயத்து அரசன் அவன் புத்திரப்பேறில்லாமையால் வனம்புகுந்து விசுவாமித்திரரையடுத்து முன் கணேசமூர்த்திக் கன்புசெய்துவந்ததன் மூதாதையாகிய தக்க மகாராஜன் வரலாற்றையும் அவன் முற்பிறப்பில் கணேசமூர்த்தியைப் பூசித்த வல்லாளனென்னும் ஒரு புத்திரனைப் பெற்றிருந்ததால் அவனுக்குச்சம்பவித்தவற்றையும் அவரால் அறிந்து கணேசமூர்த்தியை உபாசித்து உருக்குமாங்கதனெனும் ஒரு சற்புத்திரனைப்பெற்று வாழ்ந்ததை விரித்துக் கூறியதாம்.

௭ உருக்குமாங்கதனுபாசனைப்படல சாரசங்கிரகம்.

உருக்குமாங்கதன் என்பவன் முற்கூறிய வீமராசன் மகனாகிய விதற்பதேயத்து அரசன் இவனது சவுந்தரியத்தைக்கண்ட கவிமுனிவரது மனைவி முகுந்தை என்ப

வன் மயங்கித் தன்னைப் புணர விரும்பியதை மறுத்தலின் அவளது சாபத்தால் தொழு நோயுற்று நாரதமுனிவரைக்காணப்பெற்று முறையிட அவர் அவ்வியாதியின் வரலாறு தெரிந்து அவ்வரசனை நோக்கி, கௌதமமுனிவரது பத்தினியாகிய அகலிகையைச் சோரமாய்த் தழுவிய இந்திரனுக்குப்பதிவிரதையின் ஒரு யோனியை இச்சித்த பாவத்தால் உடல் முற்றும் பலயோனியாகும்படி அம்முனிவரிட்ட சாபநிமித்தம் அவன் அவ்வாறாகி வெள்கி மறைந்திருத்தல்கண்டு தேவர்கள் அம்முனிவரைக் குறையிரந்துதங்கள் அரசனுக்கு அவ்யோனிமுற்றும் கண்களாம்படி மாற்றுவித்ததின்பேரில் அவன் புனிதனும் கதம்பமாவனத்திற்கு வந்து அங்குள்ள கணேசகுண்டத்தின் மூழ்கிச் சிந்தாமணிப்பெயர் விநாயகமூர்த்தியை அங்குப் பிரதிட்டை செய்து பூசித்து வரம்பெற்றிருக்கின்றானாதலால் நீயும் அவ்விடத்திற்குசமெனறு அக கணேசகுண்டத்தில் மூழ்கி அவ்விநாயக மூர்த்தியைத் தெரிசிக்கின், அந்நோய் நீங்கப்பெறுவாயென்று உபதேசித்தபடி அவ்வாறியற்றித்தன் பெற்றோர் முதலியரோடு முத்தியடைந்தனன் என்பதை விரித்துக்கூறியதாம்.

அ கிருச்சமதனுபாசனைப்படல சாரசங்கிரகம்

கிருச்சமதன் என்பவன் முற்கூறிய முகுந்தை என்பவளை உருக்குமாங்கதன் வடிவங்கொண்டு சோரத்தாற்றழுவிய இந்திரனுக்கு அவள் பால் உற்பவித்துக் கவிமுனிவர் புத்திரனென்று பெயர்கொண்டிருந்தவனும், அவன் வசிட்டர்முதலிய முனிவர்களோடு கலைவாதஞ்செய்தகாலத்தில் தன்னை முனிபுதல்வனன்றென்று அவர்களுரைத்த இழிவுவார்த்தையைக் கேள்வியுற்று தாயால் நிச்சயந்தெரிந்து அவளுக்குச்சாபங்கொடுத்துக் கணேசனை உள்ளன்போடு பூசித்துச் சாபாநுக்கிரகஞ்செய்யவும் அவிமகத்துக்கு உபாத்தியாகவும் நல்லவரங்களைப் பெற்றதும் பின்பு அவன் நிஷ்டையாளனாய் வாழ்ந்திருக்கையில் திரிபுரனெனப்படுகிற பலியென்னும் புதல்வனை அந்நிட்டையிற் றோன்றச்செய்ததும் விரித்துக் கூறியதாம்.

கூ விமலநுபாசனைப்படல சாரசங்கிரகம்.

சிவபிரான்முற்கூறிய கிருச்சமத முனிவரது புத்திரனாய்க் கணேச மூர்த்தியை ஆராதித்து அவர் வரப்பிரசாதத்தால் பொன், வெள்ளி, இரும்பு என்னும் மும்மதில்களைப்பெற்றுத் தேவர்களுக்கு இடுக்கணாற்றிய பலியென்னுந் திரிபுரனை அப்புரங்களோடு தீவாய்ப்படுத்தும்பொருட்டு விநாயகக்கடவுளிடத்து வரம்பெற்றதும், அதற்குக்கைம்மாறாக அவ்விமலர் யாவரும் உம்மைவணங்கி யியற்றாத கன்மம் பலவித விக்கினங்கட்கு உட்படுகவென விநாயக மூர்த்திக்கு வரங்கொடுத்ததும் விரித்துக் கூறியதாம்.

ய சதுர்த்திவிரதப்படல சாரசங்கிரகம்.

உமாதேவியார் தன்னைச்சிவபிரான்கங்கைக்குமுன் மணஞ்செய்யும்பொருட்டு இமயமலை அரசனாகியதன் பிதாவால்கணபதிக்குரிய சதுர்த்தி விரதமகிமையைக் கேள்வியுற்று சிங்கமதிசுக்கிலபக்கம் சதுர்த்தி த்திதிமுதல் கன்னிமதி சுக்கிலபக்கம் சதுர்த்தித்திதிவரை ஊண்துயிலொழித்து இவ்விரதம் இயற்றிக்கணேசமூர்த்தி வரப்பிரசாதத்தால் அவ்வாறு மணக்கப்பெற்றதும்,இவ்விரதத்தை சந்திராங்கதன்முதலியோர் நோற்றுக்காமித்தவரம்பெற்றதும் விரித்துக்கூறியதாம்.

௰௧ சங்கடசதுர்த்தி விரதப்படல சாரசங்கிரகம்.

விநாயகமூர்த்திக்கு உவந்தசங்கட சதுர்த்திவிரதமென்பது மாசிமாதம் கிருஷ்ணபக்கத்துச் சதுர்த்தித்திதியும் மங்கலவாரமும் சந்திரோதயமுமொத்தகாலத்தில் அறுகு,வன்னி,மந்தாரை,யென்னும் இம்மூவகை பத்திரபுஷ்பங்களால் கணபதிமூர்த்தியை அருச்சித்து உபாசிக்கப்படுவதாம் இவ்விரதத்துக்கு மங்கலவாரமுஞ்சந்திரோதயமுங்கூடிய காலமும் அறுகு, வன்னி, மந்தாரஅருச்சனையும் விசேடமானதின் காரணத்தையும் அநுட்டித்தோரது பேற்றையும் பிரமதேவரால் சொல்லப்பட்ட பிதிர்தேவன் சுவடியிலெழுதியவகை அவன் குமாரனாகிய கிருதவீரியன் என்னும் அரசன்பெற்று அதிற்கண்டவிதிப்படி அநுட்டித்து கார்த்தவீரியனென்று காலும் கையு மற்ற ஒருகுரூப புத்திரனைபெற்றதும் அப்புதல்வன் தவமியற்றிக் கணேசர்அருளால் இரண்டுகாலும் ஆயிரங்கையும் பெற்றுக்குரூப நீங்கியதும் இவற்றையெல்லாம் ஒருகாலக்கப் புருசுண்டி மாமுனிவரைத்தெரிசித்து விமானமேறி அந்தரநெறியாகவரும் இந்திரன் மத்திமதேயத்துக்கு நேரே வருகையில் அத்தேயத்துக்குட்டநோயன் ஒருவன் கண்ணெதிர்ப்பட்டுத் தன் விமானங் கீழிறங்கினவுடன் தன்னைக்காண வந்த அத்தேசத்து அரசனாகிய சூரசேன மகாராஜனுக்குச் சொல்லி முடிந்த காலை அத்தேசத்தில் இவ்விரதம் அநுட்டித்தோர் புசித்துத் தெருவில் வீசிய சேடத்தைப்புசித்த ஒருபுலைச்சிக்கு தேவவிமானம் போந்தழைத்துச் செல்லும்போது அவள் கண்ணோக்கம் இவ்விந்திரனது விமானத்திற்படவே அவ்விமானமும் மேலேயெழுந்தது இதைக்கண்ணுற்ற அச்சூரசேன மகாராஜனும் இச்சங்கடசதுர்த்தி விரதம் இயற்றித் தன்னகரத்தோடு முத்தியடைந்ததும் விரித்துக் கூறியதாம்.

(௧௨) காசிபர்முதலியோ ருபாசனைப்படல சாரசங்கிரகம்.

காசிபர் என்னும் முனிவர் அதிதிமுதலிய அம்மனைவியர்பெற்ற தேவாதிசுராசுரங்கட்கெல்லாம் கணபதி திருமந்திரங்களில் எளிதிற்பயன்றரும் மந்திரோபதேசஞ்செய்ய அவற்றால் உபாசித்த சாதகர்களின்முன் கணபதிமூர்த்தி வெவ்வேறுருகொடு பிரசன்னமாகிவரமருளிய காலை அவருக்குசுமுகர்முதலிய பன்னிரண்டு திருநாமம் இடப்பட்டன என்பதும் அந்நாமங்களின்ஸ்துதி அம்மூர்த்தியை சகஸ்திரநாமங்களாற்றுதித் தற்கொப்பாகும் என்பதும் விரித்துக்கூறியதாம்.

இலீலாகாண்டத்தில்

[௧] வக்கிரதுண்டன் றிருவவதாரப்படல சாரசங்கிரகம்.

வக்கிரதுண்டமூர்த்தி திருவவுதாரத்தின் விபரம் முன் உபாசனா காண்டத்து மூவருபாசனைப்படலத்திற் காட்டியதேயாம்.

[௨] சிந்தாமணி விநாயகன் றிருவவதாரப்படல சாரசங்கிரகம்.

கபிலமுனிவரது மார்பணியான சிந்தாமணியை அபகரித்த தமிழ்நாட்டுவேந்தனாகிய கணனென்பவனைச் சங்கரிக்கும்பொருட்டு அம்முனிவரதுமனையில் விநாயகமூர்த்தி திருவவதாரஞ்செய்தருளி அவ்வாறே சங்கரித்துச் சிந்தாமணியை முனிவற்குநல்க அவர்பிரார்த்தனையால் அதைத்தாம்தரித்து சிந்தாமணிப்பெயரோடு சுமுகர், கபிலர் என்ற முத்திருநாமம்பெற்றதை விரித்துக்கூறியதாம்.

[௩] கஜானன விநாயகன் திருவவதாரப்படல சாரசங்கிரகம்.

பிரமதேவரது கொட்டாவியினின்றும் பத்துச்சிரத்தோடு தோன்றியவனை யொன்றும் கட்டித்தழுவப்பட்டயாரும் நீரும்வண்ணம் வரம்பெற்றவனுன சிந்தூரனென்போன் தன் வரப்பேற்றைச்சோதிக்கப் பிரமதேவரையே தழுவவந்தகாலையில் மகாவிஷ்ணு சூழ்ச்சியால் கயிலைபங்கிரிக்குப்போய் பரமசிவனைத்தழுவுதற்காக நெருங்கி விநாயகக்கடவுளாற்றடைப்பட்டு மீண்டு தேவர்முதலியோருக்கு இடுக்கண் செய்துவந்ததால் அவனைத்தெறும்பொருட்டு விநாயகக்கடவுள் உமாதேவியால் ஆவணிமாசம் சுக்கிலபக்கம் சதுர்த்தியில் சிரமில்லாத வடிவத்தராய் அவதரிக்க இறைவன் பூசித்த யானையின் சிரம் ஒன்றப்பெற்று கஜானனர் என்ற ஒரு நாமமும்பெற்று இறைவன்முதலியோர் செய்த விநாயகசதுர்த்திப்பூசை யேற்றதும், பின்பு விசுவரூபங்கொண்டு அச்சிந்தூரனை மாய்த்ததும் விரித்துக்கூறியதாம்.

விக்கினராஜ விநாயகன் திருவவதாரப்படல சாரசங்கிரகம்.

எமவதியென்னும் நகரத்து அரசனாகிய அபிநந்தனன் இயற்றியமகத்தையழிக்கும்பொருட்டு இந்திரன் காலரூபனென்னும் ஒரு கொடியவனை யனுப்ப அவன் அம்மகத்தையும் பின்னும் முனிவர்செய்யும் மகங்களையும் அழிக்கத் தலைப்பட்டான். அதுபொறாது, முனிவர் சூழ்ந்து விநாயகமூர்த்தியைத் துதிசெய்ய அவர், அவர்கள் முன்றோன்றி வரேணியன் என்பவன் மனைக்கண் அவதரித்து நுமது விக்கினங்களை மாற்றுவோமென்றருளி அவ்வாறு வரேணியனது மனைவி புட்பகை என்பவள், மகவுயிர்த்த காலத்து அம்மகவை மறைத்து தாம் யானைமுகம் முதலியவற்றோடு கூடிய மகவாய்க் காணப்பட்டார் அதுகண்டு பெற்றோர் வெருவி ஒரு மடுக்கரையில் விடுவிக்க அதைப் பராசர முனிவர் கண்டெடுத்து தம்மனைவி வற்சலையையிற் கொடுக்கப்பட்டு வளரும்போது முன் காந்தருவ அரசனொருவன் சவுபரியென்னும் ஒரு முனிவரால் சாபம்பெற்று பெருச்சாளியாகி உபத்திரவித்தல் கண்டு அதன் ஆண்மையையடக்கித் தமக்கு வாகனமாக்கிக்கொண்டதையும், முனிவர்க்கு காலரூபிசெய்யும் விக்கினத்தை மாற்றித் தம்மை உண்மையுடன் வழிபட்ட அவன் பெயர் தம்பெயர்க்குமுன் கூட்டி விக்கினராஜ விநாயகன் என்னும் ஒரு திருநாமங்கொண்டதையும் விரித்துக் கூறியதாம்.

௫ மயூரேசன்றிருவவதாரப்படல சாரசங்கிரகம்.

பிரமதேவர் ஒருகற்பத்தில் விஷ்ணுதேவரது உந்தியிலுதித்துச் சிவபெருமானிடம் வேதாகம புராணோபதேசம்பெற்றுச் சுவடிகளாக எழுதி அருச்சனை புரிந்து வருங்கால் கமலன் என்னும் ஓர் அசுரன் அருவத்தனாய் வந்து அச்சுவடிகளைக் கவர்ந்து செல்ல அதனால் உலகில் வேதநீதியற்றதை நோக்கிவருந்தி உபாசித்த பிரமதேவர்முன் விநாயகமூர்த்தி தோன்றி வேதாகமாதிகளின் உற்பத்தியையுணர்த்திப் பின்பு சுந்தராச்சிரமமென்னு மோர்வனத்தில் அநேகசிட்டர்கள் சூழமல்லாலரென்னும் பெயர்கொண்டு தோன்றி அங்குள்ளமுனிவர்களுக்கு வேதாகமாதிகளைப்போதித்ததும், இதனால் முன்போல் வேதவிதி தழைத்தோங்கியதைக்கண்டு பொறாமையுற்றுத்தம்முடன்போர்க்குவந்த கமலாசுரனைச் சங்கரிக்கும் பொருட்டு யாகமியற்றி அதில் உற்பவித்தமயிலில் தாம் ஆரோகணித்து மயூரேசன் என்னுந்திருநாமங்கொண்டு அவ்வசுரனை மாய்த்ததும் விரித்துக்கூறியதாம்.

பிந்தியமயூரேசன்றிருவவதாரப்படல சாரசங்கிரகம்.

மைதலமென்னுந் தேயத்து அரசனான சக்கரபாணி யென்பவனது குமாரன் சிந்து வென்பானுடைய யௌவன தசையை நோக்கிய சுக்கிராசாரியர் இவன் தேவர்களை வெல்லும் வீரனாவானென்ற உத்தேசத்தால் சிவபெருமானை நோக்கித் தவம்புரியத்தக்க மந்திரோபதேசஞ் செய்ய அவன் அவ்வாறியற்றி விநாயகக்கடவுளை யன்றி மற்றவர்களால் தனக்கு அழிவில்லை யென்பது முதலிய வரமேற்றும் தன் அரசியலைப் பெற்றும் கொடுங்கோன்மை செய்து தேவர்களைச் சிறை யிட்டமையால் அவர்கள் விநாயகக்கடவுளைப்பிரார்த்திக்க அம்மூர்த்தி பிரசன்னராய் நாம் உமாதேவி பாலகனாகி வந்து அச்சிந்துவை மாய்ப்பேமென வாக்கருளி அவ்வாறே திரிசந்தி என்னும வனத்திற் பரமனோடமர்ந்தருளிய உமாதேவிபால் வெண்ணிறத்தராய் ஆறுகரத்துடன் அவதரித்து அங்குள்ள முனிவர்கள் கணேசநாமத்தால் வழிபடப்பெற்று விளங்குகையில் சில நாளிருந்தங் கண்ட சிந்துராஜன் ஒற்றர் மூலமாய் முற்கூறிய அனைத்தும் அறிந்து இம்மகவு தன்னைக் கொல்லும் அதன்முன் தான் அதைக்கொல்லவேண்டுமென்ற துராலோசனையால் அநேகமாயைவல்ல அசுரர்களை ஏவ அவர்கள் பற்பல ரூபமெடுத்து வர அவர்களை யெல்லாம் வதைத்ததும், இடையில் காசிபமுனிவரது மனைவிகளில் வினதையின் புதல்வர்களாகிய சம்பாதி முதலிய மூவரை கத்துருவின் புதல்வர்களாகிய புயங்கர்கள் பாதாளத்தில் சிறையிட்டிருந்ததைக் கேட்டு, அவ்வினதை வயிற்றுதித்திருந்த முட்டையினின்றும் எழுந்தமயிலில் ஆரோகணித்து அப்புயங்கர்களை யடக்கி தமக்கு ஆபரணங்களாக்கியும்முற்கூறிய வினதைபுதல்வர் சிறையை நீக்கியும, மயூரேசனெனத் திருநாமம் பெற்றதும், அப்பால் தமமோடு ஆடல்செய்யும முனிவர் சிறாரை புலிவடிவத்துடன் வந்து வாய்ப்பெய்த அவுணனை வென்று அவனால மாண்டசிறுவர்களை யமனால் வருவித்ததும, பின்பு சேனைமுகத்துடன் ஏவப்பட்ட கனலாசுரனைக் கணேசமூர்த்தி மாய்த்ததைக்கேட்ட சிந்துமன் அவர் வசித்தருளிய திரிசந்தி வனத்தில் சூரியன் முதலியோர் பிரவேசியாவண்ணம் தடைசெய்ய அவர்களைத் தமது முக்கண்களினின்றும் உதிப்பித்ததும், அப்பால இறைவன் ஆக்கினைப்படி சண்முகமூர்த்தி முதலிய பதினெண் சிவகணங்களைப் படைத்தலைவராகக்கொண்டு மைதலநகருஞ் சென்றருளி நந்தி தேவரைத் தூதனுப்பியும் தேவர்கள் சிறை நீக்காமையால் அச்சிந்து மன்னனைச்சங்கரித்துச் சிறைநீக்கியதும், அவன் பிதாவான சக்கரபாணிக்கு அரசியலீய்ந்ததும் விரித்துக்கூறியதாம்.

௯ பாலசந்திரன் றிருவவதாரப்படல சாரசங்கிரகம்.

பாலசந்திரமூர்த்தி திருவவதாரம் முன் இயமனது புதல்வன் அனலன் என்பவனை விநாயகக்கடவுள் சங்கரித்தபோது தமது திருவுருவிலும்

எல்லா வுயிர்களின் வயிற்றிலும் உண்டான வெப்பத்தை ஆற்றுவிக்க முனிவர்கள் அறுகு கொண்டு வந்து விநாயகமூர்த்தியை அருச்சிக்க அது நிவிர்த்தியாய போது பாலசந்திரன் என்னுந் திருநாமம் பெற்றதாம் அதுமுன் உபாசனா காண்டத்துச் சங்கடசதுர்த்தி விரதப்படலத்தில் விரித்துக் கூறியிருத்தலாற் காண்க.

எ தூமகேது திருவவதாரப்படல சாரசங்கிரகம்.

மகிவாதினியென்னும் நகரில் அனையர் குலத்திற் றோன்றியமாதவனென்பவனது மனைவி சுமுதை என்பவள் புத்திரப்பேறு வேண்டி விஷ்ணு தேவனை நோக்கித் தவஞ்செய்ய விநாயகக்கடவுள் அவ்விஷ்ணு தேவனைப்போ லுருக்கொண்டு அவள்முன் பிரசன்னராய்த் தாமே குழந்தையாய் வருவதாக வரமருளி அவ்வாறு விஷ்ணுதேவனை அவள் வயிற்றுட் கருப்பமெய்தச் செய்தலும், அக்கருவி லுதிக்கும் மகவானது தன்னை வதைசெய்யுமென்று ஆகாயவாணியாற் கேள்வியுற்ற அந்நகர்க்கு அரசனாயிருந்த தூமன் என்னும் ஓர் அரசன் அம்மகவைப் பிறந்தபோதே கொல்லுவிக்க முயற்சித்தகாலத்து விநாயகக் கடவுள் தோன்றித் திருவாயினின்றும் புகையெழச்செய்து அவ் அசுரன்முதலியோரை வதைத்துப்புகையுயிர்த்தகாரணத்தால் தூமகேது, என்னுந் திருநாமம் பெற்றதும் விரித்துக் கூறியதாம்.

அ கணேசன் திருவவதாரப்படல சாரசங்கிரகம்.

கணேசமூர்த்தி திருவவதாரம் முன் திரிபுரனென்பவனை எரிக்கும்படி விமலர் உபாசித்தபோது அவர் திருமுகத்தினின்றும் விநாயகக்கடவுள் பிரசன்னமானதைக் கூறியதாம். அதுமுன் உபாசனாகாண்டம் விமலர் உபாசனைப்படலத்திற்காண்க.

கூ கணபதி திருவவதாரப்படல சாரசங்கிரகம்.

ஓர் வசந்த பருவத்துத் திருக்கயிலையங்கிரியில் சிவபெருமானுடன் உமாதேவியார் உய்யான வனம்புகுந்து அணி நோக்கி வருகையில் இறைவனருளால் அங்குள்ள ஓர் சித்திர மண்டபத்திற் சித்திரித்திருந்த பிரணவாக்ஷரத்தினின்றுங் களிறும்பிடியுமா யிருருத் தோன்றி முயங்குதலைக்கண்ணுற்று இதென்னவென்று இறைவனை வினவ இறைவனும் அதைநோக்கி யருளுகையில் அவ்வடிவினின்றும் விநாயகக்கடவுள் மதகஜமுகரோயுற்பவித்து யாவர் எக்கருமஞ் செய்யத் தொடங்கினும் தம்மை முதலிற்பூசித்திடிற் காரியசித்தியும் மற்றைப்படி விக்கினப்படுதலுஞ் விளைவிக்கக் கணங்கட்கெல்லாம் மேலாய்க்கணபதியென்று திருநாமத்துடன்

ன் விளங்க இறைவன் பால் வரம் பெற்றதும், பின்பு தேவர்க்கிடரியற்றிய கயமுகாசுரனைத் தமது வலக்கொம்பை யொடித்து ஆயுதமாக எவிமாய்த்து அவன் மூஷிகவடிவெடுத்து எதிர்த்துவர அதன் ஆண்மையை யடக்கி ஆரோகணித்ததும், அவனுக்குத் தேவர்களியற்றிய தோப்புக்கரணம், குட்டுகளாகிய வணக்கங்களை தமக்கியற்ற அவர்கள் பிரார்த்தித்தபடி தாம் ஏற்று இவ்வணக்கம் யாவர் செயினும் அவர்களுக்குப்பேறு அளிக்க அருளியதும் பார்பதிதேவியாரால் குருட்டாவின் வடிவமாம்படி சாபம் பெற்ற விஷ்ணுதேவருக்கு அதை மாற்றிப் பழைய உருவமளித்து அவரியற்றிய சஷ்டித் திதிவிரதப்பூசையை ஏற்றுக்கொண்டதும் விரித்துக் கூறியதாம்.

௰ மகோற்கடன் திருவவதாரப்படல சாரசங்கிரகம்.

அங்கமென்னுந் தேயத்து காத்திரமென்னும் நகரத்தில் இரவுத்திரகேதுவென்னும் ஓர் வேதியனது, தேவாந்தகன், நராந்தகன், என்னும் பெயருடைய இரட்டைப் புதல்வர்கள் விநாயகக்கடவுளையன்றி மற்றவர்களால் அழியாதிருக்க இறைவனால் வரம்பெற்று வீமகாயத்தினால் தானவர்ப் போன்றுவானவர் மானவர்க் கிடரியற்றினாகள் அதை மாற்றும்படி வானவர் தாயாகிய அதிதி விநாயகக்கடவுளை உபாசித்து வரம்பெற்றபடி அவர் அவள்பால் ஒரு மகவடிவாய்த்தோன்றி மகோற்கடனென்னுந் திருநாமம்பெற்றிருந்தார். அதை யவ்விருவரில இளையோனுன நராந்தகன் உற்பாதத்தால் அறிந்து அவனை வதைசெய்ய மாயைவல்ல சில அவுணர்களை யனுப்ப அவர் அவர்களையெல்லாம் மாய்த்ததும், தமது உபநயன காலத்துச் செருக்குற்ற முனிவர்களைத் தம்முடைய விசுவரூபத்தினால் அடக்கியதும், அமமூராத்தை காசிதேசத்து அரசனது குமாரனுக்குத் திருமணஞ் செய்விக்கச்செல்லுங்கால் முற்கூறிய நராந்தகனால் ஏவப்பட்டு பற்பல உருவெடுத்துவந்த மாயாசுரர்களை வதைத்ததுமன்றி இடையில் அக்காசி நகரின் புரோகிதராய் இருந்த பிரமதேவருக்கு சித்திபுத்தி என்னும் பெயருடன் அவதரித்த இரண்டு குமாரத்திகளாகிய சத்திகளை மணந்ததும், புருசுண்டிமாமுனிவரது பேரன்பைக்காசி நகரத்து அரசனுக்குத் தெரிவித்ததும் அந்நகரத்தார் ஒவ்வொருவர் வீட்டிலும் ஏககாலத்தில் புசித்தருளித் தமது சர்வவியாபகத்தைத் தெரிவித்ததில் சுக்கிலனென்னும் பிராமணனது முதிர்ந்த அன்பை வெளிப்படுத்தியதும், பின்பு காசிஅரசனோடெதிர்த்த முற்கூறிய நராந்தகன் தேவாந்தகனாகிய இருவரையும் செருக்களத்தில் தாமே மாய்த்துக் காசிராஜா புதல்வனுக்குக் கலியாணச்சடங்கியற்றியதும், அந்நகரினின்றும் மீளுங்கால் பிரிவாற்றாது தொடர்ந்துவந்த அந்நகரவாசிகளுக்கு அவ்வவர் மனோரீதும் கணபதிமூர்த்தியைச் சகளவடிவில் ஆராதித்துவரும்படி திருவாய்மலர்ந்தருளி பின்பு ஆனந்தபவனமென்னு தமது சிவலோகஞ்சென்று

தம்மையிடைவிடாது சிந்தித்த காசிராஜனுக்கு முத்தியளித்ததும் விரித்துக்கூறியதாம்.

௰௧ துண்டிவிநாயகன்றிருவவதாரப் படலசாரசங்கிரகம்.

பன்மகமென்ற நகராயாண்ட துராசதன என்னும் ஓர் அசுரன் தேவர்களுக்குத் துயர்செய்தலாற் பயந்து திருக்காசிமா நகரில் வந்து விசுவேசர் பாதந் தஞ்சமென்றிருக்க அங்கும் அப்பாதகன் இடரியற்ற வந்தான் அவ்வேளை விசுவேசர் தேவர்களோடு திருக்கேதாரப் பதியமாத்திருவுளங் கொண்டே பூந்தருளியதால் தேவர்கள் உமாதேவியைப் பிரார்த்திக்க அத்தேவியினது திருமுகத்தினின்றும் விநாயகமூர்த்தி திருவவதாரமாய் வக்கிரதுண்டனெனத் திருநாமம்பெற்றுத் திருக்காசிமாநகருக்குவந்து ஐம்பத்தாறு திருமூர்த்தங்கொண்டு அத்துராசதன் ஆண்மையையடக்கி கிழைவாய்தலில் அவனையிருத்தியபின் விசுவேசர் காசியம்பதியில் அமர்ந்தருளியதும், முன்னொருக்கால் திருக்காசியம்பதியைவிட்டு மந்தரபருவதத்தை விரும்பியமர்ந்தருளிய விசுவேசர்மீண்டு காசியம்பதியில் வீற்றிருந்தருளச் செய்வித்ததும் விரித்துக்கூறியதாம்.

௰௨ வல்லபைகணேசன் றிருவவதாரப்படலசாரசங்கிரகம்.

ஓர் காலத்து நவப்பிரமாக்களில் ஒருவராகிய மரீசிமுனிவர் பிதாவாகிய பிரமதேவரை நோக்கி சிருட்டி, திதி, சங்காரமென்னு முத்தொழிற் கர்த்தர்களில் முதன்மையுடையவர் யாவர் என்று ஐயுற்று வினவ அவர் அநேக ஏதுக்களாலும் எடுத்துக் காட்டுகளாலும் சங்காரத்தொழில் கர்த்தரே முதன்மையுடையவர் கணேசமூர்த்தியாவாரும் அவரே யென்று தெளிவிக்கத் தெளிந்தபின் மரீசிமுனிவர் அத்தேவைநோக்கித் தவமியற்றியதில் பிரசன்னமாய் விரும்பிய வரத்துடன் பார்வதி தேவியும் அவருக்குப் புதல்வியாம் படிவரமருளியதும், அவ்வரத்துக்கேற்ப இறைவனருளால் அத்தேவியமுனாநதியில் ஒருதாமரை மலரில் சங்குருவாயும் பின் குழந்தைவடிவாயும் காணப்பட்டு நீராடச்சென்ற மரீசிமுனிவர்க்கு புதல்வியாகி வல்லபையெனப் பேரிடப்பெற்றுப் பன்னிரண்டு வயதுவரை தவஞ்செய்ய அவ்விறைவன் பத்துக்கரமுடைய கணேசவடிவத்தாய் மயின்மீது ஆரோகணித்து அவட்குக் காட்சிநல்கி இடப்பாகங்கொடுத்துத் திருமணமியற்றி வல்லபைகணேசனெனத் திருநாமங்கொண்டதும், அவ்வேளை விஷ்ணுதேவர் இலக்குமிதேவி சகிதராய்வந்து தானீன்ற மோகைமுதலிய பன்னிரு புதல்வியர்களையுந் திருமணஞ் செய்து கொள்ளும்படி பிரார்த்திக்க அவ்வாறே மணந்ததுமன்றி அவருக்கு ஞானோபதேசஞ்செய்தருளி மணித்தீவென்னும் லோகத்துக்கெழுந் தருளியதும் விரித்துக்கூறியதாம்.

முற்றுப் பெற்றன.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
		சிறப்புப்பாயிரங்கள்	
௫	௰	வளோப	வலோப
௬	௰௬	குளிதது	[illegible]
		[illegible] உபாசன[illegible]	
௧௬	௩௧	மரலே	[illegible]
௨௧	௬	மொருவன்றன	[illegible]
௨௨	௬	இவ்வகை	[illegible]
௨௪	௨௧	கிழதைத்தி	[illegible]
௨௪	௩௰	காம்ஸ்	[illegible]
௨௭	௨௧	ருலசிடை	ருலரிடை
௩௨	௰௩	வழியுணாங்	வழியுண[illegible]ங்
௩௨	௰௮	மனஞ்செய்து	மனமுஞ்செய்து
௩௭	௫௨	விநாகர்	விநாயகர்
௩௭	௫௩	ஹேறாம்பவிநாயகர்	ஹேரம்பவிநாயகர்
௩௭	௬௧	விரயகர்	விநாயகர்
௩௮	௨௫	சுமங்கள்விநாயகர்	சுமங்களவிநாயகர்
௬௭	௪	வநத	வந்த
௭௪	௯	பெற்றபயனும்	பெறற்பயனும்
௭௬	௰௯	தெணணர்க்கியம்	தெண்ணர்ககியம்
௭௮	௫	மலர்ததாள்	மலர்ந்தாள்
௮௪	௰௫	பொறை	புரை
௮௪	௩௧	வுடடங்கி	வுட்டங்கி
௮௭	௪	செய	செய்
௮௭	௨௫	கவினுற்	கவினுற
௮௮	௰௪	கோத்று	கோத்று
௮௮	௨௪	பசீ	பசி
௯௧	௰௫	சுத்மே	சுத்தமே
௯௧	௨௬	வன்றுரு	வந்துரு
௯௪	௪	பெர்டு	பொடு
௯௪	௨௰	பேறெலொம்	பேறெலாம்
௯௪	௩௭	எவல	எவல்
௯௯	௪	சினகரம	சினகரம்
௯௬	௭	தீடக்ககண்	தீடக்கண்
௯௬	௰௭	முனனுய்த்தார்	முன்னுய்த்தார்
௱	௰௯	வுளாதீரந்து	வுளாத்தீரந்து
௱	௨௰	வல்லறிர்	வல்லதீர்
௱	௨௰௮	மென்மை	மேன்மை
௱௪	௬	விருதகி	விருத்தி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௱௪	௰௧	நாட்டுக்	நாட்டுக
௱௪	௨௰௨	றன்றுல்	தனுல்
௱௫	௨௰௪	நிவேதிதித்து	நிவேதித்து
௱௯	௰௩	பெனொததுயிர்	பொனைத்துயிர்
௱௯	௩௰	, சொல்லென	சொல்லென்

இலிலாகாண்டம

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௧	௨௩	கஜானன்	கஜானனன்
௮	௨	கஜானன்	கஜானனன்
௯	௨௧	காப்புரதேள்	கரப்புத்தேள்
௰௪	௮	கருப்புக	கருவுழ
௰௪	௨௫	வமோரணிபன்	வமோணிபன்
௨௫	௨	ரூனேம	ரூனேம்
௨௮	௰௧	யரறகன்	யாறகன்
௩௧	௨௩	விண்னவர்	விண்ணவர்
௩௪	௰௨	மூகன்பரற்	மூகன்பாற்
௩௭	௩	முணர்ந்தர்ங்	முணர்ந்தாங்
௩௯	௧௩	தெனன்	தென்னே
௩௯	௨௮	முன்னெய்த்	முன்னெய்த
௪௰	௰௩	சாரத	சாரத
௪௰	௨௧	தவாமகாா	தவர்மகார்
௪௫	௩௧	டவன்கொல்	டவன்கொல்
௪௫	௩௬	தெணவ	கணவ
௪௬	௨௬	மாய்த்தன்ன	மாய்த்தனன
௪௮	௰௫	யாவுமிறறன	யாவுமிற்றன
௫௪	௨	மூசு	சுமு
௫௭	௨௰	நெஞ்சகவதி	நெஞ்சகத்தி
௬௧	௨௩	திரந்தாண்	திறந்தாண்
௬௩	௩	நச்சறவணி	நச்சரவணி
௬௮	௨௰	பார்ததமை	பார்த்தமை
௭௨	௨	னண்ண்ன்	னண்ணன்
௭௩	௰௭	புகுதினி	புகுந்தினி
௭௩	௨௧	யாத்தனே	வாத்தனே
௭௫	௰௫	தவித்தாள்	தவிர்த்தாள்
௮௰	௨௨	நினேன	நின்னே
௮௧	௩௬	மகாநக்ஷத்திர	மகாநக்ஷத்திர
௮௬	௰	சமுகாரலேயடம்	சமுகாாலயம்
௮௯	௰௧	திறந்திவே	திறந்திவே
௮௯	௰௪	செய்தேன	செய்தேன்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௯௰௧	௰	வல்லானனுந	வல்லாளனுக்
௯௰௫	௫	தழைதா	தழைசர
௯௰௫	௰	வாக்கம்	வர்க்கம்
௯௫	௰௫	நூாநறுங்	தூாநயுங்
௯௫	௨௭	வேண்ணீர்	வெந்நீர
௯௬	௨௪	பூந்துருததி	பூந்துருத்தி
௯௬	௨௭	புருடோததம	புருடோத்தம
௯௫	௩௮	பஸ்பம	பஸ்ப
௯௭	௪	வுளதசோ	வுளசோ
௯௭	௫	செய்யார்	செய்தார்
௯௮	௰௪	செலி	செவி
௯௮	௰௪	யேற்றவடன்	யேற்றவுடன்
௯௯	௮	கொல்	தொல்
௱௩	௩௰௧	திருவவுதார	திருவவதார
௱௪	௰௩	திருவாதார	திருவவதார
௱௪	௰௯	பட்பகை	புட்பகை
௱௪	௰௯	மகவயிர்த்த	மகவுயிர்த்த
௱௪	௨௮	திருவதார	திருவவதார
௱௪	௩௰௬	வேதகிறி	வேதகிரி